
கண்ணாமூச்சி
ஏனடா?
சுபஸ்ரீ கிருஷ்ணவேணி
ண்ணாமூச்சி
ஏனடா?
பஸ்ரீ கிருஷ்ணவேணி

# கண்ணாமூச்சி ஏனடா?



## 1

"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதன் வந்து என்னைக்
கைத்தலம் பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான்"

தன் பெட்டியில் பொருட்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்த உதய் ஆனந்தின் கரங்களில், அவன் அக்கா நிர்மலவேணியின் திருமணப் பத்திரிகை சிக்க, அதில் அச்சிடப்பட்டிருந்த மேற்கண்ட பாசுரத்தில் பார்வையை ஒட்டியவனுக்கு மெல்லிய புன்னகை மலர்ந்தது.

நான்கு வருடங்களுக்கு முன்பாக நடந்தேறிய நிர்மல வேணியின் திருமண வீட்டில் அல்லவா முதன் முதலாக அவன் கீதாஞ்சலியைச் சந்தித்தது?

பல வருடங்கள் கழிந்த இன்றைய நிலையிலும் கூட, முதன் முதலாக அவளைக் கண்ட காட்சி அவனுக்குப் பசுமையாய் நினைவில் நின்றது.

நிர்மலவேணி - ஷ்யாம் இவர்களின் திருமணத்திற்கு முதல் நாள் நிச்சயதார்த்த விழா மற்றும் மாப்பிள்ளை அழைப்பு ஏற்பாடாகியிருந்தது.

அவ்விழாவில், அவள் தேன் நிற மேனிக்கு வெகு பொருத்தமாக அணிந்திருந்த சந்தன நிற தாவணியில், தேவதையாய் வளைய வந்த கீதாஞ்சலியின் குழந்தைத் தனமான முகத்தையும், சிநேகமான புன்னகையும் கண்ட உதய்க்கு, மீண்டும் மீண்டும் அவளையே பார்க்கத் தூண்டிய அவன் மனதின் ஆர்வம் புதுமையான ஒன்று!

அதுவும் அவள், தன்னுடைய அக்கா நிர்மலவேணியின் நாத்தனார் என்றபோது, 'ரொம்ப நெருங்கின சொந்தம் ஆகப் போகிறோமே?' எனப் பீறிட்ட உற்சாகத்திற்குக் கடிவாளமிட, உதய் ஆனந்த் பிரம்ம பிரயத்தனம் செய்ய வேண்டியதாகியிருந்தது.

கீதாஞ்சலியின் படிப்பு கணக்குப் பதிவியல்; பயில்வது நெல்லையில் அமைந்திருந்த சாரான் தக்கர் கல்லூரி; இசையின் மீதான அலாதியான ஆர்வம்; விருப்பமான பொழுதுபோக்கு புத்தகங்கள் வாசிப்பது போன்ற விவரங்களை யாருக்கும் தெரியாமல் சேகரித்ததை அறிவுப்பூர்வமாக பைத்தியக்காரத்தனம் என்று முத்திரை குத்தினாலும் அந்தச் செய்கை அவனது உள்ளத்திற்கு உவகையையே தந்தது.

எத்தனையோ அழகானப் பெண்களை எதிர்கொண்டவன் என்றாலும் கூட இவளிடம் தோன்றும் இனம் புரியா உணர்வையும், வசீகரத்தையும் இது வரையில் அவனது மனம் வேறொருவரிடமும் கொண்டதில்லை.

அதுவும் குழந்தைகளோடு குழந்தையாய் விளையாடிக் கொண்டிருப்பவளைக் காண்கையில் தனிக் குதூகலம் கொண்டான்.



இங்கே உதய் ஆனந்த் அவளைக் கண்டு உருகோ உருகு என்று உருகிக் கொண்டிருக்க, கீதாஞ்சலியோ இவனைக் கண்டாலே... அப்படியும் சொல்ல முடியாது... இவனைக் காணாமலே, அண்ணன் திருமணத்திற்காக இரண்டு நாட்கள் முன்பாக அவள் சென்னை வந்ததிலிருந்து அவனைப் பற்றிப் பேச்சு வந்தாலே எண்ணெயில் இட்ட அப்பமாய் பொரிந்தாள்.

அதற்கான காரணம் வேறொன்றுமில்லை!

இவளது காதுபடவே, ''பையன் ஷ்யாமுக்கு கல்யாணம் பேசி முடிச்ச கையோடு அந்த வீட்டிலேயே உன் மகள் கீதாவிற்கும் பெண்ணோட தம்பி உதய் கூட சம்பந்தம் பேசியிருக்க வேண்டியது தானே?'' என்று ஓரிரு சொந்தங்கள் அவள் தாயிடம் பேச்சைத் தொடங்கியது தான் மூல காரணம்.

''பெண் கொடுத்து பெண் எடுக்கிறதா இருந்தால் எந்தச் சிரமமும் இல்லாமல் போயிடும்; அதனாலே இப்போவே இந்தக் கல்யாணம் முடிஞ்ச கையோட பேசிடுங்க'' என்று அன்னை ருக்மணியிடம் ஓதினார்கள்.

''பையன் பிஸியோதெரபி படிச்சு இருக்கானாம். அதுவுமில்லாமல் இன்னமும் ரெண்டு வருஷம் மேற்படிப்புக்காக வெளிநாடு போறானாம். அதற்கப்புறம் அவங்க எதிர்பார்ப்பு அதிகம் ஆகிடப் போகுது'' போன்ற காரணங்களை அடுக்கி, தூபம் போட்டனர்.

இத்தகைய பேச்சுக்களின் விளைவால் அவளது தாய் ருக்மணியின் முகம் தீவிர யோசனைக்கு ஆட்பட்டது மட்டுமின்றி, விசேஷ வீட்டில் அவர் உதய் ஆனந்தை நோட்டம் விட்டது வேறு கீதாஞ்சலிக்குக் கலவரத்தைத் தந்தது.

தந்தை கோபிநாத்திடம் யாராவது இந்த மாதிரிக் கருத்துக்களைச் சொல்லியிருந்தால் கீதாஞ்சலிக்கு எந்தவிதமான கவலையும் கிடையாது.

ஆனால் அன்னை ருக்மணியைச் சமாளிப்பது ரொம்பவே கடினம்.

மகள் ஆயிரம் காரணங்களை முன் வைத்து ஏதாவதொரு விஷயத்தை மறுத்தால், அந்த விஷயத்திற்கு ஆயிரத்தொரு சமாதானங்கள் சொல்லி, அதை வெற்றிகரமாக நடத்தியும் முடித்து விடுவார்.

அத்தகைய நிலையில் அப்பாவிடம் அதற்காக முறையிட்டாலும் கூட, 'உங்க அம்மா சொல்றதில் என்ன தப்பும்மா?' என்ற எதிர்கேள்வி தான் பிறக்கும்!

அப்படியிருக்கும்போது இந்த சித்திகளும், அத்தைகளும் தன் அன்னையிடம் இப்பொழுதே அவளது திருமண விஷயமாகப் பேசினால் கலக்கம் ஏற்படாதா என்ன?

அதுவும் கீதாஞ்சலியைப் பொருத்தவரையில், அவளது லட்சியத்தை அடையும் பொருட்டு, இன்னமும் குறைந்த பட்சம் நான்கைந்து வருடங்களுக்குத் திருமணம் என்ற விஷயத்தையே நினைத்துப் பார்க்க முடியாது எனும் போது?

பன்னிரண்டாவது வகுப்பிலிருந்து ஆடிட்டர் தேர்விற்காகத் தன்னைத் தயார் செய்து கொண்டிருக்கிறாள் கீதாஞ்சலி.

ஆடிட்டர் தேர்விற்கு இளங்கலைப் படிப்பு முடித்து பட்டம் பெற வேண்டிய அவசியமில்லையென்றாலும் கூட, இந்த மூன்று வருட பட்டப் படிப்பு, தேர்விற்கு மிகவும் உதவிகரமாய் இருக்கும் என எண்ணினாள்.

கல்லூரி இறுதியாண்டு பயிலும் இவ்வேளையில் ஆடிட்டர் தேர்வில் முதற்கட்டப் பொது திறமை தகுதித்



தேர்வை முடித்து விட்டாள். இரண்டு மாதங்களில் வெளிவரும் அதன் முடிவுகள் அவளுக்குச் சாதகமாக, வெற்றிகரமாக இருக்கும் என்ற மலையளவு நம்பிக்கை அவளுக்கு இருக்கிறது.

தொடர்ந்து மூன்று அல்லது நான்கு வருடங்கள் அண்ணன் - அண்ணியுடன் சென்னையிலேயே தங்கி, ஆடிட்டர் தேர்விற்கானப் பயிற்சிகளுடன் இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டத் தேர்வுகளை முடிக்க வேண்டும் என்று கனவுக் கோட்டை எழுப்பிக் கொண்டிருப்பவளிடம் வந்து... திருமணம் என்ற பேச்சை எடுத்தால்?

முதற்கட்டத் தேர்வு முடிவுகளுக்காகக் காத்திருக்கும் இந்த இடைப்பட்ட இரண்டு மாதங்கள் மட்டும் அவளுக்குத் திருமணம் என்ற விதத்தில் இடையூறு வராமலிருந்தால் போதும்!

அதன் பிறகு திருநெல்வேலியிலிருந்து சென்னைக்குக் கிளம்பிவிட வேண்டியது தான்.

இப்படி கீதாஞ்சலி எண்ணிக் கொண்டிருக்கையில், "சம்பந்தி வீட்டுக்காரங்க நமக்கு ஏற்ற மாதிரியா இருக்காங்க. நம்ம ஷ்யாம் உடைய மச்சானும் நல்ல மாதிரியா தெரியுது. இன்றைக்கு நைட் நிச்சயதார்த்தத்தில்... சுடிதார் எல்லாம் போட்டுட்டு நிற்காதே! பார்க்க ரொம்பவும் சின்னப் பெண்ணா தெரியும். நல்லதா ஒரு பட்டு எடுத்து கட்டிக்கோ. நாளைக்குக் காலையில் கல்யாணத்திற்கும் பட்டு கட்டு" என்று தொடர்பேயில்லாமல் முதல் நாள் காலை தன்னைத் தேடி வந்து அன்னை சொன்னதை, தன் கனவுக் கோட்டையைத் தகர்க்கும் அபாயச் சங்காகவே எண்ணினாள் அவள்.

அண்ணனுடைய மச்சான் ரூபத்தில் தனக்கொரு வில்லன்!

அப்படியொரு சிந்தனை கீதாஞ்சலிக்கு வந்ததாலேயே உதய் ஆனந்தைப் பற்றி அவளிடத்தில் எழுந்த அபிப்ராயங்கள் எதுவுமே நல்ல விதமாக இல்லை.

அதுவும் உதய் ஆனந்திற்கு வெளிநாட்டில் மேற்படிப்பாம்? இருக்கும் காசை உள்நாட்டில் எப்படி விரயம் செய்வது என்று தெரியவில்லை போல?

ம்... இல்லை... மேற்படிப்பிற்காகச் செலவு செய்யும் பணத்தைப் பெண் வீட்டினரிடம் இரு மடங்காய் வசூல் செய்ய, 'அவன்' காத்திருக்கிறானோ என்னவோ?

சொந்த பந்தங்களின் தூண்டுதலில் அன்னையின் விருப்பத்திற்கிணங்க, ஒருவேளை இந்தத் திருமணம் நடந்து, இவளையும் சேர்த்து அவனுடன் வெளிநாட்டிற்கு அனுப்பி விட்டால் இவளுடைய லட்சியத்தை அடையவே முடியாதே?

'கடவுளே! ஏதாவது அதிசயம் நடந்து இந்தத் திருமணப் பேச்சு தடைப்பட்டுடணும்!' என்று மானசீகமாகப் பிரார்த்தனை செய்தாள்.

அம்மா எதற்காக இப்பொழுது பட்டு கட்டச் சொல்ல வேண்டும்? சொந்தங்களிடம் கல்யாண வயதில் எங்களுக்கொரு மகள் இருக்கிறாள் என்று பறை சாற்றிக் கொள்ளத் தானே?

மற்றவர்களின் பார்வையில் அவள் சின்னப் பெண்ணாகத் தெரிந்தால் திருமணம் பற்றிய பேச்சை எடுக்க முடியாதில்லையா?

தன் நிலைக்காக நொந்து கொண்டிருந்த வேளையில் தான் அவளுக்குச் சின்னதொரு வியூகம் பிறந்தது.

'சுடிதார் போடாதே!' என்ற அன்னையின் பேச்சை மீறி அவரைக் கோபப்படுத்தக் கூடாது;



ஆனால் அதே சமயம், 'பட்டு கட்டிக்கோ!' என்றால் பட்டுப் புடவை என்று அர்த்தம் கொள்ள வேண்டிய அவசியமில்லையே?

தன்னிடமிருந்த உடைகளில் ஒன்றான பட்டுப் பாவாடை தாவணியைத் தேர்ந்தெடுத்துக் கட்டிக் கொண்டாள்.

அதுவும் அவளுடைய மாநிறத்தை எடுத்துச் சொல்லக் கூடிய சந்தனநிறம் கூடுதல் சிறப்பு என நமுட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டாள்.

பையனின் சிவந்த நிறத்திற்கு இந்த மாநிறம் ஒத்து வராது என்று சிலர் சொல்வது போன்ற கற்பனை வேறு அவளுக்கு!

தோள் வரையில் வெட்டப்பட்டிருந்த கூந்தலை இரண்டாகப் பிரித்து இரட்டைச் சடை போட்டுக் கொண்டது அவளுடைய வியூகத்திற்கு பக்கபலமாய் அமைந்தது.

நிச்சயதார்த்த விழா தொடர்பாக ருக்மணி பரபரப்பாக இருந்த வேளையில் தான் அவருடைய கண்ணிலேயே பட்டாள் அவள்.

அதுவும் இரண்டாவது, மூன்றாவது படித்துக் கொண்டிருக்கும் சின்னத் தளிர்களோடு சுற்றி வருகையில் தன்னைச் சிறுமியாகவே உணர்ந்தாள் கீதாஞ்சலி.

'நீ தடுக்கில் புகுந்தால், நான் கோலத்தில் புகுவேன்' என்பது போல் அடுத்த நாள் அவளை இந்த வியூகத்தைச் செயல்படுத்த விடவில்லை அவளது தாயார்.

''கீதா! உன்னை நான் பட்டு கட்டு என்று சொன்னால் பட்டுப் புடவை என்று அர்த்தம். இந்தா... நாளைக்கு இந்தப் பச்சைப் பட்டுப்புடவையைக் கட்டிக்கோ. பார்லரில் இருந்து வந்தவர்களிடம் சொல்லி உனக்குத் தலையலங்காரமும், மேக்-அப்பும் போடச் சொல்றேன்.''

பண்றீங்க?''
''எதுக்கும்மா இத்தனை ஆர்ப்பாட்டம்
''உனக்குக் கல்யாணப் பேச்சு எடுக்கணும்னு பார்க்
கிறேன். இதில் நீ வேற இன்றைக்கு மாதிரி ரெட்டை
சடை போட்டுக்கிட்டு சாதாரணமா வந்து நிற்க வேண்டாம்.''
கறாராகப் பேசியவரை அவசரமாகக் குறுக்கிட்டவள்,
''அம்மா! இப்போ எதுக்கு என் கல்யாணப் பேச்சை ஆரம்
பிக்கறீங்க? நான் மேலே படிக்கணும்!'' என்று குரலை
உயர்த்தினாள் கீதாஞ்சலி.

''சின்னப் பிள்ளையா லட்சணமா சொன்னதை மட்டும் செய்! பெரியவங்களுக்கு நீ அறிவுரை சொல்ல வேண்டாம்'' எனக் கண்டித்தார் ருக்மணி.

முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டவள், ''சின்னப் பிள்ளைன்னு சொல்றீங்க. அப்புறம் எதுக்கு கல்யாணப் பேச்சு எடுக்கறீங்க?'' என்ற முணுமுணுப்பிற்குப் பதி லாக, அன்னையிடமிருந்து ஒரு முறைப்பு சன்மானமாகக் கிடைக்க பெட்டிப் பாம்பாய் அடங்கி விட்டாள்.

ருக்மணி, ''நாளைக்கு உங்க அண்ணன் கல்யாணம்... நீ பெண்ணை அழைச்சுட்டு வரணும். பெண் தோழி நீ தான். அதனாலே நான் சொல்றபடி கேட்டு நட!'' என்ற தோடு மறுநாள் மகளுடனே இருந்து அவள் தயாராகும் வரையில் பார்த்து திருப்தியும் பட்டுக் கொண்டார்.

'விதி யாரை விட்டது?' என்று நொந்து கொண்டு திருமண வைபவங்களில் கலந்து கொண்டவளுக்கு உதய் ஆனந்தின் சீண்டல் எதையும் விளையாட்டாய் எடுத்துக் கொள்ள மனமிருக்கவில்லை.

மாறாக உதய் மீதிருந்த எரிச்சல் பன்மடங்காகப் பெருகி அவன் மீது வெறுப்பாய் உருமாறியது.

நிர்மலவேணியை கீதாஞ்சலி மணமேடைக்கு அழைத்து வர, மணமகன் ஷ்யாமை உதய் அழைத்து வந்தான்.



முந்தைய நாள் எந்தவித ஒப்பனையுமில்லாமல் அவ ளுடைய இயற்கை அழகில் அவன் உள்ளத்தைக் கொள்ளைக் கொண்ட கீதாஞ்சலி, இன்று செயற்கை ஒப்பனையில் மிளிரவும் உதய் ஆனந்தால் வாயை மூடிக் கொண்டு சும்மாயிருக்க முடியவில்லை.

தன் சகோதரியை வம்புக்கு இழுப்பது போல கீதாஞ் சலியையும் சீண்டினான்.

''அக்கா! எல்லாரும் சுவத்துக்கு வெள்ளையடிச்சு கேள் விப்பட்டிருக்கேன்! ஆனால் முகத்துக்கு வெள்ளையடிச்சு இன்றைக்குத் தான் பார்க்கிறேன்'' என்று சகோதரியிடம் சொல்லும் பொழுதே கீதாஞ்சலியைப் பார்த்து 'உன் னைத் தான்!' என்பது போல ஒரு பார்வைச் சீண்டல்!

''டேய்! இந்த வெள்ளை கோட் போடாத டாக்டரைக் கூட டாக்டர்னு மக்கள் நம்பிடுவாங்க. ஆனால் ஓவர் மேக் அப் இல்லாமல் இருந்தால் மணப்பெண் என்றே நம்ப மாட்டாங்கடா!'' ஐயர் ஓதிய மந்திரங்களுக்கிடை யில் தன் சகோதரனுக்குச் சிரித்தபடியே பதிலும் தந்தாள் நிர்மலவேணி.

''உன் உவமை-உவமேயத்துக்கு உன்னோட கல்யாணத்தன்றைக்காவது லீவு விடலாமில்ல, அக்கா?'' என்று கேலி பேசினான்.

பதிலுக்கு நிர்மலவேணி மற்றுமொரு உவமையை எடுத்து விடுவதற்கு முன், ''இப்போ மட்டும் என்ன வாழுது, அக்கா?'' என்றபடி கீதாஞ்சலியை ஏறிட்டுவிட்டு, ''ஆனால், உனக்குக் கடும் போட்டி நிலவுது தெரியுமா? இரண்டாவது ரவுண்ட் போகும்போது இன்னமும் நாலு கோட்டிங் ஏத்த சொல்லு!'' எனக் கேலி பேசினான்.

''மச்சான்! ஏன்? ஏன் இப்படியெல்லாம்? உனக்கு நான் என்ன பாவம் செய்தேன்? இந்த மாதிரி யோசனை

எல்லாம் உன் கல்யாணத்தில் வைச்சுக்கோயேன்'' என்று ஷ்யாம் இருவருக்குமான உரையாடலில் இடைப்புகுந்தான்.

''கொஞ்சமாவது மேக் அப் இருந்தால் தான் போட்டோ, வீடியோ எல்லாத்துக்கும் நல்லாயிருக்கும். உதய்! நீ பேசாமலிரு'' என்று நிர்மலவேணி அதட்ட,

அதுவரையில் பல்லைக் கடித்துக் கொண்டிருந்த கீதாஞ்சலி, ''மதினி! மேக் அப் போட்டுக்கிறது, போட்டுக் காமல் இருக்கிறது என்பது ஒவ்வொருத்தங்களோட தனிப்பட்ட விருப்பம்'' என்று முணுமுணுத்தது நிர்மல வேணியின் காதுகளில் விழுந்ததோ இல்லையோ அருகில் நின்றிருந்த உதய் ஆனந்தின் காதுகளில் நன்றாகவே விழுந்தது.

அவள் வாயைப் பிடுங்க வேண்டுமென்று தானே இவ்வளவும்!

ஆனாலும், அவன் எதிர்பார்த்த சீண்டல் சிறிதுமின்றி, கீதாஞ்சலியின் முகத்தில் பிரதிபலித்த கோபம் அவனைச் சற்று தூரத்திலேயே நிறுத்த, அதன் பிறகு அவளிடத்தில் கேலியோ, சீண்டலோ இன்றி கவனமுடன் நடந்து கொண்டான்.

ஆனால் என்ன தான் கவனமுடன் நடந்து கொண்டாலும் அவனது ஒவ்வொரு செய்கையிலும் குறை கண்டாள் கீதாஞ்சலி.

''அக்கா! இன்றைக்கு செல்வி, ராஜி, சுந்தரி, நர்மதா எல்லாரும் உனக்கு வாழ்த்துக்கள் தெரிவிச்சு தகவல் அனுப்பியிருக்காங்க'' என்று உதய் ஆனந்த் அவள் சகோதரியிடத்தில் பகிர்ந்தால்,

'என் முன்னாடி பொண்ணுங்க பேரா சொல்லி தேவையில்லாத போஸ் விடணுமாக்கும்? இவர் பெரிய ஆணழகன்! பசங்க கூடவே சுத்தமா பழகமாட்டான் போல? இவன் லட்சணமெல்லாம் இந்த அம்மாக்கு எங்கே தெரியப் போகுது?' என்று மனதிற்குள் பொருமினாள்.



செல்போன் டீலரான தன் அண்ணன் ஷ்யாமிடம், ''மாமா! மார்க்கெட்டில் ஐ போன் நல்லா போகுதா, இல்லை... கேலக்ஸி நல்லா போகுதா?'' என்று விசாரித்தால்,

''ஆளுக்குத் தகுந்த மாதிரி பேசிப் பேசியே கவுத்துடுவான் போல?'' என வசைப் பாடிவிட்டு,

''இவனிடம் எதுவும் பேசாமல் இருக்கிற வரையில் எனக்கு நல்லது. தப்பித் தவறி பேசும்படி வந்து... அதை அம்மா வேற பார்த்துட்டால் அவ்வளவுதான்...'' என்றும் பரிதவித்தாள்.

''இல்லைம்மா! அந்த வேலையை அப்பாவிடம் கொடுங்க, முடிக்க வேண்டிய வேலையெல்லாம் சீக்கிரம் முடிச்சுட்டு எனக்கு ஆவடி வரை போக வேண்டியிருக்கு'' என்று துரிதப்படுத்தினால்,

''ஒரேயொரு சகோதரிக்கு கல்யாணத்தை வைச்சுட்டு வெளியில் வேலையாம்? கொஞ்சம் கூட செண்டிமெண்ட்ஸ் இருக்காது போல...?'' என அவன் மீது மேலும் கடுப்பானாள்.

தன் ஒவ்வொரு சின்னச் சின்ன அசைவுகளையும் தப்பும் தவறுமாக கீதாஞ்சலி விளங்கிக் கொள்கிறாள் என்பது பற்றி அறிந்திராதது உதய் ஆனந்தின் போதாத வேளை போல?

அவளிருக்கும் இடத்தையே மனம் சுற்றிச் சுற்றி வந்த போதும் கீதாஞ்சலியிடம் சென்று, உடனே தன் விருப்பத்தை வெளியிட்டு விட அவன் விரும்பவில்லை.

இளம்பிராயத்தில் மலரும் உண்மையான நேசம் ஆக்கப்பூர்வ உந்து சக்தியாகச் செயல்பட்டு, வாழ்வில் முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

அப்படியில்லாமல், வெறும் பருவ வயதில் ஏற்படும் இனக்கவர்ச்சிக்கு காலமே சிறந்த மருந்தாக அமையும்.

இதற்கெல்லாம் மாறாக தன் மனதில் தோன்றிய உணர்வைப் பற்றிய பகுத்தறிதல் அவனுக்கு மிகவும் தேவையான ஒன்றாக இருந்தது.

அத்தோடு கீதாஞ்சலியின் படிப்பு முடிவதற்கு முன்பே கண்டதையும் பேசி அவள் மனதைக் கலைக்க வேண்டாம் என்பதையும் கருத்தில் பதித்தான்.

அவனுக்கு இன்னமும் இரண்டு வருடங்கள் மேற்படிப்பு வேறு இருக்கிறதே? அதற்கு பிறகு வேலை!

பிஸியோதெரபியில் இளங்கலைப் பட்டம் பெற்றுவிட்ட உதய் ஆனந்த், அவன் அக்காவின் திருமணம் முடிந்த ஒரு மாதத்தில், லண்டனில் அமைந்துள்ள பல்கலைக் கழகம் ஒன்றில் மேற்படிப்பிற்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் முடித்தாகிவிட்டது.

அவன் வெளிநாட்டிற்குப் புறப்படுவதற்கு முன் கீதாஞ்சலியுடன் பேசிப் பழக சந்தர்ப்பம் தானாகக் கனியுமா என்று காத்திருக்கப் பிரியமில்லாமல் அதை அவனே ஏற்படுத்திக் கொள்ளவும் விரும்பினான்.

அவளுடைய அலைபேசி எண்ணை மற்றவர்களிடம் கேட்டுப் பெறுவது சரியாக வராது என்றெண்ணி, ''உங்க செல்போனில் இருந்து எனக்கு ஒரு மிஸ்ட் கால் கொடுக்கறீங்களா? என் போனை எங்கே வைச்சேன்னு தெரியலை...'' என்று கீதாஞ்சலியிடமே அவனுடைய அலைபேசியைத் தேடுவது போல பாவ்லா செய்ய,

அவன் பேசுவது கிரேக்கமோ, லத்தீனமோ என்ற பாவனையில் பொருட்படுத்தாமலேயே விட்டு விட்டாள் அவள்.

அதை வேடிக்கையாக எடுத்துக் கொண்ட உதய் ஆனந்த், ''மிஸ்ட் கால் கொடுத்தால் உங்களுக்கு பைசா செலவு இல்லீங்க!'' என்று விளக்கம் வேறு கொடுக்க, அவனிடமிருந்து சலிப்பானப் பார்வையே பரிசாகக் கிடைத்தது.

'முடிந்த அளவிற்கு இவனிடம் பேச்சைத் தவிர்க்கலாம் என்றால் அது முடியாது போல!' என்ற எண்ணத்தில் தோன்றிய சலிப்பு அது!

''ச்சே.. ச்சே.. உங்களை மாதிரியே என்னையும் நீங்க பைசாக்கு பார்க்கிறேன்னு நினைச்சுட்டீங்க போல?'' என்று வாழைப்பழத்தில் ஊசி ஏற்றியவள், ''எனக்கு செல்போன் அவசியமில்லைன்னு அதை நான் வைச்சுக்கிறதே இல்லைங்க...'' எனப் பேச்சைக் கத்தரித்தாள்.

''என்னதுங்க இது? செல்போன் டீலரோட தங்கச்சி நீங்களே இப்படிச் சொல்லிட்டீங்க?''

''செல்போன் இல்லாததும் ஒரு விதத்தில் நல்லது தானுங்க! அப்போ தான் யாரும் மிஸ்ட் கால் கொடுங்கன்னு சொல்ல மாட்டாங்க; பைசா செலவு இல்லைன்னு மார்க்கெட்டிங் செய்யவும் மாட்டாங்க; நம்பர் கிடைச்சதும் பேச வாய்ப்பு கிடைக்கும்னு அபிப்ராயத்தில் திளைக்க மாட்டாங்க'' என்றவளுக்கு எதிரில் நின்றிருந்தவனின் புன்னகை மலர்வதைக் கண்டு பலத்த ஆச்சரியம் தான்!

புன்னகை தவழும் முகத்துடன், ''நீங்கள் சொல்வது சரி தான், கீதாஞ்சலி! எல்லாரும் என்னை மாதிரி டீஸன்டா இருக்கிறது இல்லை. இந்தக் காலத்தில் சர்வ ஜாக்கிரதையா தான் இருக்க வேண்டியதிருக்கு'' என்று அவளை ஒத்துப் பேசியவனிடம்,

''டீஸன்டா? உங்களை மாதிரி...?'' என்று எற்ற இறக்கத்தோடு வினவியவள், ''ஹ்ம்ம்... கஷ்டம் தான்!'' எனப் பெருமூச்சு ஒன்றை வெளியேற்ற,

இதுநாள் வரையில் எந்தவொரு விஷயத்திலும் தோல்வி என்ற ஒன்றையே பார்த்திராதவனுக்கு, கீதாஞ்சலி விஷயத்தில் மட்டும் அவனெடுக்கும் அனைத்து முயற்சிகளும் தோல்வியையே முத்தமிட்டன.



## 2

நான்கு ஆண்டுகளுக்கு முன்பாக நடந்ததை அசைபோட்டபடி தன்னுடைய வேலைகளைச் செய்து கொண்டிருந்த உதய் ஆனந்திற்கு இப்படி அவன் எடுத்த சிறு சிறு முயற்சிகளும் பலனின்றி... பலனின்றி என்று சொல்வது சரியில்லையோ என்ற எண்ணம் தோன்றச் சின்ன சிரிப்பு மலர்ந்தது.

எதிர்மறை பலனையே அளித்தது என்பதே சரியாகுமோ என்ற எண்ணம் வலுபெற அவனுடைய சிரிப்பு மேலும் விரிவடைந்தது.

கீதாஞ்சலியிடம் அவனை முதலில் ஈர்த்ததே அவளுடைய குழந்தைத்தனம் மாறாத நடவடிக்கையும், சிரிப்பும்தான்.

அப்பொழுது அவள் கல்லூரிப் படிப்பையே முடித்திருக்காத சிறு பெண் தான் என்றாலும், அவளை நோக்கி அவன் எடுத்து வைத்த ஒவ்வொரு அடிக்கும் அந்த வயதிலும் இவனுக்குப் பதிலடி என்று என்னமாய் மடக்கி மடக்கி வாய் பேசுவாள்?

பழைய நினைவுகளில் மூழ்கியவனின் பார்வை, அக்கா நிர்மலவேணியின் திருமண ஆல்பத்திலிருந்து அவன் சுட்ட சில புகைப்படத்தில் வந்து ஆசையுடன் நிலைத்தது.

இரட்டை சடை அவள் முன் புறம் தோளை அலங்கரிக்க, முகத்தில் ஆயிரம் பாவனையுடன் கீதாஞ்சலி



யாருடனோ பேசிச் சிரித்துக் கொண்டிருந்த புகைப்படம். இந்த நான்கு ஆண்டுகளில் பலமுறை அது கையாளப் பட்டிருக்கிறது என்பதைத் தெளிவாகக் காட்டியது.

அடர் மெருன் நிற பட்டு பாவாடையும், சந்தன நிற தாவணியும் அவள் உடலைத் தழுவியிருக்க, அதற்குப் பொருத்தமாக அவள் அணிந்திருந்த நெற்றிச் சுட்டி, காதில் ஆடும் தொங்கட்டான்கள், கழுத்தை ஒட்டிய ரூபி சோக்கர், முழங்கை வரை மருதாணியிட்ட கரத்தில் அவள் அசையும் போதெல்லாம் ஓசை எழுப்பும் வளையல்கள் என இன்னமும் உதய் ஆனந்தின் விழிகளின் முன்னே அவள் தத்ரூபமாக தெரிந்தாள்.

நிழற்படத்தில் தெரிந்தவள் நிஜத்திலேயே தன் கண் முன் வந்து நின்றிருப்பது போன்று தோன்ற, புகைப்படத்தில் அவளின் கன்னக் கதுப்பை தன் இரு விரல் கொண்டு ஆசையுடன் மிருதுவாக வருடலானான்.

“Absence diminishes small loves and increases great ones...” - இவன் வரையில் அது உண்மை தான் போல!

கீதாஞ்சலியைப் பார்த்த நொடியில் அவனுக்குத் தோன்றிய உணர்வுகள் நாளடைவிலும் இத்தனை மைல் தூரத்திலும் கூட, காற்றில் ஆடும் சிறு மெழுகுவர்த்தியின் சுடர் போன்று அணைந்து விடாமல், பெரு நெருப்பாக வளர்ந்து நிற்கின்றது.

இந்த நான்கு வருடங்களில் அவளுடன் பேசியதே இல்லையென்று சொல்ல முடியாது. அதுவும் அவன் அக்கா நிர்மலவேணியின் வீட்டிலேயே தங்கி படிக்கும் பொழுது அது சாத்தியமுமில்லை.

அக்கா, மாமாவுடன் பேசுவதற்காக உதய் ஆனந்த் சென்னைக்கு அழைக்கும் போதெல்லாம் சில பல சமயங்களில் பேசியிருக்கிறான்.

சில நாட்கள் அவளுடைய குரலைக் கேட்பதற்கா கவே அழைத்துமிருக்கிறான்!

மனம் துள்ளினாலும் அதைக் குரலில் காட்டாமல் பி[ர]யத்தனப்பட்டு அடக்கியவாறே பொதுப்படையாகப் பேசி விட்டு வைப்பவனுக்கு, அவளைச் சீண்டவும், உரிமை யோடு பேசவும் மனம் ஏங்கினாலும் அடக்கிக் கொள்வான்.

ஆனால், அக்கா மற்றும் அம்மாவின் வாய் வழியாக வென்று அவனுக்குத் தேவையான தகவல்களை எப் படித் தெரிந்து கொள்ள வேண்டுமோ அப்படித் தெரிந்து கொள்வான்.

அப்படித் தான் கீதாஞ்சலிக்குத் திருமணத்தில் இப் போதைக்கு விருப்பம் சிறிதுமில்லை என்பதை அறிந்து கொண்டு, தனக்கு இன்னமும் கால நேரமிருக்கிறது என்று மனதைச் சமாதானப்படுத்திக் கொண்டது.

தன்னுடைய மனதை ஒரு வழியாக சரிக்கட்டி வைத் திருந்தாலும், அவளின் ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் அவளுக்கு வாழ்த்துச் சொல்வதற்காக மட்டுமே அழைத்த மாதிரித் தெரியாமல் அழைத்து வாழ்த்துத் தெரிவித்திருக் கின்றான்.

அதே போன்றே, அவனது பிறந்த நாளுக்கும் அவளிட மிருந்து தான் தனக்கு முதல் வாழ்த்து வர வேண்டு மென்று கட்டாயமாக விரும்புபவன், லண்டனில் இரவு பன்னிரண்டு மணி அடித்ததும் கைப்பேசியும் கையுமாக அலைவான்.

வேறு யாரிடமிருந்து அழைப்பு வந்தாலும் எடுக்காமல் அட்டகாசம் செய்திருக்கின்றான்.

காலையில் எழுப்புவதற்கு சிறிது நாகரிகமான நேரம் வந்ததும், முதல் வேலையாக சென்னை விருகம்பாக்கத்



திற்கு அழைப்பவனுக்கு, சென்னைக்கும், லண்டனிற்கும் இடையிலுள்ள ஐந்தரை மணி நேர கால வித்தியாசம் வசதியாகப் போனது.

அதுவும், 'அக்கா மொபைலுக்கு கூப்பிட்டேன், ரிங்கே போகலை' என்று பல கதை சொல்லி, கீதாஞ்சலியிடம் தான், தன் பிறந்த நாளில் முதலில் பேசுவது மாதிரி அவன் செய்த திருகு தாளத்தை நினைத்தால் இப்பொழு தும் அவனுக்குச் சிரிப்பு வந்தது.

அவனுடைய காதல் வளர்ந்து கொண்டே போன அதே நேரத்தில், இதற்கு கீதாஞ்சலியிடமும் எதிரொலி இருக்குமா? அப்படி இல்லாவிட்டால் என்ன செய்வது? தான் மட்டும் இப்படி ஒரு தலையாய் காதலை வளர்த்துக் கொண்டு போகிறோமே என்று அவ்வப்பொழுது அவ னுக்குத் தோன்றாமல் இல்லை.

அப்படித் தோன்றும் பொழுதெல்லாம் அவனுடைய அக்கா - 'கீதாவிற்கு இன்னமும் படிக்கணுமாம்; இன்ன மும் நாலைந்து வருஷத்துக்கு யாரும் அவளுடைய கல்யாணத்தைப் பற்றிப் பேசக் கூடாதுன்னு திட்டவட்டமா சொல்லியிருக்கா' என்று சொல்லியது நினைவு வர, அவனுடைய மனம் சிறிது அதனுடைய அலைபுறுதலை நிறுத்தும்.

அதனையும் மீறி அவனுக்கு அவன் மீது தனி நம்பிக்கை!

'ஆல் ஐ நீட் இஸ் ஸம் டைம் வித் ஹர்! ஐ வில் மேக் ஹர் பால் இன் லவ் வித் மீ!' என்ற அசட்டு தைரியமோ இல்லை அசைக்க முடியாத நம்பிக்கையோ இல்லை எதிர்பார்ப்போ? எதுவோ ஒன்று அவனை இதுவரை வழி நடத்தியிருக்கின்றது.

அந்த நம்பிக்கையின் துணையுடனே தன்னுடைய பொருட்களையெல்லாம் எடுத்து வைத்தவன், தாயகம்

திரும்ப லண்டன் ஹீத்ரோ சர்வ தேச விமான நிலையத்திற்குப் புறப்பட்டான்.

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு நடந்ததையும், நீண்ட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் கீதாஞ்சலியைச் சந்திக்கப் போவதையும் நினைத்து கிளர்ச்சியுற்றவனுக்கு லண்டனிலிருந்து சென்னை வரையிலான கிட்டத்தட்ட பத்து மணி நேர விமான பயணமும் வினாடியில் கழிந்தது போன்றிருந்தது.

* * *

"நாளைக்குக் காலையில் அஞ்சு மணிக்கு தானே அம்மா ஃப்ளைட் வருது? ஏர்போர்ட்டிற்கு அப்பா போவார் இல்ல? இல்ல, ஷ்யாமைப் போகச் சொல்லவா?" நிர்மலவேணி அவள் தாய் தேன்மொழியிடம் தொலைபேசியில் விசாரித்துக் கொண்டிருந்தாள்.

மறுமுனையில் என்ன பேசினார்களோ அதற்குப் பதிலாக, "காலையிலேயே வந்து என்ன செய்ய போறோம்மா? உதய் கொஞ்சம் நேரம் தூங்கட்டும். நாங்க ஒரு பதினோரு மணிக்கு மேலே அடையார் வர்றோம். இல்லைன்னா நாங்க வந்தவுடனேயே உங்க பேரன் சத்தம் போட்டு அவனை எழுப்பி விட்டுடுவான்" என்றாள்.

"நான் வந்த பிறகே மதியத்திற்கு செய்யலாம். எல்லாத்தையும் நீங்களே இழுத்துப் போட்டு செய்துகிட்டு இருக்காதீங்கம்மா."

மலர்ந்த முகத்துடன் பேசியை வைத்துவிட்டு வந்த நிர்மலவேணியை அசட்டையாகப் பார்த்தாள் கீதாஞ்சலி. அந்த அசட்டை அவளுடைய அண்ணி மேல் அல்ல. பேச்சின் நாயகனாக விளங்கிய நபரின் மேல் வந்த அசட்டை!



அடுத்த முனையில் என்ன பேசினார்கள் என்று தெரியவில்லையென்றாலும், யாரைப் பற்றி, எதைப் பற்றி பேசினார்கள் என்று தெரியாதா என்ன?

அதுவும் கடந்த ஒரு வாரமாக இதையே தானே திரும்பத் திரும்பப் பேசுகிறார்கள்.

கேட்டுக் கொண்டிருக்கும் அவளுக்கே காது வலிக்கிறது! பேசுகிறவர்களின் வாய் வலிக்காதோ?

அடுத்த நாளுக்குப் போட வேண்டிய துணிமணியை எடுத்து வைத்துக் கொண்டிருந்த கீதாஞ்சலி நக்கலானச் சிரிப்புடன் அமைதியாக இருக்க,

"என்ன, கீதா? ஒரே சிரிப்பா இருக்கு?" என்று துருவினாள் மதினி.

"என் காதில் ரத்தம் வருதான்னு கொஞ்சம் பாருங்களேன், மதினி!"

"இல்லையே? ஏன் என்னாச்சு, கீதா?" என்று அப்பாவியாக அவள் பதறவும்,

"நீங்க உதய்-உதய்ன்னு ஒரு வாரமா உதைச்சதுக்கு ரத்தம் வந்திருக்கணும்... அதெப்படி வராமல் போச்சு, மதினி?" எனக் கண் சிமிட்டி சிரித்தாள் இளையவள்.

"ஓய்! என் தம்பியுடைய பேரை நீ கிண்டல் செய்தால் நிஜமாவே உன்னை உதைக்கத் தான் போறேன்" என்று நாத்தனாரைச் செல்லமாக மிரட்டினாள்.

இருவரின் சிரிப்பு அடங்கியதும் நிர்மலவேணி, "ஹப்பா... நாலு வருஷம் கழிச்சு நாளைக்கு என் தம்பியைப் பார்க்கப் போறேன். எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா? நம்ம நாடு ஒலிம்பிக்ஸ் விளையாட்டில் பத்து தங்க மெடல் வாங்கினால் எத்தனை சந்தோஷம் கிடைக்குமோ... அத்தனை சந்தோஷம்!" என்றாள் முகமும் அகமும் மலர.

''உங்க தம்பியைத் தான் அடிக்கடி நெட் வழியா பார்க்கறீங்களே, மதினி?''

''என்ன தான் வெப் கேம் வழியா பார்த்தாலும் நேரா பார்க்கிற மாதிரி வராது இல்ல, கீதா?''

''ஆமா மதினி, ஆமா!'' என்று நிர்மலாவிற்கு ஒத்து ஊதியவள், ''தம்பி... தங்கக் கம்பியைப் பார்த்துட்டாலும்...!'' என்று வாய்க்குள்ளேயே முனங்கிக் கொண்டாள்.

''என்ன சொல்றே?''

''ஒன்றுமில்லை, மதினி! நீங்க சொன்னால் சரியாகத் தானிருக்கும்னு சொன்னேன்.''

''படிக்கிறதுக்காக ரெண்டு வருஷம் போனவன்! வந்துடுவான் என்று பார்த்தால் அப்படியே வேலை கிடைச்சு, கூட ரெண்டு வருஷம் அங்கேயே தங்கிட்டான்.''

'ம்ஹ்ஹ்ம்ம்... வெளிநாட்டிலிருந்து புறப்பட துரைக்கு இப்போ கூட எப்படித்தான் மனம் வந்ததோ...?'

கீதாஞ்சலியின் மன ஓட்டத்தை அறியாத நிர்மல வேணி, ''நடுவிலாவது வந்துட்டு போடா என்று சொன்னால்... லீவ் இல்லை என்று ஏதோ ஒரு சாக்கைச் சொல்லிட்டு, அம்மா அப்பாவை அங்கே வாங்கன்னு சொல்லிட்டான். முரளியைக் கூட அவன் இன்னமும் நேரில் பார்க்கலை!'' என ஆயிரமாவது முறையாக தனது ஆதங்கத்தைக் கொட்ட,

''உங்களையும் தானே லண்டன் வரச் சொல்லியிருந்தார் உங்க அருமை கம்பி? நீங்களும் போயிருக்க வேண்டியதுதானே?'' என கீதாஞ்சலியும் ஆயிரத்து ஓராவது முறையாகக் கூறினாள்.

பேச்சு சுவாரஸ்யத்தில் கீதாஞ்சலி 'கம்பி' என்று குறிப்பிட்டதை விடுத்தவள், ''ம்க்ஹும்! உங்க அண்ணனை



வைச்சுக்கிட்டு நான் எங்கே போக? நீங்க மட்டும் போயிட்டு வாங்க என்றால் எப்படி? உங்க அண்ணன் கணக்கில் ஒரு லண்டன் ட்ரிப் இருக்கு. அப்பப்போ அவருக்கு ஞாபகப்படுத்திகிட்டே தான் இருக்கேன். போகாமல் விடறதாய் இல்லை!'' என்று மிரட்டலாய்ச் சிரித்தாள்.

கீதாஞ்சலியும் அவளது சிரிப்பில் இணைந்து கொள்ள தொடர்ந்து, ''எப்படியோ... உதய் எங்கே அங்கேயே தங்கிடுவானோ என்று நாங்க பயந்துகிட்டு இருந்தது போல இல்லாமல், மூட்டை முடிச்சோட அவன் திரும்ப இந்தியா வர்றதே பெரிய சந்தோஷம்!'' என்று ஒரு நிம்மதிப் பெருமூச்சுடன் கூறி, சோபாவில் உறங்கிக் கொண்டிருந்த அவளது இரண்டு வயது மகன் முரளி நந்தன் துயில் கலைந்து எழும்புவது போன்றிருக்க அவனுக்கு பால் எடுத்து வர அடுப்படிக்குச் சென்றாள்.

முரளி நந்தன் அருகில் சென்ற கீதாஞ்சலி, ''நந்துக் குட்டி! குட்டிச் செல்லம்! அதுக்குள்ளே எழுந்தாச்சா நீங்க? இங்கே அத்தைக்கிட்ட வாங்க!'' என்றவாறே அவனைத் தூக்கிக் கொஞ்சினாள்.

சிறுவனின் உதடு அழுகையில் பிதுங்க ஆரம்பிப்பதைக் கண்டு, ''நீங்க சமத்து தானே? அழக் கூடாதாம். உங்க மாமா வரப் போறாங்களா? வந்ததும் அவங்க கண்ணை நோண்டி காக்காக்கு போட்டுடலாம். சரியா? எங்கே, சிரிங்க பார்க்கலாம்!'' என்று பொம்மையைக் காட்டி விளையாட்டு காட்டுவது போன்று சர்வ சாதாரணமாகக் கூறினாள்.

ஆனால், அவள் மனதில் என்னமோ பொம்மைக்குப் பதில் பூச்சாண்டியைக் காட்டி மிரட்டுவது போன்ற ஒரு எண்ணம்!

அந்தளவில் தான் நின்றது உதய் ஆனந்த் மற்றும் கீதாஞ்சலியின் உறவு நிலை! குறைந்த பட்சம் கீதாஞ்சலியைப் பொருத்தவரையில்!

அவளின் இந்த மனப்போக்கு இன்று, நேற்று உருவானது அல்ல!

நான்கு வருடங்களுக்கு முன்பே வித்திடப் பட்டதோ இல்லை தானாகவே விழுந்த விதையோ! அது, இன்று வளர்ந்து நிற்கின்றது.

கீதாஞ்சலியின் அம்மாவும் சொந்தங்களும் உதய்க்கு தங்கள் பெண்ணைக் கொடுப்பதைப் பற்றி பேசினால், அவர்கள் மீது கோபப்படுவதற்கு பதில்... இவனால் தானே அதைப் பற்றி பேசுகிறார்கள் என்று அத்தனை எரிச்சலும் உதய் மேல் திரும்பியது அவளுக்கு!

அதற்கு உதயும் அவனால் முடிந்த வரை வழி வகுத்துக் கொடுக்க, எரிச்சல் படுவதும் அவன் மீது எரிந்து விழுவதும் எளிதாகப் போய் விட்டது கீதாஞ்சலிக்கு.

முரளி நந்தனின் உடலைச் சுத்தம் செய்து, உடை மாற்றி விட்டுக் கொண்டிருந்த கீதாஞ்சலிக்கு, அவளது அண்ணன் ஷ்யாமின் திருமணத்தில் நடந்தது அவ்வப் பொழுது நினைவுக்கு வருவது போன்று இப்பொழுதும் அவள் நினைவிலாடியது.

* * *

திருமண மண்டபத்தில் பந்தி முடிந்த பிறகு உறவும், உதய் ஆனந்தின் நண்பர்களும் ஒன்றாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர்.

உதயின் தமக்கை தங்களுக்கும் தமக்கை தான் என்ற நட்பு தந்த உறவில், நிர்மலவேணியையும் புது மாப்பிள்ளை ஷ்யாமையும் கேலி செய்து கொண்டிருந்தார்கள் அவர்கள்.

''நிம்மிக்கா! உங்களைப் பற்றி நம்ம ஐயருக்குக் கூட தெரிஞ்சு போச்சு போல, அக்கா! மாப்பிள்ளை



வார்னிங் எல்லாம் கொடுத்துட்டு இருந்தார், கவனிச்சீங்களா?'' என்று கிண்டலாகக் கேட்டான் உதயின் நண்பன் ஒருவன்.

''எனக்கு என்னப்பா வார்னிங் கொடுத்தாங்க?'' என்று தன் புத்தம் புது மனைவியைப் பார்வையால் விழுங்கிக் கொண்டிருந்த ஷ்யாம் புரியாமல் வினவ,

உதய் ஆனந்த், ''அதான் மாமா... 'சீக்கிரம் பொண்ணை வரச் சொல்லுங்கோ. நல்ல நேரம் முடியப் போகுது!' என்று ஐயர் சத்தம் போட்டாரே? 'நல்ல நேரம்' முடியப் போகுதுன்னு சொன்னது உங்களுக்குக் கேட்கலையா?'' என்று சிரிப்போடு பதில் தந்தான்.

அருகிலிருந்தவர்கள் எல்லோரும் அவன் கூறியதை ரசித்து, சிரித்துக் கொண்டிருக்க, நிர்மலவேணியின் அருகே அமர்ந்திருந்த கீதாஞ்சலிக்கு பற்றிக் கொண்டு வந்தது.

திருமணப் பெண்ணோ சிரிப்பு மாறாத முகத்துடன் நடப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''ஆனால், அதெல்லாம் எங்கே மாமாக்கு கேட்டிருக்கப் போகுது? பொண்ணு வரப் போகுதுன்னு வாசலையே பார்த்துட்டு இருந்து இருப்பார். அதில், இதெல்லாம் அவருக்கு ஜூஜூபியா இருந்திருக்கும்! இல்ல, மாமா?'' என்று உதய் ஆனந்த் தன் கேலியைத் தொடர, அதிலிருந்த கேலி புரியாத கீதாஞ்சலிக்குக் கோபம் தான் பெருகியது.

உதய் ஆனந்தைப் பார்த்து, முறைத்துக் கொண்டே கீதாஞ்சலி, ''அப்படி ஒன்றும் யாரும் கஷ்டப்பட்டு யாரையும் கல்யாணம் செய்துக்க வேண்டாம்! எனக்குக் கல்யாணம் செய்து வைங்க என்று ஒற்றைக் காலில் நின்று கெஞ்ச வேண்டியது! அப்புறம்... வாழ்க்கையே போச்சுடா

மச்சான் என்று கிண்டல் செய்துக்க வேண்டியது! வருந்தி வருந்தி என்னைக் கல்யாணம் செய்துக்கோங்க என்று இங்கே யாராவது வெற்றிலை பாக்கு வைச்சாங்களா?'' என்று பொரிய, ஒற்றைப் புருவத்தை உயர்த்தி அவளை ஆச்சரியமாகப் பார்த்தான் அவன்.

சாதாரண கேலி, கிண்டலைக் கூட அவளால் ஏனோ அப்பொழுது சகித்துக் கொள்ள முடியவில்லை!

''ஹே! கீதா! என்னைப் பார்த்தால் உனக்குப் பாவமா இல்லையா? ஏன் உனக்கு இந்தக் கொலை வெறி?'' நிஜமாகவே பயந்து போய் அலற ஆரம்பித்த ஷ்யாம், ''நான், உன் மதினியைத் தவமாய் தவமிருந்து தான் கல்யாணம் செய்துகிட்டேன்!'' என்றவாறே நிர்மலவேணியைப் பார்த்தான்.

''அவங்க கிண்டலா தானே பேசிட்டு இருக்காங்க, கீதா. எங்க வீட்டிலேயே வளர்ந்த பொடிப் பசங்க வேற! மன்னிச்சு விட்டுடு!'' என்று உதவிக்கு வந்த நிர்மலவேணி, தொடர்ந்து, ''பாவம் உங்க அண்ணா! நானும் எங்கே போர்க்கொடி தூக்கிடுவேனோ என்று பயப்படற மாதிரி வேற தெரியுது! போனால் போகுது. பிழைச்சுப் போகட்டும்'' என்று கணவனைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

எல்லோரும் அவளுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதோ என்று பார்ப்பது போன்று கீதாஞ்சலிக்குத் தோன்ற, அந்தக் கோபமும் உதய் ஆனந்த் மீதுதான் திரும்பியது அவளுக்கு.

இவன் தானே ஆரம்பித்து வைத்தான்? இவனால் தானே? 'செய்றதைச் செய்துட்டு எப்படி இளிச்சுக்கிட்டு இருக்கான் பாரு!' என்று வெகுண்டவள், அம்மா அழைப்பதாகக் கூறிக் கொண்டு அங்கிருந்து நகர்ந்தாள்.



அத்துடன் போனதா என்றால் அதுவுமில்லை!

திருமண வீட்டில்... அதுவும் திருமண ஜோடிகளுக்குக் கூட பிறந்த சொந்தம் என்றான பிறகு எங்கேயிருந்து விலகியிருப்பது?

மறு வீட்டு விசேஷத்தின் போது, 'கொஞ்சம் உதயைக் கூட்டிகிட்டு வாம்மா' என்று நிர்மலவேணியின் தாய் தேன்மொழி இவளையா ஏவ வேண்டும்?!

வேண்டா வெறுப்பாக அவனைத் தேடி வரும் பொழுது, உதய் அவனது நண்பர்கள் புடைசூழ, அரட்டை அடித்துக் கொண்டிருந்தது இவள் செவிகளில் விழுந்தது.

''உனக்கு என்னடா, மச்சி? இன்னமும் ஒரு மாசத்தில் லண்டன் பறந்து போய்... அழகு அழகா பிகர்களைப் பார்க்கப் போறே! வெளிநாட்டில் எல்லாம் ரொம்ப தாராளமாமே?'' என்று ஏக்கப் பெருமூச்சு விட்ட ஒருவன், ''நாங்கதான் ரொம்ப காய்ஞ்சு போய் இருக்கப் போறோம்'' என மூக்கால் அழ,

உதய், ''ரொம்ப சரியா சொன்னே, கௌதம்! ஒரே மஜா தான் போ எனக்கு! நீயும் ரொம்ப பீல் செய்யாதேடா! நீயும் அமெரிக்கா போ! ஜாலியா இரு!'' என்று அவனை உசுப்பேற்றிக் கொண்டிருந்தான்.

''நான் எங்கேடா அமெரிக்கா போக?''

''மேற்படிப்புக்கு அமெரிக்காவில் முயற்சி செய்யலாமில்ல? நல்ல ஸ்கோர் செய்தால் ஈஸியா ஸ்காலர்ஷிப் எல்லாம் கிடைக்கும்.''

''எங்கேடா, மச்சி? நாலாவது வருஷமே எப்படா முடிப்போம்னு இருக்கு. இதில் இன்னமும் படிப்பா? ரொம்ப கஷ்டம்டா...''

''அமெரிக்காவில் லண்டனை விட ரொம்ப தாராளமாம், கௌதம்! வெளிநாட்டில் வேலை பார்த்தால்

ஜாலியான வாழ்க்கை. சொகுசான வசதிகள், கை நிறையச் சம்பளம் என்று குறைவில்லாமல் இருக்கும். இதெல்லாம் நினைச்சுப் பார்த்தால் இன்னமும் ஆறு மாசம் நல்லா படிச்சு ஒரு நல்ல யுனிவர்சிட்டியில் அட்மிஷன் வாங்கணும்னு ஆசை தானா வந்துடும். பீ ஹேப்பி!''

''ஹ்ம்ம்! மச்சி! நம்ம ஊரில் எந்தப் பொண்ணையாவது பார்த்து சிரிச்சாலே போதும். மறுநாளே நாலு பேர் அவளுடைய அண்ணன்காரன்னு தேடி வந்து உதைச்சுருவானுங்க. அதனாலேயே ஜாக்கிரதையா இருக்க வேண்டியிருக்கு. ரொம்ப டார்ச்சர்!'' தன் அனுபவத்தை கௌதம் கொட்ட,

''உனக்கும் ரெண்டு தங்கச்சி இருக்குல்ல? நீயும் நம்ம ஊர் திருநெல்வேலி அண்ணன்காரன் தானே? அப்புறம் என்ன?'' என்று சிரித்த உதய் ஆனந்த்,

சற்றே குரலைத் தாழ்த்தி, ''இதுக்குத் தான்டா அமெரிக்கா பக்கம் கிளம்பிப் போகச் சொல்றேன்'' என்று மீண்டும் வலியுறுத்தினான்.

ஆனால் உதய், ''அமெரிக்காவில் தேவையில்லாமல் எவளையாவது பார்த்து பல் இளிச்சா அண்ணன்காரனெல்லாம் வர வேண்டாம்! கௌன்காரியே அவளுடைய நாலு இஞ்ச் ஹீல்ஸ் செருப்பால அடி போடுவாள்! அதைத் தடுக்க பாவம் எனக்கு எதுக்கு?'' என்று மனதுக்குள்ளேயே கிண்டலடித்ததைப் பற்றியோ,

இல்லை, ''அனுபவம் கற்றுக் கொடுக்காத பாடத்தை எங்கேயுமே படிக்க முடியாது! வெளிநாட்டில் இருந்தால் தான் அதனுடைய கஷ்ட - நஷ்டம் புரிய வரும்'' என மானசீகமாக முணுமுணுத்ததைப் பற்றியோ தெரியாமல், உதய் நண்பனிடம் வாய் வார்த்தையாகச் சொன்னதை மட்டும் கேட்டபடி அங்கு வந்து சேர்ந்தாள் கீதாஞ்சலி



'இவனும் இப்படித் தானா?' என்று நினைத்தவளுக்கு முணுமுணுவென கோபம் தலைக்கேறியது!

'எங்க மதினிக்கு போய் இப்படி ஒரு தம்பி!?'

நல்லவேளை...! அண்ணன் ஷ்யாம் திருமணம் முடிந்தவுடனே கீதாஞ்சலி - உதய் இருவருக்குமான திருமணப் பேச்சை அவளது அன்னை எடுக்கவில்லை.

சொந்தக்காரர் யாரோ ஒருவர், உதய் பற்றிய திருமணப் பேச்சை எடுத்ததற்கு, ''அவன் படிப்பை முடித்து, வேலை கிடைத்த பிறகு தான் எல்லாம்!'' என்று தேன்மொழி அத்தை திட்டவட்டமாக சொல்லிவிட்டார்களாம்!

அதனாலேயே இவளுடைய அம்மா திருமண விஷயத்தை ஆறப் போட்டது.

தன் அண்ணனுடைய திருமணத்தில் நடந்தவற்றை இப்பொழுது நினைத்துப் பார்த்த கீதாஞ்சலிக்கு, தான் அவன் மீது அப்பொழுது தேவைக்கு அதிகமாகவே கோபப்பட்டிருக்கிறோமோ எனத் தோன்றியது.

கடந்த நான்கு வருடத்தில் அவன், அவளிடம் கண்ணியக் குறைவாகவோ அசட்டுத் தனமாகவோ நடந்து கொண்டானில்லை.

ஒரு முறை ஃபேஸ்புக் மூலம் அவளுடைய நண்பர்கள் பட்டியலில் இணைத்துக் கொள்ள கொடுத்த கோரிக்கையைக் கூட இவள் நிராகரித்து விட்டிருந்தாள்.

அதற்கும் கூட, 'ஏன் இப்படிச் செய்தாய்?' என்று இவளிடம் தொலைபேசியில் பேசும் போது அவன் கேள்வி கேட்கவுமில்லை; வீட்டிலிருப்பவர்களிடமும் இது குறித்து புகாராகவோ... முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாகவோ தெரிவிக்கவுமில்லை.

எப்பொழுதாவது பேசும் பொழுதும், பேச்சு பொதுப்படையாக, படிப்பு பற்றி, வேலைப் பற்றி எனச் சாதாரணமாகத் தானிருக்கும்.

ஒருவேளை அண்ணனின் திருமண வீட்டில், அவனிடம் அவள் காண்பித்த கோப முகம் தான் அவனைச் சற்று தள்ளி நிறுத்தியிருக்கிறதோ... என்னவோ?

எது எப்படியிருப்பினும் அவனுக்கும், இவளுக்கும் இந்த ஜென்மத்தில் ஒத்துப் போகப் போவதில்லை என்பதை அவனும் நன்றாகவே உணர்ந்து கொண்டான் போல?

ஆனால், எதற்கு இப்பொழுது அந்தப் பழைய கோபம் அவளுக்குத் திரும்ப எட்டிப் பார்க்க வேண்டும்? மிச்சம் மீதியா? இல்லை... திரும்ப அவனைப் பற்றி அதிகம் வீட்டில் பேசப்படுவதினாலா?

அவளை மேலும் யோசிக்க விடாமல் முரளி நந்தன், ''அத்தா... அத்தா...'' என்ற தன் மழலைப் பேச்சினால் கீதாஞ்சலியைக் கட்டிப் போட்டான்.

## 3

அடுத்த நாள், ஆர்ப்பாட்டமாக தன் தாய் வீட்டினுள்ளே நுழைந்த நிர்மல வேணி, ''ஹாய், ம்மா! எங்கே உதய்? தூங்கிட்டு இருக்கானா?'' என்றவாறே மிகுந்த எதிர்பார்ப்புடன் மாடி மீது ஒரு கண்ணை வைத்துக் கொண்டே தன் தாயிடம் வினவினாள்.

''இன்னமும் கொஞ்சம் சீக்கிரமா வந்திருக்கக் கூடாதா, நிம்மி? வாங்க, மாப்பிள்ளை! வாம்மா, கீதா!'' என்று வந்தவர்களை வரவேற்ற தேன்மொழி, ''தம்பியை இப்படிக் கொடு!'' என்றவாறே கீதாஞ்சலியிடமிருந்து தனது பேரனை ஆசையுடன் வாங்கிக் கொண்டார்.

ஷ்யாம், ''சும்மா பிகு செய்யாமல் வா, கீதா! இன்னமும் எத்தனை தடவை நிர்மலா உன்னைக் கூப்பிடணும்? இன்றைக்கு உனக்கும் லீவு தானே? நீ வரலைன்னா அத்தையும் ஏன்னு கேட்பாங்க'' என்று [illegible]



கஸ்தூரிபா நகரிலிருக்கும் தன் மாமியாரின் வீட்டிற்கு தங்கையையும் தங்களுடன் வருமாறு வற்புறுத்த, முழு மனதில்லாமலே அவர்களுடன் கிளம்பி வந்திருந்தாள் கீதாஞ்சலி.

நான்கு வருடம் கழித்து வந்திருக்கும் மதினியின் தம்பியைப் பார்க்க அவளும் எதற்கு தேவையற்று என்று வெளிப்படையாக அவர்களிடம் கேட்க முடியாமல், ஏனென்றே தெரியாத தர்மசங்கடத்துடனே உடன் வந்திருந்தவளுக்கு தேன்மொழியின் முகத்திலிருந்த உண்மையான வரவேற்பு சற்றே நிம்மதியை அளித்தது.

மகளையும், மாப்பிள்ளையையும் வரவேற்ற மகாதேவன், ''கொஞ்ச நேரம் படுக்கிறேன் என்று ஒரு மணி நேரத்துக்கு முன்னாடி தான் உதய் மாடிக்குப் போனான், நிம்மி! வேணும்னா போய் எழுப்பி விடு. இப்போ ரொம்ப நேரம் தூங்கினால், அப்புறம் ராத்திரிக்குத் தூக்கம் வராது'' என்று மகனை எழுப்பி விடுமாறு மகளிடம் கூறினார்.

இரு மனமாக தவித்த மனைவியை, ''தூங்கட்டும் விடு, நிம்மி!'' என்று ஷ்யாம் சமாதானம் செய்து கொண்டிருக்கும் பொழுதே,

இவர்களின் குரல் கேட்டு, ''ஹாய்ய்ய்!'' என்ற கூவலுடன் இரண்டிரண்டு படிகளாக வேகமாக இறங்கி வந்தான் உதய் ஆனந்த்.

''அக்கா! மாமா! எப்படி இருக்கீங்க? எங்கே என் மாப்பிள்ளை?'' உற்சாகத்துடன் எல்லோரையும் விசாரித்தவன்,

''முரளி குட்டி! மாமாகிட்ட வாங்க! வாங்க! வாங்க! மாமாவை ஞாபகம் இருக்கா டா, கண்ணா?'' என்று முரளி நந்தனை ஆவலுடன் கொஞ்ச போக, புதிதாக ஒரு நபரைச் சந்தித்ததில் மிரண்டு போன முரளி நந்தனோ,

அவனுடைய அத்தையின் துப்பட்டாவின் பின் சென்று மறைந்தான்.

கீதாஞ்சலியை மாடியின் வளைவிலிருந்தே பார்த்திருந்த உதய் ஆனந்த், தன்னைச் சமன் செய்து கொண்டு தான் கீழேயிறங்கி வந்திருந்தான்.

வந்தவன், சிரமப்பட்டு தான் அதுவரை அவனுடைய பார்வையை அவளிடமிருந்து விலக்கியும் வைத்திருந்தான்.

இப்பொழுது அதற்கு அவசியமில்லாமல் போகவும், மெல்ல அவனுடைய பார்வையை அவளுடைய விழிகளோடு கலந்தவனுக்கு, சுற்றியிருந்தது முற்றிலும் மறந்தது.

கழுத்தை ஒட்டிய வெள்ளை டாப்ஸில், கருப்பில் முன் பக்க யோக் டிசைனும், அதே நிறத்தில் கையில் பைப்பிங் வேலையும் செய்திருந்த எளிமையான பாட்டியாலா அணிந்திருந்தாள்.

அதற்குப் பொருத்தமாக காதில் கருப்பில் சின்னச் சின்ன வெள்ளை கற்கள் பதித்த பெரிய வளையம்; தலைக்குக் குளித்திருந்த கூந்தலைச் சின்ன க்ளிப் போட்டு அடக்கியிருந்தாள். முன்பு தோள் வரையிலிருந்த கூந்தலை இப்பொழுது பாதி முதுகு வரை வளர்த்திருந்தாள்.

மிக மிக எளிமையான அலங்காரம் தான்; வெயிலுக்கு இதமான காட்டன் உடை தான். ஆனால், அதிலேயும் உதய் ஆனந்தின் கண்ணையும் கருத்தையும் சுண்டியிழுத்தாள்.

நான்கு வருடங்களுக்குப் பிறகு கீதாஞ்சலியைப் பார்க்க போகிறோமென்ற பேராவல் இருந்தாலும், மீண்டும் அவளைச் சந்திக்கும் பொழுது, தான் எப்படி உணர்வோமோ வென்ற சிறு கேள்வியும் அவனுக்கு இதுவரை இருந்தது.

அவளை இத்தனை வருடங்கள் பார்க்காததினால் தான், தனக்கு இத்தனை உணர்ச்சிப் போராட்டங்களும்;



நேரில் பார்த்தால் ஒரு வேளை எல்லாமே ஒன்றுமில்லாமல் போகுமோ என்றிருந்த சந்தேகமும் இப்பொழுது கதிரவனின் கதிர் பட்ட காலை பனியாய் மறைய, அவனுடைய முகம் முழுதும் விகசித்து மலர்ந்தது.

விரிந்த புன்னகையோடு, ''ஹாய்!'' என்றவனிடம் சின்னத் தலையசைப்புடன் கீதாஞ்சலி அமைதி காக்க,

''நாலு வருஷம் கழிச்சு வந்திருக்கேன்... வரவேற்பெல்லாம் இல்லையா, கீதா?'' எனக் கண்களில் குறும்பு கூத்தாடக் கேட்டான்.

தேவையற்ற கோபமென்று அவள் ஒதுக்கி வைத்திருந்ததை அவனுடைய மந்தகாச சிரிப்பும் பார்வையும் மெல்ல மேலெழுப்ப, தடுமாற்றமான குரலில், ''வெல்கம் ஹோம்!'' என்றாள்.

மேலும் விரிந்த சிரிப்போடு, ''எஸ்! ஐ அம் ஹோம்!'' என அழுத்தமான குரலில் அவன் கூற, சன்னமாக மூண்ட எரிச்சலுடன் அவனை அவள் மனதிற்குள்ளாகவே எகத்தாளம் செய்தாள் கீதாஞ்சலி.

அதைச் சொல்றதுக்குத் தான் வரவேற்பெல்லாம் இல்லையான்னு கேட்டானா? இது, 'ஹோம்' என்று எங்களுக்குத் தெரியாதாக்கும்? எங்க நந்துக் குட்டியே ப்ளே ஸ்கூல் போய் கத்துகிட்டான். இதைத் தான் இவன் லண்டன்ன்ன்... போய் தெரிஞ்சுகிட்டானாக்கும்?

கீதாஞ்சலியின் மனம், அதன் போக்கில் உதயைக் கேலி செய்துக் கொண்டிருக்க, நிர்மலவேணி தம்பியை ஒரு சில நிமிடங்கள் விட்டு வைத்ததே பெரிதென்பது போல், அவனைச் சூழ்ந்து கொண்டாள்.

தமக்கையுடன் பேசியவாறே தன்னைப் பார்த்து மிரண்ட குழந்தைக்கு சாக்லேட், பொம்மை, கார் என்று

அவன் வாங்கி வந்திருந்தவற்றைக் கொடுத்து மெது மெதுவே தாஜா செய்து, தன் புறம் இழுத்துக் கொண்டான்.

மதிய உணவிற்குப் பிறகு, அனைவரும் ஹாலில் ஆற அமர்ந்து அளவளாவிக் கொண்டிருக்க, மகாதேவன்,

''உதய்! உங்க அம்மாவிற்கு, எங்கே நீ தஸ்ஸு பூஸ்ஸுன்னு பேசற வெள்ளைக்காரி யாரையாவது கூட்டிகிட்டு வந்துடுவியோன்னு ரொம்ப பயம்! நான் தான், நீ யாரைக் கூட்டிகிட்டு வந்தாலும் பரவாயில்லைன்னு சொல்லிட்டு இருந்தேன்'' என்று மனைவியைப் பார்த்துச் சிரித்தார்.

''ஆமா! என்னமோ இவருக்குத் தான் இப்போ பெண் பார்ப்பது மாதிரி... யாரைக் கூட்டிகிட்டு வந்தாலும் இவருக்குப் பரவாயில்லையாமா!'' என்று அவரை முறைத்த தேன்மொழி, ''இதை இப்போ கண்டிப்பா என் பையனிடம் போட்டுக் கொடுத்தே ஆகணுமா? நீங்க இருக்கீங்களே?! சண்டை மூட்டிவிடவே இருங்க!'' என்று நொடித்தார்.

''ஹா ஹா! அம்மா! அப்பா சண்டை மூட்டி விட்டால் உடனே சண்டையை ஆரம்பிக்க நான் என்ன சின்னப் பிள்ளையா? நோ வொர்ரீஸ்!'' என அம்மாவைக் கட்டிக் கொண்டு செல்லம் கொஞ்சியவன்,

''ஆனா அம்மா... நான் யாரைக் கூட்டிகிட்டு வந்தாலும் உங்களுக்குச் சரி தான் என்று சொல்லியிருந்தீங்களே? இப்போ, இப்படிக் கட்சி மாறிட்டீங்களே?'' என்று கண்ணடித்தான்.

ஷ்யாமும் தன் பங்குக்கு, ''ஒரு பேச்சுக்காக, 'எந்தக் கழுதையா இருந்தாலும்னு சரி தான்' என்று சொல்றதெல்லாம் நம்ம ஊர் கழுதையை மட்டும் தான், உதய், வெளியூர் வெள்ளைக் கழுதையை இல்லை! அப்படித் தானே, அத்தை?'' என்று தன் அன்பான அத்தையைக் கிண்டல் செய்யவும்,



மாப்பிள்ளையை முறைக்க முடியாத தேன்மொழி, 'எல்லோரும் போகட்டும்... உங்களை வைச்சுக்கிறேன்!' என அவருடைய கணவரைப் பார்த்து முறைத்ததைக் கண்ட எல்லோரும் நகைத்தனர்.

''மாமா! நான் கல்யாணம் செய்துக்கப் போற நம்ம ஊரு பொண்ணை கழுதைன்னு சொன்னதுக்கு நீங்க பின்னாடி ரொம்ம்ம்ப வருத்தப்படப் போறீங்க!'' என்று பொடி வைத்துப் பேசிய உதயைப் புரியாமல் பார்த்த நிர்மலவேணி,

''நீ திரும்ப எங்கேயாவது வேலை, படிப்புன்னு கிளம்பிப் போறதுக்குள்ளே ஒரு கல்யாணத்தைச் செய்துட்டு போடா! இல்லைனா இந்த அம்மாவோட புலம்பலைத் தாங்க முடியாது!'' என்று விட்டு,

''கல்யாணங்கறது சூடா பரிமாற வேண்டிய அறுசுவை விருந்து மாதிரி. அந்த விருந்தை அம்மா தயார் செய்தாலும் சரி... நீயே தயார் செய்தாலும் சரி... 'சாப்பிடு'ன்னு பரிமாறும் போதே சாப்பிட்டுடணும். ஆறிப் போன பிறகு பரிமாறுவதற்கும் ஆள் இருக்காது; விருந்தும் சுவையா இருக்காது. சில சமயம் சாப்பாடே கூட கிடைக்காமல் போகலாம்'' தன் பாணியில் உதாரணம் ஒன்றைச் சொல்லி மற்றவர்களையும் கலகலக்க வைத்தாள்.

''அடக் கடவுளே! அக்காவிற்குள் தூங்கிட்டு இருக்கிற உதாரண புருஷியை தட்டி எழுப்பிட்டாங்களா இந்த அம்மா? முடியலை...'' என்று உதய் வேறு கமெண்ட் சொல்ல அனைவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

ஷ்யாம், ''நிம்மி! கல்யாணம்னா ஆயிரங்காலத்து பயிர்னு கேள்விப்பட்டிருக்கேன். ஆனால் அந்த விளைச்சலை வைச்சு ஒரு அறுசுவை விருந்து வைக்கிறதை நீ சொல்லி தான் கேள்விப்படறேன். சூப்பர் போ! உனக்கிருக்கிற

அறிவுக்கு...'' என்று சொல்லி வராத கண்ணீரைத் துடைப் பது போல் துடைத்து விட்டுக் கொள்ள,

''நீ அழறதா இருந்தால், சொல்லிட்டு அழு, அண்ணா! ஆனந்த கண்ணீர்ன்னு நினைச்சு மதினி இன்னொரு உதாரணத்தை எடுத்து விடப் போறாங்க!'' என கீதாஞ் சலியும் மற்றவர்களின் கேலியில் இலகுவாகக் கலந்து கொண்டாள்.

எல்லோரின் சிரிப்பும் சிறிது அடங்கிய பிறகு பேசிக் கொண்டிருந்ததின் தொடர்ச்சியாய், ''உதய்! திருமணத் திற்குப் பெண் பார்க்கட்டுமா?'' என தேன்மொழி மகனை ஆவலுடன் கேட்க,

ஷ்யாம், ''காதல் கல்யாணமா? இல்லை, அரேன்ஜ்ட் மேரேஜா, உதய்?'' என்று மைத்துனனிடம் வினவினான்.

''காதலிச்சு கல்யாணம் செய்றதில் தான் த்ரில்லே, மாமா! கண்டிப்பா காதல் கல்யாணம் தான்!'' என அடித்துப் பேசிய உதய் ஆனந்த்,

''அதை அரேன்ஜ்ட் மேரேஜா ஆக்குவது உங்கப் பொறுப்பு, மாமா!'' என்று நல்லப் பிள்ளையாக பொறுப்பை அவனுடைய மாமாவிடம் ஒப்படைத்தான்.

மனைவியைப் பார்த்து காலரைத் தூக்கி விட்டுக் கொண்ட ஷ்யாமைப் பார்த்துச் சிரித்த உதய், ''இதே மாதிரி நீங்க எப்பவும் சிரிச்ச முகத்தோட இருக்கணும், மாமா! சொல்லிட்டேன்!'' என்று கண் சிமிட்டினான்.

''ஹ்ம்ம்... அந்த மட்டுக்கும் பெரியவங்களுக்கு மரி யாதை கொடுக்கிறீயே! ரொம்ப சந்தோஷம்!'' கேலி யாகக் கூறிய தேன்மொழி,

''என்ன, கீதா? எல்லோரும் ஆளுக்கு ஒன்றைச் சொல் றாங்க? நீ ஒன்றும் சொல்லலையா? உனக்கு மாப்பிள்ளை



எப்படி? நீயே பார்த்துக்குவியா இல்லை பெரியவங்களா?'' என்று கேட்டார்.

''என்னைப் பொருத்தவரையில் நான் மாப்பிள் ளையைக் கண்ணால் பார்க்கணும் என்ற அவசியம் கூட இல்லை!'' என்று திட்டவட்டமாகக் கூறிய கீதாஞ்சலியைப் புரியாமல் பார்த்தனர் அனைவரும்.

'இதெல்லாம் நடக்கக் கூடிய காரியமா?' எனச் சிரிப் போடு பார்த்துக் கொண்டிருந்த உதயிடமிருந்து பார்வையை விலக்கி, ''நிஜம் தான், அத்தை!'' என்று உறுதியோடு தெரிவித்தாள்.

அனைவரும் வியப்புடன் நோக்க, ''எங்க அம்மா, எங்க அப்பாவை அவங்க கல்யாணத்திற்கு முன்பு நேரில் பார்த்ததே இல்லையாம். ஆனால் எங்க அம்மா குளத் துக்கு, கோவிலுக்கு என்று போகும் போதும், வரும் போதும் அப்பா மறைஞ்சு நின்று அவங்களை சைட் அடிச்சு இருப்பார் போல.

அம்மா அதையெல்லாம் சொல்ல, கேட்கும் போது சுவாரஸ்யமா இருக்கும்'' என்று பொருத்தமான விளக்கம் ஒன்றையும் தந்து, ''இல்லண்ணா?'' என ஷ்யாமிடமும் கேட்டு சரி பார்த்தாள்.

தொடர்ந்து, ''அது மாதிரி தான் எனக்கும். சுத்தமான, அக்மார்க் நெய்யிலான பெரியவங்களா பார்த்து வைக்கிற திருமணம் தான்!'' என்று உறுதிமொழி தந்தாள்.

அவளைப் பெருமையுடன் பார்த்த தேன்மொழி, 'பார்த் துக்கோ!' என்பது போல் மகனை ஒரு பார்வை பார்த்தார்.

''இதைப் பார்த்தால் எனக்கு என்னமோ பெரியவங்க பார்த்து வைக்கிற கல்யாணம் மாதிரி தெரியலை. ஒன் சைட் லவ் மாதிரி இருக்கு. உனக்குக்கா?'' சகோதரியைத் துணைக்கு அழைத்தான் உதய் ஆனந்த்.

''உங்களை நான் இப்போ அபிப்ராயம் கேட்டேனா? பெரியவங்க பார்த்த பிறகு, என்னைக் கட்டிக்கப் போற வர் என்னைப் பார்ப்பார்! அரேன்ஜ்ட் லவ்வோ இல்லை லவ் அரேன்ஜ்டோ... உங்களுக்கு என்ன? என் கல் யாணத்தில் நீங்க ஏன் மூக்கை நுழைக்கிறீங்க?'' சிலுப்பிக் கொண்டு பதில் கூறியவளிடம்,

''நான் நுழையாமல்? வேற யாரு நுழைவாங்க?'' என்று வேகமாகக் கேட்க ஆசை தான் உதய் ஆனந்திற்கு!

ஆனால், ஆசைப்படுவதெல்லாம் நடக்கிறதா என்ன?

குத்துக்கல் மாதிரி நேரில் இருக்கிறவனை எல்லாம் கண்டுக்கிறதே கிடையாது! இதில் இவளை... யாரு என்றே தெரியாமல் சைட் அடிக்கணுமாம்!

உன்னை... இருடி!

அவனது ஆசையை அப்போதைக்கு வெளியே சொல் லாமல், ''நேரிலும் பார்க்காமல்... எப்படி இருப்பான் என்றும் தெரியாமல்... ஆல் தி பெஸ்ட், கீதா!'' நக்கலும் கோபமுமாக அவன் சொல்ல, மேலும் என்ன ரசபாசம் ஆகியிருக்குமோ?

முரளி நந்தன் அப்போது குரல் கொடுக்க எல்லோரின் கவனமும் அங்கே திசை திரும்பியது.

* * *

தன் பெற்றோர்கள் திருநெல்வேலிக்கு ஒரு திருமணத் திற்காக போயிருப்பதால், அன்று மாலை வேலை முடிந் ததும் தன்னுடைய வீட்டிற்கு வருமாறு தன் தம்பி உதய் ஆனந்திற்கு உத்தரவு போட்டிருந்தாள் நிர்மலவேணி.

அதன்படி வந்தவன், அவன் பைக்கை விருகம்பாக்கத் திலிருந்த அந்த அடுக்கு மாடி குடியிருப்பில் நிறுத்தி விட்டு, மின் தூக்கியின் மூலம் பதினோராவது தளத்தை வந்தடைந்தான்.



நிர்மலாவின் வீட்டு அழைப்பு மணியை அடித்து விட்டு அவன் காத்திருக்க, கதவைத் திறந்த கீதாஞ்சலி யின் இடுப்பில் ஒய்யாரமாக உட்கார்ந்திருந்த முரளி நந்தன், ''ம்மா... மாமா... மாமா!'' என்றபடியே அவனது அத்தையிடமிருந்து இறங்கி அவனுடைய தாயை அழைக்க உள்ளே ஓடினான்.

தமக்கையின் வீட்டிற்குப் போகிறோம் என்றதும் தனக் கும் தெரியாமல் எதையாவது உணர்த்தி விடுவோமோ என்று அஞ்சியவன் இப்பொழுது அந்த நினைப்பே இல்லாதது போன்று, கீதாஞ்சலியின் முகத்தையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு நின்றான்.

அப்பொழுது தான் இன்ஸ்டிட்யூட்டில் இருந்து வந் திருப்பாள் போல. சிறிது சோர்வாகத் தெரிந்தாள்.

கலைந்திருந்த அவளது கேசத்தை ஒதுக்கிவிடத் துடித்த கரங்களை அவன் பேண்ட் பாக்கெட்டினுள் விட்டு அடக்கியவன், ''ஹாய், கீதா!'' எனக் குரல் கனிய முகமன் கூறினான்.

''வாங்க!'' என்று சாதாரணமாக அவனை வரவேற்று, இருக்கையில் அமரச் சொல்லி, உள்ளே சென்றவளின் முதுகை வெறித்தவன், 'எத்தனை நாள் தான் இப்படி என்னைக் கண்டு ஓடி ஒளியப் போறே? நானென்ன பேயா பூதமா? உன்னை...!' என்று செல்லமாகக் கோபித்துக் கொண்டான்.

'உதய்! இது ஒன்றும் வேலைக்கு ஆகறதில்லை! ரூட்டை மாத்து!' தனக்குத் தானே அறிவுறுத்திக் கொண்டு பின்னந்தலையைக் கோதிக் கொண்டான்.

''வாடா! என்ன யாரோ மாதிரி நின்னுட்டு இருக்கே? என்ன யோசனை ஓடுது? ஆடித் தள்ளுபடியில், ஐம்பது

சதவீதம் கழிவில் தங்கம் விற்கிற மாதிரி அபூர்வமா தான் அக்கா வீட்டுக்கு வர்ற நேரமிருக்கு உனக்கு. உட்கார்!'' என்றபடியே உள்ளேயிருந்து வந்தாள் நிர்மலவேணி.

''ஹாய், அக்கா! எப்படியிருக்கே? எப்படி இருக்கான் என் மருமகன்?'' என்றபடியே அவளிடமிருந்து முரளியை வாங்கி, அவனைத் தூக்கிப் பிடித்துப் போட்டு அவனுடன் விளையாடலானான்.

''ஹப்பா... ரொம்ப தான்டா அக்கறை உனக்கு! உள்ளூரிலேயே இருக்கோம்னு தான் பேரு. நீ லண்டனில் இருந்தப்பவாவது வாரத்துக்கு ரெண்டு முறை ஸ்கைப்பில் பார்த்துக்குவோம். இங்கே சென்னைக்கு நீ வந்த இரண்டு மாசத்தில், ரெண்டு தடவை பார்த்து இருப்போமா? பெரிய இவன் மாதிரி குசலம் விசாரிக்க வேண்டியது!''

நிர்மலவேணி தன்னைக் குற்றம் சொல்வதைச் சிரிப்புடன் கேட்டுக் கொண்டிருந்தவன், ''கோவிச்சுக்காதே, அக்கா! என் செல்ல அக்கா இல்ல? பட்டு அக்கா இல்ல? என்ன செய்ய சொல்லு!? அத்தனை பிஸியான ஆளாக்கும் நான்! புது வேலை வேற! நேரமே இல்லை!'' என்றான்.

''ம்க்கும்! என்னைப் பார்க்க தான் உனக்கு நேரமே இருக்காது. போன வாரம் உன் பிரண்டோட கல்யாணம்னு செங்கல்பட்டு வரைக்கும் போயிருந்தே இல்ல?''

''மாமா... கார்... கார்!'' என்ற முரளி நந்தனிடம், ''கார் ஓட்டணுமா, கண்ணா?'' என்று விளையாடிக் கொண்டே, ''உனக்கு எப்படித் தெரிஞ்சுது? அம்மா சொன்னாங்களா?'' என வினவினான்.

''அரவிந்தோட ஃபேஸ்புக் போட்டோவில் பார்த்தேன். நீயும் அதில் இருந்தே.''

அரவிந்த் இவர்களின் தாய் வழியில் தூரத்து சொந்தம்.



திருமணத்தின் பொழுது அரவிந்த் எடுத்த சில புகைப்படத்தைப் பார்த்துவிட்டு தான் அக்கா பேசுகிறாள் என்பதைப் புரிந்தவன், ''சொந்தக்காரங்களை ஃபேஸ்புக் நட்பில் சேர்த்துக்கிறதும், சொந்த செலவில் சூனியம் வைச்சுக்கிறது மாதிரி தான்... என்னம்மா போட்டு கொடுக்கறாங்கய்யா...?'' போலியாக நொந்துக் கொண்டவனின் தொடையிலேயே சிரிப்போடு ஒன்று போட்ட நிர்மலவேணி,

''போடா! இது பெரிய ராணுவ ரகசியம்? இதைப் போய் போட்டுக் கொடுக்கிறாங்க?'' என்றாள்.

''ராணுவமோ இல்லையோ? அந்த ரகசியத்தைத் தெரிஞ்சுக்கிட்டு தானே நீ இப்போ என்னைக் கேள்வி மேல கேள்வி கேட்டு படுத்தறே? அதுவுமில்லாமல் உனக்குத் தெரியாது. அக்கா! நீ இன்னமும் பச்சைப் பிள்ளையாவே இருக்கே! சொந்தக்காரனுங்க தெரிஞ்சு செய்றது பாதி... தெரியாமல் செய்யறது மீதி!''

நிஜமான ராணுவ ரகசியத்தைச் சொல்வது போன்ற முகபாவனையுடன் அவன் கூறியதைக் கேட்டபடி வந்த கீதாஞ்சலி, ஆளுக்கு ஒரு தேநீர் கோப்பையை நீட்டினாள்.

தனக்கும் பருக ஒரு கோப்பையை எடுத்துக் கொண்டு, நிர்மலவேணியின் அருகே அமர்ந்தவள், ''அதனால தான் சில பேரை எல்லாம் நான் ஃபேஸ்புக் பிரண்ட் லிஸ்டிலேயே சேர்த்துக்கிறது கிடையாது, மதினி! எதுக்கு நமக்கு வீண் வம்பு சொல்லுங்க?'' எனச் சமயம் பார்த்து பேச்சின் நடுவில் புகுந்தாள்.

சொன்ன பிறகு தான், வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்காமல் போனோமே எனத் தோன்றியது. எப்பொழுதோ நடந்து முடிந்தவற்றைப் பற்றி எதற்கு இப்பொழுது பேச ஆரம்பிக்க வேண்டும்? அவன் இதை இப்படியே விட மாட்டானே?

அவளது எண்ணம் சரியே என்பது போன்று அவளை நோட்டம் விட்டவன், ஒரு இதழ் கடைச் சிரிப்புடன், ''அப்போ... ஏதோ ஒரு வகையில் சொந்தம் என்று ஒத்துக் கறீங்க?'' என்றான் அவளிடம் வம்பு வளர்க்கும் ஆசையில்.

''நான் எதையும் ஒத்துக்கலை! ஆளை விடுங்க!''

''ஒத்துக்கிட்டாலும், ஒத்துக்கலைன்னாலும் சொந்தம் தான், கீதா!'' இவர்கள் அரவிந்த் பற்றி தான் பேசுகிறார்கள் எனத் தவறாகப் புரிந்து கொண்டு வெகுளியாக நாத்தனாருக்கு விளக்கிய நிர்மலவேணி,

தம்பியிடம், ''உன் வயசில் இருக்கிறவனுக்கெல்லாம் கல்யாணம் நடக்குது. நீ எப்போடா கல்யாணம் செய்துக்கப் போறே?'' என்று அவன் ஊரிலிருந்து வந்ததிலிருந்து கேட்டுக் கொண்டிருப்பதையே திரும்பவும் வினவினாள்.

மர்ம சிரிப்புடன், ''பார்த்துகிட்டே இருக்கேன், அக்கா!'' உள்ளறைக்குத் திரும்பிய கீதாஞ்சலியை பார்த்துக் கொண்டே கூறினான் அவளுடைய தம்பி.

''ம்க்கும்! நீ பார்க்கிறதுக்குள்ள விடிஞ்சுடும். சீக்கிரமா பாரு! விட்டால், பிப்ரவரி மாசத்துக்கு முப்பது நாள் வர்ற வரைக்கும் காத்துட்டு இருப்பான் போல...!''

''என்னை, என்ன செய்யச் சொல்றே? படியவே மாட்டேங்குது, அக்கா! அனுபவஸ்தி! நீ தான் ஒரு யோசனை சொல்லேன்!''

பெரிதாக விரிந்த புன்னகையுடன் கேட்டவனைத் திரும்பி முறைத்த கீதாஞ்சலி, 'படிய அதென்ன ஆடா, மாடா? இப்படிப் பேசிட்டு இருந்தால் எப்போதுமே படியாது!' என நினைத்துக் கொண்டாள்.

''ஹே! என்னைப் பார்த்தால் உனக்கு எப்படித் தெரியுது?! கிரிஜா, அனுஷா என்று காலேஜ்



நிறைய பேரைச் சொல்லுவியே? அதில் ஒன்று கூடவா செட் ஆகலை?!'' நிர்மலா கேலியாகக் கேட்கவும், கீதாஞ்சலியின் உடல் இறுகுவதைக் கண்ட உதய் ஆனந்த்,

''அக்கா! போட்டுக் கொடுக்க சொந்தக்காரங்களை ஃபேஸ்புக்-கில் தான் சேர்த்துக்கணும்ன்னு இல்லை போல. என் இமேஜை டேமேஜ் செய்ய உன்னை மாதிரி ஒரு அக்கா போதும்! நான் ஏதோ விளையாட்டா சொன்னால், நீ சீரியஸா ஆக்கிடுவே போலிருக்கே?!'' என்று கையெடுத்துக் கும்பிட்டான்.

'ஆமா! இவரு பெரிய மன்மதனார்! ஆளையும் பேரையும் பாரு! இந்த உதய் யாரிடமாவது உதை வாங்காமல் போக மாட்டான்!' கடுகடுத்தவாறே அடுப்படியில் நங்கு நங்கென்று பாத்திரத்தை உருட்டிக் கொண்டிருந்தாள் கீதாஞ்சலி.

கீதாஞ்சலியைச் சீண்டியது இன்றைய கோட்டாவிற்கு அதிகமோவென்று தாமதமாக உணர்ந்தவன், இதற்கு மேலும் இங்கேயிருந்தால் விளையாட்டுக்குச் சொன்ன 'சீரியஸ்' போய், நிஜமான உடல் வலியுடன் தான் வீட்டிற்குப் போக வேண்டுமென்று சிரிப்புடன் நினைத்தான்.

அதனாலேயே விருப்பமில்லா விட்டாலும், ''அக்கா! நான் கிளம்பறேன். திங்கள் கிழமை க்ளாஸுக்கு கொஞ்சம் தயார் செய்ய வேண்டியிருக்கு'' என்று கிளம்ப முயன்றான்.

''என்ன அதுக்குள்ளே கிளம்பறே என்று சொல்றே? அங்கே போய் தனியா தானே இருக்கப் போறே? நாளைக்குக் காலை ட்ரைனுக்கு தானே அம்மா வராங்க. இங்கே இருந்துட்டு, இங்கேயிருந்தே ஸ்டேஷனுக்குப் போ. மாமாவும் சொல்லச் சொன்னார்'' என்றாள் நிர்மலவேணி.

''இல்லை, அக்கா, கொஞ்சம் வேலையிருக்கு!''

''இவன் வேற! காலில் வெந்நீரை ஊத்திகிட்டு! இன்றைக்கு எங்க குடியிருப்பு வளாகத்தில் ஆண்டு விழா கொண்டாட்டம் வைச்சு இருக்காங்க. அங்கே லைட் மியூசிக் கச்சேரியில் நம்ம கீதாவும் பாடப் போகிறாள். அட்லீஸ்ட் அதையாவது கேட்டுட்டு, ராத்திரி இங்கே சாப்பிட்டுட்டு போடா!'' என்று வலியுறுத்தினாள் அவனது தமக்கை.

விளையாடி களைத்துப் போய் தன் மடியிலேயே உறங்கிய சிறுவனை சோபாவில் கிடத்திவிட்டு எழுந்தவன், ''ஓ! அப்படியா?'' என்று ஆர்வமாகக் கூறி, திரும்பவும் அமர்ந்தான்.

விழா எப்போது, என்ன பாட்டு என்று விவரம் கேட்டறிந்தவன், ''ஓ! கண்ணாமூச்சி ஏனடாவா? கண்ணாமூச்சி ஆட்டத்துக்கு கண்ணை மட்டும் மூடினால் போதும்... இவங்க பாட்டுக்கு காதையும் மூடணுமா?'' என்று சாதுபோல் மேடை ரகசியமாகக் கேட்க,

நிர்மலா, ''என்ன அப்படிக் கேட்டுட்டே? நம்ம கீதா பாடினால் அப்படியே சித்ரா குரல் மாதிரியே இருக்குமாக்கும்'' எனத் தன்னுடைய நாத்தனாரைப் பற்றிப் பெருமை பேசினாள்.

''சித்ரா பாடினால் சின்னக் குயில்! நம்ம கீதா பாடினால் சின்ன மயிலா?''

இன்றைக்கு எப்படியும் அடி வாங்கியே தீருவது என்று தலையில் எழுதியிருந்தால் யாரால் வாயைக் கட்டுப்படுத்த இயலும்?

கான குயிலின் குரலுக்கும், ஆடும் மயிலின் குரலுக்கும் வித்தியாசம் தெரியாதவளா கீதாஞ்சலி?

உள்ளறையில் வேலையாக இருந்தாலும் இவர்கள் பேசுவதிலும் கவனத்தை வைத்துக் கொண்டிருந்தவள்,



''மதினி! இங்கே யாரும் யாருடைய கர்ண கொடூரமாப் பாட்டைக் கேட்க இருக்க வேண்டியதில்லை! பாட்டு கேட்கணுமென்றால் காதை மூட வேண்டாம்! வாயை மட்டும் மூடிகிட்டு இருந்தால் போதும்!'' என்று சத்தமாகவே குரல் கொடுத்தாள்!

'வந்துட்டாங்க! ஞான சூனியம்!' வெளியில் இருப்பவர்களுக்குக் கேட்க வேண்டுமென்றே கீதாஞ்சலி சொன்னதைக் கேட்டு, நிர்மலாவுடன் இணைந்து வாய் விட்டுச் சிரித்த உதய் ஆனந்த், இரவு விழாவிற்கு இருந்து, செவிக்கும் வயிற்றுக்கும் உணவிட்டு விட்டே போனான்.

இரவு வீட்டுக்குச் சென்று அவன் படுக்கையில் விழும் போதும், பாவங்கள் நிறைந்த கீதாஞ்சலியின் இனிமையான குரலே அவனது செவியில் ஒலித்துக் கொண்டிருந்தது.

கண்ணாமூச்சி ஏனடா என் கண்ணா நான்
கண்ணாடி பொருள் போலடா
அந்த நதியின் கரையை நான் கேட்டேன்
அந்தக் காற்றை நிறுத்தியும் கேட்டேன்
வான் வெளியைக் கேட்டேன் விடையே இல்லை
இறுதியில் உன்னைக் கண்டேன்
இருதயப் பூவில் கண்டேன்

எப்பொழுது கீதாஞ்சலியின் இருதயப் பூவில் எனை ஏற்பாள்?



4

அடுத்து வந்த வாரத்தில் ஒரு நாள் -

''மதினி...! மதினி...!''

வீட்டிற்குள் நுழையும் போதே தன் பாசமிகு மதினியை ஆர்வத்துடன் நாடினாள் கீதாஞ்சலி.

"இங்கே ஸ்டடி ரூமில் இருக்கேன், கீதா!"

நிர்மலவேணி ஒரு நோட்டுப் புத்தகத்தில் ஸ்கெட்ச் பேனாக்களை வைத்துக் கொண்டு எதையோ யோசித்த படி விளக்கக் குறிப்புகளைப் பெரிய வரைபடமாக வரைந்து கொண்டிருக்க, வியப்புடன் அவளை நோக்கினாள் இளையவள்.

"என்ன, மதினி? குட்டிப் பையனுக்கு இந்த வாரமும் எதுவும் ப்ராஜெக்ட் கொடுத்திருக்காங்களா?" என வினவியவள், அருகிலிருந்த நாற்காலி ஒன்றை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்தாள்.

விஷுவல் கம்யூனிகேஷன் படித்து முடித்து சில காலங்கள் துணை இயக்குனர் பயிற்சியும் பெற்றிருந்த நிர்மலவேணியால் திருமண வாழ்க்கை, மகப்பேறு என்று இடைப்பட்ட நான்கு ஆண்டுகள் தொழில் பக்கம் ஈடுபட இயலவில்லை.

தற்போது முரளி நந்தன் அருகிலிருக்கும் ப்ளே ஸ்கூலுக்குச் சென்று வருவதால், மீண்டும் முனைப்பாக தன் துறையில் கவனம் செலுத்தத் தொடங்கியிருந்தாள்.

"இது முரளியுடைய வேலையில்லை, கீதா. நான் டைரக்ஷன் தொடர்பான வொர்க்ஷாப் போயிட்டு இருக்கேன் இல்ல? அதில் சின்னதா ஒரு அஸைன்மென்ட். அதற்காக தான் வேலைப் பண்ணிட்டு இருக்கேன். என்னாச்சு? நுழையும் போதே ஏலம் விட்டுட்டே வந்தியே? என்ன விஷயம்?" என்றபடியே தன் கையிலிருந்த ஸ்கெட்சிற்குரிய மூடியைப் பொருத்தினாள் நிர்மலவேணி.

'தான் சொல்ல வந்ததை எப்படி ஆரம்பிப்பது?' என்ற தயக்கத்தோடு, "உங்களிடம் பேசலாம்னு வந்தேன். நீங்க வேலை செய்துட்டு இருக்கீங்க. நான் அப்புறமா



பேசறேன், மதினி" என்ற கீதாஞ்சலியின் கண்கள் வரைப்படத்தில் நிலைத்தன.

"நான் ஒன்றும் தலைப் போகிற காரியத்தில் ஈடுபடலை, கீதா! யோசிச்சுட்டுதான் இருக்கேன். பரவாயில்லை... சொல்லு" என்று நிர்மலவேணி வற்புறுத்தவும்,

வரைப்படத்தில் 'காதல்' என்று எழுதியிருந்த வார்த்தையைப் பார்த்து புன்னகைத்த கீதாஞ்சலி, "என்ன மதினி இது? அஸைன்மென்ட் பண்றேன் என்று சொல்லிட்டு காதல்ன்னு பெருசா எழுதி வைச்சிருக்கீங்க? எந்நேரமும் அண்ணன் நினைப்பு தானா உங்களுக்கு?" என்றாள் கேலியாக.

"ம்ஹ்ம்ம்... உங்க அண்ணன் கூட எந்நேரமும் எனக்கு அவர் நினைப்புதான்னு சொன்னால் நம்ப மாட்டார். நீ வேற கிண்டல் செய்துட்டு...?"

"அப்புறம் இங்கே எழுதியிருப்பதற்கு என்ன அர்த்தமாம்...?" என்று வரைப்படத்தை ஆள்காட்டி விரலால் சுட்டிக்காட்டிய கீதாஞ்சலி, அதில் காதல் என்ற வார்த்தைக்கு முன்னால் காற்றிலே வட்டமிட்டுக் காட்டினாள்.

"நான் செய்ற அஸைன்மென்ட்டே இதைப் பற்றி தான். எனக்குப் பிடிச்ச விஷயமா, விஷுவல் கம்யூனிகேஷன் வந்தாச்சு. இந்த ஃபீல்ட் வந்த பிறகு, காதல் சப்ஜெக்ட் தான் பெரும்பான்மையா விவாதிக்க வேண்டியதா இருக்கு. அப்படி விவாதிப்பதால் மட்டும் நான் எப்போதும் காதல் கடலில் மூழ்கிட்டு இருக்கேன்னு சொன்னால், காலி டின்னை உதைச்சு விளையாடுறவன் எல்லாம் ஃபுட்பால் ப்ளேயர்ன்னு சொல்ற மாதிரி தான்!"

"ஏன், மதினி? காதல் என்று இல்லாட்டி நம்ம ஊரில் படமே எடுக்க முடியாதா? ரோபோ மனிதன்

உருவாக்கிப் படம் எடுத்தால் கூட அதிலும் காதலைக் காட்றாங்க. அப்படி என்ன அவசியம்னு புரியலை!''

''ஏன்மா? நம்ம தமிழ் படங்கள் ஒழுங்கா ரிலீஸ் ஆகணும்ன்னு நினைக்கிறியா இல்லையா?'' என்று புன்னகையுடன் நிர்மலவேணி கேலி பேச,

''காதல் - காதல் - காதல் என்று அதற்கு மட்டும் முக்கியத்துவம் கொடுக்கிறதால் தான் ஸ்கூல் படிக்கும் வயசிலேயே நிறைய பேரு தடம் மாறிடறாங்க'' தன் மனதிலிருந்த ஆதங்கத்தைக் கொட்டினாள் கீதாஞ்சலி.

''மக்கள் பிரச்சனைகள் எல்லாத்துக்கும் சினிமா என்ற விஷயத்தால் மட்டுமே தீர்வு கண்டு பிடிக்க முடியாது'' என்று தீவிரமாக பதில் தந்த மூத்தவள், ''விக்கலுக்கு விக்ஸ் போடறது ரெமடி ஆகுமா?'' என அவள் பாணியில் உதாரணத்தையும் தந்தாள்.

''....''

''நாட்டில் எத்தனையோ பிரச்சனையிருக்கு, கீதா! ஆனால் அந்தப் பிரச்சனைக்கு நடுவில் பொழுது போக்கு என்று தான் மக்கள் படம் பார்க்க வர்றாங்க. அங்கேயும் அவர்களைப் போட்டு படுத்தி எடுக்கணுமா என்ற எண்ணத்திலும் காதல் சப்ஜெக்ட் தேர்ந்தெடுக்கிறது.''

''.........''

''மக்களுக்கும், மெசேஜ் சொல்ற படம் என்றால் பிடிக்கிறதுமில்லை... அதில் நடிக்க முன்னணி நட்சத்திரங்கள் வர்றதுமில்லை. அப்புறம் எப்படி இயக்குனர்களும் முன் வருவாங்க சொல்லு?'' தன் தொழில் துறையில் நிலவும் மனநிலையை நிர்மலவேணி மேலும் விளக்க,

''ஆனாலும் எப்படித் தான் நூறு வருஷங்களுக்கும் மேலே சலிக்காமல் இந்தக் காதலை வைச்சு பெரும்



பான்மையானப் படம் எடுக்கறீங்களோ, மதினி?'' எனக் கேலி செய்த கீதாஞ்சலி ஒரு அலட்சியத் தோள் குலுக்கலுடன் வியந்தாள்.

''என்ன நீ இப்படிச் சாதாரணமா சொல்லிட்ட? காதலை எத்தனை விதம் விதமா சினிமா மூலம் சொல்லியிருக்கோம் தெரியுமா?''

''இதில் பெருமை வேறயா உங்களுக்கு? ஹீரோ - ஹீரோயின் காதலை... முக்கோணம், சதுரம், வட்டம் என்று ஜியோமெட்ரி வடிவங்களுடன் சொல்றது தான் விதம் விதமா காதல்னு சொல்றீங்களா, மதினி?''

''இப்போ என்னுடைய அஸைன்மென்ட் கூட இதன் அடிப்படையில் தான் செய்துட்டு இருக்கேன். பார்த்து காதல், பார்க்காமலே காதல், காதலில்லாத கல்யாணம், கல்யாணத்தில் முடியாத காதல், கல்யாணத்தோடு அம்போ ஆகிற காதல், பேசிப் பேசியே காதல், பேசாமலே காதல், இன்டர்நெட் காதல், வேற்று மொழி காதல், பைத்தியக்காரக் காதல், ஜாதிப் பிரச்சனையை சந்திக்கும் காதல், மதப் பிரச்சனையை சந்திக்கும் காதல்... இதெல்லாம் போக நீ சொன்ன ரோபோ கதையிலும் காதல்...''

மூச்சு விடாமல் பட்டியலிட்ட நிர்மலவேணியிடம், ''மதினி... மதினி... மூச்சு விட்டுக்கோங்க... மூச்சு விட்டுக்கோங்க! இத்தனை விதம் விதமா காதலைப் படத்தில் கொடுக்கறாங்கன்னு ஒத்துக்கறேன்'' என்று சரணடைந்த கீதாஞ்சலி,

சின்ன இடைவெளிக்குப் பிறகு, ''ஒத்துக்கலை என்றால் இன்னொரு பட்டியல் வாசிச்சுடுவீங்களோ என்று பயமா வேற இருக்கு...'' எனச் சொல்லி வாய்விட்டுச் சிரித்தாள்.

சிரிப்பு ஓய்ந்ததும், ''ஆனால் காதல் என்கிற ஒரு விஷயம் ஒருவருடைய வாழ்க்கையில் எத்தனை

முக்கியமான முடிவு தெரியுமா, கீதா? கண்ணின் கடைப் பார்வையைக் காதலியர் காட்டிவிட்டால் மண்ணில் குமாருக்கு மாமலையும் ஓர் கடுகாம்ன்னு பாவேந்தர் சொல்லியிருக்கார்'' என்ற நிர்மலவேணியைக் குறுக்கிட்டவள்,

''மனிதனுடைய கோபம், சிரிப்பு, அழுகை என்பது மாதிரி காதலும் ஒரு உணர்ச்சி. அவ்வளவு தான். அதற்காக இத்தனை பெரிய பில்ட்-அப் கொடுக்க வேண்டிய அவசியமில்லைன்னு சொல்றேன், மதினி...'' என்று தன்னுடைய கருத்தை முன் வைத்தாள்.

''காதல் வந்தால் தான் கீதா அதனுடைய தாக்கம் தெரியும்...''

''அடடா! வேண்டவே வேண்டாம்பா!'' என்று சொல்லும் பொழுதே தன் தலைக்கு மேலே இரு கரத்தையும் கூப்பி வணக்கம் ஒன்றையும் வைத்தவள், ''எனக்கு இந்தப் பொல்லாத காதல் வரவும் வேண்டாம்... அதனுடைய தாக்கத்தைத் தெரிஞ்சுக்கவும் வேண்டாம்...'' எனக் கிட்டத்தட்ட அலறினாள்.

அவளது செய்கையில் மீண்டும் சிரிப்பலை எழ, ''ச்சே! ஒரு காதலில் நீ விழுந்து... அந்த உண்மைக் கதையை வைச்சே ஒரு படம் எடுத்து... பெரிய இயக்குனரா வந்துடலாம்னு இருந்தேன், கீதா! ஜஸ்ட் மி...ஸ்...ஸ~'' என்று கேலியாகத் திருப்பினாள் நிர்மலவேணி.

''இந்த மாதிரி காதல்... கீதல் என்று என்னிடம் ஏதாவது சொன்னால், சாஷ்டாங்கமா உங்க காலில் விழுந்து நமஸ்காரம் கூட செய்துடுவேன், மதினி. பார்த்துக்கோங்க'' செல்லமாக மிரட்டல் விடுத்தாள் இளையவள்.

''உன்னை எவனாவது லவ் பண்ணினால் அவன் பாடு ரொம்பவே பாவம் தான், கீதா!''



போலியாக வருந்தியவளை முறைத்த கீதாஞ்சலி புன்னகையுடனே, ''நீங்க ஒன்றும் ரொம்ப வருத்தப்பட வேண்டாம். என் மேலே எல்லாம் எவனுக்கும் லவ் என்ற ஒன்றே வராது. அப்படியே வந்தாலும் ரெண்டு நாள் சைட் அடிச்சுட்டு... அப்புறம் எந்தச் சிக்னலும் வரலை என்றதும், இந்தப் பொண்ணு நமக்கு ஒத்து வராது என்று அடுத்த பிகரை பார்க்கப் போயிடுவாங்க, மதினி. இது கம்ப்யூட்டர் காலக் காதல்'' என்றவள்,

தொடர்ந்து, ''உங்க சினிமா பாஷையில் சொல்லணும் என்றால் எனக்கு காதல் வர்றதுக்கு பல்பும் எரியப் போறதில்லை; மணியும் அடிக்கப் போறதில்லை'' என அசால்டாக விளக்கமளித்து தோளைக் குலுக்கி விட்டுக் கொண்டாள்.

நிர்மலவேணி, ''ஹா ஹா! பல்ப் எரியுதா எரியலையா என்று கரண்ட் இல்லாமல் இருக்கும்போது செக் செய்ய முடியாது கீதா. லவ் கரண்ட் பாஸ் ஆனால்... கட்டாயம் பிரகாசமா பல்ப் எரியும்'' என பதில் தந்தவள்,

''சரி! என்னை எதுக்கு தேடினே? அதைச் சொல்லு'' எனத் தக்க நேரத்தில் நினைவூட்டினாள்.

''நான் சொல்ல வந்ததை சொல்றேன்... ஆனால், அதுக்கு முன்னாடி ஒரு சந்தேகம்...''

''சொல்லு, கீதா!'' என்று ஊக்கியவளிடம்,

''மறுபடியும்... மறுபடியும் அதையே சொல்றேன்னு நினைக்காதீங்க... ஊடகத்தினுடைய தாக்கம் நம் மக்களிடம் ரொம்பவே அதிகமாச்சே? அப்போ படம் எடுக்கிறவங்க இன்னமும் பொறுப்புணர்ச்சியோட, மக்கள் மத்தியில் சிந்தனையை வளர்க்கிற அளவிற்கு இயக்கலாமில்லையா?'' தயங்கியபடி தன்னுடைய கருத்தை மீண்டும் வலியுறுத்த முயன்றாள்.

தீவிரமானச் சிந்தனையோடு, "நீ சொல்றதை நான
ஒத்துக்கறேன், கீதா! ஆனால் இந்தப் பொறுப்புணர்ச்சி
எல்லாருக்குமே தானே இருக்கணும்? மீடியாகாரங்
களுக்கு மட்டும் தான் இருக்கணும்னு நினைக்கிறதும்
தப்புத்தானே?" என்றாள்.

"நான் அப்படிச் சொல்ல வரலை, மதினி! மீடியா மூலமா
இன்னமும் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தலாமே என்ற
அக்கறை தான் எனக்கு...!"

"மீடியாவால் சமூகமா... சமூகத்தால் மீடியாவா என்ற
கேள்விக்கு விடையே கிடைக்காது. ஊடகங்களில் காண்
பிக்கிறது யதார்த்தத்தின் பிரதிபலிப்பா கூட இருக்க
லாம். இல்லையா?"

சிந்தனையோடு கீதாஞ்சலி மௌனம் காக்கவும்,
"உதாரணத்திற்கு ஒரு விஷயம் சொல்றேன். காதலைப்
பற்றி இத்தனை படம் எடுத்ததாலே உனக்கு காதல் மேலே
ஈர்ப்பு வந்துடுச்சா? வரலை, இல்ல? ஆக... ஒரு படத்
தில் மெஸேஜ் சொல்றதினால் மட்டும் தப்பு செய்றவனெல்
லாம் திருந்திடுவான் அல்லது தப்பு செய்யத் தூண்டப்
படுகிறான் என்று நினைக்க முடியாதே!" என அவளுக்கு
நிதானமாக எடுத்துரைத்தாள் மூத்தவள்.

"ம்... புரியுது, மதினி...!"

"ஒரு அன்னப் பறவை எப்படி தண்ணீரிலிருந்து பாலை
தனியா பிரிச்சு எடுக்குதோ ஒரு ஊடகம் வழியாகச்
சொல்லப்படும் விஷயங்களில் நல்லதையும், கெட்டதை
யும் பகுத்தறிஞ்சு நல்லதை மட்டும் எடுத்துக்க வேண்
டிய அடிப்படை மனமுதிர்ச்சியும், பக்குவமும் இந்தச்
சமூகத்திற்கும் தேவையா இருக்குது, கீதா!"

"ஒகே, மதினி. யோசிக்க வேண்டிய விஷயம் தான்"
என்று ஆமோதித்த கீதாஞ்சலி மெல்லிய குரலில், "நான்



இப்போ பேச வந்த விஷயமும் காதல் பற்றி தான்!" என்றாள் தயக்கத்துடன்.

நிர்மலவேணி சற்றே அதிர்ச்சியுடன், "என்னது? காதல் விஷயமாவா? இப்போ தான் காதலுக்கும் உனக்கும் ஏணி வைச்சாலும் எட்டாதுன்னு பேசிட்டு இருந்தே. இப்போ என்ன இப்படிச் சொல்றே?" என்று படபடப்புடன் வினவினாள்.

"மதினி... மதினி! பதட்டப்படாதீங்க. என்னுடைய பிரண்ட் ரம்யாவை உங்களுக்குத் தெரியும் தானே?"

"ம்... அந்த ப்யூட்டீஷியன் பொண்ணு தானே?"

"ஆமாம், மதினி! ப்யூட்டீஷியன் ரம்யா தான். அவளுடைய அத்தை மகன் குமரனை அவள் காதலிக்கிறாள். ஆனால் அது அவங்க வீட்டுக்கு யாருக்கும் தெரியாது. ரெண்டு பேர் வீட்டிலும் குடும்ப தகராறு இருக்கிறதாலே வீட்டில் விஷயத்தைச் சொல்ல பயப்படறாங்க. இது நாள் வரையில் வீட்டுக்குத் தெரியாமல் இருவரும் பார்க்கிறது... பேசறதுன்னு போய்கிட்டு இருக்கு. ஆனால், இப்போ குமரனுக்கு பூனாவில் வேலை கிடைச்சிருக்காம். அதனாலே இனி மேல் என்னுடைய உதவியை அவள் கேட்கிறாள், மதினி..." என்று அவள் சுருக்கமாக விவரங்களைச் சொல்ல,

"ஓ! உதவின்னா? எந்த மாதிரி? எதுவும் பிரச்சனை வரப்போகுது!" அக்கறையுடன் வினவினாள் நிர்மலவேணி.

"உதவின்னா... நம்ம வீடு முகவரிக்கு குமரன் ஏதாவது லெட்டர் அல்லது பார்சல் அனுப்பி வைப்பானாம். அதை ப்யூட்டி பார்லரில் ரம்யாகிட்டே கொடுக்கணும். எப்படியும் மாதத்திற்கு ஒரு தடவை அங்கே த்ரெட்டிங்-க்கு போறது தானே, மதினி? அப்போ அவளிடம் அந்த

பார்சலை கொடுத்தால் போதும்ன்னு சொல்றாள். வேற எதுவும் பிரச்சனை வராது, மதினி'' என்று விளக்கம் சொல்லும் குரலில் கெஞ்சலும் பிரதிபலித்தது.

''கண் கோளாறு வர்றதுக்கு முன்னாடி சூர்ய நமஸ்காரம் பண்ணுன்னு சொல்றேன் நான். கண் கோளாறு வந்தால் கண்ணாடி போட்டுக்கலாம், லென்ஸ் விற்குது, லேசர் செய்யலாம்னு பட்டியல் வாசிச்சுக்கிட்டு இருக்கே நீ...?''

''மதினி...?''

''சரி விடு! என்ன சொல்லிட்டு இருந்தே? லெட்டரா? ரம்யாக்கு ஈமெயில் அனுப்பி வைக்கலாமே கீதா... அந்த குமரன்?''

''ரம்யா வீட்டிலேயே இன்டர்நெட் இருக்கிறதாலே அத்தனை ப்ரீயா ஈமெயில் பார்க்க முடியாதாம். மாட்டிகிட்டால் கஷ்டம்னு நினைக்கிறாள். அதே மாதிரி பார்லருக்கும் அனுப்பி வைக்க முடியாது. ரம்யா அம்மாவும் அங்கே இருப்பாங்க'' சங்கடத்துடன் தெளிவு படுத்தினாள்.

தன் நாத்தனாரைப் பார்ப்பதற்கு மிகவும் பாவமாய் இருந்தாலும் கீதாஞ்சலியின் பொறுப்பாளர் ஸ்தானத்தில் இருக்கும் நிர்மலவேணி இவ்விவகாரத்தில் தன் கண்டிப்பைக் காட்டத் தவறவில்லை.

''இந்த விஷயமெல்லாம் உங்க அண்ணனுக்குத் தெரிஞ்சால் அவ்வளவு தான். பிரச்சனையாகிடும், கீதா. இங்கே சென்னைக்கு உன்னை திருநெல்வேலியில் இருந்து அனுப்பி வைக்கிறதுக்கே, ஷ்யாம் அத்தைகிட்டே எத்தனை பேசி... வாக்குறுதிகள் தந்து சமாதானம் செய்தார்ன்னு உனக்குத் தெரியுமில்ல?''

தலையைக் குனிந்து கொண்டு மௌனம் காத்த கீதாஞ்சலிக்கு, ''அப்படியிருக்க, இதுக்கு உன்



அண்ணனை எப்படி கீதா சமாதானம் பண்ணுவே? அதைக்கு தெரிஞ்சால் அவ்வளவு தான்!'' என்று பயமும், எச்சரிக்கையும் கலந்த குரலில் புரிய வைத்தாள் அவள்.

''அண்ணி! ப்ளீஸ்...!'' மீண்டும் மன்றாடலைத் தொடர்ந்த இளையவள்.

நிர்மலவேணி அவள் முகத்தில் எவ்வித இணக்கத்தையும் காட்டாமல் இருக்கவும், ''என் மேலே உங்களுக்கு நம்பிக்கை இருக்கு இல்ல, மதினி?'' என சந்தேகத்துடன் வினவினாள்.

''என்ன கீதா இப்படிப் பேசறே? உன் மேலே இருக்கிற நம்பிக்கைக்கும், இந்த விஷயத்துக்கும் ஒரு தொடர்பு மில்லை.''

சட்டென்று பதில் தந்தவள் சிறிது இடைவெளிவிட்டு, ''இதில் ஏதோ பிரச்சனை வந்துடுமோன்னு தோணிகிட்டே இருக்கு, கீதா! இதில் நீ எதுவும் ஈடுபட வேண்டாமே?'' எனக் கோரிக்கை விடுத்தாள்.

''குமரனை உங்க பேருக்கே கூட பார்சல் அனுப்பச் சொல்லவா, மதினி? அண்ணன், அம்மா என்று யாரும் எதுவும் உங்களைக் கேள்வி கேட்க மாட்டாங்க.''

அவளை நோக்கி வித்தியாசமானப் பார்வையை வீசியவள், ''அம்மா! தாயே! என்னை நீ இந்த ஆட்டத்துக்கு இழுக்காதே! வேண்டாம்...!'' என கைகள் இரண்டையும் உயர்த்திக் கொண்டு சரணடைய,

''உங்க தம்பிகிட்டே இருந்து அடிக்கடி ஏதாவது நம்ம வீட்டுக்கு பார்சல் வர்றது தானே, மதினி?'' தன் யோசனைக்கு வலு சேர்க்க முயன்றாள் கீதாஞ்சலி.

''கொழுப்பா உனக்கு? என் தம்பியும் இந்த குமரனும் ஒன்றா?'' என்ற நிர்மலவேணி,

"என் தம்பி உதய் வெளிநாட்டில் இருக்கும்போது ஏதாவது கிஃப்ட் அனுப்புவான். அவன் தான் இப்போ சென்னைக்கு வந்துட்டானே, கீதா? ஏதாவது கொடுக்கணும் என்றால் நேரிலேயே வந்து கொடுக்கப் போறான். இதில் எதுக்கு பார்சல் அனுப்பி வைக்கணும்? என்னையே இந்த விஷயத்தில் இழுக்காதேன்னு சொல்றேன். இதில் நீ என் தம்பியையும் வம்பில் மாட்டி விடப் பார்க்கிறியா?" என்றவாறே கீதாஞ்சலியை முறைத்தாள்.

"உங்க தம்பியை...? நான் வம்பில் இழுத்துட்டாலும்...?" மனதிற்குள் முணுமுணுத்துக் கொண்டவள்,

"எனக்கு உங்களைத் தவிர, இதில் யாரும் உதவிக்கு வரமாட்டாங்கன்னு தான் இத்தனை பேசிட்டு இருக்கேன். நீங்க மனசு வைச்சால் கட்டாயம் நடக்கும். என் செல்ல மதினி! இதுக்கெல்லாம் கோபிச்சுக்கக் கூடாது" என்று நிர்மலவேணியின் தாடைப் பிடித்து செல்லம் கொஞ்ச,

அவளது கைகளை விலக்கியபடியே, "நான் இத்தனை சொல்லியும் நீ கேட்கலை இல்ல, கீதா? உன் அண்ணன் கிட்டே நீயே பேசி சம்மதம் வாங்கிக்கோ" என்று முடிவாக உரைத்தாள்.

கீதாஞ்சலியின் மௌனம் தொடரவும், "உனக்குக் காதல்னா பிடிக்காது; ஆனால் காதலுக்கு உதவி செய்ய என்றால் ரொம்பப் பிடிக்குமோ?" என்று வினவி புருவம் உயர்த்தினாள்.

"அதெல்லாம் எதுவுமில்லை, மதினி. உங்களுக்குப் பிடிக்கலை என்றால் விட்டுடுங்க. நான் ரம்யாகிட்டே பேசிக்கறேன்" என்று ஏமாற்றத்துடன் சொல்லிவிட்டு, நிர்மலவேணி தன் முதுகை வெறித்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாலும், அதைப் பொருட்படுத்தாது திரும்பிப் பார்க்காமல் நகர்ந்து விட்டாள்.



கீதாஞ்சலியிடம் இன்னமும் மென்மையாக எடுத்துச் சொல்லியிருக்கலாமோ என்று குறுகுறுப்பு நிர்மலவேணிக்குத் தோன்ற, அதற்குப் பிராயச்சித்தமாக ரம்யாவிற்கு உதவும் பொருட்டு நாத்தனாருக்கு பரிந்து ஷ்யாமிடம் பேசி, இவ்விஷயத்திற்கு சம்மதம் வாங்கினாள்.

நிர்மலவேணியின் முயற்சியும் அதற்கான பலனும் தெரிந்த போது, கீதாஞ்சலி அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.

"ரொம்ப ரொம்ப தேங்க்ஸ், மதினி! ரம்யாக்கு நான் மட்டும் தான் பெஸ்ட் பிரண்ட்... நம்மகிட்டே முதன் முதலா இப்படியொரு உதவி கேட்டுட்டாளே... இதை எப்படி மறுக்கிறதுன்னு தெரியாமல் முழிச்சுட்டு இருந்தேன். தேங்க்ஸ் சோ மச்!" என்று அன்பாக அவளை இறுக்கி கட்டிக் கொண்டாள் கீதாஞ்சலி.

இம்மாதிரி நிர்மலவேணி மற்றும் கீதாஞ்சலி இருவருக்கிடையேயும் அவ்வப்பொழுது உதவிக்கரம் நீள்வது வழக்கமான ஒன்றுதான்.

ஆனால் வேறொரு சந்தர்ப்பத்தில், மதினிக்கு உதவி செய்வதற்காக கீதாஞ்சலி தன்னுடைய விருப்பு வெறுப்பை ஒதுக்கிவிட்டு, உதய் ஆனந்திடம் சென்று நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

அதுவே இருவருக்கும் இடையே நட்பு மலர காரணமாகவும் அமைந்தது.



## 5

முரளி நந்தனுக்கு இரண்டு வயதாகியும் சரளமான பேச்சு வராததால், அவனை ப்ளே ஸ்கூல் அல்லது மழலைகள் சார்ந்த குழு ஒன்றில் சேர்த்து விடுமாறு குழந்தை மருத்துவர்

பரிந்துரைத்ததின் பேரில், வார நாட்களில் அரை தினம் மட்டும் அவன் விளையாட்டுப் பள்ளிக்குச் சென்று வருவது வழக்கமாகியது.

மழலைகள் பட்டாளத்திற்கு நடுவே வளைய வருவதால், அவனின் பேச்சுத் திறனிலும் இப்பொழுது முன்னேற்றம் தெரிய ஆரம்பித்திருந்தது.

மகனை விளையாட்டுப் பள்ளியில் சேர்த்ததினால் நிர்மலவேணிக்கு தன் துறை சார்ந்த பயிற்சி வகுப்பு களிலும், குறும்பட வேலைகளிலும் கவனத்தைச் செலுத்த அவகாசம் கிடைக்கப் பெற்றது.

பெரும்பான்மையான நாட்களில் அவளின் வேலை கள் முடிய மாலை வரை ஆகலாம்.

ஷ்யாம், பிஸினஸ் சார்ந்த பணியில் இருப்பதால் மதிய நேரத்திற்கு கடையில் இவனுடைய இருப்பு கட்டாயத் தேவையாக இருப்பதில்லை. அதனால், அச்சமயங்களில் மகனோடு நேரம் செலவிடுவது அவனுடைய பொறுப் பானது.

சில நாட்களில் பள்ளியிலிருந்து நேராக கடைக்கே கூட மகனை அழைத்துச் சென்று விடுவான்.

ஆனால், இன்றைய தினத்தில் நிர்மலவேணிக்கு முக்கியமானக் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு ஆகியிருக்க, ஷ்யாமிற்கும் தொழில் தொடர்பான அதி முக்கியச் சந்திப்பு எதிர்பாராத விதமாக கடைசி நேரத்தில் உறுதியாயிற்று.

பணியாட்களை விட்டு மகனை அழைத்து வரச் சொல்ல முடியாது. அப்பள்ளியின் விதிமுறை அப்படி.

பெற்றோர்கள் அல்லது உறவினர்கள் மட்டுமே பள்ளி யில் பயிலும் சிறுவனை வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்ற விதிமுறையை, அங்கே பயில்பவர்களின்



பாதுகாப்பைக் கருத்தில் கொண்ட பள்ளி நிர்வாகம், எந்தவித சமரசத்துக்கும் இடமின்றி பின்பற்றியது.

பணியாள், பக்கத்து வீட்டினர், குடும்ப நண்பன் என்று எவருடனும் எக்காரணத்தைக் கொண்டும் அனுப்பி வைக்க மாட்டோம் என்று பள்ளி நிர்வாகத்தினர் சேர்க்கை யின் போதே கண்டிப்பாகச் சொல்லியிருந்தனர்.

இந்த இக்கட்டான வேளையில் நிலைமையை விளக்கிச் சொல்லி, முரளி நந்தனைப் பள்ளியிலிருந்து அழைத்து வரும் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுமாறு நிர்மலவேணி, கீதாஞ்சலியிடம் கோரிக்கை வைக்க, இளையவளும் இரண்டு மணி நேரத்தில் தன் அலுவலை முடித்துவிட்டு வருவதாக ஒப்புக் கொண்டாள்.

ஆனால், கீதாஞ்சலி அலுவல் முடிந்து கிளம்பும் வேளை யில், அவளுடன் ஆடிட்டர் அலுவலகத்தில் பணிபுரியும் சகத்தோழி அனிதா, தலையைப் பிடித்தபடி கண்கள் இருட்டிக் கொண்டு வருவதாக சைகை செய்ய, 'என்ன செய்வது?' என்று புரியாமல் ஒரு நிமிடம் தடுமாறினாள் அவள்.

கர்ப்ப காலத்தில் இருக்கும் அந்தப் பெண் கண்கள் இருட்டிக் கொண்டு வருகிறது என்று சொன்னால், 'எனக் கென்ன வந்தது?' என்று துளிக்கூட மனிதாபிமானம் இல்லாமல் எப்படி இவளால் போக முடியும்?

''என் கூட ஆஸ்பத்திரி வரைக்கும் உங்களால வர முடியுமா, கீதா? என் ஹஸ்பண்ட் வர்ற வரைக்கும் நீங்க என் கூட இருந்தால் கொஞ்சம் உதவியா இருக்கும்'' என்று கேட்பவளிடம் கீதாஞ்சலியால் மறுப்பாக எதுவும் சொல்ல முடியவில்லை.

''அவருக்கு போனில் கூப்பிட்டு விஷயத்தைச் சொல் லுங்க, அனிதா. நானும் ஒரு போன் செய்துட்டு வந்துட றேன்.''

கையில் அலைபேசியை எடுத்துக் கொண்டு பரபரப்புடன் தன் அலுவலக அறைக்குச் சென்றவளுக்கு, தான் அனிதாவுடன் மருத்துவமனைக்குச் சென்றால், முரளி நந்தனை இன்னமும் ஒரு மணி நேரத்தில் எப்படி பள்ளியிலிருந்து அழைத்து வருவது என்று புரியவில்லை.

நிர்மலவேணி தொலைபேசியில் இவளிடம் பேசும் போதே, 'உன்னால் முடியுமா?' என்று ஒருமுறைக்கு இருமுறையாக கேட்ட பின்பு தான் உரையாடலை முடித்தாள்.

அப்படியில்லையென்றால் அவள் தம்பியிடம் சொல்லிக் கொள்வதாக வேறு சொன்னாளே?

வேறு வழியில்லை! மீண்டும் மதினியை அழைத்து, நிலைமையைச் சொல்லி அவர்களையே உதயிடம் பேசச் சொல்ல வேண்டியது என்று நினைத்தவள், நிர்மல வேணியை அழைக்க முயன்றாள்.

துரதிர்ஷ்டவசமாக கருத்தரங்கில் அமர்ந்திருந்த நிர்மல வேணி இவளது அழைப்பை எடுத்தபாடில்லை.

அவள் தம்பியின் அலைபேசி எண் வேறு இவளிடமில்லை... இப்பொழுது என்ன செய்வது? ப்ச்!

அடையார் வீட்டுத் தொலைபேசிக்கு அழைத்து அத்தையிடம் அவனுடைய எண்ணைப் பெற்றுக் கொள்ளலாமா? ச்சே... ச்சே... அத்தை என்ன நினைப்பார்கள்? அப்படிக் கேட்பது நன்றாகவா இருக்கும்?

அவனிடம் உதவி கேட்பதற்குப் பதிலாக அத்தையிடமே உதவிக் கேட்டு விட்டால் என்ன?

அத்தை கட்டாயம் செய்வார்கள் அல்லது தகுந்த மாற்று வழி ஏதாவது கொடுத்தாலும் நன்மை தான்.

மின்னல் வேகத்தில் சிந்தனைகள் ஓட, அவளது கைகள் அனிச்சையாக அலைபேசியில் பதிந்திருந்த தேன்மொழியின் வீட்டு எண்ணை அழுத்தியது.



''ஹலோ!'' என்ற உதயின் ஆழ்ந்த குரலில் பதட்டம் குறைந்தவளாக,

''ஓ! நீங்க வீட்டில் தான் இருக்கீங்களா? நல்லதா போச்சு... எனக்கு ஒரு உதவி வேண்டுமே?'' என்று எடுத்த எடுப்பிலேயே படபடவென்று பேசலானாள்.

எந்தவொரு விஷயத்தையும் தொலைபேசியில் விளக்கும்போது நிறுத்தி நிதானமாகப் பேசும் கீதாஞ்சலி, பதட்டத்தில் இருந்ததன் அறிகுறியாக அவளது பேச்சு அமைந்தது.

மறுமுனையில், ''யாரு? கீதாஞ்சலியா பேசறது? ஐ அம் உதய் ஹியர்!'' என்றான் சற்றே குழப்பத்துடன்.

அவனுக்கு ஆச்சரியமோ ஆச்சரியம் தான்!

சாதாரணமாக இவனைக் கண்டாலே முகத்தைத் திருப்பிக் கொள்பவள், இன்று தொலைபேசியில் அழைத்த தோடல்லாமல், எடுத்த எடுப்பிலேயே உரிமையுடன் 'உதவி' என்று வேறு கேட்கிறாளே என்பதில் விளைந்த ஆச்சரியம்.

அதனாலேயே அவளிடம் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டி, ''உதய் ஹியர்!'' என்று மீண்டும் அழுத்திச் சொன்னான்.

அதற்குள் கீதாஞ்சலியைத் தேடி அவளது அலுவலக அறைக்கு அனிதா தளர்வான நடையுடன் வந்தடைந்திருக்க, தன்னுடைய பையை எடுத்துக் கொண்டு அவளோடு வெளியேறியபடியே பேச்சைத் தொடர்ந்தாள் அவள்.

''ம், எனக்கு இப்போ பேச நேரமில்லை. நான் சொல்றதை மட்டும் கேட்டுக்கோங்க, ப்ளீஸ். நான் இங்கே பக்கத்தில் அவசரமா சுகம் ஹாஸ்பிடலுக்குப் போகணும். [illegible] ப்ளே ஸ்கூலில் இருந்து கொஞ்சம்

அழைச்சுட்டு வந்துடறீங்களா? அண்ணனும், மதினியும் இன்றைக்கு ரொம்ப பிஸி. நான் நந்துவை மதியம் பார்த்துக்கிறதா சொல்லியிருந்தேன். ஆனால் என்னால் முடியலை... ப்ளீஸ்'' என்று தந்தி வேகத்தில் சொல்லிக் கொண்டே சென்றவள்,

மறுமுனையில், ''ம்'' என்ற ஒற்றை எழுத்து உதிரவும்,

அதையே சம்மதமாக எடுத்துக்கொண்டு, ''தேங்க்ஸ்... தேங்க்ஸ் சோ மச்!'' என்று தொடர்ந்து பேசாமல் தொடர்பைத் துண்டித்தாள்.

தன் கையிலிருந்த ரிஸீவரையே சில நொடிகள் வெறித்துப் பார்த்த உதய் ஆனந்திற்கு ஒன்றுமே விளங்கவில்லை!

'அவசரமா சுகம் ஹாஸ்பிடல் போகணும்', 'என்னால் முடியலை' என்ற இரண்டு வாக்கியங்கள் மட்டும் மாறி, மாறி ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தது.

தலையும் புரியாமல், காலும் புரியாமல் அவள் பேசியதை மீண்டுமொரு முறை நினைவில் ஓட்டிப் பார்த்துக் கொண்டவனுக்கு, முதலில், 'என்னவாயிற்று இவளுக்கு?' என்ற கேள்வி தான் பிறந்தது.

எந்தக் கேள்விக்கும் இடம் கொடுக்கக் கூடாது என்ற யுக்தியோ?

'என்னவாகியிருக்கும், ஏது ஆகியிருக்கும்...' என்று சிறு துரும்பாக முளைவிட்ட கேள்வி, சற்று நேரத்திற்கெல்லாம் அவனது எண்ணங்கள் முழுவதையும் ஆக்கிரமிக்கத் தொடங்கியது.

முரளி நந்தனைப் பள்ளியிலிருந்து பத்திரமாக அழைத்து வந்து, அவன் அன்னையிடம் ஒப்படைத்தவனின் வண்டி, சுகம் மருத்துவமனையை நோக்கிப் பறந்தது.

மதிய வேளை என்பதால் போக்குவரத்து நெரிசல் வேறு குறைவாக இருக்க, சாதாரணமாக அரை மணி



நேரமெடுக்கும் பயணத்தைக் கால் மணி நேரத்திலேயே முடித்த உதய் ஆனந்த், மருத்துவமனையை வந்தடைந்திருந்தான்.

பதட்டத்தோடு மருத்துவமனைக்குள் நுழைந்தவனின் கண்கள் இங்கும் அங்குமாய் கீதாஞ்சலிக்காக அலைப்புற்றது.

ரத்தப் பரிசோதனைக் கூடத்திலிருந்து அனிதாவைக் கைத்தாங்கலாக அழைத்து வந்த கீதாஞ்சலி அவனது கண்ணில் பட, அவசரமாக அவளருகில் வந்தவன், ''எப்படியிருக்கே? என்னாச்சு? டாக்டர் என்ன சொன்னாங்க?'' என்று தொடர் கேள்விகளை அடுக்கலானான்.

தன்னெதிரே வியர்க்க விறுவிறுக்க நின்று கொண்டிருப்பவனை ஆச்சரியத்தோடு பார்த்து கண்களை விரித்தவள், 'நீங்க எங்கே இங்கே...?' என்று வாய் வரை வந்த கேள்வியை உள்ளேயே அடக்கிவிட்டு, ''கொஞ்சம் இருங்க! வந்துடறேன்...'' என்று அனிதாவை காத்திருப்பு அறையில் உட்கார வைத்து விட்டுத் திரும்பினாள்.

அவன் கேட்ட கேள்விகளுக்கு எந்த பதிலும் சொல்லால், ''நந்துவை ஸ்கூலில் இருந்து அழைச்சுட்டு வந்துட்டீங்களா? ஸ்கூலில் சொந்தக்காரங்களைத் தவிர வேற யாரோடும் பையனை அனுப்பி வைக்க மாட்டாங்க. அதான் உங்களைத் தொந்தரவு செய்ய வேண்டியதாப் போச்சு. உங்களிடம் பேசிட்டு, ஸ்கூலுக்கும் கூப்பிட்டுச் சொல்லிட்டேன். இங்கே என்ன விஷயமா வந்திருக்கீங்க?'' என்று இவளது பங்கிற்கு கேள்விக் கணைகளைத் தொடுத்தாள்.

எரிச்சலுடன், ''ஒருத்தன் பதறிட்டு வந்திருக்கிறானே என்று எந்த ரியாக்ஷனும் இல்லாமல் உன் காரியத்திலேயே கண்ணா இரு. ச்சே!'' என்று விட்டு தன்னுடைய

பாக்கெட்டிலிருந்த கைக்குட்டையை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

'இப்போ என்ன ஆச்சுன்னு இப்படிப் பேசறே?' என சண்டையிட நினைத்தவளுக்கு, எதிரில் நின்றவனின் முகத்தில் தெரிந்த உணர்ச்சிக் கொந்தளிப்பைப் பார்த்து பேச்சே எழவில்லை.

சில கணங்கள் மலங்க மலங்க விழித்தவளின் மனதை அவனது உணர்ச்சிகள் வெகுவாக உலுக்க, அவனுடன் வாதத்தைத் தொடர விரும்பாமல் மௌனமாகவே நின்றாள்.

'பேசாமலிருந்தால் என்ன அர்த்தம்?' என்று அவளைக் கண்களாலேயே முறைத்த உதய் ஆனந்த், மருத்துவமனையிலிருந்து வெளியே செல்ல எத்தனிக்க, வழக்கம் போல, 'நீ போனால் போ! எனக்கென்ன வந்தது?' என்று அவளால் விட முடியவில்லை.

வேகமாக வெளியேறிக் கொண்டிருப்பவனின் பின்னோடு சென்றவள், "உதய்! உதய்! கொஞ்சம் நில்லுங்க..." என்று அழைக்க, லேசாகத் தயங்கிவிட்டு அதே இடத்திலேயே நின்றான். ஆனால் அவளைத் திரும்பிப் பார்க்கவில்லை.

அவனை முந்திக் கொண்டு அவன் முன் வந்து நின்றவள், "இன்னமும் ஒரு அஞ்சு நிமிஷத்தில் அனிதாவுடைய வீட்டுக்காரர் வந்துடுவார்னு நினைக்கிறேன். அது வரையில் கொஞ்சம் காத்திருக்கீங்களா?" என்று கோரிக்கை வைத்தாள்.

அவனிடம் எந்த எதிரொலியும் இல்லை என்பதைக் கண்டதும், "ப்ளீஸ்...!" என்று தலையைச் சாய்த்து மென்மையாக வேண்டுகோள் விடுத்தாள்.

தலையை ஆமோதிப்பாக அசைத்தவன் காத்திருப்பு அறையிலிருந்த நாற்காலியில் உட்கார்ந்திருப்பதாக



அறிவிக்க, ஒரு புன்னகையோடு அனிதாவின் புறம் நகர்ந்தவள், "இப்போ எப்படியிருக்கு, அனிதா? இன்னமும் பத்து நிமிஷத்தில் சுகர் லெவல் தெரிஞ்சுடும். வந்ததும் டாக்டர்கிட்டே போயிடலாம். உங்க வீட்டுக்காரர் போன் செய்தாரா?" என்று அக்கறையோடு வினவினாள்.

"அதே மாதிரி தான் மயக்கமா இருக்கு, கீதா. எங்க அக்காக்கு கர்ப்ப காலத்தில் நீரிழிவு இருந்தது. எனக்கும் வருமான்னு போன வாரம் தான் டாக்டர்கிட்டே கேட்டேன். இரத்தப் பரிசோதனை செய்ய எழுதி கொடுத்திருந்தாங்க. ஊருக்குப் போயிட்டு வந்து, ஸ்கேனோட இந்த டெஸ்ட் எடுத்துக்கலாம்ன்னு விட்டுட்டேன். இன்றைக்கு இப்படி இருட்டிக்கிட்டு வரவும் ஒரே பயமா இருக்கு" என ஜீவனற்ற குரலில் விவரம் கூறினாள்.

"ஒன்றும் பயப்படாதீங்க, அனிதா. ரிஸல்ட்ஸ் எல்லாம் சரியா தான் வரும். இன்றைக்கு காலையிலிருந்து மீட்டிங் என்பதால் சாப்பிடாமல் வேற இருந்திருக்கீங்க. அதனால் கூட தலைச்சுற்றல் வந்திருக்கலாம்..." என்று தேற்றிக் கொண்டிருக்கும்போதே அனிதாவின் கணவனிடமிருந்து அழைப்பு வந்தது.

அலைபேசியில் அழைப்பை முடித்த அனிதா, "அவர் பக்கத்தில் வந்துட்டு இருக்காராம், கீதா. ரொம்ப ரொம்ப தேங்க்ஸ். எனக்கு ரொம்ப பெரிய உதவி செய்திருக்கீங்க..." என்று நன்றி தெரிவிக்க,

"எந்த உதவியா இருந்தாலும் கேளுங்க. உடம்பைப் பார்த்துக்கோங்க" என விடைபெற்றாள் கீதாஞ்சலி.

தன்னுடைய அலைபேசியில் எதையோ பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்த உதய் ஆனந்தின் அருகில் வந்தவள், "டென்ஷன் குறைஞ்சுடுச்சா? இன்னமும்

உர்ர்ர்ர்ர்ன்னுதான் இருக்கீங்களா?'' என்று வின
சிநேகமான புன்னகை ஒன்றை உதிர்த்தாள்.

மறுப்பாகத் தலையசைத்தவன், ''ஏதாவது சாப்பி
டியா?'' என்று கனிவாகக் கேட்க,

''இன்னமும் இல்லை...'' என்றவளுக்கு சற்று மு
கோபம் கொண்டது இவன் தானா என்று பலத்த ஆச்சரிய

வியப்புடன் அவனைப் பார்த்தவள், முன்பைவிட புன்
கையைப் பெரிதாக்கி, ''நீங்க எனக்கு தான் என்னவோ
ஆச்சுன்னு பதட்டமா வந்தீங்க போல... எனக்கு எந்த
பிரச்சனையுமில்லை. என்னுடன் ஆடிட்டர் ஆபீசில் வேலை
பார்க்கிற அனிதாவுக்குத் தான் கொஞ்சம் மயக்கமா
இருந்தது. அவங்க கர்ப்பமா வேற இருக்கங்க. தனியா
விடவும் முடியலை. ஒரு பெண் துணையா இருந்தா
சரியா இருக்கும்னு அவங்களும் பீல் பண்ணினாங்க
அதான் உங்ககிட்டே நந்துவை ஸ்கூலில் இருந்
அழைச்சுட்டு வந்துடுங்கன்னு அரக்கப் பறக்க பேசிட்டு
வைச்சுட்டேன். எதுவும் விவரமா பேசலை. என் தப்பு
தான் சாரி...'' என்றாள் நிதானத்துடன்.

முதன் முறையாக தன்னுடன் இரண்டு நிமிடங்கள்
தொடர்ந்து பேசுகிறாள்!

அதிலும் வாதம் செய்வதற்காக, சண்டையிடுவதற்
காக என்றில்லாமல் பேசும் சிநேகமான பேச்சு என்பதி
லேயே மானசீகமாக சிறகின்றி வானில் பறந்தான் உதய

''நீ போனில், 'சுகம் ஹாஸ்பிடல் போறேன்; என்னால
முடியலை' என்று மொட்டையா சொன்னதும் ரொம்ப
பயந்துட்டேன், கீதா. அக்கா - மாமாவை வேற இன்
றைக்கு கையில் பிடிக்க முடியாது. இங்கே நீ தனியா
கஷ்டப்படுவியோன்னு தான், முரளியை ஸ்கூலி





இருந்து அழைச்சுட்டு வந்து, அம்மாகிட்டே விட்டுட்டு நேரா இங்கே வந்துட்டேன்'' என்று விவரங்களைப் பகிர்ந்தவன்,

குரலைச் சற்றே தாழ்த்தி, ''டென்ஷனா இருந்ததில் கோபப்பட்டுட்டேன்!'' என விளக்கம் தந்தான்.

'இப்படி கூட இவனுக்குப் பேசத் தெரியுமா?' என்பது மாதிரியான பாவனையை விழிகளில் வெளிப்படுத்தியவளிடம், ''வெளியே எங்கேயாவது சாப்பிட்டுக் கிளம்பலாமா? எனக்கும் பசிக்குது'' என்று அவன் அழைப்பு விடுக்க,

கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தவள், ''சாப்பிடாமலே மறுபடியும் ஆடிட்டர் ஆபீஸ் போயிடலாமா என்று பார்க்கிறேன். எதற்கு தேவையில்லாமல் ஆர்டிக்கில் ஷிப் பீரியடில் அரை நாள் விடுப்பு எடுக்கணும்?'' என்றாள் ஒரு சின்ன யோசனையோடு.

புருவத்தைக் கேள்வியாக உயர்த்தியவன், ''இவன் கூட வெளியே சாப்பிட வர்றதுக்கு பட்டினியோட அக்கவுண்ட்ஸ் பார்க்கிறதே மேலானதுன்னு நினைக்கறீங்களா?'' என்று வினவியபடியே வண்டி நிறுத்தத்தை வந்தடைந்தான்.

''ம்ஹ்ம்ம்! எங்கே வேதாளம் மறுபடியும் முருங்கை மரம் ஏறலையேன்னு நினைச்சேன்...'' என்று முணுமுணுத்தவள், ''அப்படி எதுவும் நினைக்கலை...'' எனப் பட்டென்று பதில் தந்தாள்.

இப்பொழுது கிடைத்திருக்கும் வாய்ப்பை நழுவ விட்டால் தன்னை விட முட்டாள் யாரும் இருக்க முடியாது என்பதை உணர்ந்தவன் கனிவான குரலில், ''சாப்பிடாமல் வேலைப் பார்க்காதே, கீதா. உனக்கு ஆபீசில் அப்படித் தலை போகிற காரியம் இருந்தால் சொல்லு. பார்சல் வாங்கிட்டு வந்து தர்றேன். பட்டினி இருந்து மயக்கம்

வந்தால் உன்னை ஆஸ்பத்திரிக்கு அழைச்சுட்டு வர, அனிதா கூட பக்கத்தில் இல்லை. உன்னை அவங்க முந்திக்கிட்டாங்க. சொல்றதை சொல்லிட்டேன். அப்புறம் உங்க இஷ்டம்'' என்று தோளைக் குலுக்கினான்.

எல்லா நேரமும் கவனத்துடன் இருக்க இயலாமல், அவளுடன் பேசுகையில் ஒருமையும் பன்மையும் மாறி மாறி வந்தது அவனுக்கு.

அவன் அவ்வப்பொழுது ஒருமையில் அழைத்ததை, கீதாஞ்சலியும் பெரிதுபடுத்தவில்லை.

மாறாக, ''உங்களுக்குச் சிரமம் வேண்டாமே! ஒன்றும் அவசர வேலை எதுவுமில்லை. இங்கேயே நல்லதா ஒரு ஹோட்டலுக்குப் போகலாம். அப்படியே உங்க வீட்டிலிருந்து நந்துவை அழைச்சுட்டு விருகம்பாக்கம் கிளம்பிடறேன்'' என்று அவனோடு செல்ல ஆயத்தமானாள்.

உணவருந்தும் வேளையில், ''இன்றைக்கு என்ன நீங்க விடுமுறை எடுத்திருக்கீங்களா? எங்கே வேலைப் பார்க்கறீங்க?'' அறிந்து கொள்ளும் ஆவலோடு வினவினாள்.

ஆனால் அவள் கேள்வி உண்மையாகவே உதய் ஆனந்தை அதிர வைத்தது.

அவனைப் பற்றிய எந்தவொரு விஷயமுமே அவள் தெரிந்து வைத்திருக்கவில்லை என்றால், அவனை அவள் எந்த ஸ்தானத்தில் நிறுத்தி வைத்திருக்கிறாள் என்பதால் வந்த அதிர்ச்சி!

கீதாஞ்சலிக்குத் தன் மீது நல்லவிதமான தாக்கம் விளைவிக்கும் வண்ணம் தான் நடந்து கொள்ளவில்லையோ என்று அவன் உள்ளம் துடித்தது.

அவள் சின்னப் பெண்... அவளது படிப்பு முடியட்டும்... விட்டு பிடிக்கலாம் என்று காத்திருந்ததற்கான பலன் இதுதான் போல!



தன் ஏமாற்றத்தை மறைத்துக் கொள்ளும் முயற்சியில் தோற்றவன், ''நான் பிஸியோதெரபியில் பி.ஜி. செய்திருக்கேன். அதாவது தெரியுமில்ல?'' என்றான் உணர்ச்சியற்ற வெற்று குரலில்.

ஆனால் அவனது வருத்தம் புரியாத கீதாஞ்சலியோ, ''ஓ! அது தெரியும், உதய்! நீங்க பி.ஜி. லண்டனில் முடிச்சுட்டு அங்கேயே இரண்டு வருஷம் வேலைப் பார்த்தீங்க இல்ல?'' என இயல்பாகக் கேள்வி தொடுத்தாள்.

''ய்யா! மல்டி ஸ்பெஷால்டி க்ளினிக்கில் பிஸியோ தெரபிஸ்ட்டா சாயந்திரம் வேலைப் பார்க்கிறேன். காலை நேரத்தில் அந்த க்ளினிக் சேர்ந்த காலேஜிலேயே லெக்சரரா இருக்கேன். இந்த வாரம் காலேஜில் இன்டர்னல்ஸ் நடக்குது. அதனாலே பாதி நாள் தான் வேலை.''

''ஓ! அதனால் தான் என்னால் இன்று மதியம் நந்துவை அழைச்சுட்டு வர முடியலைனா, மதினி உங்களிடம் கேட்கிறதா சொன்னாங்களா?'' என்று விசாரித்தவள்,

''ஆனால் கடைசி நேரத்தில் வந்த இக்கட்டில் உங்களைத் தான் உதவி கேட்க வேண்டியதா ஆகிடுச்சு. தேங்க்ஸ், உதய்!'' என்று புன்னகைத்தாள்.

''இதுக்கெல்லாம் எதற்கு தேங்க்ஸ், கீதா? உங்களுக்கு நவம்பரில் ஃபைனல்ஸ் வந்துடும் இல்ல? எப்படிப் படிச்சுட்டு இருக்கீங்க?'' என்று அவளைப் பற்றிய பேச்சை வளர்த்தான்.

''பரவாயில்லையே? என்னுடைய பரீட்சை பற்றி தெரிஞ்சு வைச்சிருக்கீங்களே?!'' என்று வியப்பாக புருவம் உயர்த்தியவளிடம்,

''ஏன்? இதில் ஆச்சரியப்பட என்ன இருக்கு? நீ சி.ஏ. படிப்பில் முதல் நிலை, இரண்டாம் நிலை பரீட்சையை

முதல் முயற்சியிலேயே பாஸ் பண்ணியதுக்கு நான் என் பிரண்ட்ஸுக்கு ட்ரீட் எல்லாம் வைச்சிருக்கேன்'' என்று புன்னகையுடன் சொன்னவன், அவளது பிரதிபலிப்பை நோட்டம் விடும் விதமாக அவளது முகத்தை ஆராய்ந்தான்.

''ஆங்...!'' என்று கண்களை விரித்தவளுக்கு அவனது புன்னகையைப் பார்த்ததும் என்ன தோன்றியதோ, ''சும்மா... ரீல் விடாதீங்க...!'' என்று பரிகாசம் செய்தாள்.

''உன்கிட்ட பேசறதுக்கு முன்னாடி, 'நான் சொல்வதெல்லாம் உண்மை... உண்மையைத் தவிர வேறெதுவும் இல்லை'ன்னு சத்ய பிரமாணம் எடுக்கணும் போல?'' என்று கண் சிமிட்டியவன்,

''மூன்றாவது பரீட்சை முடிவு தெரிஞ்சதும் பெரிய ட்ரீட் வைச்சுடறேன். அதுக்கு வாய்ப்பு இருக்கு தானே?'' என்று வினவியதன் மூலம் மீண்டும் அவள் தேர்விற்கு தயாராகும் விதத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆர்வம் காட்டினான்.

''டைம் டேபிள் போட்டு வைச்சிருக்கேன். அந்த ஷெட்யூலில் படிச்சு முடிச்சுட்டால் ரொம்ப நல்லாயிருக்கும். பார்க்கலாம்...'' என்று பதில் தந்து விட்டு,

''இன்றைக்கு உங்களிடம் உதவி கேட்க நினைத்தால், உங்க போன் நம்பரே என்கிட்டே இல்லை. அப்புறம் தேன்மொழி அத்தைகிட்டே சொல்லி, நந்துவை அழைச்சுட்டு வரச் சொல்லலாம்னு தான் வீட்டுக்குப் போன் செய்தேன். பார்த்தால் நீங்களே எடுத்துட்டீங்க...'' என்றாள்.

'அவளாகவே தன்னிடம் ஒரு இக்கட்டான நேரத்தில் உதவி செய்யச் சொல்லி கேட்கிறாளே என்ற அற்ப சந்தோஷம் கூடத் தனக்கு நிலைக்கவில்லையா?' என்ற



ஆதங்கத்தை குளிர்ந்த நீர் அருந்தி போக்கிக் கொள்ள முயற்சித்தான்.

''நீ போன் பண்ணும்போது அம்மா வெளியே ஒரு விசேஷத்துக்குப் போய் இருந்தாங்க, கீதா. நான் முரளியை அழைச்சுட்டு வந்த பிறகு தான் வீட்டிற்கு வந்தாங்க. அவனை இப்போ அம்மாவிடம் விட்டுட்டு தான் உன்னைத் தேடி ஹாஸ்பிடலுக்கு வந்தேன்'' என்றவன் முதல் காரியமாக தன்னுடைய அலைபேசி எண்ணை கீதாஞ்சலியிடம் கொடுத்துவிட்டு, அவளுடையதைப் பெற்றுக் கொண்டான்.

''வெளிநாட்டு வாழ்க்கை தான் உங்களுக்குப் பிடிக்கும்னு நினைச்சுட்டு இருந்தேன். நீங்க எப்படி லண்டனிலிருந்து திரும்பி வந்தீங்க?''

அவ்வப்பொழுது தன் மனதிற்குள் தோன்றும் கேள்வியைக் கேட்க இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டாள்.

'ஏன் இப்படியொரு கேள்வி?' என்ற வினா அவனது முகபாவனைகளில் தொக்கி நிற்க, 'இவனிடம் ஏதாவது சொல்லி வாய்விட்ட பிறகு தான் சும்மா இருந்திருக்கலாமோ என்ற எண்ணமே தனக்கு உதிக்கிறது' என்று மானசீகமாக தன்னை நிந்தனை செய்து கொண்டாள்.

''அப்படி உங்களுக்கு நினைப்பு வர்றதுக்கு என்ன காரணம்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

மிகுந்த தயக்கத்தோடு, ''உங்க பிரண்ட்ஸ்கிட்டே பேசினதை வைச்சு... நானா அப்படி நினைச்சுட்டேன்...'' என்று இழுத்தாள்.

இவளை நேரில் பார்த்து, பேசின சந்தர்ப்பங்களே மிகவும் குறைவு. இதில் நான் என் நண்பர்களுடன் பேசும் பொழுது இவள் எங்கேயிருந்து எதைக் கேட்டாள்?

"என் பிரண்ட்ஸ் கூட பேசும்போது நீங்க எப்போ கூட இருந்தீங்க...?" என்ற கேள்வியின் மூலம் அவளை மேலும் அவஸ்தைக்குள்ளாக்கினான்.

கம்மிய குரலில், "அண்ணன் கல்யாணத்தில்... நீங்க உங்க பிரண்ட்கிட்டே வெளிநாட்டு வாழ்க்கை சொகுசானதுன்னு சொல்லிட்டு இருந்ததைக் கேட்டேன். அதை வைச்சு தான்..." என்று தயங்கித் தயங்கி அவள் விளக்க, அவளை யோசனையுடன் பார்த்தான் உதய் ஆனந்த்.

யாரிடமாவது கேலியாகவோ, இல்லை கிண்டலாகவோ அவன் பேசுவதை அரையும் குறையுமாக கேட்டு, அதையும் மேலோட்டமாக மட்டும் அவள் புரிந்து கொள்வதோடு, அதன் அடிப்படையில் தன்னை எடை போடுவது எந்த விதத்தில் சரியானதாக இருக்கும்?

அதுவும் அவளுக்குத் தன் மீது நல்ல அபிப்ராயம் ஏற்பட இவன் பாடுபடும் போது இந்த மாதிரியான சுபாவம் அந்த முயற்சிக்குத் தடையாக அல்லவா அமையும்?

"உங்களுக்கு காது ரொம்ப ஷார்ப் தான், கீதா!" என்று நாசூக்காகக் குத்திக் காட்டியவன்,

"நான் உங்களிடம் பேசறதுக்கு... உங்ககிட்ட விளக்கம் கொடுக்கலாம். ஆனால் என் பிரண்ட்ஸ்கிட்டே பேசற எல்லாத்துக்கும் எந்த விளக்கமும் உங்களுக்கு நான் தர தேவையில்லை, இல்லையா?" என்று சிறிது இடைவெளிவிட்டு,

பின் தொடர்ந்து, "ஒரு வேளை நான் தான் அந்த அளவில் - அதாவது விளக்கம் தர தேவையில்லாத நிலையில் - நம் உறவு நிலை இருக்குன்னு நினைக்கிறேனா...?" என்று வாழைப் பழத்தில் ஊசி ஏற்ற, கீதாஞ்சலிக்கு என்னவோ போன்று ஆகிவிட்டது.



'நீ எப்படி ஒட்டுக் கேட்கலாம்?' என்று அவளிடம் அவன் சண்டை பிடித்திருந்தால் கூட இத்தனை அழுத்தம் இருந்திருக்காது போல!

ஆனால், இப்பொழுதோ அவன் முகத்தைக் கூட ஏறிட முடியாமல் கையில் வைத்திருந்த ஸ்பூனைக் கொண்டு உணவருந்திக் கொண்டிருந்த தட்டில் கோலம் வரையலானாள்.

சில கணங்கள் மௌனத்திலேயே கழிய, அவளால் உதய் ஆனந்திற்கு இவ்விஷயத்தில் திருப்பித் தராமல் இருக்க முடியவில்லை.

"நீங்க எந்த விளக்கமும் எனக்குத் தர வேண்டியதில்லை தான், உதய். நான் ஒத்துக்கறேன். ஐ அம் சாரி அபௌட் இட்!" என்றவள்,

அவனது முகத்தை நேராக நோக்கி..."... ஆனால் என்னைப் பற்றி பேசும் போது நீங்க குயில் கச்சேரி என்றோ... மயில் கச்சேரி என்றோ சொல்லலாம்; காதை மூடிட்டு கச்சேரி ரசிக்கிறதைக் கூட பெருமையா பேசிக்கலாம். நீங்க பேசறது தப்பில்லை... ஆனால், அதைக் கேட்டு நான் ரியாக்ட் செய்றதுதான் தப்பு. அப்படிதானே?" என்று முறையிடும்போது அவனைச் சுட்டெரிப்பது போன்ற பார்வை பார்த்தாள்.

"ஹேய்! நான் சும்மா விளையாட்டுக்குத் தான் பேசினேன் கீதா!"

"இப்போ கொஞ்ச நேரம் முன்னாடி உன்னிடம் விளக்கம் தரும் அளவிற்கு நமக்குள் என்ன இருக்குன்னு கேட்டீங்களே? அதையே தான் நானும் திருப்பிக் கேட்கிறேன். என்னைக் கேலியோ, கிண்டலோ செய்து பேசற அளவுக்கான உரிமையை நீங்களா எடுத்துக்கலாமா?"

உணர்ச்சி வசப்பட்டு கொந்தளிக்காமல் நிறுத்தி நிதானமாகவே நியாயம் கேட்டாள்.

'உன்னை உயிருக்குயிராய் காதலிப்பவன் என்ற உரிமையை உன்னிடம் நானே எடுத்துக் கொண்டேன்' என்று அவனால் வெளிப்படையாய்ச் சொல்ல முடிய வில்லை.

அதே போன்றொரு உரிமையில் ஒன்றும் கீதாஞ்சலி அவன் நண்பர்களுடன் பேசியதைப் பற்றி இப்பொழுது விசாரிக்கவில்லை என்பதையும் அவன் உணர்ந்திருந்தான்.

அவள் தற்போது தன் மீது கொண்டிருக்கும் அபிப்ரா யத்தை மாற்றி விட்டுத் தான் அவளிடத்தில் தன்னுடைய விருப்பத்தைச் சொல்ல வேண்டும். இருவருக்குமிடையே இருக்கும் உறவு பலப்பட்டால் ஒழிய, அபிப்ராயத்தை மாற்றுவதென்பது முடியாத காரியம்.

முதலில் விரோதத்தை வளர விடாமல், இருவருக்கு மான சிநேகம் மலர்வது தான் மிகவும் முக்கியம்!

அதற்கான முதல் அடியாக, ''ஐ அம் சாரி, கீதாஞ்சலி! ஆனால், நானும் நீ கேட்டுடக் கூடாது என்று எதையும் ரகசியமா பேசலை. இருந்தாலும், நானாக அந்த உரிமையை எடுத்திருக்கக் கூடாது தான். பழசெல்லாம் போகட்டும். இனிமேலாவது நாம ரெண்டு பேரும் எந்தப் பேதமுமில் லாமல் நண்பர்கள் ஆகலாமே?'' என்று தனது கரத்தை அவள் புறம் நீட்டினான்.

மெல்லிய புன்னகை ஒன்றை உதிர்த்த கீதாஞ்சலி, ''நானும் ஏதாவது தப்பா பேசியிருந்தால் என்னையும் மன்னிச்சுடுங்க. பிரண்ட்ஸ்!'' என்று அவனது கரத்தைப் பற்றிக் கொண்டு மென்மையாகக் குலுக்கினாள்.





6

தன் வலது கரத்தில் பாந்தமாக பொருந்தியிருந்த கீதாஞ்சலியின் மென் கரத்தைப் பார்த்த உதய் ஆனந்திற்கு, அதுவே, அவர்களின் நட்பின்... உற வின் இனிய தொடக்கமாக அமையும் என்ற நம்பிக்கையும், கூடவே வேண்டுதலும் இருந்தது.

இப்பொழுது நட்பிற்காக தனது கரத்தினுள் அடங்கி யிருக்கும் அவளது கரம், அக்னி சாட்சியாக தன் கரங் களுக்குள் அடங்கும் நாளை மிகவும் எதிர்பார்த்துக் காத்திருக்கலானான்.

அவனும் கீதாஞ்சலியும், ஒருவரிடம் ஒருவர் மன்னிப்பு கேட்டு இருவரும் கை குலுக்கிய பின் வந்த நாட்கள் சிறகின்றி பறந்தது அவனுக்கு.

ஒருமையில் விளிப்பதா இல்லை பன்மையில் தான் விளிக்க வேண்டுமா என்று ஊசலாடிய நிலை போய், அதைப் பற்றிய பிரக்ஞை கூட இன்றி, ஒருவரை ஒருவர் ஒருமையில் அழைத்துக் கொள்வது அவர்களுக்குள் இயற்கையாகவே அமைந்தது.

உதய் மீது அவளுக்கிருந்த கோபம் அதிகப்படியானது தான் என்ற ஞானம் கீதாஞ்சலிக்கு மீண்டும் பிறந்தது. இம்முறை சற்றே உறுதியாக. உதய் ஆனந்தும் அந்த உறுதி தகர்ந்து போகாத அளவிற்குக் கவனமாகவே நடந்து கொண்டான்.

அவர்கள் இருவரின் நட்பில் முன்னேற்றம் இருந்தாலும், அவளுடைய ஃபேஸ்புக் நட்பு வட்டாரத்தில் தன்னைச் சேர்க்குமாறு அவளிடம் முன்பு போல கோரிக்கையை வைக்கவில்லை உதய்.

கீதாஞ்சலியை நோக்கி நட்பு கரத்தை அவன் முதலில் நீட்டியாகி விட்டது.

சுடனுக்காக அதற்கு அவள் உடன்பட்டிருக்கவில்லையென்றால், நான்கு வருடத்திற்கு முன் அவள் நிராகரித்த கோரிக்கையை, அவளே இப்பொழுது நேர் செய்யட்டுமென்ற எண்ணம் அவனுக்கு.

ஃபேஸ்புக்கில் இருப்பவர்கள் எல்லோரும் நிஜமாக நண்பர்கள் தானா என்ற வாதத்திற்கே அவன் போகவில்லை. தெரிந்தவர் தெரியாதவர், அறிந்தவர் அறியாதவர் என்று யார் யாரையோ அதில் சேர்த்துக் கொள்ளும்பொழுது, இவள் இதைக்கூட அவனுக்காகச் செய்ய மாட்டாளா என்ற சின்னக் கோபம்.

அந்த மகிழ்ச்சியையாவது அவளாக தரட்டுமே என்ற சின்ன திமிர்; பெரிய எதிர்பார்ப்பு.

அது ஒருபுறமிருக்க, அவளுக்கு வேற்றுமையாக தெரியாதபடி, அவனால் முடிந்த வரையில்... முடியாவிட்டாலும் கூட எப்படியாவது, அவளை நேரில் சந்திக்கவோ இல்லை தொலைபேசியில் பேசவோ சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொண்டான் அவன்.

அவனுடைய அக்கா வீட்டுக்குப் போகக் கூட நேரமில்லை என்று முன்பு கூறியவன், இப்பொழுது வாரத்திற்கு குறைந்தபட்சம் ஒரு முறையாவது கண்டிப்பாக அங்கு போய் வந்தான். ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு சாக்குடன்.

ஒரு முறை - ''அம்மா இந்தப் பால்கோவா செய்தாங்க, அக்கா! உனக்குப் பிடிக்குமேன்னு எடுத்துட்டு வந்தேன்'' என்பான்.

ஏதோ பால்கோவாவே கிடைக்காத அத்துவான காட்டில் அவன் அக்கா இருப்பது போன்று!

அடுத்த முறை, அவன் அம்மாவையும் உடன் அழைத்து வருவான்.



வரும் பொழுதே, ''நீ அம்மாவைக் காண வழி மேலே விழி வைச்சுக் காத்திருக்கிறதா ஒரு பட்சி சொன்னது. அம்மாக்கும் வீட்டில் ரொம்ப போர் அடிக்குதாம். அதான், சரி வாங்கன்னு இங்கே கூட்டிக்கிட்டு வந்தேன்'' என்பான், அப்படிச் சொல்லியே இருக்காத அவன் அம்மாவை ஆச்சரியத்தில் மூழ்கடித்தபடி.

'மகன் ஏதோ காரணம் கற்பிக்கிறான்' என்று தேன்மொழியும் ஒரு சின்ன புன்னகையுடன் அமைதி காக்க, ''நான் எதுக்குடா வழி மேலே விழி வைக்கப் போறேன்? வேணும்னா நானே ஒரு எட்டு அடையாருக்கு வந்துட்டுப் போறேன்'' என்று சகோதரனிடம் கேலி பேசிய நிர்மலவேணியிடம்,

''ஓ! அப்படியா? ஒருவேளை பட்சி தப்பா சொல்லிடுச்சு போல?'' என்று கிண்டலாக பதில் தருபவன், அதன் பிறகு பேச்சை திசை மாற்றும் கலையையும் கற்றுக் கொண்டான்.

இப்படி நேரில் சந்திப்பது ஒருபுறம் இருக்க, அவர்களுக்குள் ஆரம்பித்த ஐந்து நிமிட அலைபேசி பேச்சு, நாளாக நாளாக அவர்களின் உறவு போலவே வளர்பிறை என வளர்ந்துகொண்டே போனது.

அன்றும் அது போன்றே, ''கீதா! ஒரு ஜோக் சொல்லவா?'' என்று ஆரம்பித்தான்.

''வேண்டாம்! வேண்டாம்! ப்ளீஸ்! என்னை விட்டுடு, உதய்!'' என அலறியவளைப் பொருட்படுத்தவே இல்லை அவன்.

''விடறதுக்காகவா இத்தனை பாடு?'' என அவன் முணுமுணுக்க, பேசியின் ஒலிப்பெருக்கி அதைத் தெளிவாக கீதாஞ்சலியின் செவியில் கொண்டு போய் சேர்த்தது.

"என்ன? என்ன பாடு?"

புரியாமல் கேள்வி எழுப்பியவளிடம், "விடறது காகவா ஜோக்கை ஞாபகம் வைச்சிருக்கேன்?" என்று சமாளித்தவாறே வெளியே கேட்காதபடி பெருமூச்சை வெளியேற்றிவிட்டு,

"சரி, ஜோக்கை கேளு! என்னுடைய க்ளாஸில் ஒரு பையன் ஒரு வாரமா காலேஜ் வரலை. அவனிடம் ஏன்டா போன வாரம் காலேஜ் வரலைன்னு கேட்டா என்ன தெரியுமா சொல்றான்?" என்றான்.

"உன் க்ளாஸில் தூங்கறதுக்கு வீட்டிலேயே தூங்கிட்டேன்னு சொன்னானா?"

"ச்சே... ச்சே... என் ஸ்டூடண்ட் உன்னை மாதிரி இல்லை!" என்று சொல்லிச் சிரித்தவன், "ஒரு இடத்துக்கு அடிக்கடி போனால் மரியாதை இருக்காதுன்னு அவனுடைய அப்பா சொல்லுவாராம். அதனால் தான் வரலை சார்-ன்னு சொல்றான். எப்படியெல்லாம் யோசிக்கிறாங்க பார்த்தியா, கீதா?" என ஆச்சர்யமாகக் கேட்டு,

"ஆனால் நான் அப்படியெல்லாம் யோசிக்கிறதே இல்லையாக்கும்" என்றான்.

மறுமுனையில் அவளுக்கு சிரிப்பு வந்தாலும் அதை அடக்கிக் கொண்டவள், "போதும்பா! போதும்! அதான் உனக்கும் சேர்த்து உன் ஸ்டூடண்டே யோசிக்கிறானே?" என்றாள் கேலியாக.

"அப்படி யோசித்திருந்தால் தான், பேசாமல் கஸ்தூரிபா காலனியிலேயே நான் இருந்திருப்பேனே? விருகம்பாக்கத்திற்கு இப்போ ஏன் வரப் போறேன்?" என்றவள் அவள் அழைப்பு மணியை அழுத்த, ஆச்சரியத்துடனே அவனுக்குக் கதவைத் திறந்தாள் கீதாஞ்சலி.



உதயின் விழிகளின் மலர்ச்சியும், இதழ்களில் நிலைத்திருந்த புன்னகையும் அவளையும் தொற்றிக் கொண்டது.

"எங்க அப்பா, 'கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு' என்று சொல்லியிருக்கார். அதனாலே, நான் இங்கே அடிக்கடி வர்றதனால் இமேஜ் போயிடுமோ என்றெல்லாம் யோசிக்கிறதே இல்லை!" என்றவன்,

சற்றே இடைவெளிவிட்டு, "நீ என்னைப் பற்றி தப்பா நினைச்சுப்பியா என்ன?" என்று சாதாரணம் போல் வினவினான்.

இருந்தாலும் அவன் மனதில் படபடப்பு தான்! எங்கே அவள், 'ஆமாம்!' என்று சொல்லி விடுவாளோவென?

அவனை ஏமாற்றாமல், "கண்டிப்பா இமேஜ் டேமேஜ் தான்..." என்று அவன் மனதை உடைத்தவள், "இந்த மாதிரி கழுத்தில் ரத்தம் வர வைக்கிறதையெல்லாம் ஜோக் என்ற பேரில் சொன்னால், கண்டிப்பா டேமேஜ் தான்!" என்று உடனேயே அதனை ஒட்டவும் வைத்தாள்.

"அப்போ... நான் இங்கே அடிக்கடி வர்றதினால் டேமேஜ் இல்லைன்னு சொல்றே?" உதய் ஆனந்த் அவளை ஓரப் பார்வை பார்த்துக் கொண்டே வினவ,

"நீ உங்க அக்காவைப் பார்க்க வர்றே. இதில் உன்னோட இமேஜ் - 'பாசக்கார தம்பி' என்று உயரத் தானே செய்யும்?" என்று சிரித்தவளின் காதில்,

"சுத்தம்! இதுக்கு மேலே டேமேஜ் ஆகணுமாக்கும்?" என அவன் முணுமுணுத்தது அரையும், குறையுமாக விழ, லேசாகத் துணுக்குற்றாள்.

அந்த நொடியில், 'உதய்க்குத் தன் மீதான ப்ரியம் நட்பையும் தாண்டிய ஒன்றோ?' என்று அவளுக்குக் கொஞ்சமே கொஞ்சம் ஐயம் எழுந்தது.

அதை ஒதுக்கியவள், "ஆனால் இப்போ மதினி வீட்டில் இல்லையே? மதினியோட வொர்க் ஷாப் ட்ரைனிங் முடிய இன்றைக்கு தாமதமாகுமாம். அண்ணாவும், நந்துவும் அவங்களைக் கூப்பிட்டுட்டு தான் வருவாங்க" என்று விவரம் தந்தாள்.

"அடடா! சனிக்கிழமை கூட ட்ரைனிங் வைச்சுட்டாங்களா? சங்கரா ஹார்ட் பவுண்டேஷன் சார்பில், இன்றைக்கு நடக்க இருக்க லஷ்மன் ஸ்ருதி இசைக் கச்சேரிக்கு நாலு விஐபி டிக்கெட் கடைசி நிமிஷத்தில் தான் கிடைச்சது. உனக்குப் பிடிச்ச எஸ்.பி.பி., சித்ரா ரெண்டு பேரும் தான் பாடறாங்க. இப்போ என்ன செய்யறது?" என அவளிடமே யோசனை கேட்டான்.

தனியாக தான் அவளை எங்கும் அழைத்துச் செல்ல முடியாது. குடும்பத்துடனாவது போய் வரலாமே என்ற எண்ணம் அவனுக்கு!

கீதாஞ்சலிக்கோ பாட்டு கச்சேரி... அதுவும் அவளது அபிமானப் பாடகர்கள் வேறு! நேரடியாகவே அவர்களைப் பார்க்கவும், அவர்கள் பாடுவதைக் கேட்கவும் ஒரு வாய்ப்பு எனும்போது அவளது உற்சாகத்திற்கு அளவேயில்லை!

உள்ளத்தில் விகல்பமிருந்தால் இப்படிக் குடும்பத்துடன் அழைத்துச் செல்ல விரும்புவானா? இவன் மீது போய் சற்று முன்பு சந்தேகம் கொண்டோமே என தன்னையே மனதுக்குள் கடிந்து கொண்டாள் கீதாஞ்சலி.

ஆனால், வீட்டில்...?

".... வீட்டில் யாருமில்லையே, உதய்?" என்று தவித்தவளைப் பார்த்தவன், ஷ்யாமிற்கு அழைப்பு விடுத்து விஷயத்தைக் கூறிவிட்டு வைத்தான்.

"கிளம்பு, கீதா! அவங்களை நான் நேரா அங்கேயே வரச் சொல்லிட்டேன். அங்கே வந்ததும் எனக்கு போன் செய்தால், நான் போய் வாசலில் இருந்து அவங்களை அழைச்சுட்டு வந்துடுவேன். இல்லைன்னாலும் ஏதாவது பார்த்துக்கலாம். கிளம்பு!" என்று அவளைத் துரிதப்படுத்திக் கிளம்பச் செய்தான்.



"டிக்கெட் ரொம்ப விலையா? எங்க ஆடிட்டர் கிடைக்கலை என்று சொன்னாரே? எப்படிக் கிடைச்சது?" என்ற அவளின் ஆயிரத்தெட்டு கேள்விகளுக்கும்,

"உனக்கு எதுக்கு அந்தக் கவலை? எப்படியோ கிடைச்சது" என்ற எளிதான விடையையே தந்து வண்டியில் அமர்ந்தான்.

"சரி... என் தோளைக் கெட்டியாகப் பிடிச்சுக்கோ. நீ என் பின்னாடி இருக்கேன்னு நினைச்சுட்டே நான் பாட்டுக்கு போக, நீ அப்புறம், 'மேன் ஹோல்' எதிலாவது விழுந்து வைக்கப் போறே. நம்ம ரோடு பற்றியெல்லாம் ஒன்றும் சொல்றதுக்கில்லை!"

"நீ இப்படியே பேசிட்டு என்னை எங்கேயாவது தள்ளி விட்டுடாதே!"

"சின்னக்குயில் கச்சேரிக்கு, மயிலைப் பத்திரமா கூப்பிட்டுட்டு வரேன்னு உங்க அண்ணனுக்கு நான் வாக்குக் கொடுத்திருக்கேன். உன்னை தள்ளி விடுவேனா?" என்ற உறுதிமொழியோடு வண்டியிலும் வேகமெடுத்தான்.

இவர்கள் சென்ற பத்து நிமிடங்களில் ஷ்யாமும் தன் குடும்பத்தோடு அங்கு வந்தடைய, கச்சேரியின் போது எஸ்.பி.பி.யின் காந்தக் குரலிலும், சித்ராவின் தேன் குரலிலும் மூழ்கியிருந்த கீதாஞ்சலி, அந்தப் பரவசத்தில், தன்னருகில் அமர்ந்திருந்த உதய் ஆனந்தின் கரத்தை அவள் அவ்வப்பொழுது இறுகப் பற்றியதைக் கூட உணர்ந்தாளில்லை.

பாடல்களுக்கிடையில் உதயிடம், "சூப்பர்! என்னவொரு பாவம் அவங்க குரலில்?!" என்று வியந்து பாராட்டியவள்,

"நேரடி நிகழ்ச்சி கேட்க அப்படியே புல்லரிக்குது! இதோட தாக்கமே தனியில்லை?" எனப் புளகாங்கிதமும் அடைந்தாள்.

உதய் ஆனந்திற்கோ கேட்கவே வேண்டாம்! அவன் இந்த உலகத்திலேயே இல்லை!

'ச்சே... தனக்கு இப்படி பாடத் தெரியாமல் போய் விட்டதே!' என்று சிறு ஏக்கம் கூட அவனுக்கு எட்டிப் பார்த்தது!

கச்சேரி முடிந்ததும் கீதாஞ்சலி அவள் அண்ணனுடன் சென்றுவிட, தன் வீட்டிற்கு வந்து படுக்கையில் விழுந்த உதய் ஆனந்திற்கு ஏதேதோ எண்ணங்கள், உணர்ச்சிக் கொந்தளிப்புகள்!

அஞ்சலி அஞ்சலி புஷ்பாஞ்சலி
பூவே உன் பாதத்தில் புஷ்பாஞ்சலி
பொன்னே உன் பெயருக்கு பொன்னாஞ்சலி
கண்ணே உன் குரலுக்கு கீதாஞ்சலி
கண் காணா அழகிற்கு கவிதாஞ்சலி
அழகியே உனைப்போலவே அதிசயம் இல்லையே
அஞ்சலி பேரைச் சொன்னேன் அவிழ்ந்தது முல்லையே
கார்த்திகை மாதம் போனால் கடும்மழை இல்லையே
கண்மணி நீயில்லையேல் கவிதைகள் இல்லையே
அஞ்சலி அஞ்சலி என்னுயிர்க் காதலி...

* * *

அடுத்த வார இறுதியில் தோழி ரம்யாவிற்காக குமரனிடமிருந்து தன் வீட்டிற்கு வந்திருந்த பரிசுப் பொருட்களை, ரம்யாவின் அம்மா அழகு நிலையத்தில் இல்லாத சமய



மாய்ப் பார்த்து, அங்கு சென்று கொடுத்து விட்டு கீதாஞ்சலி கிளம்பும் போது உதய் ஆனந்திடமிருந்து அவளுக்கு அழைப்பு வந்தது.

"ம். சொல்லு, உதய்! என்ன விஷயம்?"

"நீ வீட்டில் தான் இருக்கிறதா அக்கா சொன்னாளே? இல்லையா?" என்று வினவியவனின் குரலில் ஏமாற்றம் எதிரொலித்தது.

"எல்லாரும் கல்யாணத்துக்குப் போயிருக்காங்க. வீட்டில் போர் அடிச்சது. அதான் ப்யூட்டி பார்லர்க்குப் போகலாம்னு கிளம்பி வந்துட்டேன்."

"நீ எதுக்கு பார்லர் போறே? உனக்குத் தேவையேயில்லை!" அவன் சான்றிதழ் வழங்க,

அதைக் கேட்டு மீண்டும் பழைய நினைவுகள் அவளுக்குத் தலைத் தூக்க, "உன்னை யாராவது இப்போ கேட்டாங்களா? உன்னிடம் கேட்கும் போது சொல்லு!" என பல்லைக் கடித்தாள்.

அவளது கோபத்தைக் கூட ரசித்தவன், "ஹா ஹா! நீ கேட்கலை... ஆனால், நான் உனக்கு காம்ப்ளிமென்ட்டா சொல்றேன்" என்றான் இலகுவாகவே.

அவனது சிரிப்பின் மெல்லிய சத்தம் கீதாவின் செவிகளில் துல்லியமாய் விழ, அந்த விஷயத்தை அத்துடன் விட்டவள், "என்ன விஷயம்?" என்று விவரம் கேட்டாள்.

"கச்சேரி சார்பில் அவங்க எடுத்த போட்டோஸ் வந்திருக்கு. அதைக் கொடுக்க விருகம்பாக்கத்திற்கு வந்தேன். நீ இல்லை!" என்றவனை,

மகிழ்ச்சியுடன் இடைமறித்த கீதாஞ்சலி, "ஹே! அதுக்குள்ளேயா? ஒரு வாரம் தானே ஆகுது? அதுக்குள்ளே நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கிட்ட இருந்து போட்டோஸ் வந்துடுச்சா?" என்று குதூகலித்தாள்.

''அய்யா யாரு? வாங்க வேண்டியதைச் சரியா வாங்கிடுவேனாக்கும்!''

பெருமைப் பேசியவனைக் கண்டு கொள்ளாமல், ''நான் உடனே வர முடியாதே, உதய்! இங்கே எக்ஸ்பிரஸ் அவென்யூவில் கொஞ்சம் ஷாப்பிங் செய்ய வேண்டியிருக்கு. நீ அங்கே அபார்ட்மெண்ட் வாட்ச்மேன்கிட்டே கொடுத்துடறியா? நான் வந்து வாங்கிக்கறேன்!'' என்று கோரிக்கை வைத்தவள்,

மறுமுனையில், ''ம்!'' என்று ஒலித்ததைச் சம்மதமாக எண்ணிக் கொண்டு தொடர்பைத் துண்டித்தாள்.

அடுத்த ஒரு மணி நேரத்தில், எக்ஸ்பிரஸ் அவென்யூ-வில் ஷாப்பிங் செய்து கொண்டிருந்த கீதாஞ்சலியை நோக்கி, ''ஹாய்! ஷாப்பிங் எல்லாம் முடிஞ்சதா?'' என்று வினவியபடியே வந்தான் உதய் ஆனந்த்.

தன்னருகில் கேட்ட குரலில் அதிர்ச்சி அடைந்தவள் அவனைப் பார்த்து முகம் மலர்ந்து, ''ஹே! முடிஞ்சது!'' என்றாள்.

''விருகம்பாக்கத்திலிருந்து ஷாப்பிங்குக்கு எக்ஸ்பிரஸ் அவென்யூ வரைக்கும் வந்திருக்கே? இங்கே தான் எப்போவும் வருவியா?'' அவளுடன் நடந்தபடியே அவன் வினவ,

கண்களில் குறும்பு மின்ன, ''பக்கத்தில் வா சொல்றேன்! ஷாப்பிங் என்பது வெறும் கண் துடைப்பு தான், உதய்'' என்று ரகசியம் பேசியவள்,

''இந்த மால்-ஐ வாங்கலாம்னு ஒரு ஐடியா இருக்கு. என்ன விலை படியும்னு பேரம் பேசிட்டு இருக்கேன். கொஞ்சம் பட்ஜெட் குறையுது! அதனால் அப்படியே உங்க அப்பாவோட பேங்கில் லோன் ஏற்பாடு செய்யலா



மான்னு ஒரு யோசனை'' என தீவிரமாகச் சொல்லியவளைப் பார்த்து வாய் விட்டு நகைத்தவன்,

''நான் ஜோக் என்ற பெயரில் சிலதைச் சொன்னதுக்கு என்னைப் பழி வாங்கறியா? பை தி வே, அது எங்க அப்பாவோட பேங்க் இல்லை... அப்பா வேலைப் பார்க்கிற பேங்க்'' என அவனும் குரலைத் தாழ்த்தி ரகசியம் சொல்வது போலச் சொல்லிச் சிரித்தான்.

அவனோடு சேர்ந்து நகைத்தவள், ''நீ எங்கே இங்கே? இப்போ போனில் பேசும்போதுகூட சொல்லவேயில்லை?'' என லேசாகத் துளிர்விட்ட சந்தேகத்துடன் அவனை ஏறிட்டாள்.

''உன்னைப் பார்க்கத் தான் வந்தேன்! ஏன்? வரக் கூடாதா?'' எனக் கேலியாக அவன் திருப்ப,

கீதாஞ்சலி, ''இதென்ன சிறுபிள்ளைத்தனமானப் பேச்சு, உதய்? எனக்கு இது மாதிரியெல்லாம் பேசறது சுத்தமா பிடிக்கலை!'' எனச் சுள்ளென்று கடிந்தாள்.

அவளை ஒரு கணம் பார்த்தவன், ''ஒரு சின்னக் கேலியைக் கூட பொறுக்க முடியலை போல?'' என்று அவள் காதில் விழும்படி முணுமுணுத்து, ''உன்னைப் பார்க்கத் தான் வர்றாங்களாக்கும்? நான் என்னோட நண்பனைப் பார்க்க வந்தேன்'' என்று விட்டு அவனுடைய ஏமாற்றத்தை மறைத்தபடி, விறுவிறுவென்று மாடிப்படிகளை நோக்கிச் செல்ல, கீதாஞ்சலிக்குத் தர்ம சங்கடமான நிலையாகி விட்டது.

உதய் தன் மீது வைத்திருக்கும் சிநேகம் வெறும் நட்பு மட்டுமல்ல என்று அவளது உள்ளுணர்வு சில நாட்களாகவே உணர்த்திக் கொண்டேயிருந்தது. அதுவே அவ்வப்பொழுது அவன் மீது சந்தேகம் எழக் காரணமாகவும் அமைந்தது.

எக்ஸ்பிரஸ் அவென்யூ என்பது ஒரு பொது இடம். அங்கு அவன் வருவதற்கு காரணமாக தான் மட்டும் தான் இருக்க முடியும் என்று நினைத்து அவனிடம் அப்படிப் பேசியது எந்த விதத்தில் நியாயமாக இருக்க முடியும்?

அவன் அடிக்கடி கேலி பேசுவது தானே? இன்று மட்டும் ஏன் இத்தனை கோபம் எனக்கு?

உதயைப் பற்றிய முதல் அபிப்ராயம் தான் இதற்கு முக்கிய காரணமா? கடந்த ஒரு மாதமாக நிலவும் நல்லதொரு நட்பை தன் சந்தேகத்தினால் இழக்கப் போகிறாளா?

அவள் சந்தேகப்படுவதும், அதனால் சட்டென்று அவனைக் கடிந்து பேசுவதும் அவளுடைய பிரச்சினையேயின்றி அதில் அவன் குற்றம் தான் என்ன? தன்னுடைய கற்பனை வளத்திற்கு ஒரு அளவேயில்லாமல் போய் விட்டது.

அப்படியே இவள் சந்தேகப்படுவது போல காதல் என்று உதய் வந்து நின்றாலுமே, 'ஐ அம் சாரி!' என்று சொல்லி விட வேண்டியது தானே என்று யோசித்தவளுக்கு, அவன் இதுவரை சிறு குறிப்பு கூட காட்டாத ஒன்றிற்காக இப்பொழுதே வியூகம் அமைப்பது ஏனென்று தெரிந்திருக்கவில்லை.

தன்னுடைய பேச்சிற்கு வருத்தம் தெரிவிப்பதற்காக அவள் உதயை நாடிய பொழுது, அவன், அவனது உறவினன் அரவிந்த் உடன் அங்கிருந்த உணவு மையத்தில், பேசிக் கொண்டிருந்தது கண்ணில் பட, அவனருகில் செல்லலாமா வேண்டாமா என்று எழுந்த சின்ன தயக்கத்துடன் அங்கேயே நின்றாள்.

''சரி... அவனுடைய அலைபேசிக்கு ஸாரி என்று ஒரு குறுந்தகவல் அனுப்பிவிட்டு, சத்தம் காட்டாமல்



திரும்பி விடலாமா?' என்று எண்ணும் பொழுதே உதய் இவள் புறம் திரும்ப, சிநேகமான புன்னகையைப் பொருத்திக் கொண்டு அந்த மேஜையை நோக்கி முன்னேறினாள்.

மற்ற இருவரையும் உதய் பரஸ்பரம் அறிமுகப்படுத்தி வைக்க, மூவரும் பல பொதுவான விஷயங்களைப் பற்றி சிறிது நேரம் அளவளாவினர்.

அரவிந்த் பழச்சாறு வாங்கி வர சென்ற இடைவெளியில், உதயின் அலைபேசிக்கு அனுப்பி வைத்த குறுந்தகவலை அவனிடம் வாய் வார்த்தை மூலமாகவே, ''சாரி!'' என்று மன்னிப்பு வேண்டினாள் கீதாஞ்சலி.

அவனின் முகம் அதிருப்தியையே வெளிக்காட்டவும், ''நான் உன்னுடைய பிரண்ட் தானே, உதய்? நான் கோபப்பட்டது தப்பு தான். மன்னிச்சுடு... ப்ளீஸ்!'' என்று மெல்லிய குரலில் அவள் சிணுங்க,

''பிரெண்ட்ஷிப்பா? யார் சொன்னது? நீயா நினைச்சுக்குவியா?'' என்று கூர்பார்வை ஒன்றை அவள் புறம் வீசினான்.

அதைக் கேலி என்று எண்ணிய கீதாஞ்சலி, ''வேற யார் சொல்லணும்? நான் சொல்றேன்! பிரண்ட்ஸ் தான் பிரண்ட்ஸ் தான்! நாம ரெண்டு பேரும் பிரண்ட்ஸ் தான்!'' எனப் புன்னகைத்தாள்.

''அந்த அளவுக்கு நம்பிக்கையா உனக்கு? உன்னைத் தேடி பின்னாடியே எக்ஸ்பிரஸ் அவென்யூ வரைக்கும் வந்தவன்மா நான்...!'' என்று வாதம் செய்தான்.

''ஓ! அப்படியா? இப்போ தான் இந்த விஷயத்தை எஃப்.எம். ரேடியோவில் சொன்னாங்க...'' என்று சொன்னவளின் விழிகள் கூட ஆயிரம் கேலி பேசியது.

அவளது கேலியை உள்ளூர ரசித்தவன், ''உனக்காகத் தான் அன்றைக்கு கச்சேரி டிக்கெட் கூட வாங்கிட்டு

வந்தேன்னு உன்னுடைய பட்சி சொல்லலை?'' என அடுத்த கேள்வியைத் தொடுக்க,

''எனக்காக மட்டுமா? எல்லோரும் தானே வந்திருந் தாங்க? அதனாலே பிரண்ட்ஸ் தான்!'' என்று எந்த யோசனையுமில்லாமல் பட்டென்று தீர்ப்பு சொன்னாள் கீதாஞ்சலி.

''போனில் மணிக் கணக்கில் பேசறதெல்லாம்...?''

''பிரண்ட்ஸ் கூட பேசாமல் வேற யார் கூட பேசறது?''

அவனுடைய ஒவ்வொரு கேள்விக் கணைக்கும் மின்னல் வேகத்தில் பதில் தந்தவள், அவனின் காதல் கொண்ட மனதையோ, அதை வெளிப்படுத்த நல்ல தொரு தருணத்திற்காக அவன் காத்திருப்பதையோ அறியவில்லை.

சற்று முன்பு கீதாஞ்சலி தன்னைச் சந்தேகமாக நோட்டம் விடும் போதே, 'இவளிடம் காதலை வெகு நாட்கள் மறைப்பது அத்தனை நல்லதல்ல...' என்பதை முடிவு செய்திருந்தான்.

இன்னமும் நட்பு என்ற வட்டத்துக்குள்ளேயே தான் அவள் இருக்கிறாள்... சிறிது கூட அதை விட்டு வெளி வரவேயில்லை என்று புரிந்தவனுக்கு, அவனுடைய ஏமாற்றத்தையும் கோபத்தையும் வெளிக்காட்டாமல் இருக்க போராட தான் வேண்டியிருந்தது.

மீண்டும் நட்பு என்ற வளையத்திற்குள் கீதாஞ்சலி தன்னை இழுத்துக் கொண்டிருப்பதைத் தவிர்க்கவே இத்தனை வினாக்களை அவன் எழுப்பியது.

ஆனால், அவளோ அவனின் ஒவ்வொரு கேள்விக்கும், அவளுக்குச் சாதகமான பதிலையே தந்து கொண்டிருந் தாள்.



அரவிந்த் தன்னுடனிருப்பதால் இவனிடம் இப்பொழுது விளக்கமாகவும் பேச முடியாது என்பதை உணர்ந்தவன், மௌனமாகவே வீற்றிருக்க, ''ப்ளீஸ், உதய்! பிரண்ட்ஸ்!'' என்று அவள் தன் கரத்தை நீட்டினாள்.

அவளுடைய கரத்தைப் பற்றி குலுக்கியவன், ''நீ எப்போதும் என் மேல் நம்பிக்கை வைக்கணும், கீதா! அது தான் எனக்கு முக்கியம். சரியா?'' என்று அவளது கண் ணோடு கண் நோக்கி வினவ,

''கட்டாயமாக, உதய்!'' என்று மனப்பூர்வமாகத் தெரி வித்தாள்.

அரவிந்த் பழச்சாறை வாங்கி வந்து அமர, பேச்சு மீண்டும் சுவாரஸ்யமாகத் தொடர்ந்தது.

எல்லாம் சுமூகமாக தான் சென்று கொண்டிருந்தது... இவர்களுக்கு அடுத்த மேஜையில் வீற்றிருந்த இரு வெளிநாட்டவர்கள் கிளம்பும் வரையிலும்!

## 7

அந்த வெளிநாட்டு ஜோடி உண வருந்திவிட்டுக் கிளம்புகையில், சர்வ சாதாரணமாக கட்டியணைத்து, ஒரு வரையொருவர் காதலுடன் முத்தமிட் டுக் கொள்ள, சுற்றியிருந்தவர்களின் பார்வை காணாததைக் கண்டது போன்று அவ்விருவ ரிடமும் நிலைத்தது.

வெளி நாட்டவர்களின் செய்கையும், அதனைத் தொடர்ந்த நம்மவர்களின் நிலைக்குத்தின பார்வையும், கீதாஞ்சலிக்கு தான் மிகுந்த அவஸ்தையானது.

உடன் ஒரு பெண், அதுவும் அப்பொழுது தான் அறிமுகமானவள் இருக்கிறாள் என்பதைப் பற்றி சிறிதும்

சட்டை செய்யாத அரவிந்த், ''சூப்பர் ஸீன் டா, மச்சி!'' என்று அதை ரசித்து நகைத்தது வேறு. அவளது உணைச்சலை அதிகமாக்கியது.

நான்கு வருடம் லண்டனில் இருந்த உதய் ஆனந்திற்கு அக்காட்சி அத்தனை பெரிய வித்தியாசமாக தெரியாவிட்டாலும், காது நுனி வரை சிவந்து போயிருந்த கீதாஞ்சலியைப் பார்க்க அவனுக்குப் பாவமாகத் தான் இருந்தது.

என்ன பேசவென தெரியாமல் கீதாஞ்சலி மௌனம் காக்க, என்ன பேசினால் அவளை இயல்பு நிலைக்குக் கொண்டு வர முடியுமென்ற யோசனையில் அமைதிக் காத்தான் உதய் ஆனந்த்.

மற்ற இருவரிடமும் நிலவும் அசௌகரியமற்ற அமைதியைக் கவனத்தில் கொள்ளாத அரவிந்தோ, ''ஹே! லண்டனில் இந்த மாதிரி ஸீன் எல்லாம் ஜுஜுபி தானேடா?'' எனக் கிண்டல் செய்ய, அவனை மறுத்தோ, ஆதரித்தோ எதுவும் பேசாத உதய், அவஸ்தையான புன்னகை ஒன்றை மட்டும் மையமாய் உதிர்த்து வைத்தான்.

முள் மேல் அமர்ந்தது போன்றிருந்த கீதாஞ்சலிக்கு, அவளையும் வைத்துக் கொண்டு இப்படிப் பேச வேண்டுமா என்றிருந்தது.

அரவிந்த் தான் நாகரீகமின்றி பேசுகிறான் என்றால், இவனாவது அவனிடம் ஏதாவது நாசுக்காக சொல்லக் கூடாதா?

''நாங்க எல்லாம் இப்படிப் பார்த்தால் தான் உண்டு! பிரண்ட்ஸுக்குள் தமாஷா இதைப் பற்றி எஸ்.எம்.எஸ். கூட அனுப்பிக்குவோம்'' என மேலும் உற்சாகத்தோடு இயம்பினான் அரவிந்த்.

''தோழியிடம்
முத்தம் கேட்கும் போது



அவள் கன்னம் சிவந்தால்
அது வெட்கம்
கேட்பவரின் கன்னம் சிவந்தால்
அது துக்கம்.''

மனப்பாடமாய் அந்த எஸ்.எம்.எஸ். கவிதை சொன்னவனை முறைக்காமல், உதயை முறைத்தவள், ''தோழியிடம் முத்தம்! வெட்கமாம்! துக்கமாம்! எழுதறானுங்க பாரு! கர்மம்!'' என்று பார்வையாலேயே சாடினாள்.

இப்படியொரு நண்பனை வைத்திருக்கிறானே? எல்லாம் இவனைச் சொல்ல வேண்டும்!

'உன் நண்பனைப் பற்றி சொல்; உன்னைப் பற்றி சொல்கிறேன்' என இவன் கேள்விப்பட்டதேயில்லையோ?

ஒருவேளை உதயும் அதே குட்டையில் ஊறிய மட்டை தானா? இவனும் இப்படித் தான் இருப்பானோ? நான்கு வருட வெளிநாட்டு படிப்பு இதைத் தான் சொல்லிக் கொடுத்திருக்கிறதா இவனுக்கு?

ஏதாவது வாயைத் திறக்கிறானா பார்!

சற்று முன்பு உதய் உடனான நட்பைத் தன்னார்வத்தோடு புதுப்பித்துக் கொண்டவள், இந்த நொடியில் அவனுக்குத் தோழியாய் இருப்பதற்காக தன்னையே நிந்தித்துக் கொண்டாள்.

'அந்த நினைப்போட என்னிடம் பழகினால்... வாலை ஒட்ட நறுக்கிடறேன்! திருநெல்வேலி பொண்ணுன்னா என்னன்னு காட்டறேன் அவனுக்கு!'

தன் போக்கில் நடக்காதவை, இனி நடக்கப் போகிறவை என எதையெதையோ நினைத்து கொதித்துக் கொண்டிருந்தவள், அதற்கு மேல் பொறுக்க முடியாமல் அங்கிருந்து கிளம்ப எத்தனித்தாள்.

அக்கணமே உதயும் அரவிந்திடம் விடை பெற்றுக் கொண்டு அவளைப் பின் தொடர்ந்தபடியே, ''கீதா! நில்லு! இத்தனை பையையும் வைச்சுக்கிட்டு போயிடுவியா? நான் வேணும்னா உன்னை வீட்டில் ட்ராப் செய்யவா? இல்லை... பஸ் ஸ்டாப், ஆட்டோ ஸ்டாண்ட் வரைக்குமாவது கொண்டு விடவா?'' எனக் கேட்க, அவளுக்கு ஆத்திரம் பொங்கியது.

அவள் முகத்தில் தெரிந்த பாவத்தைப் பார்த்தவன், ''எல்லாத்துக்கும் சட்டு... சட்டுன்னு உணர்ச்சி வசப்படாதே, கீதா! பையைக் கொஞ்சம் இங்கே கொடு!'' என்று அவள் கைகளிலிருந்த பைகளை வாங்கி உதவ முயல,

'இதுவரையில் எதுவும் பேசாமல் இருந்து விட்டு இப்பொழுது மட்டும் எதற்கு இந்த அக்கறை?' என்று காளி அவதாரமே கொண்டாள் அவள்.

''வந்துட்டானுங்க வழிஞ்சுகிட்டு!'' என்று சத்தமாகவே முணுமுணுத்தவள், ''ஏன்? இதோ... இந்தப் பாட்டியை அவங்க வீட்டில் கொண்டு வந்து விடறேன் என்று சேவை செய்ய வேண்டியது தானே? தேவையிருக்கும்போது எதுவும் பேசாமல்... தேவையில்லாத இடத்தில் ஆஜர் ஆகிட்டு!'' என படபடவென்று கத்தத் தொடங்கினாள்.

'வழிகிறேனா? நானா?' அவளது முதல் வார்த்தையிலேயே ஸ்தம்பித்துப் போனான் உதய் ஆனந்த். கீதாஞ்சலிக்கு உதவி செய்ய முன்னேறிய கரம் கூட அனிச்சையாகப் பின் வாங்கிவிட்டது.

''நான் கேட்டேனா உன்கிட்ட இப்போ என்னைக் கொண்டு விடச் சொல்லி? நீ இங்கே வருவே என்று எதிர்பார்த்தா நான் ஷாப்பிங் வந்தேன்?'' எனப் பொரிந்தாள்.

தாடை இறுக, பல்லைக் கடித்தவன், ''ரோட்டில் போறவங்க என் அம்மாவாகவோ, என் அக்காவாகவோ



இருந்திருந்தால் கட்டாயம் செய்திருப்பேன். இதை அவங்க கேட்கணும்னு இல்லை. கேட்காமலே செய்யறது தான் உதவி'' எனத் திருப்பி பதில் தந்தான்.

''........''

''ஒரு விஷயத்தை மனசில் நிறுத்திக்கோ - மற்றவர்களிடம் தொட்டதுக்கெல்லாம் குற்றமும், குறையும் மட்டும் கண்டு பிடிச்சுட்டே இருக்கிறவங்களுக்குத் துளிகூட நிம்மதியிருக்காது! சுற்றமும் இருக்காது! ப்ச்! உன்னோட பேசறதே வீண்!'' என்று சினந்தவன் அதற்கு மேல் ஒன்றும் கூறாமல், குளிர் கண்ணாடியை எடுத்து அணிந்து கொண்டு, அவளைத் திரும்பவும் பாராமல் அவன் வண்டி நிறுத்தியிருந்த இடத்தை நோக்கி நடக்கலானான்.

'யார் குற்றமும், குறையும் மட்டும் கண்டு பிடிக்கிறாங்க? நானா?' என்று மேலும் சில நிமிடங்கள் பொறுமியவள் ஒரு வழியாக வீடு வந்து சேர்ந்தாள்.

அவனுடைய வீட்டிற்குத் திரும்பிய உதய் ஆனந்திற்கோ இன்னமும் கொதிப்பு அடங்கினப் பாடில்லை.

தன் மீது தவறிருக்கும் பட்சத்தில் மன்னிப்பு கேட்கவோ, சமாதானம் செய்யவோ அவன் என்றுமே தயங்கியதில்லை.

ஆனால் தொட்டது தொண்ணூறுக்கும் தன் மீதே குற்றம் கண்டுபிடித்து, குறை சொல்லிக் கொண்டிருக்கும் கீதாஞ்சலியிடம் அவனுக்கு ஆத்திரம் தான் வந்தது.

அதுவும் என்ன மாதிரி எடுத்தெறிந்து பேசுகிறாள்? என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்னைப் பற்றி?

யாரைப் பார்த்து வழிகிறேன் எனச் சொன்னாள்? தொட்டாச் சுருங்கி இலை போன்று இவள் கூட்டுக்குள் அடங்கி விடக் கூடாதென பார்வையால் கூட கண்ணியம் காப்பவனையா?

கீதாஞ்சலியிடம் சென்று தன்னுடைய செயல்களுக்கோ, பேச்சிற்கோ காரண காரியங்களுடன் விளக்கமளித்து தன்னை நல்லவன் என்று நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்று அவன் என்றுமே நினைத்ததில்லை.

அப்படி நிருபணங்களின் மூலம் பிறக்கும் நம்பிக்கை, நெடு நாளைக்கு நிலைக்காது என்பது தான் அவனது நிலைப்பாடு.

அடிப்படையில் அவனை நல்லவன் என்று கீதாஞ்சலி எப்பொழுது நம்புகிறாளோ, அப்பொழுது தான் அவனது பேச்சு மற்றும் செயல்களின் மீது அவளுக்கு நிரந்தரமான நம்பகத்தன்மை பிறக்கும்.

அந்த நம்பிக்கைப் பிறக்காத பட்சத்தில் சாட்சியங்களையும், நிருபணங்களையும் கொண்டு, நித்தம் நித்தம் வழக்காடுவதே வழக்கமாகிவிடும். அப்படியொரு வழக்காடு மன்றம் நடத்த அவன் என்றுமே விரும்பவில்லை.

இது வாழ்க்கை! வழக்காடு மன்றமில்லை!

அவனைப் பற்றி அவள் மனதில் ஏற்கனவே பதித்திருந்த பிம்பத்தை, முத்திரையை மாற்றுவது இத்தனை பெரிய கடுமையான சவாலாக இருக்கும் என்று அவன் கனவிலும் நினைத்ததில்லை.

நான்கு வருடங்களுக்கு முன், தன்னைப் பற்றி அவள் மனதில் படிந்திருந்த பிம்பம், முதல் கோணலாய் அமைய, அதை சரி செய்யும் முயற்சியில் தோல்வியைத் தழுவுவது என்பது அவனது காதலை எட்டாக்கனியாக்கி விடும் என்பதாலேயே அவன் அதீத கவனத்துடன் ஒவ்வொரு அடியையும் எடுத்து வைத்தான்.

ஆனாலும் வலிகளும், வடுக்களும் மட்டுமே அவனுக்கு எஞ்சியது!



இப்படிச் சோர்விற்கும் கோபத்திற்கும் ஊசலாடும் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் அவன் இருக்கும் போது எந்த முடிவுக்கும் வர வேண்டாம் என்ற முடிவோடு, மனதைக் கல்லாக்கிக் கொண்டு மற்ற வேலைகளில் கவனத்தைத் திருப்பலானான்.

கடந்த ஒரு வாரமாக உதய் ஆனந்த், ஓய்வில்லாமல் எந்நேரமும் வேலையிலேயே மூழ்கியிருப்பதைக் கண்ட அவனது தாய் தேன்மொழிக்கு மகனுக்கொரு திருமணம் செய்து வைத்து, அவனைக் குடும்பஸ்தனாய் பொறுப்பேற்க வைக்க வேண்டும் என்ற ஆசையும், கவலையும் பிறந்தது.

நாட்களைக் கடத்த விரும்பாமல் கணவனிடம் பேச்சைத் தொடங்க எண்ணி, ''ஏங்க...!'' என்று அழைத்தபடியே அவரை நாடினார்.

படித்துக் கொண்டிருந்த செய்தித்தாளை மூடி வைத்த மகாதேவன், ''ஏங்கிட்டு தானே இருக்கேன்?'' என மனைவியைப் பார்த்து சிரிக்க,

அவரை முறைத்தவர், ''ம்க்கும்! கிடப்பது கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி மனையில் வை' என்று சொன்னானாம்! அது மாதிரியில்ல இருக்கு? பொண்ணோட பையனைப் பார்த்தாச்சு! இனி பையனுக்கும் கல்யாணம் செய்து அவனுக்கும் குழந்தை பிறந்துடும்! கிழவர் இப்போ தான் ஏங்கிட்டு இருக்காராம்!'' என்று நொடித்தார்.

''ஹா ஹா! எங்கேடா... பையன் லண்டனிலிருந்து வந்து மூணு மாசம் ஆகப் போகுதே! இன்னமும் நீ இந்தப் பேச்சையே ஆரம்பிக்கலையேன்னு பார்த்தேன்?''

''என்னைப் பார்த்தாலே உங்களுக்குக் கிண்டலா போச்சு! என் பையனுக்குக் கல்யாணம் செய்து பார்க்கணும்னு

நான் நினைக்கிறது அப்படியொரு தப்பா?'' என்று தேன்மொழி குறை சொல்லவும்,

மகாதேவன், ''நான் அப்படிச் சொல்லலை, தேனு! உதய்க்கு இப்போ தானே இருபத்தியாறு முடிஞ்சு இருக்கு? அவன் இன்னமும் ரெண்டு வருஷம் கொஞ்சம் ஜாலியா தான் இருந்துட்டு போகட்டுமேன்னு நினைச்சேன். அவன் வந்து எனக்குக் கல்யாணம் செய்து வைங்கன்னு உன்னிடம் கேட்டானா? நீ ஏன் பறக்கிறே?'' என அவரைச் சமாதானப்படுத்தும் முகமாக விளக்கினார்.

''உங்களுக்கென்ன? அக்கவுண்ட்ஸ், ஆடிட்டிங் என்று பொழுது ரெக்கை கட்டிக்கிட்டுப் போகுது. அவனும் வேலை - வேலைன்னு அதையே எந்நேரமும் கட்டிக்கிட்டு அழறான். நான் தானே இங்கே தனியா உட்கார்ந்துட்டு இருக்கேன்!''

மகாதேவன் தேசிய வங்கி ஒன்றில் மேலாளராகப் பணி புரிபவர். ஏதோ, இன்று வீட்டில் இருக்கவும் வீட்டரசியான தன் மனைவியிடம் வசமாக மாட்டிக் கொண்டார்.

''சரி! இப்போ நான் என்ன செய்யணும்னு சொல்லு. அவன் எந்தப் பெண்ணைப் பற்றியாவது உன்னிடம் சொன்னானா? காதல் கல்யாணம் தான் என்று பேச்சு அடிபட்டதே?'' எனக் கேட்ட கணவரிடம்,

''அவன் சொல்றவரைக்கும் காத்துகிட்டே இருந்தால்... அவனுடைய அறுபதாவது வயசில் தான் நாம அவனுக்குக் கல்யாணமே செய்து வைக்க முடியும். அவன் விளையாட்டுக்குச் சொல்றதையெல்லாம் நீங்க கணக்கிலேயே சேர்த்துக்காதீங்க. நானே பொண்ணு பார்த்துட்டேன்'' என தேன்மொழி முகம் மலரச் சொல்ல, மனைவியைக் குழப்பத்துடன் பார்த்தார் மகாதேவன்.



''எதை வைச்சு அவன் விளையாட்டுக்குச் சொல்றான்னு சொல்றே? அவனுக்குத் தெரியுமா நீ இப்படி யோசிக்கிறது?''

''ஆமாம்! காதல் செய்தால் இப்படித் தான் எந்நேரமும் வேலையையே கட்டிக்கிட்டு அழுவாங்களா? காதலிக்கிறவங்க இப்படியா ஒரு போன், எஸ்.எம்.எஸ். அவுட்டிங் என்று எதுவுமே இல்லாமல் இருப்பாங்க?'' என்று முறையிடவும்,

''இதெல்லாம் ஸர்கம்ஸ்டான்ஷியல் எவிடன்ஸ் மா. அவன் இப்போ யாரையும் காதலிக்கலையா இருக்கும். இனியும் அப்படியே இருப்பான் என்று நமக்குத் தெரியுமா? எதுக்கும்...'' என்று தயக்கத்துடன் இழுத்தார்.

கணவனின் பேச்சைப் பாதியிலேயே கத்தரிப்பது போல், ''நீங்க எதையாவது அபசகுனமா சொல்லிகிட்டே இருக்காதீங்க. நான் பார்த்திருக்கிற பெண்ணைக் குறை சொல்றதுக்கு ஒன்றுமேயில்லை. அவனுக்குக் கண்டிப்பா பிடிக்கும்னு தான் என் மனசுக்குப் படுது. பொண்ணு நம்ம எல்லோருக்கும் தெரிந்தவள் தான்'' என்று பூடகமாகத் தெரிவித்தவர்,

''நம்ம மாப்பிள்ளையோட தங்கச்சி கீதாஞ்சலியைத் தான் சொல்றேன். நாமும் அவளை இந்த நாலு வருஷமா பார்க்கிறோம். நல்ல குணம். நிம்மியோடவும் நல்லா ஒத்துப் போகிறாள். உதய்க்கு அவளைக் கட்டி வைச்சுட்டால், நம்ம நிர்மலாவிற்கும், அவளோட தம்பியோட துணை எப்பவும் இருக்கும். என்ன சொல்றீங்க?'' என்று விவரமாக காரண காரியங்களை விவரித்தார்.

''நீ உன் பையனுக்குப் பொண்ணு பார்க்கிறியா? இல்லை நிர்மலாவிற்கு பின்னாடி எந்தக் கஷ்டமும் வரக்

கூடாதுன்னு யோசிக்கிறியா?'' புருவத்தை உயர்த்தி கேள்வியாக மகாதேவன் பார்க்க,

''ரெண்டையும் தான் செய்யறேன். அதிலென்ன தப்பு? கீதாஞ்சலிக்கும் தானே பின்னாடி பிரச்சனை இருக்காது?'' என்று வாதிட்ட அவர் மனைவி,

''கீதாஞ்சலியைப் பற்றி நினைக்கும்போது, நம்ம பையனுக்கு அவளைப் பார்த்தால் என்னன்னு தோணுச்சு, அன்றைக்கே நம்ம வீட்டில் கூட, பெரியவங்க பார்த்தால் போதும்னு சொன்னாளே? எத்தனை பொண்ணுங்க இந்தக் காலத்தில் அப்படி நினைக்கிறாங்க? என்ன... சம்பந்திகிட்டே அவளைப் பெண் கேட்டுப் பேசலாமா?'' என்று ஆர்வமுடன் வினவினார்.

சிறு யோசனைக்குப் பின், ''ம்ம். நீ சொல்றதும் சரியா தானிருக்கு'' என்ற மகாதேவனை அதற்கு பிறகு வேறு பேச விடாமல், கைப்பேசியைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்த அவரது மனைவி, 'நன்றே செய்க... அதுவும் இன்றே செய்க' என உடனேயே சம்பந்தியிடம் பேசுமாறு பணித்தார்.



## 8

கீதாஞ்சலிக்குத் தன் மீதே எரிச்சல், எரிச்சலாய் வந்தது. இன்னமும் மூன்று மாதங்களில் இறுதி தேர்வை வைத்துக் கொண்டு, இப்படிப் படிப்பில் லயிக்க முடியாமல் இருக்கிறோமே என்ற இயலாமையினால் வந்த எரிச்சல்!

தேர்விற்கான பாடத் திட்டங்களை முடிக்க தனக்குத் தானே அட்டவணை வகுத்ததோடு மட்டுமில்லாமல், அதன்படியே கவனமாகப் பயின்று தன்னைத் தயார் செய்து கொண்டிருந்தாள்.



ஆனால் கடந்த ஒரு வாரமாக, குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், உதயுடன் சண்டைப் போட்டதிலிருந்து பாடத்தில் சிந்தையைச் செலுத்த முடியாமல் திணறினாள் அவள்.

எப்பொழுதும் போல் இப்பொழுதும், தான் உதய் மீது தேவையற்ற கோபம் கொண்டேமோ எனத் தோன்றி அவளை உறுத்திக் கொண்டேயிருக்க, இதனையும் சேர்த்து இப்படித் தோன்றுவது எத்தனையாவது முறை என அவள் மீதே கோபமும் வந்தது.

'அவர்களது நட்பிற்கான ஆயுட்காலம் வெறும் நான்கு வாரங்கள் மட்டும் தானா?' என்ற கேள்வி அவளை இடைவிடாது தொல்லை செய்தது.

நல்லதொரு நட்பைத் தன் சந்தேகக் கண்ணோடு பார்த்ததினால் வந்த விளைவின் பயனா?

அன்று நடந்ததை மனக்கண் முன் கொண்டு வந்தவளுக்கு, உதய் மீது எந்தத் தவறுமில்லை என்பதை அறுதியிட்டுச் சொல்ல முடிந்தது.

நியாயமாகப் பார்த்தால், அந்தத் தருணத்தில் உளறிக் கொண்டிருந்த அரவிந்திடம் தானே இவள் கோபம் கொண்டிருக்க வேண்டும்? ஆனால், எதற்காக உதய் மீது அத்தனை கோபம்?

அவள், அன்று பார்த்த காட்சியின் விளைவா? இல்லை... அந்த நேரத்தில் அவன் அரவிந்திடம் எதுவுமே கண்டித்துப் பேசாமல் இருந்ததனாலா?

மேலும் சில நொடிகள் தன் எண்ணங்களில் மூழ்கியிருந்தவள், 'உதயும் இந்த மாதிரி தானோ?' என்ற எண்ணம் தான் அவளுக்கு ஆத்திரத்தைக் கிளப்பியிருக்கிறது என்ற முடிவுக்கு வந்தாள்.

ரோட்டில் வருவோர் போவோர் பேசுவதற்கெல்லாம் எப்படி உதய் பொறுப்பாக முடியும்? அப்படிப் பேசுகிறவர்களை எல்லாம் அவன் எப்படிக் கண்டித்துப் பேச முடியும்?

தவறே செய்யாத அவன் மீது கோபம் கொண்டதோடு மட்டுமல்லாமல் அவனை எப்படியெல்லாம் வாய்க்கு வந்த மாதிரி பேசி விட்டாள்? கடுமையான, கசப்பான சொற்கள் என்பது பலவீனமான கொள்கையின் அறிகுறி அல்லவா?

இன்னமும் உதய் ஆனந்தின் சினந்த முகம் அவள் நினைவிலிருந்து அகலாமல் இருக்க, 'அவன் கோபம் கொண்டதில் எந்தத் தவறுமில்லை!' என்று அவளது மனசாட்சியே அவளைக் குத்தியது.

அவனுடைய மனதை வார்த்தைகளால் காயம் செய்து விட்டு, பாடங்களில் எப்படிக் கவனம் செலுத்த முடியும்? குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்காமல் இருக்குமா?

தனது கடுமையான பேச்சிற்குக் கட்டாயம் அவனிடம் மன்னிப்பு கேட்டே ஆக வேண்டும் என்று முடிவு செய்தாள்.

ஆனால், அந்த முடிவு பிறந்த அடுத்த நொடியே, 'இப்பொழுது கூட தன்னுடைய படிப்பில் கருத்தைச் செலுத்த முடியாமல் இருப்பதற்காக மட்டும் தான் அவனிடம் மன்னிப்பு கேட்க வேண்டும் என்று நினைக்கிறோமோ?' என்று எழுந்த கேள்விக்கு, 'இல்லை' என்ற விடையே அவளுக்குக் கிடைத்தது.

மன்னிப்பு கேட்க வேண்டுமென முடிவெடுத்த பின்போ அவனிடம் எந்த முகத்தை வைத்துக் கொண்டு மன்னிப்பு வேண்டுவது என்று தயக்கம் பிறந்தது.

அன்று உணவு மையத்தில் மன்னிப்பு என்று வேண்டும் போதே கீதாஞ்சலியைத் தொடர் கேள்விகளால்



சீண்டியவன் அவன். இன்று என்ன சொல்லுவான்? 'உனக்கு இதே பிழைப்பு தான்!' என்று கடிந்து கொள்வானா?

வழக்கம் போல மன்னிப்பு என்று ஒரு குறுந்தகவலை முதலில் அனுப்பி வைத்துவிட்டு அவனை அழைப்போம். இல்லையென்றால் அவள் அழைப்பை எடுப்பானா என்றே சந்தேகம் தான்!

இதழ்களில் மெல்லிய புன்னகை மலர, குறுந்தகவலைத் தட்டிக் கொண்டிருந்தவளை வீட்டுத் தொலைபேசி அழைக்க, அதை எடுத்து, காதுக்குக் கொடுத்தவளின் ஹலோவிற்கு பதிலாக,

''கீதா? நீயா? ஷ்யாம் இல்லையா வீட்டில்?'' என்ற அவளின் அன்னை ருக்மணியின் குரல் கேட்டது.

''ஹாய்ம்மா! எல்லோரும் ஒரு விசேஷத்திற்கு போயிருக்காங்க. நீங்க எப்படி இருக்கீங்க? அப்பா எப்படி இருக்கார்?'' என்று விசாரித்தாள்.

''ரெண்டு பேரும் நல்லா இருக்கோம், கீதா. நான், அவன் செல்லுக்குக் கூப்பிட்டேன். ரிங் போய்கிட்டே இருக்கு. சரி, திரும்ப கூப்பிடறேன்'' என்றபடியே தொடர்பைத் துண்டிக்க போனவரை அவசரமாகத் தடுத்த கீதாஞ்சலி,

''ஹலோ, அம்மா! என்னிடம் பேச மாட்டீங்களா?'' எனக் கேட்டு பேச்சை வளர்த்தாள்.

தாயும் மகளும் அடுத்துப் பேசிய பத்து நிமிடங்களிலும், தாயின் குரலில் என்றுமில்லாத ஒரு உற்சாகத்தையும், படபடப்பையும் உணர்ந்தாள் மகள்.

''அம்மா! என்னமோ சொல்லத் துடிக்கிற மாதிரி இருக்கு? என்னன்னு என்னிடம் சொல்லுங்க.'' என்ற மகளின் ஆர்வமான தூண்டுதலில்,

மிகுந்த தயக்கத்திற்குப் பின், ''ஷ்யாமிடம் சொல்லி உன்கிட்ட கேட்கலாம்னு நினைச்சேன், கீதா. சரி... யாரு

கேட்டால் என்ன? எப்படியும் உன்னிடம் கேட்டு தானே ஆகணும்?'' என்ற முஸ்தீபுடன், மகாதேவன் அவருடைய மகனுக்கு, கீதாஞ்சலியைப் பெண் கேட்ட விஷயத்தைச் சொல்ல, கீதாஞ்சலிக்குக் கண் மண் தெரியாத அளவிற்கு கோபம் எழுந்தது.

ஆக... உதய் மீது அவள் சந்தேகப்பட்டதில் எந்தத் தவறுமில்லை! அவன் மனதில் இப்படி ஒரு எண்ணத்தை வளர்த்துக் கொண்டு தான் தன்னிடம் நல்லவன் மாதிரி வேடமிட்டது.

சற்று முன்பிருந்த எண்ண ஓட்டத்திற்கு மாறான எண்ணங்களை நோக்கி அவளது மனம் சென்றதோடு, கடந்த வாரம் நடந்த சம்பவம் பற்றி மீண்டும் ஆராயவும் தொடங்கியது.

அன்று உதயிடம் போன் பேசி வைக்கும்போது கூட, அவனும் எக்ஸ்பிரஸ் அவென்யூவிற்கு வருவதாக அவளிடம் சொல்லவில்லையே?

அவன் அங்கே வந்ததற்கான காரணத்தை அவள் கேட்ட பொழுது, அரவிந்தைப் பார்க்க வந்தேன் என்று அவன் முதலிலேயே சொல்லியிருக்க வேண்டியது தானே?

எதற்காக அவளைத் தான் பார்க்க வந்ததாகச் சொல்ல வேண்டும்? அப்படிச் சொல்லி அவளிடம் ஏதாவது தாக்கம் இருக்குமா என்று 'போட்டு வாங்கினான்' போல?

அவள் அந்தக் கேள்விக்கு தீவிரமான பதில் தந்ததால், 'கிண்டலாகச் சொல்வதைக்கூட ஏற்றுக் கொள்ள முடியாதா?' என்று அவளிடமே கோபம் கொண்டிருப்பானாயிருக்கும்?

அவனது திட்டம் எதுவும் பலிக்கவில்லை என்றதும் அம்மா - அப்பா வாயிலாக இப்பொழுது பெண் கேட்கும் படலம் ஏற்பாடாகியிருக்கிறது!



உதயைப் பற்றி நினைக்க நினைக்க, 'அவனிடம் நாலு கேள்வியாவது கேட்டால் தான், தன் மனம் ஆறும்!' என்ற நிலைக்கு அவள் தள்ளப்பட்டாள்.

அதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு, அன்று மாலையே அவனை அவனது வீட்டிலேயே சந்தித்தவள், தனிமை நேர்ந்த ஒரு சந்தர்ப்பத்தில் அவனிடம் வெடித்தாள்.

எடுத்த எடுப்பிலேயே எந்த முகமனும் கூறாமல், ''இப்போ உனக்கு சந்தோஷமா, உதய்? உன்னைத் திட்டிட்டு ஒரு வாரமா, நான் எத்தனை கஷ்டப்பட்டேன் தெரியுமா? ஆனால் ச்சே...'' என்று பொரிந்தாள்.

அவளைப் புரியாமல் பார்த்தவன், ''உனக்கு என்ன தான் பிரச்சனை, கீதா?'' என்று கண்களில் கேள்வியோடு அவளை நோக்கினான்.

''அடடா! எதுவுமே தெரியாத மாதிரியே உன்னால் எப்படிப் பேச முடியுது, உதய்?''

''எதுவுமே தெரியாமல் தான் கேட்கிறேன். நான் தெரியலை என்று சொன்னால் எனக்குத் தெரியலை என்று தான் அர்த்தம். தெரியாத மாதிரியே பேசறேன் என்று நீயா அர்த்தம் செய்துக்க முடியாது. கூடவும் கூடாது'' என்றான் அழுத்தம் திருத்தமாக.

''உன்னுடைய தந்திரமெல்லாம் என்கிட்டே செல்லுபடியாகாது. உன்னை மாதிரி உள்ளொன்று வைத்து புறமொன்று பேசும் வகை நானில்லை. நான் நேரடியா தான் டீல் செய்வேன்.''

அவள் பேசும் போதே, ''உஃப்ப்ப்ப்...'' என்று உதட்டைக் குவித்து பெருமூச்சை வெளியேற்றியவன், ''என்னுடைய கேரக்டர் அனாலிசிஸ் எல்லாம் அப்புறம் செய்யலாம்.

உனக்கு என்ன பிரச்சனைன்னு முதலில் சொல்லு!'' என்று பொறுமையிழந்த குரலில் அவன் வினவவும்,

''நீ தான், உதய்!'' நீ மட்டும் தான்!'' எனப் பட்டென்று சொன்னவளை, சில கணங்கள் நெற்றி நரம்புகள் புடைக்க வெறித்தான்.

அவனது இதயத்தை கீதாஞ்சலியின் வார்த்தைகள் குத்திக் கிழித்தாலும், எந்தவித உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தாமல் சிலையாய் நின்றிருந்தான்.

இந்த ஒரு வார்த்தையைக் கேட்பதற்காகவா இத்தனை பாடு? இப்படிப்பட்ட கடுஞ்சொற்களை அவளது வாயால் கேட்கக் கூடாது என்று தானே இத்தனை வருடங்கள் அவன் காத்திருந்தது?

சுயமரியாதைக்கு வேட்டு வைக்கின்ற காதல் தேவை தானா என்று கூட ஒரு நொடி அவனது உள்ளத்தில் சஞ்சலம் எழுந்தது. ஆனாலும் அடுத்த நொடியே, 'என்னவொரு அசட்டுத்தனமான எண்ணம்?' என்ற கோபமும் உடன் எழுந்தது.

உதய் ஆனந்தின் மனதில் நடக்கும் போராட்டத்தை அறியாத கீதாஞ்சலி, ''இப்படி நீ பார்த்தால் மட்டும்... நான் பயந்துடுவேனா என்ன?'' என்று அதற்கும் கோபம் கொண்டாள்.

தோளை அலட்சியமாகக் குலுக்கியவன், ''நீயா கற்பனை செய்வது பாதி... மற்றவர்கள் பேசறதை ஒட்டுக் கேட்டுட்டு, தப்பும் தவறுமா புரிஞ்சுக்கறது மீதி. இதில் பிரச்சனை என்னிடமா?'' என குத்தலாகக் கேள்வியெழுப்பி,

''ரொம்ப சந்தோஷம்!'' என்று துளியும் சந்தோஷமில்லாமல் முடித்தான்.

எந்த விதமான கற்பனைக்கும் இடம் கொடுத்து அவனிடம் கோபம் கொள்ளக் கூடாது என்று எத்தனை



முறை தன்னையே கண்டித்திருப்பாள் அவள்? ஆனால் இவன்...?

''கற்பனை...? அதுவும்... நான் செய்துக்கிறேனா? ஒரு வேளை... நான் வந்து ஏதாவது கேட்டால், 'இதெல்லாம் உன்னுடைய கற்பனை' என்று எளிதில் தப்பிக்கலாம் என்பது தான் உன் திட்டமோ? ஸ்மார்ட்! ரொம்ப ஸ்மார்ட்!''

என்ன உளறுகிறாள் இவள்? காதலைச் சொல்வதற்கு முன்பு நட்பை வளர்த்துக் கொள்ளலாம் என்ற தன் எண்ணத்தைக் குறிப்பிடுகிறாளா?

அப்படிப் பார்த்தாலும் கூட, இதில் எங்கிருந்து திட்டமிடுதல் வந்தது?

மிகுந்த ஆயாசமாக உணர்ந்தவன், ''புரியற மாதிரி சொல்றதா இருந்தால் சொல்லு, கீதா! அல்லது நாம அப்புறம் பேசலாம். எனக்கு நிறைய வேலையிருக்கு. ஹாஸ்பிடல கிளம்பணும்'' என உணர்ச்சியற்ற குரலில் பதிலளிக்க,

''எனக்கு ஒரு ரெண்டு நிமிஷம் கொடு. சொல்ல வந்ததைச் சொல்லிடறேன்'' என்றவள், அவனின் மௌனத்தையே சம்மதமாகக் கொண்டு தொடர்ந்து பேச ஆரம்பித்தாள்.

''இங்கே பார், உதய்! நான் படிக்கணும். இன்னமும் மூணு மாசத்தில் எனக்கு ஃபைனல் எக்ஸாம் வரப் போகுது. ஒரு வேளை, அதில் நான் எதிர்பார்க்கிற மாதிரியான முடிவு வரலை என்றால், மறுபடியும் நான் ஆரம்பத்திலிருந்து ஆடிட்டர் தேர்வு எழுத வேண்டியதா இருக்கும். அதற்கொரு மூணு வருஷம் கட்டாயம் தேவைப்படும்!''

இதையெல்லாம் என்னிடம் எதற்குச் சொல்கிறாய் என்று குறுக்கிடாமலே கேட்டுக் கொண்டிருந்தான் உதய் ஆனந்த்.

"நான் என்னுடைய படிப்பை முடிக்கிறதுக்கு முன்னாடி கல்யாணம் பற்றி யோசிக்கிறதா இல்லை. அதிலும் இன்னொரு முக்கியமான விஷயம். கல்யாணத்திற்கு முன்னாடி காதல் பற்றி துளியும் யோசிக்கிறதா இல்லை. உன்னிடமிருந்து இப்படியொரு தொந்தரவை நான் எதிர்பார்க்கவுமில்லை. அதை முதலில் மனசில் நிறுத்திக்கோ. நீ தேவையில்லாத கற்பனை எதையும் வளர்த்துக்காதே, உதய் ப்ளீஸ்!"

இவளது படிப்பு முடியட்டும் என்று காத்திருக்கும் தன்னைப் பார்த்து எதற்காக இப்படியொரு கோரிக்கையை முன் வைக்கிறாள்? ஒருவேளை, அவனுடன் அடிக்கடி பேசுவதால் கீதாவிற்கு பாடத்தில் கவனம் குறைகிறதா?

"உனக்கு, நான் எந்தத் தொந்தரவையும் கொடுக்கலையே, கீதா?" என மென்மையாக அவன் வினவவும்,

கீதாஞ்சலிக்கு, 'என்ன இவன்? இத்தனை எடுத்துச் சொல்லியும் புரிந்து கொள்ளாமல் மீண்டும் வாதம் செய்வதிலேயே குறியாய் இருக்கிறானே?' என்று கோபம் மூண்டது.

"நீ நேரடியாக தான் தொந்தரவு கொடுக்கணும்னு இல்லை! மாமா மூலமா பெண் கேட்கச் சொல்லி தூது விடறது, எங்க வீட்டில் உள்ளவங்க மூலமா எனக்குக் கல்யாணத்திற்கு ப்ரஷர் போடறது... இதெல்லாமும் வேண்டாம்னு சொல்றேன்."

அவள் சொல்வதை நம்ப முடியாமல், "என்னது? எங்க வீட்டில் உன்னை வந்து பெண் கேட்டாங்களா?" என்றான் அதிர்ச்சியுடன்.

அவனது பிரதிபலிப்பைக் கண்டதும், 'ஒருவேளை இவனுக்கு இந்த விஷயம் தெரியவே தெரியாதோ?'



என்று எண்ணியவளின் அறிவு அடுத்த நொடியே, 'ம்ஹூம்! இவனுக்குத் தெரியாமல் எப்படி அது சாத்தியம்?' என்ற ஆராய்ச்சியையும் நடத்தியது.

"உன் சம்மதமில்லாமலா இது நடந்திருக்கும்?" என அவநம்பிக்கையுடன் பதில் கேள்வி தொடுத்தவள்,

"கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி தானே நானும் சொன்னேன்? எல்லாமே என்னுடைய தேவையில்லாத கற்பனைன்னு சொல்லி தப்பிச்சுக்காதேன்னு..." என்றவாறே குற்றம் சுமத்தும் பார்வையைக் கொண்டு எதிரிலிருந்தவனைச் சுட்டெரித்தாள்.

அவளது கண்களை நேருக்கு நேராகச் சந்தித்தவன், "நான் தான் எங்கப்பாவை அனுப்பி வைச்சிருக்கேன்னு நீ எதை வைச்சு சொல்றே?" என்றான் கோபத்தை அடக்கிய குரலில்.

"நீ தானே அறைக்கு எல்லார்கிட்டேயும் காதல் கல்யாணம் செய்துக்கப் போறதா சொன்னே? உங்க அப்பா - அம்மா ரெண்டு பேர் முன்னாடி தானே இந்த விஷயத்தைச் சொன்னே? அப்படியிருக்கும் போது நீயா சொல்லாமல் அவங்களா எப்படி உனக்குப் பெண் கேட்பாங்க?"

"அதை நீ அவங்களிடம் தான் கேட்கணும்" என்று பல்லைக் கடித்தான்.

'என்ன ஒரு குதர்க்கமான பேச்சு?' என்று நினைத்தவள், "இந்தப் பசங்களே இப்படி தானே? 'படியுமா... படியாதா?' என்று நூல் விட்டுப் பார்க்க வேண்டியது. எந்த சிக்னலும் வரலை என்றதும் அம்மா - அப்பா பிரண்ட் என்று அடுத்த கட்டத்துக்குத் தாவ வேண்டியது" என அவனது காதில் விழட்டுமே என்றே முணுமுணுக்க,

"இந்தப் பொண்ணுங்க மட்டும் எந்த வகையில சேர்த்தி? ஊரில் இருக்கிற பசங்க எல்லாம் தன் பின்னாடி

தான் சுத்தறாங்க; தன்னைப் பற்றி தான் பேசறாங்க; உலக அழகியான நமக்கு மட்டும் தான் ரூட் விடறாங் கன்னு நினைக்க வேண்டியது...'' என அவனும் பதிலுக்கு ஆத்திரத்தோடு சலித்தான்.

''நீ இப்போ என்னைப் பற்றியா சொல்றே?''

''நீ என்னைப் பற்றி பேசியிருந்தால், நானும் உன்னைப் பற்றி தான் சொன்னேன்'' என்றவனின் உள்ளம் அந்த நொடியில் மரத்துப் போனது.

''ச்சே! உன்னை மதிச்சு உன் கூட பேச வந்தேன் பாரு. என்னைச் சொல்லணும். உன்னை மாதிரி ஒருத்தன் கூட பிரண்ட்ஷிப் வைச்சுக்கிட்டேன் பாரு... என்னைச் சொல் லணும்.''

கீதாஞ்சலி பேசுவதைப் பொறுக்க முடியாத உதய் ஆனந்த், ''ஷட் அப்!'' என்று கத்தவில்லையென்றால், இன்னமும் தொடர்ந்து அவள் என்னவெல்லாம் பேசி இருப்பாளோ? அது அந்த கடவுளுக்கே வெளிச்சம்!

சில கணங்கள் ஊசி விழுந்தால் கூட துல்லியமாகக் கேட்கும் அளவிற்கு கனத்த அமைதி நிலவ, அதைக் கலைக்கும் விதமாய், ''உ-த-ய்...'' என்று மீண்டும் ஆரம்பித்தாள்.

குரலை உயர்த்தி, ''ஐ வார்ன் யூ டு ஜஸ்ட் ஷட் அப்! அதையும் மீறி நீ இன்னமும் ஒரு வார்த்தைப் பேசினால், 'ஏன் பேசினோம்?' என்று வாழ்நாள் முழுக்க நீ வருத்தப் பட வேண்டியதா இருக்கும். என் ஆத்திரத்தைக் கிளப் பாதே! அப்படி கஷ்டப்பட்டு நீ இங்கே இருக்க வேண் டியதில்லை! கெட் அவுட்! கெட் அவுட் ஆஃப் மை லைட் அண்ட் கெட் அவுட் ஆஃப் மை லைஃப்!'' என்று பொறுக்க முடியாமல் வெடித்தவன், மேலும் அவள்



பேசுவதைக் கேட்கவோ, அதற்கு அவளுக்கொரு சந் தர்ப்பம் கொடுக்கவோ அங்கே நில்லாமல் விடுவிடு வென்று அங்கிருந்து வெளியேறினான்.

அவனுடைய வாழ்க்கையிலிருந்து கீதாஞ்சலி வெளியேற முடியுமா? இல்லை உதய் தான் அவளை வெளியேற்றிட முடியுமா?

இதற்கு காலம் தான் பதில் சொல்ல வேண்டும்!



# 9

உதய் ஆனந்திடம் எப்பொழுதும் ஒரு பழக்கம். யாருக்காகவும், எதைப் பற்றியும், யாரிடமும் அவன் இதுவரை விளக்கம் கொடுத்ததில்லை; கொடுக் கவும் மாட்டான்.

Never explain yourselves. Your friends do not need it. Your enemies won't believe it - என்பதை ஆணித்தரமாக நம்புபவன்.

அப்படிப்பட்டவனே, கீதாஞ்சலிக்காக அவனுடைய கொள்கையை விட்டுக் கொடுத்திருப்பான்... அவள் நல்லவிதமாக மட்டும் அவனிடம் கேட்டிருந்தால்!

எடுத்தவுடனேயே குற்றம் சுமத்துபவளிடம் போய் என்னவென்று விளக்கம் கொடுக்க? Accused, judged and sentenced without even a trial!

அவள் கோபத்துடன் வந்து, ஆத்திரமாகப் பேசிவிட்டு போன பொழுது அவனுக்கு கோபம் தான்; ஆத்திரம் தான். அவனைச் சிறிது கூட இவள் புரிந்து கொள்ள மாட்டேன் என்கிறாளே என்று.

'என்னை நம்பு! நம்பு!' என்று எத்தனை முறை தான் சொல்ல முடியும்? நம்பிக்கை என்பது தானாக வர

வேண்டும். இல்லாத இடத்தில் அது சொன்னால் மட்டும் வரப் போகிறதா? அப்படி அந்த நம்பிக்கையைப் போக்கிக் கொள்ளும் அளவிற்கு அவன் செய்த மாபெரும் பிழை தான் என்ன?

ஆனால், அந்தக் கோபமும் சினமும், எந்தவொரு பேச்சு வார்த்தையையும், அதன் பிறகு அவள் ஆரம்பிக்கவில்லை என்பதில், பெரும் வருத்தமாக மாறியது அவனுக்கு.

கோபத்தில், 'என் வாழ்க்கையை விட்டு வெளியே போ!' என்று அவன் சொன்னது உண்மை தான். அதற்காக... அப்படியே இருந்து விடுவாளா? அவளுக்கென்று ஒரு தார்மீக பொறுப்பு இல்லையா?

கோபமாக இங்கு வந்து கத்த தெரிந்தவளுக்கு, அந்தப் பொறுப்பு இருப்பது தெரியாதது ஆச்சரியம் தான் என இளக்காரமாக நினைத்துக் கொண்டான்.

'இதோ... இன்று பேசுவாள்; இதோ... இன்று ஏதாவது ஒரு சின்ன குறுந்தகவலாவது அனுப்புவாள்' என்ற நம்பிக்கை, இந்த இரண்டு வாரங்களில் சிறிது சிறிதாக குறைய... வருத்தமும், கோபமும் மாறி மாறி வந்தது அவனுக்கு.

அவனைப் பற்றிய அக்கறை சிறிதும் இல்லாமலிருப்பதால் தானே, 'நீ எக்கேடோ கெட்டு போ! உன் கோபம் என்னை என்ன செய்யும்?' என அவளால் விட்டேற்றியாக இருக்க முடிகிறது? அவள் மனதின் ஒரு மூலையிலாவது அவனைப் பற்றிய எண்ணமிருந்தால், 'என்ன? ஏது?' என்று விசாரித்திருப்பாளே என்று மறுகலானான்.

அந்த வருத்தத்துடனேயே அவளிடம் பேசவோ, அவளைப் பார்க்கவோ முடியாது என்பதனால் தான் அக்காவின் வீட்டுப் பக்கம், நிர்மலவேணி பலமுறை அழைத்தும் கூட, அவன் போகாமல் இருப்பது.



இந்தக் களேபரத்தில் அவனின் பெற்றோர்களையும் கடிந்தாகி விட்டது. இவனைக் கேட்காமல் கீதாஞ்சலியை அவர்கள் பெண் கேட்டது மாதிரி, வேறு எவரிடமும் சம்பந்தம் பேசி வைத்து, இவனைப் புது இக்கட்டில் நிறுத்தி விடக் கூடாதே என்ற எண்ணத்தில் வெளிப்படுத்திய கோபம் அது.

இன்னமும் ஒரு சின்ன துரும்பைக் கூட கீதாஞ்சலி, இவன் புறமாக அசைக்காமல் இருக்க, 'அவளைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்க, அவன் மட்டும் என்ன மான, ரோஷம் இல்லாதவனா?' என அதற்கும் தன் மீதே கோபப்பட்டுக் கொண்டான் உதய் ஆனந்த்.

என்னுடைய மௌனம், என்னுடைய வலிக்கு இன்னொரு பெயர் என்று கூட புரியாதவளிடம்... புரிந்து கொள்ள அக்கறை இல்லாதவளிடம் போய் என்னவென்று பேச?!

ஆனால், நினை என்றால் நினைப்பதற்கும், நினைக்காதே என்றால் நினைக்காமல் இருப்பதற்கும் மனம் என்ன விசை போட்டால் இயங்கும் இயந்திரமா?

* * *

எல்லோரும் விஸ்ராந்தியாக வீட்டிலிருக்கும் வாரயிறுதி நாளில், தன் வீட்டில், தன் மனைவிக்கு மதிய சமையலில் உதவிக் கொண்டிருந்த ஷ்யாம், ''உன் தம்பி போன் செய்திருந்தானா, நிம்மி? இன்றைக்கு வரேன் என்று ஏதாவது சொன்னானா?'' என்று வினவ,

''இல்லையே? ஏன் கேட்கறீங்க?'' அடுப்பில் தாளித்துக் கொண்டிருந்த நிர்மலவேணி பதில் கேள்வி கேட்டாள்.

''வாரா வாரம் இங்கே வந்துட்டு இருந்தான். அவன் வரவை நீ எதிர்பார்த்தியோ இல்லையோ நான் ரொம்ப

எதிர்பார்ப்பேன்'' என்றவன் மனைவியின் கேள்வி தொக்கி நின்ற பார்வைக்குப் பதில் சொல்லும் விதமாக,

''அவன் புண்ணியத்தில் ஒரு நாளாவது நல்ல சாப்பாடு சாப்பிடலாமே என்ற ஆசையில் தான், நிம்மி!'' என்று கண் சிமிட்டினான்.

''உங்களைப் பட்டினி போட்ட மாதிரி பேச்சைப் பாரு! இருங்க, இன்றைக்கு உங்களுக்கு பழைய கஞ்சியும், ஊறுகாயும் தான்! இந்த வெஜிடபிள் பிரியாணியையும், கத்திரிக்காய் தொக்கையும் உங்களைப் பார்க்க வைச் சுட்டே நாங்க சாப்பிடறோம்!'' என்று மிரட்டியவளின் கன்னத்தைச் சிரிப்புடன் நிமிண்டியவன்,

''கோபத்தைப் பாரு!'' என மனைவியைக் கொஞ்சி, ''பழைய கஞ்சியென்றாலும் பரவாயில்லை. நிம்மி! பட்டினி மட்டும் போட்டுடாதேடா. நாளாக நாளாக தான் பழைய கஞ்சிக்கு ருசியாமே?!'' என்று கள்ளச் சிரிப்பு சிரிக்கவும்,

''உங்களை...!'' என அவனின் சிரிப்பில் இணைந் தாள் அவன் மனைவி.

காயை நறுக்கி, தட்டில் எடுத்து வைத்தவன், அவர்கள் பேசிக் கொண்டிருந்ததைத் தொடர்ந்து, ''உதய் இங்கே வந்து, மூணு வாரத்துக்கும் மேலாச்சு. எங்கே அவனை இந்தப் பக்கமே காணோமே?'' என்றவாறே கேள்வியாக நிர்மலவேணியைப் பார்க்க,

''அந்தப் பாத்திரத்தைக் கொஞ்சம் கழுவிக் கொடுங்க, ஷ்யாம்'' என்று அவனைப் பணித்தவள்,

''நீங்களே அவனைக் கூப்பிட்டு, என் இங்கே வர லைன்னு கேட்க வேண்டியது தானே? நானும் உங்களை மாதிரி தான். நம்ம கிட்ட யாரு, எதைத் தான்



சொல்றாங்க? எல்லாம் முடிஞ்ச பிறகு வந்து சொன்னால் நாம என்ன செய்ய முடியும்?'' என்று புலம்பலில் முடித் தாள்.

''நீ கீதா கிட்ட அதுக்குப் பிறகு ஏதாவது பேசி பார்த்தியா?'' மெல்லியக் குரலில் கணவன் கேட்க,

''ப்ச்! இல்லை! அது தான் நீங்க கேட்டதற்கு, 'இதைப் பற்றி பேசாதீங்க'ன்னு சொன்னாள்-ன்னு சொன்னீங்களே? அப்புறம் நான் வேற என்னத்தைக் கேட்க?'' என்றாள் குறையுடன்.

உதய் ஆனந்திற்கு கீதாஞ்சலியைப் பெண் கேட்ட விஷயத்தை, ருக்மணி மகனிடம் சொல்லி, அவன் கீதாஞ்சலியிடம் கேட்டதற்கு, அவள் சொன்ன பதிலைத் தான் இப்பொழுது மனைவி தாங்கலுடன் கூறுகிறாள் என்பதை உணர்ந்த ஷ்யாம், அவளைப் பின்னோடு இருந்து அணைத்து, அவளது தோளில் அவன் தாடையை வைத்து அழுத்தினான்.

''அதுக்கு எதுக்கு நீ ஃபீல் செய்றே டா? அவங்கவங்க வாழ்க்கை இது. நாம கட்டாயப்படுத்த முடியாதே?'' என்று அவளுக்கு ஆறுதல் கூறினாலும், அவனுக்கும் வருத்தம் தான்.

ஒன்றும் மறுமொழி சொல்லாமல், அவனது மார்பி லேயே அவள் முதுகை சாய்த்துக் கொண்டவளிடம், ''உதய் என்ன சொன்னானாம்? உங்க அம்மா என்ன சொன்னாங்க?'' என்று சிறிது இடைவெளிக்குப் பிறகு விசாரித்தான்.

முரளி நந்தனுக்கு குடிக்க தண்ணீர் எடுக்க வந்த கீதாஞ்சலி, நிர்மலவேணி சொல்லப் போவதைக் கேட்க, காதைத் தீட்டிக் கொண்டு படபடக்கும் நெஞ்சோடு காத்திருந்தாள்.

''எங்க அம்மாகிட்டே பேசும் போது கீதாக்கு விருப்பமில்லை என்பது மாதிரி அத்தையே நாசூக்கா சொல்லிட்டாங்களாம்...'' என்றபோது அவளது குரல் மிகவும் சோர்வாக ஒலித்தது.

''ம்... உண்மையைச் சொல்றது தான் சரியா வரும்னு அம்மா நினைச்சிருப்பாங்க. எப்படியும் நம்ம வழியா அத்தைக்கு விஷயம் போக வாய்ப்பு இருக்கு இல்ல?''

''ம்!'' என்று ஆமோதிப்பாகத் தலையசைத்தவள், ''உதய் பற்றி சொல்லவே வேண்டாம்! உங்க தங்கையாவது, 'இதைப் பற்றி பேசாதீங்க'ன்னு சொன்னதோட நிறுத்தினாள்; என் தம்பி என்னடாவென்றால் ருத்ர தாண்டவம் தானாம். அவனைக் கேட்காமல், அவனிடம் சொல்லாமல் ஏன் இப்படிச் செய்தீங்கன்னு அம்மாவைப் போட்டு காய்ச்சு எடுத்திருக்கான்'' என்றாள் லேசான கோபத்தோடு.

''அச்சோ! மாமா...?''

''அப்பா வாயே திறக்கலையாம். கல்யாண விஷயமா, தான் சொன்னதைக் கேட்கலைன்னு, ஏற்கனவே உதய் மேலே அம்மாவிற்கு கோபம், இப்போ, நல்ல நேரத்தில் அவங்களுக்குச் சாதகமா பேசலைன்னு அப்பா மேலேயும் கோபமாம்'' என்று பெருமூச்செறிந்தாள்.

ஷ்யாம், ''கல்யாணம் வேண்டாமென்றால் அதுக்கு எதுக்கு உதய் இங்கே வராமல் இருக்கணும்? பேசற பெண்ணையெல்லாம் கல்யாணம் செய்துக்க முடியுமா? இல்லை, முகத்தைத் திருப்பிக்கிட்டு தான் போக முடியுமா? இந்தப் பேச்சை ஆரம்பித்த இந்த ரெண்டு வாரமா அதுக்காக கோபிச்சுக்கிட்டு இருப்பானா அவன்? அக்கா வீட்டுக்கு எப்பவும் மாதிரி வந்துட்டு இருக்க



வேண்டியதுதானே?'' என தன் ஆதங்கத்தை மனைவியிடத்தில் வெளிப்படுத்தினான்.

''நானும் சொல்லிப் பார்த்துட்டேன். அவன் கேட்கலை. இந்த விவகாரம் அவனைக் காயப்படுத்திடுச்சுன்னு நினைக்கிறேன்'' என தன் தம்பியின் நிலைக்காக வருத்தப்பட,

ஷ்யாம், ''நீ ஒன்றும் பீல் செய்யாதே, நிம்மி! நான் அவனிடம் பேசறேன்'' என்று மனைவியை சமாதானப்படுத்த, கீதாஞ்சலி, அதன் பின்பு அவள் அண்ணனும் மதினியும் பேசியதைக் கேட்கும் மனநிலையில் இல்லை.

ஏற்கனவே, அவன் வீட்டிற்குச் சென்று, உதயிடம் கோபத்தை வெளிப்படுத்தி விட்டு வந்ததிலிருந்து குற்ற உணர்ச்சியில் தவித்துக் கொண்டிருந்தவள், இப்பொழுது நிர்மலவேணியின் கூற்றில் மேலும் குன்றிப் போனாள்.

தன்னால் தான் உதய் இங்கே வரவில்லை என அண்ணனிடமும், மதினியிடமும் அவளால் போய் சொல்லவா முடியும்?

எக்ஸ்பிரஸ் அவென்யூவில் இவள் பேசின பேச்சிற்கு உதயிடம் மன்னிப்பு கேட்கலாம் என்று அவள் நினைத்த தருணத்தில், அடுத்ததாக ஒரு புதிய யுத்தத்தைத் தொடங்குவதற்கான அனைத்து வேலைகளும் செவ்வனே நடந்தேறியிருக்க, இவள் மன்னிப்பு கேட்பதற்கு பதிலாக, மேலும் ஒரு போர்க் கொடியை உயர்த்திக் காட்டியாகி விட்டது.

ஏன் அவளுக்கு அப்படியொரு கோபம்? கோபமாக இருக்கும் பொழுது எதுவும் பேசக் கூடாது என்று, இதோ... இன்னமும் இரண்டு வயதில் இருக்கும் நந்துக் குட்டிக்கு கூட புரிந்து கொள்ள முடியுமே?

அவளுக்கு ஏன் அது தெரியவில்லை? அதைப் புரிந்து கொள்ளும் நிலையில் ஏன் அவள் இல்லை?

அதுவும், அந்தக் கோபத்தில் உதயைப் போய் நேருக்கு நேராக சந்தித்து, கேள்வி கேட்காவிட்டால் தான் என்ன? அப்படியென்ன அவசரம்? ஆவேசம்?

எல்லோருக்குமே பொறுமை அவசியம் எனும் போது, பெண்ணாகிய அவளுக்கு ஏன் அதில்லாமல் போனது?

அவள் ஒருத்தி போய் கத்திவிட்டு வந்தது யார் யாரையெல்லாம் பாதித்து இருக்கிறது?

அத்தை, மாமா, மதினி, அண்ணா... உதய்... எனப் பட்டியல் நீண்டு கொண்டே போனது.

அப்படியே அவனாகவே பெண் கேட்கச் சொல்லியிருந் தால் தான் என்ன? அது முடியாது என்றோ, வேண்டாத எண்ணம் என்றோ பொறுமையாக அவளால் எடுத்துச் சொல்லியிருக்க முடியாதா?

இது மாதிரி ஒரு நிலை வந்தால் என்ன செய்ய வேண்டும், எப்படிச் சமாளிக்க வேண்டுமென ஏறகனவே யோசித்து வைத்திருந்ததைக் கூட தன்னால் ஏன் செயல்படுத்த முடியாமல் போனது?

கல்லூரியில் படிக்கும் பொழுதும், இப்பொழுது சென்னையில் இந்த நான்கு ஆண்டுகளிலும் எத்தனை நபர்களைச் சமாளித்திருக்கிறாள்? உதயை மட்டும் ஏன் இத்தனை கடுமையாய்...?

யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு

வள்ளுவன் சொல்லி வைத்ததையெல்லாம் பள்ளி வரைக்கும் தான் போல!

நாவை அடக்காமல் இருந்ததன் விளைவு... அவனிட மிருந்தும் பதிலுக்குக் கடுமையான சொற்களைக் கேட் கும்படியானது.



இதுவரை யாரிடமிருந்தும் அவள் இத்தனை தூரத்துக்கு திட்டு வாங்கியதும் இல்லை. வாங்கும்படி இவள் நடந்து கொண்டதுமில்லை.

அவனும் கூட யாரையும் அப்படித் திட்டியிருக்க மாட் டான். அதை, 'திட்டு' என்று சாதாரணமாக கட எப்படிச் சொல்வது?

நமக்குத் தான் நாக்கு இருக்கிறது என யோசிக்காமல் பேசினால் வாங்கிக் கட்டிக் கொள்ளத் தான் வேண்டும்!

எல்லோரிடமும் அதைக் கூறி, அவளை மேலும் அசிங்கப்படுத்தாமல் அத்துடன் விட்டானே! அதற்கே அவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

அன்று அவன் முகத்தில் தான் எத்தனை ரௌத்திரம்?

ஆனால், அந்த ரௌத்திரம் தான் அவளைச் சிந்திக்கவும் தூண்டியது. 'அவன் எப்படி, அப்படிப் பேச போச்சு?' என்ற எண்ணம் மாறி... தேன்மொழி அத்தையைப் பெண் கேட்கத் தூண்டியது உதய் என்று, தான் நினைத்தது ஒருவேளை உண்மையில்லையோவென அவள் அறிவு மிகவும் கால தாமதமாக சிந்திக்க ஆரம்பித்தது.

'அறிவு என்று வேறு ஒன்று உனக்கு இருக்கா?' என உள்ளிருந்தே குடையும் குடைச்சல் வேறு! அது இருந் திருந்தால் தான் சொல்ல வேண்டியதைப் பொறுமை யாகச் சொல்லியிருப்பாளே?!

அப்படியே, அவள் நினைத்துப் போனது உண்மை யாகவே இருந்திருந்தாலும், அவள் அவனிடம் பேசிய முறையும், பேசிய வார்த்தைகளும் அளவுக்கு அதிக மானவை எனும் பொழுது... நினைத்து போனது உண் மையே இல்லையென்றால்...?!

தப்பாக குற்றம் சாட்டப்பட்டவனுக்கு கோபம் வாராதா? அவன் கோபப்பட்டதிலும் தான் என்ன தவறு? இதே

வேறு ஒருவனாக இருந்திருந்தால், இவள் பேசிய பேச்சிற்கு என்ன செய்திருப்பானோ?

உதய் மீது கோபப்பட்டது போய்... அதற்கு மாறாக அவனுக்கே அவள் எப்பொழுது வக்காலத்து வாங்க ஆரம்பித்தாள் என்பதுகூட கீதாஞ்சலிக்குத் தெரியவில்லை.

இப்படியே சிறிது சிறிதாக யோசித்து யோசித்து, அவள் மீது குற்றமில்லை என்பதை அவள் புரிந்து கொள்ளும் முன், மேலும் இரண்டு வாரங்கள் படு வேகமாக கடந்து சென்றன.

குற்ற உணர்ச்சியிலும், சுய அலசலிலும் காலத்தைப் போக்கியவள், 'சாரி' என்று ஒரு வார்த்தையை அவனுக்குக் குறுந்தகவலாக அனுப்பக்கூட, ஆயிரம் முறை யோசனை செய்தாள்.

தன் நடவடிக்கையால், 'என் வாழ்வை விட்டே சென்று விடு!' என்று ஒருவனைக் கோபத்தின் எல்லைக்கே அழைத்துச் சென்றுவிட்டு, எந்த முகத்தோடு அவனுக்குக் குறுந்தகவல் அனுப்புவது என்ற யோசனையின் விளைவாக அதையும் அனுப்பவில்லை.

குறுந்தகவல் அனுப்பவே யோசித்தவள், நேரிலும் அவனைச் சென்று பார்க்கவில்லை.

அதுவும் இத்தனை வாரங்கள் கழிந்த பின்? கோபத்தை சட்டென்று அவனிடம் கொட்ட முடிந்த அவளுக்கு மன்னிப்பைக் கேட்க ஏனோ தயக்கமும், வெட்கமும் தடுத்தது.

எப்பொழுதுமே செய்த தவறுக்கு மன்னிப்பை ஆறப் போடாமல் கேட்டுவிட வேண்டும். தாமதமாக்கினால், அதன் எடை கூடுமே அன்றி, குறையாது. அந்தச் சுமையை இறக்கவும் முடியாமல், சுமக்கவும் முடியாமல் திண்டாடிப்



போக வேண்டும். கீதாஞ்சலியின் நிலையும் அவ்வாறே ஆனது.

தாமதமாக வழங்கப்படும் நீதி, அநீதிக்குச் சமமாகும் என்றால் தாமதமாகக் கேட்கப்படும் மன்னிப்பும் அதே போன்று தானே?!

யோசித்து யோசித்து தலையை வலிப்பது போன்றிருக்க, இரு கரத்தாலும் தலையைப் பிடித்துக் கொண்ட கீதாஞ்சலி, கட்டிலின் தலை மாட்டில் தலையைப் பின்னுக்குச் சாய்த்தாள்.

உறங்கும் பொழுதும், விழித்திருக்கும் பொழுதும் அவள் மனம் இதிலேயே உழன்று கொண்டிருக்க, அவளுக்குப் பாடத்தில் கவனம் சிதறியது.

இன்னமும் முழுதாக ஒன்றரை மாதம் கூட இல்லை பரீட்சைக்கு. இந்த லட்சணத்தில் படித்தால் அவள் குறிப்பிட்ட மாதிரி இன்னமும் மூன்று வருடங்கள் தான். சந்தேகமே வேண்டாம்!

தலையை உலுக்கிக் கொண்டு பாடத்தில் கவனத்தைச் செலுத்த முயன்றவளின் முயற்சியைக் கலைக்கவென்றே, ஹாலில் முரளி நந்தன் அவன் தாயிடம், ''லண்டன் ப்ரிட்ஜ் இஸ் ஃபாலிங் டௌன்... பாலிங் டௌன்... பாலிங் டௌன்... மை ஃபேர் லேடி!'' என்ற நர்ஸரி ரைம்ஸை பாடி காட்டிக் கொண்டிருந்தான்.

புத்தகத்தைப் பட்டென்று மூடி வைத்தவள், 'இவன் ஒருத்தன்... 'நிலா நிலா ஓடி வா...'ன்னு பாட்டு பாடாமல், 'லண்டன் ப்ரிட்ஜ் இஸ் ஃபாலிங் டௌன்' என்று பாடிகிட்டு...' எனச் செல்லமாக மருமகனைக் கொஞ்சிக் கொண்டாள்.

மேலும் பல நிமிடங்கள் யோசனையோடு, கையில் அலைபேசியை வைத்து நோண்டிக் கொண்டிருந்த

கீதாஞ்சலி, நூறாவது முறையாக அதில் எதையோ அடிப்பதும், பின்பு அழிப்பதுமாக இருந்தாள்.

இதையே பலமுறை செய்தவள், ஒரு எல்லைக்குப் பின், எரிச்சலுடன் அதைத் தூக்கிப் போட்டுவிட்டு கண்களை மூடிக் கொண்டாள்.

கீதாஞ்சலி எரிச்சலுடன் கைப்பேசியைத் தூக்கிப் போட்ட அதே நாளில், உதய் ஆனந்தும் அங்கே அவன் வீட்டில், நள்ளிரவு பன்னிரண்டு மணி நெருங்கும் வேளையில் கூட உறக்கம் பிடிக்காமல் - உறக்கம் பிடிக்காமல் என்ன... சில காலமாக உறக்கத்துக்குத் தான் இவனைப் பிடிக்காமல் போய் விட்டிருந்தது - கைப்பேசியும் கையுமாக அதே எரிச்சலுடன் தான் இருந்தான்.

அவன் லண்டனில் இருந்த பொழுது வந்த அவளின் பிறந்த நாள் ஒவ்வொன்றுக்கும், இரவு பன்னிரண்டு மணியில் இருந்து, அவளுடன் முதலில் பேச தவமிருப்பான்.

அவன் சென்னை திரும்பியதும் வரப் போகும் அவளின் முதல் பிறந்தநாள்!

மனதில் நம்பிக்கை சிறிதும் இல்லையென்றாலும், நிராசையையும் மீறி, அவனுடைய பிறந்த நாளிலாவது அவளாக ஒரு அடியை எடுத்து வைப்பாளோ என்ற ஆசையும், எதிர்பார்ப்பும் அவனுக்கு இருந்தது.

இன்றைக்கு பன்னிரண்டு மணிக்கு கூட வேண்டாம். ஏன்... விடிந்ததும் வாழ்த்து தெரிவிக்கும் முதல் ஆளாக கூட அவள் இருக்க வேண்டாம்... கடைசி ஆளாகவாவது அவனை அழைத்துப் பேசுவாளா?

வணிக வளாகத்தில் நடந்ததையும் சேர்த்தால், அவன் கீதாஞ்சலியுடன் சுமூகமாக பேசி பல வாரங்களாகிறது.



அவனுக்கு இருக்கும் தவிப்பில் ஒரு சதவிகிதம் கூடவா அவளுக்கு இருக்காது?

ஒரு காதலியாக வேண்டாம்; குறைந்தபட்சம் ஒரு தோழியாக? அந்தளவிற்குக் கூடவா அவன், அவள் மனதில் இடம் பிடிக்கவில்லை?!

நான்கு நாட்கள் பேசிப் பழகின நபர்களிடம் சண்டையிட்டால் கூட, மனது கிடந்து அடித்துக் கொள்கிறது. இந்த லட்சணத்தில் ஒரு மாதத்திற்கும் மேலாக கிட்டத்தட்ட தினமும் பேசியிருக்கிறோம்.

தலையை அழுந்தக் கோதிக் கொண்டவன், அலைபேசியை அருகே வைத்தபடியே எப்பொழுது உறங்கினானோ?

அடுத்த நாள் கீதாஞ்சலியின் ஒரு வாழ்த்திற்காக இவன் இங்கு ஏங்கிக் கொண்டிருக்க, அது தெரியாத கீதாஞ்சலி எந்த முகத்தை வைத்துக் கொண்டு அவனுக்கு வாழ்த்து தெரிவிப்பது என்று தயங்கித் தயங்கியே பொழுதைக் கழித்தாள்.

முன் தின இரவே அவனுக்கு அழைக்க முயன்று, தோற்று நான் மூலையில் கைப்பேசியை அவள் விட்டெறிந்தது.

மேலும் மேலும் தவறு செய்கிறோமென்று தெரிந்த போதும் அதைச் சீர் செய்யும் வழி தான் அவளுக்குத் தெரியவில்லை. இல்லை... வழி தெரிந்திருந்தாலும் அதன்படி நடக்க முடியாமல், ஈகோவோ, தன்மானமோ இல்லை கோழைத்தனமோ எதுவோ ஒன்று அவளைத் தடுத்தது.

அவனுடைய கைப்பேசிக்கு அடுத்த நாள் வந்த அழைப்புக்களை எல்லாம் பாய்ந்து சென்று எடுத்த உதய் ஆனந்த், நேரமாக நேரமாக அதன் அழைப்பு ஒலி கேட்டாலே வெகுண்டெழுந்தான்.

ஒரு கட்டத்துக்கு மேல் பொறுக்க மாட்டாமல், கைப் பேசியைப் பலங்கொண்ட மட்டும் விசிறி அடித்ததில், அது சுக்கு நூறாக உடைந்து சிதறியது. உடைந்து சில் சில்லாகச் சிதறிய பாகங்களைப் பார்த்தவனுக்கு அத் தனை வெறுப்பும் யார் மீதென்று தான் தெரியவில்லை!

அவன் வேண்டாமென நிச்சிந்தையாய் இருக்கும் கீதாஞ்சலியின் மீதா? இல்லை... அப்படி இருப்பவளின் மேல் வெட்கங்கெட்டு போய், மீண்டும் மீண்டும் செல்லும் அவன் மனதின் மீதா என்பது விடையறியா கேள்வி தான்.

'நான் வேண்டாம் என்று போனவள் எனக்கும் வேண்டாம்!' என வீராப்பாக நினைத்துக் கொண்டவன், தன்னுடைய மருத்துவ நண்பர்களின் வேலைகளைக் கூட இழுத்துப் போட்டுக்கொண்டு செய்து, அதிலேயே மூழ்கிப் போக முயற்சித்தான்.

ஆனால், அவன் எங்கே போனாலும் கூடவே வரும் நினைவுகளை என்ன செய்ய முடியும்?

## 10

''காதல், காலத்தை மறக்கச் செய்யும்; காலமும், காதலை மறக்கச் செய்யும்'' என்று நினைத்திருந்தவனை, காலம் செல்லச் செல்ல, இரண்டும் இருந்த இடத்திலேயே இருந்து கொண்டு, பைத்தியம் பிடிக்கச் செய்தது தான் மிச்சம்!

கோபம், வருத்தம், வெறுப்பு என்ற பல்வேறு உணர்ச்சி களுக்கு நடுவில் சிக்கிப் போராடியவன், அடுத்து வந்த நாட்களில் மிகவும் உடைந்து போனான்.

கீதாஞ்சலியின் மீது அவனுக்குக் கோபம் இருந்த பொழுது கூட தாங்கிக் கொள்ள முடிந்தவனால், அவள் மீதான அவனது வெறுப்பை ஏனோ தாங்க முடிய வில்லை.

'ஏன்டி என்னைப் போட்டு இப்படிப் படுத்தறே?!' தன் கேசத்துக்குள் கரத்தை விட்டு, அதை அழுந்தப் பற்றிய வனுக்கு ஆயாசமாக வந்தது.

உணர்ச்சிக் கொந்தளிப்பில் தவித்தவன் சிறிது நேரம் கண்களை மூட, அவன் செவியில் கீதாஞ்சலியின் குரலே ஒலித்தது.

நான் என்ன பெண்ணில்லையா - என் கண்ணா
அதை நீ காணக் கண்ணில்லையா
உன் கனவுகளில் நானில்லையா
தினம் ஊசலாடுதென் மனசு
அட ஊமையல்ல என் கொலுசு
என் உள் மூச்சிலே உயிர் வீங்குதே
என்னுயிர் துடிக்காமலே காப்பது உன் தீண்டலே
உயிர் தர வா

விழி மூடினாலும், விழித்திருந்தாலும் அவள் நினைவு களே! கனவிலும் நினைவிலும் அவளே!

இரவின் அமைதியில், ஊரே உறங்கிக் கொண்டிருந்த சாமத்தில், இருட்டை வெறித்தபடி யோசனையில் ஆழ்ந் திருந்தவனை, ''அவள் வேண்டாமென்று போனால்... நீயும் அப்படியே போயிடுவியா? அவளுக்குத் தான் அறிவில்லையென்றால்... உனக்குமா?'' என்று அவன் மனமே இடித்தது.

''போதும், இந்தப் பாராமுகம்! 'அவளை நிறுத்தச் சொல்... நான் நிறுத்தறேன்' என்று சொல்லிகிட்டே அலையாதே! யாராவது ஒருத்தங்க முதலில் நிறுத்துங்க.''

'' 'Life becomes easier when you learn to accept an apology you never got' - என்று படித்ததில் பிடித்தது என்று

ரசித்தால் மட்டும் போதாது. அதைச் செயல்படுத்தவும் செய்!''

''இதுவே உங்களுக்கு ஏற்கனவே திருமணம் முடிந்திருந்தால் உன்னால் அவள் வேண்டாமென்று அத்தனை எளிதில் போக முடியுமா? என்னவொரு பைத்தியக்காரத்தனம்?''

''உனக்கு காரியம் பெருசா? வீரியம் பெருசா? அவள் தான் ஒரு 'ஷார்ட் ஃப்யூஸ்' என்று உனக்கு முதலிலேயே தெரியுமே? அப்புறம் என்ன?''

''நாலு வருஷமா நீ தான் அவளை விழுந்து விழுந்து காதலிக்கிறே? அவளுக்கு அது தெரியுமா? இல்லை, நீ தான் அதை எப்பொழுதாவது அவளுக்குச் சொல்லியிருக்கியா?''

''அதை அவளுக்குச் சொல்லு; புரிய வை! சொல்லாமலே கோழை மாதிரி ஓடிப் போய் விட ஏதாவது யோசனை இருந்தால், அதை அப்படியே அந்த அடையார் ஆற்றிலேயே ஓட விட்டுடு.''

''சொல்லாமலே இருக்கிறது சுத்த மடத்தனம்! 'நீ மடையன்; கோழை' என்று என்னைச் சொல்ல வைக்காதே!''

சரமாரியாக உள்ளிருந்து ஒலித்த கேள்விகளில், உதய் ஆனந்திற்கு தலை விண்விண் எனத் தெறிக்க ஆரம்பித்தது.

கடிவாளம் போட்ட குதிரை மாதிரி தன் இலக்கு நோக்கிப் பயணம் செய்பவளை எந்தத் தொந்தரவும் செய்ய வேண்டாம் என்று தான் யோசித்ததெல்லாம் வீணான ஒன்றா?

கீதாஞ்சலி, தன் அக்காவின் நாத்தனார் ஆகிப் போனதில், அவன் எக்குத் தப்பாக எதுவும் செய்து, அது அவர்களின் உறவைப் பாதிக்கக் கூடாது என்று அவன் கவனமாகச் செயல்பட்டது தவறா?



இதுநாள் வரையில் ஆயிரத்தெட்டு காரணங்களை யோசித்து தயங்கியது போதும்; ஒவ்வொரு முறையும் இது போன்ற வெவ்வேறு காரணங்கள் தான் அணிவகுத்து நிற்கப் போகின்றன.

இப்பொழுது மட்டும் உடனே அவளிடம் அவன் காதலைப் போய் நேரடியாகச் சொல்ல முடியுமா என்ன? இப்பொழுதும் தானே அவள் தன் அக்காவின் நாத்தனார்?

அதற்கும் மேல் எப்படியாவது சொல்கிறேன் என்று வைத்துக் கொண்டாலுமே... இருக்கும் 'அமைதியான சூழலில்' அவன் மேலே விழுந்து பிராண்டிவிட மாட்டாளா?!

அதற்காகச் சொல்லாமலே இழுத்துக் கொண்டிருக்க முடியுமா?

'நான் உன்னைக் காதலிக்கிறேன்' என்று சொல்வதில் என்றுமே அவனுக்குப் பிரச்சனையில்லை; ஆனால், அவளிடமிருந்து எதிர்மறையான பதிலைக் கேட்டு விடக்கூடாது என்ற சிந்தனையினால் தான் அவன் தன் விருப்பத்தைச் சொல்லாமலே தள்ளிப் போட்டது.

அவளிடம் ஏதாவது ஒரு பாதிப்பு தன்னால் இருக்குமாயின், அவளைப் பெண் கேட்ட விஷயத்திற்கு அத்தனை ஆர்ப்பாட்டம் செய்திருக்க மாட்டாள்; ஒரு தோழனாக அவள் மனதில் அவன் இடம் பிடித்திருந்தால், அவளால் கடந்த இரண்டு மாதங்களாக அவனிடம் பாராமுகம் காட்டியிருக்க முடியாது; ஒரு உறவுக்காரனாக எண்ணியிருந்தால் தேவையற்ற சந்தேகங்களுக்கு இடம் கொடுத்திருக்க மாட்டாள்.

எனவே, உதய் ஆனந்த் அவளிடம் விருப்பத்தைச் சொல்லாத இந்நிலையிலேயே அவனுக்கு விடை கிடைத்தாகி விட்டது; தேர்வு எழுதாமலேயே முடிவுகள் அறிவிக்கப் பட்ட மாதிரி தான்!

இப்படி அவன் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ளாத ஒருத்திக்காக, ஏன் தன் மனம் கிடந்து தவிக்கிறது?

தன்னை ஒரு பொருட்டாகவே மதிக்காதவளின் நினைப்பையே இவனால் உதற முடியவில்லை! இதில் எங்கிருந்து அவளை மறப்பது?

நீண்ட பெருமூச்சு விட்டவனுக்கு, 'ஏன்டா உனக்கு இந்தப் பாழாய்ப் போன காதல்?' என்று தன்னைப் பார்த்தே கேட்கத் தோன்றியது!

அன்பும், காதலும் இல்லாத இடத்தில் அதைத் தேடுவது பயனற்றது என அழுத்தமாக இருக்க முயன்றவனுக்கு, அதே போன்றே... காதல் இருக்கும் இடத்தில், அதை மறைத்து வைப்பதும் பயனற்றது மட்டுமில்லை... முடியாததும் கூட என்பது தெளிவானது.

என்னையே நான் அழுத்தம் - திமிர் பிடித்தவன் என்று நினைத்ததெல்லாம் வெறும் வாய் வார்த்தை, அலட்டல் தானா? இல்லை, அந்தத் திமிரை அசைத்துப் பார்க்க ஒருத்தி வராத வரைக்கும் தான் எதுவுமேவா?

காதலிலும், திருமணத்திலும் திமிருக்கு வேலை என்ன?

கண்டதையும் நினைக்காமல், இப்பொழுது இந்த நிலையில் அவன் என்ன செய்யப் போகிறான்? அதைத் தான் தீர்மானிக்க வேண்டும் என்று யோசனையில் ஆழ்ந்தவனுக்கு ஒரு தீர்வும் பிறந்தது!

தான் யார்... எவர் என்று சொல்லாமலே அவளிடம் காதலை வெளிப்படுத்தினால்?

உதய் மேல் விழுந்த முதல் அபிப்ராயம் சரியாக அமையாததால் தானே, அவன் சார்ந்த உறவை முழு மனதுடன் ஏற்றுக் கொள்வதில் கீதாஞ்சலிக்கு



பிரச்சனை? அப்படிப் பார்த்தால் அவனுக்கு, அவள் மனதைக் கவர ஒரு முகமூடி அவசியமாகிறதே?

சில மாதங்களுக்கு முன்பு, திருமண எதிர்பார்ப்புகள் பற்றி பொதுவாக பேச்செழுந்த போது, கீதாஞ்சலி சொன்ன விஷயங்கள், அவன் சற்று முன்பு கண்ட தீர்விற்கு சாதகமாக அமைய, சந்தோஷத்தில் அவனுடைய இதயத் துடிப்பு அதிகரித்தது.

உன்னை சைட் அடிப்பது யாருன்னே தெரியாமல் உன்னை சைட் அடிக்கணும் என்று தானே விரும்பினே, கீதா?

அதிலும், ரொம்ப சமத்து பெண்ணா... உனக்கு வீட்டில் பார்க்கிற மாப்பிள்ளை... உன்னை... உனக்குத் தெரியாமலே சைட் அடிக்கணும் என்ற ஆசை வேறு! உன் வீட்டில் உனக்காக பார்த்த மாப்பிள்ளை தான் நானும்!

எப்பொழுதும் உன் ஆசையைப் பூர்த்தி செய்ய விரும்புகிறவன் நான்! இதைக் கூட உனக்காக செய்ய மாட்டேனா என்ன?

தன் காதலை அவளிடத்தில் எந்த வகையிலாவது சொல்லியே ஆக வேண்டும் என்ற மனதின் தவிப்பிற்கு, ஒரு சின்ன ஆறுதலாக 'ரகசிய சிநேகிதன்' உருவெடுக்கட்டுமே?

ரகசிய சிநேகிதனை அடையாளப்படுத்தும் வகையில் சில தடங்களை அமைத்துக் கொடுத்தால் அவனால் தன்னைக் கண்டு கொள்ள முடியாதா என்ன?

இறுதியில், 'உதய்! நீ தானே அது?' என்று அவள் செல்ல சண்டையிடும் போது, மூச்சு விடாமல், ஐ லவ் யூ-க்களைச் சொல்லி சமாதானம் செய்ய வேண்டும்.

இதயத்தில் தொடங்கி கண்களில் முடியும் காதலாக இது அமையட்டுமே!

ஏதேதோ கற்பனையில் திளைத்தவனுக்கு கடந்த இரண்டு மாதங்களாக இருந்த சோர்வெல்லாம் சுவடே இல்லாமல் காணாமல் போனது.

தன் காதலை கீதாஞ்சலியினிடத்தில் ரகசிய சிநேகிதன் வாயிலாகச் சொல்லப் போகிறோம் என்ற சந்தோஷம் ஒரு புறம் இருந்தாலும், அதை மீறிய இனம் புரியா தவிப்பு அவன் மனதை முழுவதுமாக ஆக்கிரமித்தது.

''காதல் என்பது மணல் கடிகாரம் போன்றது; இதயம் கனக்கத் தொடங்கினால் மூளை காலியாகி விடுகிறது'' - என்பது இவன் விஷயத்தில் நூற்றுக்கு நூறு சரியே!

எதற்காக இந்த கண்ணாமூச்சி? ஏன் இந்த முகமூடி? உதய் ஆனந்த் சாதிக்காத விஷயத்தை 'ரகசிய சிநேகிதன்' சாதித்து விடப் போகிறானா?

கண்ணால் பார்த்து, மனம் விட்டு பேசி, உறவு முறையில் பழகி, நட்பாகத் தோள் கொடுத்து... என்று பல கோணங்களிலும் அவள் மனதைக் கவர முடியாமல் எந்தத் தைரியத்தில் இப்படியொரு வியூகம் அமைத்து அவனது மனதை வெளிப்படுத்த முயற்சியோ?

ஏற்கனவே நிர்மலவேணியின் மூலம் கீதாஞ்சலிக்குக் காதல் என்ற விஷயமே அறவே பிடிக்காது என்று அறிந்தது தான். அப்படியிருக்கையில் ரகசிய சிநேகிதன் என்ற பெயரில் வரும் கடிதங்களுக்கோ... வாழ்த்திற்கோ... பரிசுப் பொருட்களுக்கோ தான் அவள் முக்கியத்துவம் கொடுக்கப் போகிறாளா?

இதுவும் ஒருவித நூதன வகை ஆள் மாறாட்டம் தானே? நேர்மையான வழியில்லையே என்ற ரீதியில் சில கணங்கள் சிந்தித்துப் பார்த்தான்.

பின்பு விழிகள் பளிச்சிட, 'All is fair in love and war. right?' என்று எண்ணமிட்டவன், காதல் - போர் - இந்த



இரண்டில் ஏதாவது ஒரு விஷயத்துக்கே எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்று சொல்லி வைத்திருக்கும் போது, அதிலும் இது காதல் மற்றும் போர் எனும் பட்சத்தில், டபுள் ஓகே என்று குதூகலித்தான்.

அதே குதூகலத்துடன், இன்னமும் ஒரு மாதத்தில் நடைபெறவிருக்கும் தேர்வில் வெற்றி பெற, கீதாஞ்சலிக்கு ஒரு வாழ்த்தட்டையைக் கையோடு தயாரித்து முடித்தவன், சென்ற வருட செய்தித்தாளில் வெளி வந்த சில பிரசுரங்களையும் அதனுடன் இணைத்தான்.

*''அன்புள்ள அஞ்சு,*

*வாழ்நாள் முழுவதும் தொடரப் போகும் நம் பந்தத்தை வெற்றி வாகையுடன் தொடங்க வேண்டும் என்ற ஆசையில் எழுதும் கடிதம்.*

*இந்த மாத இறுதியில் வரும் தேர்வை நீ சிறப்பாக எழுதி முடிக்க என் வாழ்த்துக்களும், பிரார்த்தனைகளும்!*

*ஆடிட்டர் தேர்வில் வெற்றி பெற்ற ஒரு மாணவியின் பேட்டியை இத்துடன் இணைத்துள்ளேன். இந்த வருடத் தேர்வில் வெற்றி பெற்ற பிறகு, இதே போன்று உன்னுடைய பேட்டியையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன். உன் திறமை மீதுள்ள நம்பிக்கையினால் விளைந்த எதிர்பார்ப்பு இது!*

*ஆனால் தேர்வில் வெற்றி பெறுவதற்கு திறமை மட்டுமே போதாது. பல பெரிய செயல்கள் வல்லமையினால் நிறைவேறுவதில்லை. விடா முயற்சியினாலேயே நிறைவேறுகின்றன. அதனால் முறையான பயிற்சியோடும், முயற்சியோடும் உன்னுடைய இலக்கை எட்டு.*

*'''ரகசிய சிநேகிதன்' என்ற பெயரில் கடிதம், வாழ்த்து என்று அனுப்புவது யார்? எங்கிருக்கிறான்? இவனுக்கு என்ன வேண்டும்?''* என்ற கேள்விகளுக்கு தற்போது

முக்கியத்துவம் கொடுக்காதே. இனி வரும் கடிதங்களின் மூலம் என்னைப் பற்றிய ரகசியங்களையும், உன் மேல் நான் வைத்திருக்கும் சிநேகத்தையும் புரிந்து கொள்ள முயற்சி செய்.

ப்ரியமுடன்,
ரகசிய சிநேகிதன்.''

புது ரத்தம் பாய்வது போல புத்துணர்ச்சி பெற்றவனுக்கு, அவன் எப்பொழுதோ இணையதளத்தில் படித்து, ரசித்த கவிதை நினைவு வர, பெரும் துள்ளலுடன் அதையும் கடிதத்துடன் இணைத்தவன், கையெழுத்துப் பிரதியை அவன் மேஜை இழுப்பறையில் பத்திரப்படுத்தி விட்டு, எல்லாவற்றையும் கணினியில் தட்டச்சு செய்து பிரதி எடுத்துக் கொண்டான்.

தட்டச்சு செய்த எல்லாவற்றையும் சேர்த்து ஒரே கடித உறையில் போட்டு முகவரியையும் கணினி மூலமே பிரதியெடுத்து ஒட்டியவன், அடுத்த நாள் அதை அவளுக்கு அனுப்பி வைத்துவிட்டு தான் நிம்மதியான மூச்சு விட்டான்.



## 11

தன் இறுதி தேர்விற்கான நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளையில், உதயை அழைத்துப் பேசலாமா, இல்லை அவனுக்குக் குறுந்தகவல் அனுப்பலாமா என்று ஊசலாடிக் கொண்டிருக்க விரும்பாத கீதாஞ்சலி, நிர்மலவேணியிடம் சென்று அவளுடைய அலைபேசியை ஒப்படைத்து விட்டு, தன் தேர்வு முடிந்ததும் மீண்டும் பெற்றுக் கொள்வதாகச் சொல்லி விட்டாள்.

தீவிர பயிற்சிக்கும் படிப்பிற்கும் நடுவில் தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ள அவள் அவ்வப்பொழுது துணையாக நாடுவது முரளி நந்தனைத் தான்.



குழந்தையோடு விளையாடும் வேளைகளில் அவளே ஒரு குழந்தையாக மாறுவது போன்ற உணர்வு! அந்த உணர்வு தரும் புத்துணர்ச்சி, அவளை சஞ்சலத்தில் மூழ்கடிக்காமலிருக்க அவளுக்கு மிகவும் தேவையாக இருந்தது.

அன்றும் அதே போன்றே, அட்டவணையிட்டதைப் படித்து முடித்த பின், அவர்கள் குடியிருப்பு வளாகத்தில் அமைந்துள்ள குழந்தைகள் பூங்காவில், முரளியை வைத்துக் கொண்டு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தாள்.

மற்ற பிள்ளைகள் ஊஞ்சலாடுவதைக் கண்டு தானும் ஊஞ்சலில் ஆட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்து முரளி அழத் தொடங்க, ''வேண்டாம், நந்து. நாம இன்னொரு நாள் அம்மாவுடன் வந்து விளையாடலாம். இப்போ இந்த சர்க்கஸில் சறுக்கி விளையாடும்மா'' என்று இவள் சமாதானம் செய்ததற்கு எந்தப் பலனும் இருக்கவில்லை.

இறுதியில் சிறுவனின் அடம் வெல்ல, தன் மடியில் முரளியை அமர்த்திக் கொண்டு, காலால் மிதித்து மிதித்து மெதுவான வேகத்தில் ஊஞ்சலை ஆட்டலானாள்.

ஆனால், முரளியோ, ''இன்னும்... அத்தா! ஸ்பீடா...! அங்கே மாதிரி...'' என்று தன்னெதிரில் ஆடிக் கொண்டிருந்த பிள்ளைகளைக் கைக் காட்ட,

''இந்த ஸ்பீட் தான் செல்லம் அத்தைக்கு வரும்'' என்றாள் சமாதானமாக.

''அத்தா! ப்ளீஸ்... ப்ளீஸ்!'' என்று அவன் கொஞ்சலாகக் கெஞ்சவும்,

இவர்கள் வளாகத்திலிருக்கும் சிறுவன் ஒருவன், ''நான் வேணும்னா ஊஞ்சல் தள்ளி விடவா, அக்கா?'' என்று உதவ முன் வந்தான்.

கீதாஞ்சலி பதில் சொல்வதற்கு முன்பு, ''ம். ப்ளீஸ்! ப்ளீஸ்!'' என்று முந்திக் கொண்ட முரளி, ஊஞ்சலாட்டம்

முன்பை விட இன்னமும் வேகம் பிடிக்கவும், 'இளங்கன்று பயமறியாது' என்பதற்கேற்ப, "இன்னும் ஸ்பீட்! அத்தா ஸ்பீடா... அண்ணா! ஸ்பீட்!" என்று சந்தோஷமாக ஆரவாரம் செய்யலானான்.

அந்த ஆரவாரம் அதிகமாக, அதிகமாக ஊஞ்சலின் வேகமும் அதற்கேற்ப அதிகரித்தது.

அவ்வேகம் தாளாமல், சில நொடிகளில் கீதாஞ்சலிக்குத் தலை சுற்றிக் கொண்டு வர, "போதும்பா! நிறுத்து! நிறுத்து!" என்று அலற ஆரம்பித்தாள்.

அவளது அலறலில், எங்கே ஊஞ்சலாட்டம் நின்று விடுமோவென அஞ்சிய முரளி, காலை நன்றாக உதைத்து, "ஸ்பீட்ட்ட்ட்" என்று இன்னமும் அடம் பிடித்துத் துள்ளினான்.

சின்னஞ்சிறு தளிரின் துள்ளலிலும், ஊஞ்சலின் வேகத்திலும், முரளியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தவளின் உள்ளங்கை வியர்வையினால் நனைந்து சற்று தளர, அவன் அவள் மடியில் இருந்து சர்ரென்று கீழே வழுக்கினான்.

முரளிக்கு எந்த அடியும் பட்டுவிடக் கூடாதே என்ற பதைபதைப்பில், அவன் கீழே குப்புற விழுவதற்கு முன் அவனின் தலைக்கும், பூமிக்கும் இடையில் கைகளைக் கொடுத்துக் காப்பாற்றும் முயற்சியில், அவனை விட வேகமாக கீதாஞ்சலியும் இடப்பக்கமாக சரிந்து விழுந்தாள்.

முரளி நந்தனின் கால் முட்டி இரண்டும் சிராய்த்ததோடு கீதாஞ்சலியின் நெற்றி, இடது கை முட்டி ஆகியவற்றிலும் சிராய்ப்பு ஏற்பட்டு அதில் குருதி கசிந்தது.

விழுந்த வேகத்திலும், பயத்திலும் சிறுவன் வலியால் 'வீல்' என்று அழத் தொடங்க, சுற்றியிருந்தவர்கள் வந்து



இருவருக்கும் உதவி செய்து, அவர்களிருவரையும் அங்கிருந்த இருக்கையில் அமர வைத்தனர்.

முரளிக்கு தலையில் எந்த அடியும் படவில்லை என்பதே கீதாஞ்சலிக்கு நிம்மதியளிக்க, அவன் உடலை மிருதுவாகத் தடவி விட்டுக் கொண்டிருந்தவளை, "கையை, காலை நல்லா உதறும்மா! உனக்கு ஏதாவது அடிபட்டிருக்கப் போகுது" என்று மற்றவர்கள் அறிவுறுத்தவும், காலை ஊன்றி நிற்க முயன்றவளுக்கு நிற்க முடியாமல் காலில் வலி பெருக்கெடுத்தது.

மற்றவர்களின் துணையுடன் எப்படியோ முரளியோடு வீடு வந்து சேர்ந்தவளுக்கு, அதைத் தொடர்ந்த இரு நாட்களுக்கு கால் வலி சொல்லி மாளாது.

வலி நிவாரணி மாத்திரையை உட்கொண்டால் ஒழிய, கீதாஞ்சலியால் கால் வலியைப் பொறுக்கவே முடியவில்லை.

கீதாஞ்சலியின் காலில் தசைநார் முறிவு காரணமாக குறைந்தது நான்கு வாரங்களாவது கால்களுக்கு ஓய்வு கொடுத்து படுக்கையிலேயே இருக்க வேண்டும் என்றும், கூடவே பிஸியோதெரபி மூலம் கால்களுக்கு சில பயிற்சிகளைக் கற்றுக் கொண்டு அதைத் தொடர்ந்து செய்ய வேண்டும் என்றும் மருத்துவர் பரிந்துரைத்தார்.

முரளி நந்தனுக்கு இரண்டு முட்டியிலும் ஏற்பட்ட சிராய்ப்பும், வலியும் அவனைக் காய்ச்சலில் கொண்டு போய்விட, நிர்மலவேணியை இந்தப் பக்கம் அந்தப் பக்கம் அவன் சிறிது கூட நகர விடவில்லை.

தூக்கத்திலும் கூட பயத்தில் திடுக்கிட்டு அழும் மகன் ஒரு புறம், இயற்கை உபாதைகளுக்குக் கூட படுக்கையிலிருந்து எழுந்து செல்ல துணைத் தேவைப்படும்

நாத்தனார் மறுபுறம் என்று நிர்மலவேணியின் விழி பிதுங்கியது.

இந்த நெருக்கடியான வேளையில் ஷ்யாமும் தன்னால் முடிந்தவரையில் தோள் கொடுத்தான் என்றாலும் நிர்மல வேணியின் பாடு திண்டாட்டமாய் தான் ஆனது.

பேரனையும், கீதாஞ்சலியையும் நலம் விசாரிக்க வந்த பொழுது மகளது இக்கட்டை உணர்ந்த தேன்மொழி,

''அங்கே அப்பா, உதய் ரெண்டு பேரையும் தனியா விட்டுட்டு, என்னால் இங்கே வந்து இருக்க முடியாது; உன் பாடும் திண்டாட்டமா தான் இருக்கு. வேணா அங்கே எல்லாரும் கிளம்பி வந்துடுங்களேன், நிம்மி? உதவிக்கு இன்னமும் ரெண்டு ஆளாவது இருக்கும்'' என்று யோசனை தந்தார்.

''முரளிக்கு இங்கே கீழ் வீட்டிலேயே அவனுடைய டாக்டர் இருக்காரும்மா. தினமும் பார்க்கிறதுக்கு வசதியா இருக்கு. நான் அங்கே வந்தால் இவனைக் கிளப்பி கூப் பிட்டு வர்றதுக்குள்ளே போதும் போதும்னு ஆகிடும்.''

''அப்போ கீதாவை அங்கே அடையாருக்கு அழைச் சுட்டுப் போய் பார்த்துக்கிறேனே, நிம்மி? நீயும் ரெண்டு பேரையும் சரியா பார்த்துக்க முடியலைன்னு தானே புலம்பறே? உனக்கும் வேலை கொஞ்சம் குறையுமே?'' என்று மாற்று யோசனை ஒன்றைப் பகர்ந்தார்.

''நல்ல ஐடியாவா இருக்குதேம்மா. ஷ்யாம்கிட்டே கூட நானே சொல்லிக்கிறேன்'' என்றபடி கீதாஞ்சலியின் முகத்தை நிர்மலவேணி ஏறிட, அதிலிருந்து எதையும் அவளால் படிக்க முடியவில்லை.

''என்ன யோசனை, கீதா? உனக்கு இஷ்டம் இல்லையா? இல்லைன்னா உதவிக்காக அத்தையைத் திருநெல்வேலி யில் இருந்து அழைக்கட்டுமா?''



''இல்லை, மதினி! அம்மா வந்தால் என்னை இந்த நிலையில் பரீட்சை எழுத கூட விட மாட்டாங்க. உடம்பை முதலில் பார்த்துக்கோ என்று அதட்டி உட்கார வைச்சுடு வாங்க. அத்தைக்கு ரொம்ப சிரமம் வைக்கணுமான்னு யோசிக்கிறேன்...'' என்று இழுக்கும் போதே உதயின் கொந்தளிப்பு அவள் நினைவிலாடியது.

தன் மகளை முந்திக் கொண்ட தேன்மொழி, ''எனக் கென்ன சிரமம், கீதா? ஒருத்தருக்கொருத்தர் உதவி செய்றதுக்குத் தானே சொந்த பந்தம்ன்னு இருக்கிறது'' என்று பதில் தந்தார்.

அதன் பிறகு அவள் அடுக்கிய காரணங்கள் அனைத் திற்கும் தகுந்ததொரு சமாதானத்தை நிர்மலவேணியும், தேன்மொழியும் மாற்றி மாற்றி கொடுக்க, இறுதியில் கீதாஞ்சலி அடையாருக்குச் செல்ல அரை மனதாக ஒப்புக் கொண்டு அன்றிரவே அவள் உடைமைகளோடு அடை யார் புறப்பட்டுச் சென்றாள்.

அவர்கள் வீட்டுக்குச் சென்ற தனக்குத் தேவையான வற்றை கவனித்துச் செய்து கொடுத்த தேன்மொழி யிடம், ''உதய் வீட்டில் இல்லையா, அத்தை?'' என்று ஒரு சின்ன எதிர்பார்ப்புடன் வினவினாள் அவள்.

''ம்ஹ்ம்ம்! அவனைப் பற்றி நான் ஒன்றும் சொல்றதுக் கில்லை, கீதா! வேலை - வேலைன்னு எந்நேரமும் சுத் திட்டு இருக்கான். அவனுக்கொரு கல்யாணம் - குடும்பம்னு வந்தால் கொஞ்சம் கூடுதல் பொறுப்பு வரும்னு அந்தப் பேச்சை எடுத்தால்... வீட்டையே ரெண்டாக்கிட்டான்'' என்றார் கவலையும் ஆற்றாமையும் தோய்ந்த குரலில்.

அதைக் கேட்ட கீதாஞ்சலிக்கும் அவ்விஷயம் கவலையளிக்க, ''உதய் கூட நான் கொஞ்சம் பேசணுமே.

அத்தை? இப்போவே ஒன்பது மணி ஆகுதே? நைட் வழக்கமா எத்தனை மணிக்கு வீட்டுக்கு வ..ரு..வான்..?'' என்று இழுத்தாள்.

''இந்த ரெண்டு - மூணு மாசமா குறிப்பிட்ட நேரத்துக்கு வர்றதில்லை, கீதா. அவனுக்காக காத்திருந்தாலும் திட்டுவான். நாளைக்குக் காலையில் பேசிக்கலாம்'' என்று பதில் தந்தவர்,

''நீயும் அலைச்சலில் அசதியா இருக்க மாதிரி இருக்கு. மாத்திரை போட்டுட்டு படுத்துக்கோ. உனக்கு அடுத்த வாரம் தானே பரீட்சை? நாளையிலிருந்து படிக்கலாம்'' எனப் பணித்துவிட்டு நகர்ந்தார்.

வலி நிவாரணி மாத்திரைகளின் பிடியில் தூக்கம் கண்களைச் சுழற்றினாலும், அன்றிரவே உதயிடம் பேச வேண்டுமென்பதற்காக பிடிவாதமாகக் காத்திருந்தவள், கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்தபடியே உறங்கி விட்டாள்.

மின் விளக்கு எரிந்து கொண்டிருந்ததால், 'புது இடத்தில் தூக்கம் வரவில்லையா? அல்லது வேறெதுவும் உதவி தேவைப்படுகிறதா?' என்று விசாரிக்கும் பொருட்டு இரவு பத்தரை மணி போல தேன்மொழியும், உதய் ஆனந்தும் அவளது அறைக்கு வந்ததைப் பற்றியோ... கட்டிலின் பின்புறத்தில் சாய்வாக உட்கார்ந்த நிலையிலேயே உறங்கியவளை, உதய் மெல்ல படுக்கையில் கிடத்தி வசதியாக உறங்க வைத்ததைப் பற்றியோ எதுவும் அறியாதவளாக நிம்மதியான துயில் கொண்டாள்.

அதற்கு எதிர்மாறாக தன்னறையில் நிம்மதியற்ற உறக்கத்தில் ஆழ்ந்த உதய் ஆனந்த், அடுத்த நாள் காலை விடிந்து எழுந்ததிலிருந்தே குட்டிப் போட்ட பூனை மாதிரி, தன் அறையையே சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தான்.



கீதாஞ்சலிக்கு காலில் அடிபட்டது தெரிந்ததிலிருந்து அவனுக்கு வீட்டிலோ, வேலையிலோ இருப்பே கொள்ளவில்லை.

தமக்கையிடம் மணிக்கொரு முறை தொலைபேசியில் அழைத்து விசாரித்தான். ஆனால் பத்து முறை இவன் அழைத்தால் இரண்டு முறை தான் எடுத்துப் பேசுவாள். அதுவும், ''நான் அப்புறம் பேசறேன், உதய் பையன் அழறான்...'' என்பது மாதிரி தான் இருக்கும்.

ஷ்யாமை அழைத்துப் பேசினால், ''உதய்! நானும் எத்தனையோ முறை சொல்லி பார்த்துட்டேன். வீம்பு பிடிச்சுட்டு இந்தப் பக்கம் நீ வர்றதே இல்லை. இந்தச் சாக்கை வைத்தாவது வீட்டுக்கு வா. உண்மையிலேயே அக்கறை இருந்தால், நேரில் வந்து விசாரிச்சுக்கோ. போனில் விசாரிக்கிறதெல்லாம் வேண்டாம்'' என்று கேலியாகச் சொல்லி வைத்து விடுவான்.

நேரில் சென்று பார்த்தால், ''எப்போடா கீழே விழுவேன்... குசலம் விசாரிக்கிற சாக்கில் வந்து ஒட்டிக்கலாம்னு நினைச்சியா?'' என்று கீதாஞ்சலி வெடித்து விடுவாளோ என்ற பயம் ஒருபுறம், 'தானாக இறங்கிச் செல்லத் தான் வேண்டுமா?' எனத் தன்முனைப்பு மறுபுறம் என்று ஊசலாடியவன், இறுதியில் 'ரகசிய சிநேகிதன்' என்ற பெயரில் அவள் விரைவில் குணமடைவதற்காக ஒரு வாழ்த்து அட்டையை அவளுக்கு அனுப்பி வைத்த இரவு, கீதாஞ்சலி இவனது வீட்டிற்கே வந்தடைந்தாள்.

கீழே சென்று அவளிடம் பேசலாமா?

தானாகச் சென்று பேசினால் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, 'நான் அண்ணன் வீட்டிற்கே போகிறேன்!' என்று பெட்டியைத் தூக்கி விடுவாளோ?

நேற்று ஏதோ என்னிடம் பேச வேண்டும் என்று சொன்னாளாமே... என்னவாக இருக்கும்? என எதையெதையோ நினைத்துக் கொண்டு, அறையின் நீள அகலத்தை அளந்து கொண்டிருக்க,

''உள்ளே வரலாமா?'' என்று அறை கதவைத் தட்டிய படி வந்து நின்றாள் கீதாஞ்சலி.

'இவள் எங்கே, இங்கே?' என்ற அதிர்ச்சியும், தன் காத லியை இதுநாள் வரையில் காணாமல் இப்பொழுது கண்ட தால் வந்த ஆனந்தமும் சேர்ந்து திகைப்புடன் நின்றான்.

அவனது முக பாவத்தைத் தவறாகப் படித்தவள், ''நான் சண்டை போட வரலை, உதய். 'கெட் அவுட்' சொல்லி டாதே ப்ளீஸ்!'' என்றவாறே தர்ம சங்கடத்துடன் அவனது முகத்தை ஏறிட்டாள்.

திகைப்பிலிருந்து மீண்டவன் அறை வாயிலில் ஒற்றைக் காலில் நின்று கொண்டிருப்பவளின் அருகில் சென்று, ''கீதா! சொல்லியிருந்தால் நானே வந்திருப்பேனே? நீ எதுக்கு மேலே ஏறி வந்தே?'' என்று பரபரப்புடன் வினவினான்.

''உன் கூட நைட்டே பேசணும்ன்னு காத்திருந்து காத்திருந்து அப்படியே தூங்கிட்டேன், உதய். அதான் காலையில் நீ காலேஜ் கிளம்பி போறதுக்கு முன்னாடியே பேசிடலாம்ன்னு...''

''சரி! கீழேயிருந்து கூப்பிட வேண்டியது தானே? ம- lus fracture வைச்சுட்டு இப்படி மாடிப்படி ஏறி வந் திருக்கியே? உனக்குக் கொஞ்சமாவது...'' உரிமையுடன் கடிந்ததோடு அவளது கரம் பிடித்து அழைத்து வந்து அவளை அங்கிருந்த நாற்காலியில் உட்கார வைத்தான்.

அவனது கோபத்தில் மீண்டும் குற்ற உணர்வு அதிகரிக்க மெல்லிய குரலில், ''சாரி உதய்! ஐ அம் சாரி! ரியலி



சாரி! மன்னிச்சுடு ப்ளீஸ்!'' என்று வருத்தம் தெரிவிக்கும் போதே அவளுக்குக் கண்களில் கண்ணீர் முட்டியது.

தன்னறையிலிருந்த தண்ணீர் பாட்டிலை எடுத்து நீட்டியவன், ''விடு!'' என்று சுருக்கமாக முடித்துவிட்டு, ''கால் ரொம்ப வலிக்குதா?'' என அக்கறையுடன் விசாரித் தான்.

''உன்னைக் கஷ்டப்படுத்தியதால் கடவுளா எனக்குக் கொடுத்த தண்டனை இது'' என்றவளின் குரல் கரகரக்க, கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

''ஏன் கீதா இப்படி பைத்தியக்காரத்தனமா பேசிட்டு? முரளிக்கும் தானே அடிபட்டிருக்கு? அதுக்கு என்ன சொல்லுவே?''

அவன் சொல்வதைக் காதில் வாங்காமல், ''நான் சொல் றதைக் கேட்பியா, உதய்? ப்ளீஸ்!'' என்று கெஞ்சியவள் அவனது சம்மதம் கிடைக்கப் பெற்றதும்,

''நான் சொல்றதை நீ நம்பணும்! முழுக்க முழுக்க நம்பணும்'' என்ற பீடிகையோடு தொடங்கினாள்.

''நான் அன்றைக்கு உன்னிடம் பேசினது எல்லாமே அபத்தமும், அபாண்டமும் தான். அதை நான் உணர்ந் தாலும் உன்கிட்டே மன்னிப்பு கேட்கிறதுக்கு மட்டும் தயக்கமாவே இருந்தது. இப்போ எனக்கு அடிபட்டதி னால் மட்டும் தான் வந்து சாரி கேட்கிறேன் என்று நினைக் காதே. எனக்கு எந்த முகத்தை வைச்சுட்டு உன்னிடம் பேசறதுன்னு தான் ரொம்ப... சங்கோஜமா இருந்தது.''

''.....''

''ஐ மிஸ்ட் யூ, உதய்! உன் கூட சண்டைப் போட்ட திலிருந்து எனக்கு எந்த வேலையும் ஒழுங்கா செய்ய

முடியலை. நூறு தடவையாவது உனக்கு எஸ்.எம்.எஸ் எழுதி அழிச்சிருப்பேன். உன்னை ரொம்பக் காயப்படுத் திட்டேன். இல்ல? ஐ அம் சாரி!'' என்று கூறி ஏக்கத் தோடு அவனது முகத்தைப் பார்க்க, அவள் பேசியதைக் கவனமாக உள்வாங்கியவன், மௌனமாக அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.



12

இத்தனை மாதங்களாய் அவள் மனதில் வைத்திருந்ததைக் கொட்டிய கீதாஞ்சலியைக் குறுக்கிடாமல் செவி மடுத்த உதய் ஆனந்த், நீண்ட இடை வெளிக்குப் பின், வார்த்தைகளிலோ முக பாவத்திலோ உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல், ''சோ... நீ ஒரு சாரி கேட்கணும்னா... உனக்குக் காலோ அல்லது கையோ உடை யணும். அப்படித் தானே, கீதா?'' என்று வினவினான்.

பதிலே சொல்ல முடியாமல் அவள் வாயடைத்துப் போயிருக்க, அவனே மீண்டும், ''நாம நேரில் சந்திக்கிற வாய்ப்பு அமையலையென்றால், இப்பவும் நீ உன் வாயைத் திறந்து ஒன்றும் சொல்லியிருக்க மாட்ட, ரைட்?'' எனக் கேட்டவனின் குரலில் இப்பொழுது சிறிது கோபமும், ஏமாற்றமும் சேர்ந்தே வெளிப்பட்டது.

அவளைத் திரும்பப் பார்க்கும் வரையிலும், கீதாஞ் சலியின் மீது அவனுக்கிருந்த கோபம் போய் விட்டதென்று நினைத்திருந்தவனுக்கு, அப்படியில்லை... கோபமும் வருத்தமும் இன்னமும் அடி மனதில் நீறு பூத்த நெருப் பாய் மீதமிருக்கிறது என்பது சிறிய ஆச்சரியம் தான்.

காதலிருந்தால் கோபம் இருக்கக் கூடாது என்று ஒன்றும் சட்டமில்லையே?



அதை மனதினுள்ளே வைத்திருந்தால், வேறு எப்படி யாவது அது வெளிப்படலாம் என்பதை உணர்ந்தவன், கடைசி முறையாக அதைப் பற்றி இப்பொழுதே பேசி விடுவதென முடிவெடுத்தான்.

''அப்படியில்லை, உதய்...!'' தடுமாற்றத்துடன் கீதாஞ்சலி ஆரம்பிக்கும்போதே,

''எப்படியில்லை? நூறு தடவை நீ எழுதி வைச்சேன்னு சொன்னதை ஒரு தடவைக் கூட உன்னால் அனுப்ப முடியலை! 'அன்பை வார்த்தையால் சொல்றதை விட செயலில் காட்டுங்க; ஆனால் வெறுப்பைச் சொல்லிடுங்க. செயலில் காட்டாதீங்க. ஏனென்றால் அது தான் வலி குறைவா இருக்கும்னு' நேற்று தான் ஒரு பத்திரிகையில் படிச்சேன். அது உண்மை, கீதா. நீ வந்து கன்னாப் பின்னான்னு கத்திட்டுப் போன போது கூட... அது உன் னோட அமைதியை விடக் கஷ்டமாய் இல்லை'' என்றான்.

அவள் கண்களில் நின்றிருந்த கண்ணீர், திரும்ப சுரந்ததைப் பார்த்தவன், அதைத் துடைக்க விழைந்த கரங்களை முஷ்டிகளாய் இறுக்கிக் கொண்டு, ''இதை நான் உன்னைக் கஷ்டப்படுத்தணும்னு சொல்லலை. திரும்ப நமக்குள்ள ஒரு சண்டை வந்தால்...'' அவள் வேகத்துடன் மறுப்பாகத் தலையாட்டுவதைக் கண்டு,

''நம்ம ரெண்டு பேரோட குணத்துக்குக் கண்டிப்பா சண்டை வரலாம்... வரும்! அப்படி வந்தால் பேசித் தீர்த்துக்கலாம் என்பதற்காக தான் சொன்னேன்'' என அவள் மனதில் பதியும்படி உரைத்தான்.

தலையை உருட்டிக் கேட்டுக் கொண்டிருந்தவளிடம், ''ரொம்ப லேட்டா வந்தாலும் லேட்டஸ்ட்டா, காலை உடைச்சுக்கிட்டாவது சாரி கேட்கணும்னு வந்திருக்கே. அதுக்கே உனக்கு ஒரு தேங்க்ஸ்! மன்னிப்பு ஏற்றுக்

கொள்ளப்பட்டது'' என்று இலகுவாகவே முடிக்க முயன்றான்.

''நான் ஒன்றும் இதுக்காக காலை உடைச்சுக்கலை...'' என்று ஆரம்பித்தவள் அவனின் முயற்சி புரிந்து, லேசாக புன்னகையுடன், ''தேங்க்ஸ்!'' என்றாள் மெல்லியக் குரலில்.

அவளை மேலும் வம்பிழுக்கும் நோக்கத்துடன், மேஜை யில் எதையோ உருட்டியவாறே, ''இருந்தாலும் உன்னோட உத்தியையும் பாராட்டியே ஆகணும், கீதா...'' என்றவன்,

அவளின் புரியாத பார்வையில், ''காலை உடைச்சுக் கிட்டு வந்து சாரி கேட்டால்... போடற சண்டையை நான் கொஞ்சம் பார்த்து போடுவேன்னு எப்படியோ தெரிஞ்சு கிட்டு... கால் உடையற வரைக்கும் காத்துக்கிட்டு இருந்தே பாரு! உன்னைப் பாராட்டியே ஆகணும்!'' எனக் கூற,

அவளை வம்பிழுக்க என்று அவன் ஆரம்பித்திருந் தாலும் அதில் உண்மையும் கலந்திருந்ததைக் கண்டவள் தன் தலையைத் தேய்த்து விட்டுக் கொண்டவாறே, ''ஸ்ஸ்... ஆஆ! வலிக்குது, உதய்! போதும் குட்டு! புரிஞ்சது. நான் செய்தது தப்பு தான், தப்பு தான், தப்பு தான்! கால் குணமானதும் தோப்புக் கரணம் போட்டுடறேன்'' என்று சிரித்தாள்.

சிரிப்பினூடே அவளின் கால் வலி பற்றி, அதற்கு மேற்கொள்ளும் சிகிச்சை பற்றி என்று பேச்சைத் திசைத் திருப்பியவன், அவளைக் கை தாங்கலாகவே கீழே அழைத்து வந்து அவளது அறையில் விட்டான்.

அதன் பிறகு வந்த நாட்களிலும் முன்பு நடந்ததைப் பற்றி மறந்தும் பேசாதவன், அவன் வீட்டிலிருந்த தரு ணங்களில் கீதாஞ்சலிக்குத் தன்னால் முடிந்ததைச் செய்யலானான்.



அடுப்படியிலோ இல்லை மற்ற வேலைகளிலோ மும்முரமாக இருந்த அவனின் அன்னையை உதவிக்கு அழைக்க கீதாஞ்சலி தயங்குவதைக் கண்டவன், அவள் என் எனும் முன் எண்ணெயாக நிற்கலானான்.

மேஜையின் மீதிருந்து புத்தகத்தை எடுத்துத் தருவது; அம்மாவைத் தொந்தரவு செய்யாமல், அவளுக்கு வேளா வேளைக்கு ஏதாவது உண்ண, குடிக்கத் தருவது; பிரதிகள் எடுத்து வருவது; அவள் படிக்க எளிதாகக் குறிப்பு எழுதித் தருவது என அவனால் முடிந்த உதவிகள்.

எல்லாமே தனியாகப் பார்க்கும் பொழுது சிறு சிறு உதவிகள் தான். ஆனால், காலத்தினால் குறிப்பறிந்து கேட்காமலே செய்வது.

கீதாஞ்சலி சிறு தொலைவு நடந்து செல்லக் கூட காலைத் தாங்கிக் கொண்டோ... இல்லை... உதவிக்காக மற்றவர்களைச் சார்ந்திருக்கவோ வேண்டியிருக்கும் நிலையைக் கண்டவன் அவளுக்கு ஆதரவாக ஊன்றுகோல் வாங்கி வந்து கொடுத்தான்.

இரவு கண் விழித்துப் படிப்பவளுக்குத் துணையாக, அவனும் அடுத்த நாள் பாடத்திற்கு தேவையானவற்றைத் தயாரிப்பதோ இல்லை ஏதாவது ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டோ, அவளது அறையிலேயே ஒரு நாற்காலியைப் போட்டுக் கொண்டு, அவளைத் தொந் தரவு செய்யாமல் இருக்கலானான்.

அவளிடம் சிறு அசைவு தெரிந்தாலும், அவனே அறி யாமல் உறங்கி விட்டிருந்தாலும் கண் விழித்து, ''ஏதாவது தேவையா, கீதா?'' என்று கேட்பான்.

அவள் உறங்கப் போகும் பொழுது தான் அவனும் அவனது அறைக்குத் திரும்புவான்.

மகன், கீதாஞ்சலிக்கு உதவிகள் செய்வதைப் பார்த்து தேன்மொழி, ''ஹ்ம்ம்... இவங்க ரெண்டு பேருக்கும் கல்யாணம் செய்து வைத்து, கீதாவை நம்ம வீட்டுக்குக் கூட்டிகிட்டு வரலாம்னு பார்த்தால்... பாவம் பொண்ணு கால் உடைந்து போய் வந்து நிற்கிறாள்'' என கணவரிடம் சொல்ல,

''உன் மகனிடம் போய், 'டேய்! அவள் ரூமில் நீ எதுக்கு அவளுக்கு உதவியா இருக்கேன்னு?' கேட்கிறதை விட்டுட்டு... ஒரு அம்மா மாதிரியா பேசறே நீ?'' என மகாதேவன் மனைவியைக் கேலி செய்ய, அவரை எரிச்சலுடன் பார்த்தார் அவரது மனைவி.

''என்னிடம் வாங்கி கட்டலை என்றால் உங்களுக்குத் தூக்கமே வராதுன்னு நினைக்கிறேன். நாலு வருஷம் என் பையனை நம்பி லண்டன் அனுப்பி வைச்சவள் நான். கண்ணுக்குத் தெரியாத இடத்திலேயே என் பையன், என் பையனா தான் இருந்து இருப்பான். என் மகன் மேலே எவ்வளவு நம்பிக்கையிருக்கோ அதே அளவு நம்பிக்கையைத் தான் நான் கீதா மேலேயும் வைச்சிருக்கேன். இப்போ ஒரே வீட்டில், திறந்து இருக்கும் அறையில், நாமும் அடுத்த அறையிலே இருக்கும் போது...! நீங்க தான் ஒரு அப்பாவா பேச மாட்டேங்கறீங்க!'' என்று அவர் மீது அனல் பார்வையை வீச,

மகாதேவன், ''சும்மா உன் வாயைக் கிண்டினேன், தேனு! எனக்கும் பொழுது போக வேண்டாமா, சொல்லு?'' என்று சிரித்து மனைவியைச் சமாதானப்படுத்தினார்.

கேலியாக, ''பொழுது போகலைன்னா எனக்கு வந்து கூடமாட உதவி செய்ங்க'' என்றவர்,

அத்துடன் நில்லாமல், ''இவங்களுக்குள் கல்யாணப் பேச்சை எடுத்தப்போ எந்த ஆர்வமும் காட்டாதவங்க



இவங்க... இப்போ உடம்பு முடியாமல் இருக்கும்போது மனிதாபிமானத்தோட செய்ற உதவியைப் போய் நாம சந்தேகமா பார்க்க முடியுமாங்க?'' என்று புரிய வைத்தார்.

மகன் தான் பார்த்துக் கொள்கிறானே என்று தேன்மொழியும் நேரத்தோடு படுக்கப் போக, வயதில் மூத்தவரை, அதுவும் மதினியின் தாயாரைத் தொந்தரவு செய்கிறோமே என்ற உறுத்தலுடன் இருந்த கீதாஞ்சலி, உதய் ஆனந்திடம் சுவாதீனமாக உதவிகளைப் பெற்றுக் கொண்டாள்.

பரீட்சைக்கு ஒரு வாரமே இருந்த நிலையில், மனதிலிருந்த சஞ்சலமும் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டிருக்க, கீதாஞ்சலியால் பாடத்தில் கவனத்தைச் செலுத்த முடிந்தது.

அன்று படித்துவிட்டு சற்று ஓய்வாக இருந்த பொழுது தன் தோழி ரம்யாவை அழைத்த கீதாஞ்சலி, பரஸ்பர நலன் விசாரிப்பு முடிந்ததும், ''ரம்யா! எனக்குக் கால் முறிவினால் கொஞ்ச நாளைக்கு நான், இங்கே எங்க அண்ணியோட அம்மா வீட்டில் இருக்கேன். எப்போ திரும்ப விருகம்பாக்கம் போவேன்னு தெரியாது. ரம்யா. அண்ணி போன் செய்யும்போது உனக்கு நிறைய லெட்டர்ஸ், பார்சல் வந்து இருக்கிறதா சொன்னாங்க. அதனால நீயே அங்கே போய் அதையெல்லாம் வாங்கிக்கிறியா? ப்ளீஸ்?'' என்று கேட்டாள்.

''ஹே! அதுக்கு எதுக்கு நீ ப்ளீஸ் போடறே? நீ எனக்கு உதவி செய்யறே. நான் தான் ப்ளீஸ்... நான் தான் சாரி... நான் தான் தேங்க்ஸ்!''

தோழியைக் கிண்டல் செய்து சிரித்த ரம்யா தொடர்ந்து, ''இன்றைக்கு சாயந்தரம் போய் நான் வாங்கிக்கிறேன், கீதா. உங்க அண்ணியிடம் சொல்லிடு'' என்று கூறவும், [illegible] தன் மகினி வீட்டில் இருக்கும் சமயத்தைக்

கணக்கிட்டு ரம்யாவிடம் கூறிய கீதாஞ்சலி, நிர்மல வேணிக்கும் தகவல் தந்தாள்.

அத்துடன் அதைப் பற்றி மறந்தும் போனாள்.

ஆனால் அடுத்த நாளே திரும்ப ரம்யாவே இவளை அழைத்து, குரலில் பெரும் பரபரப்புடன், "ஹே கள்ளி! கீதா! சொல்லவே இல்லையே?" என்று படபடக்க, கீதாஞ் சலிக்கு தலையும் புரியவில்லை காலும் புரியவில்லை.

"என்னடி சொல்றே? எதைச் சொல்லவே இல்லையே? அதான் கால் உடைஞ்சு, இங்கே அடையார் வந்திருக் கேன்னு சொன்னேன் இல்ல?" என்றாள் குழப்பத்துடன்.

"ஒன்றும் பேசாதே! நேரில் வந்து உன்னை வைச்சுக கிறேன்" என்று மிரட்டியவள், "அடையார் வீட்டு அட்ரஸ் சொல்லு. நான் சாயந்திரம் வரேன்" என்று முகவரியைப் பெற்றுக் கொண்டு தொடர்பைத் துண்டிக்க, என்னவாக இருக்குமென்று மூளையைப் போட்டுக் கசக்கிய கீதாஞ் சலி, தெரியும்போது தெரியட்டுமென்று விட்டுவிட்டாள்.

அடையார் வீட்டிற்கு வந்ததும் வராததுமாக, கீதாஞ்சலி இருந்த அறைக் கதவை மூடிய ரம்யா, "ஊமையாய் இருந்துகிட்டே பெரிய, பெரிய வேலையெல்லாம் செய் திருக்கே நீ! எனக்கு அப்பவே தெரியும்! நீ காதல், கல் யாணம்ன்னு விழுவேன்னு. இந்த அமைதியாய் இருக்கிற வங்களையே நம்பக் கூடாது!" என்று புலம்பித் தள்ள ஆரம்பித்தாள்.

"என்ன ரம்யா சொல்றே? கொஞ்சம் புரியும்படியா தான் சொல்லேன்?"

"பேசாதே! நான் எல்லாத்தையும் உன்னிடம் சொல் றேன் இல்ல? நீ எதையாவது என்னிடம் சொல்றியா, கீதா? பேசாதே! உன் மேலே நான் ரொம்ப கோபமா இருக்கேன்."



"........"

"பேசாமல் இருந்தா என்ன அர்த்தம்? வாயைத் திறந்து ஏதாவது சொல்லு!"

தன்னை உறுத்து விழித்த தோழியைப் பார்த்து சிரித்த கீதாஞ்சலி, "ஒழுங்கா ஒன்றைச் சொல்லு, ரம்யா! பேச ணுமா? பேசக் கூடாதா?" எனத் தலையைச் சாய்த்து வினவவும்,

அவளருகில் கட்டிலில் வந்து அமர்ந்த ரம்யா, அவள் கையில் வைத்திருந்த மூன்று கவர்களை மெத்தையில் போட்டு விட்டு, "இதுக்கு முதலில் பதில் சொல்லு! இதுக்கு என்ன அர்த்தம்?" என்று வினவினாள்.

அவற்றைப் புரியாமல் பார்த்த கீதாஞ்சலி, "என்ன விளையாடறியா? என்ன அர்த்தம்னு என்னைக் கேட்டால்? போய்... உங்க அத்தானிடம் கேளு. ஆமா, இதையெல் லாம் எதுக்கு இங்கே எடுத்துட்டு வந்தே?" என்று கேட்க,

அவள் தோள்கள் இரண்டையும் பிடித்து ஆட்டிய ரம்யா, "நீ என்னிடம் இப்போ நல்லா உதை வாங்கப் போறே! என்னைப் பார்த்தால் உனக்கு விளையாடற மாதிரி இருக்கா? உனக்கு வந்ததை உன்கிட்ட தராமல் நானா வைச்சுக்க முடியும்?" என்று கேள்வி எழுப்பினாள்.

"ரம்யா! ப்ளீஸ்! நானே படிச்சு, முடிச்சு மூளை சூடாகி இருக்கேன். நீ மேலும் குழப்பாதே! எனக்கு யாரு அனுப் பப் போறாங்க?" என்றவளை இப்பொழுது குழப்பமும், சிறு பயமுமாக ஏறிட்டாள் ரம்யா.

குரலைத் தணித்துக் கொண்டு, "நீ சொல்றதைப் பார்த்தால் உனக்கும் இது புது தகவல் மாதிரியில்ல தெரியுது?" என்று கலவரத்துடன் கூறியவள்,

காலை நன்றாக சம்மணமிட்டு அமர்ந்து கொண்டு, "முதலில் இதைப் பிரித்துப் பாரு!" என்றவாறே

கீதாஞ்சலியின் கரத்தில் மூன்று உறைகளையும் கொடுத்தாள்.

''குமரன், எனக்கு நாலு லெட்டர் தான் போட்டதா சொல்லியிருந்தான். உங்க வீட்டுக்குப் போன போது மொத்தம் ஏழு கவர் கொடுத்தாங்க உங்க மதினி. சரி, ஏதோ சர்ப்ரைஸ்-ஆ அனுப்பியிருக்கான் போலன்னு வாங்கிட்டுப் போயிட்டேன். எங்க வீட்டுக்குப் போய் பிரித்து பார்த்தால் - ஒரே ஒரு கவரைத் தான் பிரிச்சேன் கீதா - 'அன்புள்ள அஞ்சு' என்று தொடங்கி இருந்தது.''

அவசரமாக தோழிக்கு உத்தரவாதம் தந்த ரம்யா தொடர்ந்து, ''என்னடா இதுன்னு பார்க்கும்போது தான் இந்த மூன்றில் மட்டும் நம்மூர் ஸ்டாம்ப், டைப் செய்து ஒட்டின முகவரி என்றே கவனிச்சேன். நீ இங்கே வந்து உட்கார்ந்து இருக்கிறதால இதையெல்லாம் நீ இன்னமும் பார்க்கலைன்னு புரிஞ்சது. என்னை மாதிரியே நீயும் காதலில் தொபுக்கடீர்ன்னு விழுந்துட்டேன்னு பார்த்தால்...'' என்று தான் அவள் கையில் திணித்த கடித உறைகளை முன்னும் பின்னும் ஆராய்ந்தபடி இருந்த கீதாஞ்சலியைக் கண்ணுற்றவாறே தன்னுடைய விளக்கங்களைக் கொடுத்தாள்.

''நல்லவேளை... காதலில் தொபுக்கடீர்னு விழுந்ததில் கால் உடைச்சுக்கிட்டேன்னு சொல்லாமல் இருந்தியே?'' என்று கேலியாகக் கூறிய கீதாஞ்சலி.

''நான் இங்கே வரலைனாலும் எனக்கு இது தெரிஞ்சு இருக்காது, ரம்யா. எங்க வீட்டுக்கு, என் பெயரில் உனக்கு வரும் லெட்டர்ஸ்-ஐ எப்பவும் மாசத்துக்கு ஒரு தடவை தான், நான் வந்து உன்னிடம் கொடுப்பேன். அதுவரை எல்லாமே உனக்கு வந்ததுன்னு தான் நினைச்சிட்டு இருந்திருப்பேன்!'' என்றவாறே கடித உறைகளை மெல்லப் பிரித்துப் பார்க்க, அவள் முகத்தில் அதிர்ச்சி, ஆச்சரியம், குழப்பம், யாராக இருக்குமென்ற கேள்வி, குறுகுறுப்பு என்று பல்வேறு உணர்வுகள் வலம் வந்தன.



உறைகளிலிருந்த தபால் துறை முத்திரையை வைத்து தேதி வாரியாக ஒவ்வொன்றாக பிரித்தவளின் விழிகள் ஆச்சரியத்தில் விரிந்தன.

கீதாஞ்சலியை ஊக்கப்படுத்தும் வகையில் அமைந்திருந்த முதல் கடிதத்தில், தன்னைப் பற்றித் தெரிந்து கொள்ள முக்கியத்துவம் கொடுக்காதே என்று குறிப்பிட்டிருந்ததோடு ஒரு கவிதையும் இணைக்கப்பட்டிருந்தது.

அக்கவிதையை அவளே பலமுறை இணைய தளத்தில் படித்து ரசித்திருக்கின்றாள்.

பத்து மாதம் சுமந்து
பெற்றவள் தாயெனில்
இத்தனை வருடங்களாய்
உன்னை சுமந்து கொண்டிருக்கும்
என்னை என்னவென்று அழைப்பாய்

இத்தனை வருடங்களாய்...?? யாராய் இருக்கும்?

அதையே வாய்விட்டு தன்னிடம் கேட்டவளிடம், ''உனக்கே தெரியாதுன்னா எனக்கு எப்படித் தெரியும், கீதா?'' என்று பயத்துடன் பதிலுக்குக் கேட்ட ரம்யா, ''நிஜமாவே உனக்குத் தெரியாதா? நிஜமா?'' என்று கேட்டு உறுதிப் படுத்திக் கொண்டாள்.

உதட்டைப் பிதுக்கி, ''ம்ஹூம்! நிஜமாகவே தான் தெரியாது! உன்கிட்ட நான் ஏன் பொய் சொல்லப் போறேன்? யாராய் இருக்கும், ரம்யா?'' என்று கண்களில் கேள்வியுடன் வினவிய கீதாஞ்சலியைக் குழப்பத்துடன் பார்த்தவள்,

''அடுத்ததையும் பிரிச்சு பாரு, கீதா! ஏதாவது துப்பு இருக்கான்னு பார்க்கலாம்'' என்று ஊக்க, அடுத்த உறையைப் பிரித்தாள் கீதாஞ்சலி.

''கெட்-வெல் கார்ட், ரம்யா! எனக்கு உடம்பு சரியில்லைன்னு யாருக்குத் தெரியும்?'' ஆச்சரியத்தில் விழி விரித்தவள், ''யார் யாருக்கெல்லாம் தெரியும்னு கேட்கணுமோ?'' ஒற்றை விரலால் நெற்றியைத் தட்டிக் கொண்டு தீவிரமான சிந்தனையில் ஆழ,

''உங்க வீட்டிலிருக்கவங்க, இங்கே, உன் ஆபீஸ், பக்கத்து வீடு, உங்க அபார்ட்மெண்ட்டில் இருக்கவங்க..'' என்று ரம்யா பட்டியலை நீட்டி முழக்கவும்,

கீதாஞ்சலி, ''போதும்! போதும்! இதில் யாருன்னு சந்தேகப் படறது? ரொம்ப குழப்புதே! இரு, அடுத்ததையும் பார்த்துடலாம்'' என்று கடைசியாக இருந்ததையும் பிரித்தாள்.

அது ஒரு அழகான 'மிஸ் யூ' கார்ட். கடற்கரையில் ஒரு ஆண் அமர்ந்தபடி இருக்க, அவனின் முதுகுபுறம் மட்டும் தெரிவது மாதிரியிருந்த படத்தில்,

I miss you a little,<br>
I guess you could say,<br>
A little too much,<br>
A little too often,<br>
And a little<br>
More each day.

என்று அச்சிடப்பட்டிருக்க, அதன் கீழே மற்ற இரண்டிலும் இருந்தது போன்றே, இதிலும், 'ப்ரியமுடன், உன் ரகசிய சிநேகிதன்' என்று இருந்தது.

''யாராய் இருக்கும், ரம்யா? மண்டைக் குழம்புதே!'' என்று குழப்பத்துடன் ஆரம்பித்த கீதாஞ்சலி.



''ஹான்! விடு! இது ஏதோ மொட்டை கடுதாசி மாதிரி இருக்கு. இன்னமும் ரெண்டு நாளில் பரீட்சையை வைச்சு கிட்டு, இதையெல்லாம் யோசிக்க எனக்கு நேரமில்லை. சொல்றதாய் இருந்தால் நேரில் வந்து சொல்லட்டும். அப்போ பார்த்துக்கலாம்'' என இலகுவாகச் சொல்ல, ரம்யா தான் தாள முடியாமல் தவித்தாள்.

''எப்படி டி நீ இப்படியிருக்கே? கொஞ்சம் கூட ஒரு குறுகுறுப்பே இல்லாமல்?'' என்று புலம்ப ஆரம்பிக்கும் பொழுதே, தேன்மொழி கதவைத் தட்ட, அதன் பிறகு இதைப் பற்றி வேறு பேச முடியாமல் போனது தோழியர் இருவருக்கும்.

மேலும் சிறிது நேரம் இருந்து விட்டு, ''எனக்கு மறக் காமல் போன் செய், கீதா'' என்ற மறைமுக உத்தரவோடு ரம்யா விடைபெற்றுச் செல்ல, யோசனையில் ஆழ்ந்தாள் கீதாஞ்சலி.

'யாரோ எனக்கு நன்றாகத் தெரிந்த... என்னை மிகவும் நன்றாகத் தெரிந்த நபர் தானோ?' என்று மண்டை குடைந்தது அவளுக்கு.

அவளிடம் விட்டேற்றியாகக் கூறியிருந்தாலும், தனி மையில் அந்தக் கடித உறைகளை எடுத்துப் பார்த்தவளுக்கு குறுகுறுப்பாக தான் இருந்தது.

ஆனால் அந்தக் குறுகுறுப்பின் பின்னணியில் யாராக இருக்கும் என்று தெரிந்து கொள்ளும் ஆவல் மட்டுமே. துப்பறியும் நாவலில் வருவது போன்று துப்புத் துலக்கும் ஆர்வம் மட்டுமே.

அதிலும் அந்த முதல் கடிதம், இவளுக்கு அவளது துறையின் மீதிருந்த அக்கறையை, நாட்டத்தை, விருப் பத்தை அப்படியே படம் பிடித்துக் காட்ட, அதில் இணைத்திருந்த பேட்டி இவளுக்கு உத்வேகம் அளிப்பது

போன்று அமைந்தது வேறு. கீதாஞ்சலிக்கு வேறெந்த உணர்வையும் பிரதானமாக எழ விடவில்லை.

யார் என்று தெரியும் போது தெரியட்டும் என்ற அசட்டையும், யாராக இருக்கும் என்ற ஆர்வமும் மாறி மாறி அவளைப் பந்தாட, அந்தப் பேட்டியை மட்டும் எடுத்து அவள் கண் முன்னே வைத்துக் கொண்டாள்.

சமீபத்தில் உதய் ஆனந்த் விஷயத்தில் கற்ற மகத்தானதொரு பாடம் இந்தச் சமயத்தில் அவளுக்குக் கை கொடுத்தது.

யாரையும் எடுத்த எடுப்பிலேயே எந்த வகையான ஆதாரமுமின்றி சந்தேக கண்கொண்டு பார்ப்பது வீண் பிரச்சனைக்கு வழி வகுக்கும் என்பதுதான் அவளது அனுபவம் கற்றுத் தந்த விஷயம்.

ஆதலால், அநாவசியமாக தன்னைச் சுற்றி இருப்பவர்களின் நடவடிக்கை... செயல்பாடு என்ற ஆராய்ச்சியில் இறங்காமல் இருப்பதே அவளுக்கு நிம்மதியைத் தரும் என்று எண்ணினாள்.

இவளைச் சீண்டுவதற்காக இத்தகைய கடிதங்களும், வாழ்த்து அட்டையும் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது என்றால் அதற்கு இடமளிக்காமல் இவற்றைத் துச்சமாக மதிக்க வேண்டியது தான்!

இல்லை... உண்மையான நேசம் என்று கொண்டாலுமே, 'இவனின்' முகத்திரையை அகற்றாத வரையில் இவைகளின் நம்பகத் தன்மை பற்றி எதுவும் சொல்வதற்கில்லை.

அத்துடன் நேசிப்பது ரகசிய சிநேகிதனின் உரிமை என்றால், அந்த நேசத்தை ஏற்றுக் கொள்வதும், மறுப்பதும் கீதாஞ்சலியின் ஏக போக உரிமை. அந்த உரிமையை நிலை நாட்டும் நாள் வரும் போது வரட்டும்.



அதுவரையில் எந்தக் குழப்பமும் தேவையில்லை என்று திடமானதொரு நிலைப்பாட்டை அடைந்த பிறகு தான் அவளால் மீண்டும் பாடத்தில் மனதைச் செலுத்த முடிந்தது.

மாலை வேலை முடிந்து வந்த உதய் ஆனந்த், கீதாஞ்சலி தங்கியிருந்த அறைக்கு வந்தபொழுது அவன் கண்டது, கீதாஞ்சலியின் முன்னிருந்த அந்தப் பேட்டியைத் தான்.

புருவங்கள் உயர, அவனின் இதழ்களும் மெல்லிய புன்னகையில் சற்றே வளைய, ''என்ன புதுசா ஏதோ இருக்கு?'' என்றான் அவளையே பார்த்தபடி.

அவன் கேட்பது புரிந்தாலும், ''இல்லையே... இந்தப் பேட்டி ரொம்ப முன்னாடி எல்லா பத்திரிகையிலும் வந்திருந்ததே?'' என்றாள் வேறொன்றும் கூறாமல்.

நிர்மலவேணி தான் வந்து கொடுத்துவிட்டுப் போயிருப்பாளோ என்றெண்ணியவன், அவளையே சில நொடிகள் பார்த்திருந்து விட்டு, ''அக்கா வந்திருந்தாங்களா?'' எனக் கேட்டான்.

அவன் ஏன் அதைக் கேட்கிறான் எனப் புரியாமல், ''ம்ஹூம். என் பிரண்ட் ரம்யா வந்திருந்தாள்'' என்றவளுக்கு அவனிடம் எல்லாவற்றையும் கூறிவிடலாமா என்று பரபரத்தது.

ஆனால் இவனிடம் சொன்னால் அது மதினியிடம் போனால் என்ன செய்வது என்று அஞ்சியவள், ஒன்றும் கூறாமல் விடுத்தாள்.



## 13

இதோ அதோவென்று வெகுவாக எதிர்பார்த்துக் கொண்டிருந்த தேர்வு வாரமும் வந்துவிட, முதல் நாள் காலையிலேயே ஒருவித பரபரப்புடன் இருந்தாள் கீதாஞ்சலி.

அவளது மனநிலையை உணர்ந்த உதய் ஆனந்த், "நம்பிக்கையோடு பரீட்சை எழுது, கீதா. உன்னால் கட்டாயம் முடியும். ஆல் தி பெஸ்ட்!" என்று அவளுக்குக் கரம் கொடுத்து வாழ்த்த, அவனுடைய வார்த்தைகளிலிருந்த நிஜமான உணர்வு அவளுக்கு யானை பலம் தந்தது.

முயற்சி, பயிற்சி மற்றும் தன்னம்பிக்கை அவளுக்குக் கை கொடுக்க, தேர்வுகளை நல்லதொரு மனநிலையில் எதிர்கொண்டாள்.

அந்த வாரத் தேர்வுகளை முடித்துவிட்டு உதய் ஆனந்துடன் வீடு திரும்பிய கீதாஞ்சலி, ஹாலில் கைப்பேசியும் கையுமாக குழப்பத்துடன் அமர்ந்திருந்த தேன்மொழியைக் கண்டு, "என்ன அத்தை? எதையோ யோசிச்சுகிட்டு உட்கார்ந்திருக்க மாதிரி இருக்கு?" என்று விசாரித்தவாறே அங்கிருந்த ஒற்றை சோபாவில் அமர்ந்தாள்.

"வாம்மா! பரீட்சை நல்லபடியா எழுதினியா? இன்னமும் ரெண்டு தானே இருக்கு?"

"ஆமாம், அத்தை. ஆறு முடிஞ்சுது. இந்த ரெண்டும் முடிந்தால் ரொம்ப நிம்மதியா இருக்கும். க்ரட்ச் (crutch) வைச்சு நடந்தாலும் தோள் பட்டை எல்லாம் ரொம்ப வலிக்குது, அத்தை. இந்த மழைக் காலத்தில் இன்னமும் திண்டாட்டம். உதய் மட்டும் இல்லைன்னா, என் நிலைமை ரொம்ப மோசமா போயிருந்திருக்கும். என்னைக் கொண்டு விட, கூட்டிட்டு வர, அதோட சேர்த்து எப்பவும் செய்ற வேலைன்னு... பாவம் உதய்க்குத் தான் கஷ்டம்!"

"அதைப் பற்றியெல்லாம் நீ கவலைப்படாதே, கீதா! நல்ல ரேங்க் வாங்கப் பாரு!" என்றவாறே அவளுக்கும், அன்னைக்கும் சேர்த்தே தேநீர் கலந்து எடுத்து வந்த உதய் ஆனந்த்,



தாயின் அருகில் அமர்ந்தவாறே, "என்னம்மா? வண்டி இன்ஷூரன்ஸ் பேப்பர்ஸை வைச்சுகிட்டு இருக்கீங்க? ட்யூ கட்டணுமா?" என்று வினவினான்.

"இல்ல, உதய். போன வாரம் நம்ம வண்டியை எங்கேயோ போய் இடிச்சுட்டு வந்தார் இல்ல உங்கப்பா? அதுக்கு க்ளைம் வாங்க, இன்ஷூரன்ஸை கூப்பிட்டு பேசுன்னு சொல்லிட்டுப் போனார்."

"சரி... அப்போ கூப்பிட்டுப் பேச வேண்டியது தானே?"

"ஏதாவது நம்பரைக் கொடுத்துட்டுப் போயிருந்தால் பரவாயில்லை. அவர் பாட்டுக்கு 1-800 claim uss என்று எழுதி இருக்கார்! பாதி நம்பரும், பாதி எழுத்துமா இருக்கு!" என்றார் பாவமாக.

"ஹா ஹா... அம்மா... அம்மா..." என வாய்விட்டுச் சிரித்தவன்,

அவர் கரங்களிலிருந்த கைப்பேசியை வாங்கிக் கொண்டு, "இதோ பாருங்கம்மா! போன் கீ-பாட் இருக்குல்ல? அதில் ஒவ்வொரு நம்பருக்கும் பக்கத்தில் மூணு ஆங்கில எழுத்துக்கள் இருக்கு பாருங்க. 2 என்பதற்கு பக்கத்தில் abc, 3 பக்கத்தில் def .... 9 பக்கத்தில் wxyz என்றெல்லாம் இருக்கு பாருங்க. தெரியுதா?" என்று கைப்பேசியை அவரிடம் காண்பித்துக் கேட்டான்.

"ஆமாம். அது எஸ்.எம்.எஸ். அனுப்பறதுக்கு தானே உபயோகிக்கணும்?"

"ம். அதுக்கும் உபயோகப்படுத்தலாம். இப்போ அப்பா உங்களிடம் போன் நம்பர்க்குப் பதிலாக ஒரு வார்த்தை சொன்னாரில்ல? அதில் 'C' என்ற எழுத்துடனே இருக்கும் ரெண்டு என்ற எண்ணை அழுத்தணும். அப்புறம் 'L' என்ற எழுத்துக்கு ஐந்து என்ற எண்ணை அழுத்

தணும். இப்படியே ஒவ்வொரு எழுத்து வரும் போதும் அந்த எழுத்தோட சேர்ந்திருக்கிற எண்ணை அழுத்தணும்."

"ஓ! அப்படியா?" என்றவர், மகாதேவன் சொன்னத் தொடர்பு எண்ணைக் கண்டுபிடிக்கும் பணியில் முழுமூ மாக இறங்க,

"எங்கே கீதா என்ற பெயர் சொன்னால் என்ன நம்பர் அழுத்துவீங்கன்னு சொல்லுங்க, பார்ப்போம்?" என்று அவருக்குச் சின்ன சோதனை ஒன்றை வைத்தான் உதய்.

ஒரு சின்னத் தேடலுக்குப் பிறகு, "43382 என்ற நம் பரை அழுத்தினால் கீதா என்ற பெயரை அழுத்தின மாதிரி, சரியா?" என்றார் விடைக் கண்டுபிடித்த மகிழ்ச்சியில்.

"நான் கூட, எங்கே உங்களை உதய் இன்னமும் நல்லா குழப்பி விட்டுட்டானோன்னு பார்த்தேன். நீங்க கற்பூரம், அத்தை!" எனப் புன்னகை புரிந்த கீதாஞ்சலியைப் பார்த்து,

"எனக்கு நல்லா புரியுதும்மா" என்றவர் மேலும் தன் திறமையை நிரூபித்துக் கொள்ள, "உதய் பெயரை அழுத் தணும் என்றால், '83424' என்ற எண்களை அழுத்தணும். மறுபடியும் சரியா சொல்லிட்டேனா?" என்று சிறு குழந்தை யாய்க் குதூகலித்தார்.

அவரைப் பார்த்து கீதாஞ்சலி சிரிக்க, அவர்கள் இரு வரையும் நெற்றி சுருங்க யோசனையாகப் பார்த்திருந்தான் உதய் ஆனந்த்.

"என்ன யோசனை, உதய்?"

புருவத்தை உயர்த்தி ஆர்வமுடன் வினவியவளைப் பார்த்து, "ஒன்றுமில்லை.. என் அம்மாவைப் பார்த்து கற் பூரம்னு சொன்னியே? அதான், காற்றில் கரையாமல் எப் படி அவங்களைப் பத்திரமா பாதுகாக்கிறதுன்னு யோசிக் கிறேன்" எனக் குறும்பாகச் சிரித்து அவன் கண் சிமிட்ட,



கீதாஞ்சலி, "கடவுளே! முடியலை, உதய்... ப்ளீஸ்..." என்று சொல்லி 'ரம்பம்' என்பது போல் சைகை காண் பித்து நகைத்தாள்.

அன்று இருந்த அதே உற்சாகத்துடனே மற்ற இரண்டு தேர்வுகளையும் எழுதி முடித்தவள், இறுதித் தேர்வை நல்ல படியாக முடித்த கையோடு, "இன்றைக்கு நான் உனக்கு ட்ரீட் வைக்கிறேன், உதய். வெளியில் சாப்பிட போகலாம் வர்றியா?" என்று தன்னை அழைத்துப் போக வந்தவனுக்கு அழைப்பு விடுத்தாள்.

அவளது அழைப்பில் மகிழ்ந்தாலும் குறும்பாக, "உனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து எழுதினவங்க மேலே அவ்வ்வ்வளவு நம்பிக்கையா, கீதா? ரிஸல்ட் வர்றதுக்கு முன்னாடியே ட்ரீட் எல்லாமே வைக்கறே?" எனக் கேலி யாக வினவினான்.

அவனது கேள்வியில் ஒன்றும் புரியாமல் விழித்தவள்... பின்னர் அர்த்தம் புரிந்தவளாக, "ஏய்! என்னை என்ன உன்னை மாதிரி பக்கத்தில் இருக்கிறவங்களைப் பார்த்து எழுதுவேன்னு நினைச்சியா?" என்று குரலை உயர்த்தி சண்டைக்குச் சென்றாள்.

பின்னர் அவளே சாதுவாக மாறி, "அடுத்தவங்க பிட்டை நம்பி நான் இல்லை; தன் பிட்டே தனக்குதவின்னு இருப்பவளாக்கும் நான்..!" என்று சிரித்தாள்.

இருவரின் சிரிப்பு அடங்கியதும், "நான் எக்ஸாம் பாஸ் பண்ணியதும் எல்லாருக்கும் ட்ரீட். ஆனால் இந்த எக்ஸாம் எழுதி முடிச்சதே ஒரு பெரிய விஷயம், உதய். உன்னால் தான்.. நீ செய்த உதவியால் தான் இந்தப் பரீட்சையையே எழுதி முடிக்க முடிஞ்சுது. அதுக்கு நன்றி தெரிவிக்கறதாகவும் இந்த ட்ரீட். நம்ம நட்பு மறுபடியும் தொடர்வதற்கு ஒரு சின்னக் கொண்டாட்டம்னு கூட

வைச்சுக்கோ. வா!'' என்று குரலும் முகமும் கனிய காரணங்களைப் பட்டியலிட்டு அழைத்தாள்.

''அம்மா நமக்காக காத்திட்டு இருக்கப் போறாங்க, கீதா?''

''அத்தைகிட்டே நம்ம ரெண்டு பேருக்கும் சமைக்க வேண்டாம்னு காலையிலேயே சொல்லிட்டுதான் வந்தேன். வா...!''

உணவருந்தும் வேளையில், ''நாளைக்கு காலுக்காக டாக்டரைப் பார்த்து எக்ஸ்-ரே எடுக்கணுமில்ல, கீதா? அவர் பிஸியோ செய்யலாம் என்று சொன்னால் சின்னச் சின்னதா பயிற்சி எடுத்துக்கலாம்'' என அவளின் சிகிச்சையில் அக்கறைக் கொண்டவன், அவள் புறமாக மட்டர் பன்னீரைத் தள்ளி வைத்தான்.

''எப்போடா இந்தக் கால் கட்டை அவிழ்ப்பாங்கன்னு இருக்கு. சீக்கிரம் சரியாயிடுமில்ல?''

''ரெண்டு நாளைக்கு முன்னாடி நம்ம முரளி வந்தப்போ கூட... 'அத்தா... அத்தா'ன்னு கட்டைக் காண்பிச்சு இதே கேள்வி தான் கேட்டுட்டு இருந்தான். இப்போ நீயா? சீக்கிரம் சரியாயிடும்!'' என்று நம்பிக்கைத் தந்தவன், ''சரியானதும் திருநெல்வேலி கிளம்பறியா?'' என்றவாறே அவளைப் பார்வையால் ஆராய்ந்தான்.

''அச்சச்சோ! அங்கே திருநெல்வேலி போனால் அவ்வளவு தான்! எங்க அம்மா எனக்கு, 'கால் கட்டு' போட தயார் ஆகிடுவாங்க. நீ வேற! நான் இங்கேயே, பரீட்சை முடிவு தெரியற வரைக்கும், ஏதாவது வேலை இருக்குன்னு நாளைக் கடத்த வேண்டியது தான்.'' அருகிலிருந்த தண்ணீரை அருந்தியபடியே கீதாஞ்சலி சொல்ல, உதய் ஆனந்த லேசாக ஆசுவாசப் பெருமூச்சு விட்டுக் கொண்டான்.



''இந்தக் கால் கட்டை எப்போ பிரிக்கிறதுன்னு கேட்கிற மாதிரி.. அந்தக் கால் கட்டை கேட்க முடியாதில்ல?'' என்று சிரித்தவன், ''ஏன் கல்யாணம் என்றால் அப்படிப் பயப்படறே?'' என்றான் தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன்.

''பயம்ன்னு யார் சொன்னா? பயமெல்லாம் ஒன்றுமில்லை. இப்போதைக்கு என்னுடைய ப்ரையாரிட்டி லிஸ்டில் கல்யாணம் இல்லை. அவ்வளவு தான். சரி உனக்கு எப்போ கால் கட்டு?''

''அது ரொம்ப சுலபம்! உங்க அபார்ட்மென்ட் காம்ப்ளெக்ஸ் பூங்காவுக்கு வந்து ஊஞ்சல் ஆடி விழுந்தால் நாளைக்கே கால் கட்டு தான்!''

''நான் காலில் கட்டு போடறதைப் பற்றி பேசலை. கால் கட்டைப் பற்றி பேசறேன், மிஸ்டர். உதய்!'' என்று குறும்புடன் கீதாஞ்சலி மிரட்டல் விடுக்க,

''உன்னிடம் சொல்லாமலா, கீதா? சீக்கிரமே சொல்லிடறேன்.'' என்று பூடகமாகத் தெரிவித்தான்.

''உனக்கு ஏதாவது உதவி வேணும்னா என்னிடம் கேளு! பலமா சிபாரிசு செய்றேன்'' என்று பெரிய மனது செய்து அவள் கூற, குடித்துக் கொண்டு இருந்த தண்ணீர் புரையேறியது அவனுக்கு.

அதுவரையில் அவனுடைய மனப் பொருமலை மறைத்து சிரித்தவாறே சமாளித்துக் கொண்டிருந்தாலும், கீதாவின் பேச்சு அவனது பொறுமையை வெகுவாக சோதனைக்குள்ளாக்கியது.

''ம்.. உனக்குத்தான் என் மேல் எந்தவித நல்ல அபிப்ராயமும் இல்லையே? அப்புறம் என்ன? உன்னிடம் உதவிக்கு வந்தால் என்னன்னு சொல்லுவே, கீதா?'' பட்டென்று வினவி அவளைத் திக்கு முக்காட வைத்தான்.

''ச்சே.. என்ன நீ இப்படி சொல்லிட்டே? சண்டை போட்டதையெல்லாம் இன்னமுமா மனசில் வைச்சுட்டு இருக்கே? இப்போ தான், நான் உன் கூட சண்டைப் போடறதே யில்லையே?'' உள்ளிருந்து வெளிவர ப்ரியப்படாத குரலில் அவள் வினவ, அவளின் குரலும் கன்றிப் போயிருந்த முகமும் அவனை என்னவோ செய்தது.

''ஒருவேளை பரீட்சை பதட்டத்தில் என் கூட சண்டைப் போட மறந்துட்டியோ என்னவோ?'' அவளின் மனநிலையை மாற்ற கேட்டு, கண் சிமிட்டியவனை, எதுவும் பதில் சொல்லாமல் மௌனமாகவே பார்த்தாள்.

ஆனால் அந்தப் பார்வையில் குற்ற உணர்ச்சி தான் மேலோங்கி இருந்ததே தவிர, கோபம் என்ற உணர்வே இல்லை.

''அப்படிப் பார்த்தால் என்ன அர்த்தம்? சரி.. நீ சண்டை போடும் போது போடு'' என்று பெருந்தன்மையாக சம்மதம் தெரிவித்தவன், ''என்னைப் பற்றி என்னன்னு சிபாரிசு செய்வே, கீதா?'' என அவள் என்ன தான் சொல்வாள் என்ற ஆர்வத்தில் கேள்வியெழுப்ப,

உடனேயே, ''நீ கிடைக்க அந்தப் பொண்ணு உண்மையிலேயே கொடுத்து வைச்சிருக்கணும்னு சொல்லுவேன்.'' என்றாள் யோசனை தேவையே இல்லாத ஆணித்தரமான குரலில், அழுத்தமாக.

அவள் உணர்ந்து சொல்வதைக் கேட்டு ஆச்சரியத்துடன் புருவம் உயர்த்தியவன், ''அப்புறம்... உன்னைப் பெண் கேட்ட பொழுது மட்டும் நீ ஏன் என்னை வேண்டாம்னு சொன்னியாம்?'' என்று நேரடியாகவே வினவினான்.

தன்னெதிரே பதில் சொல்ல முடியாமல் அமர்ந்திருந்தவளின் முகத்தில் வெளிப்பட்ட பரிதவிப்பை சில



கணங்கள் கண் குளிர ரசித்துவிட்டு, ''ஒருவேளை.. நீ எதுவும் என்னிடம் கொடுத்து வைக்கலையா?'' எனக் கட்டைவிரலை 'துட்டு' என்பது போல சுண்டியபடி செய்கை காண்பித்தான்.

அவனது சீண்டலில் சிரித்தாலும், ''நான் உன்னை ரொம்ப காயப்படுத்திட்டேனா, உதய்?'' என்றாள் கம்மிய குரலில்.

அவளது கேள்விக்கு நேரிடையாக பதிலளிக்காமல், ''நீ சிபாரிசு செய்யும் போது அந்தப் பொண்ணு உன்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்டால் என்ன செய்வேன்னு தெரிஞ்சுக்கத் தான் கேட்டேன்'' என்றான்.

கேலியாக, ''என்ன நீ? இப்படி மடக்கி... மடக்கி கேள்வி கேட்கிறே? நானே இப்போ தான் பரீட்சையை முடிச்சுட்டு ஜாலியா இருக்கேன்'' என அந்தப் பேச்சுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாள்.

'உனக்கென்ன? நீ ஜாலியா இரு. ஆனால் என்னை மட்டும் தவியாய் தவிக்க விடு!' என்று மனதிற்குள் முணுமுணுத்தவனும் தற்காலிகமாக அந்தப் பேச்சை ஒத்தி வைத்தான்.

அவன் மனதிலிருந்த உணர்வுகளை வெளியில் கொட்டும் வழிவகை தெரியாது திணறியவன், வீட்டிற்கு வந்ததும் ரகசிய சிநேகிதனாக கீதாஞ்சலிக்கு ஒரு கடிதம் வரைந்தான்..

''என் நேசத்திற்குரியவளே,

காதல்...!

இவ்வார்த்தையைக்

கேட்டாலே

காத தூரம் ஓடுகிறாய்!

ஆனால்...
சற்றே திரும்பிப்
பார்த்திருந்தால் தெரிந்திருக்கும்
உன்னையே இடைவிடாமல்
துரத்திக் கொண்டிருக்கும்
எந்தன் மனமும் - அதில்
துடித்துக் கொண்டிருக்கும்
உந்தன் மீதான காதலும்!!

இன்னமும் எத்தனை காலங்கள் என்னை, என் காதலைச் சொல்ல விடாமலே காக்க வைக்கப் போகிறாய்? 'உன் காதலைச் சொல்ல விடாமல் நானா தடைச் செய்கிறேன்?' என்று நீ முணுமுணுப்பது எனக்குத் தெரியாமலில்லை. ஆனால் என் காதலை ஏற்றுக் கொள்ளும் மனநிலையில் நீ இருக்கிறாய் என்று சின்னதாக ஒரு பச்சைக்கொடி காட்டும் போது, என் காத்திருப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கிறேன்.

உன்னுடன் சேர்ந்திருக்க இந்த ஜென்மம் ஒன்று போதாது என்ற நினைப்பில் இருக்கும் நான், என் காலத்தை இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டிலேயே கழிக்க விரும்பவில்லை. ரகசிய சிநேகிதனாய் ஒளிந்திருக்கும் என்னை, நீ கண்டறிய என்னைப் பற்றிய குறிப்புகளை ஒவ்வொன்றாகத் தருகிறேன்.

அக்குறிப்புகளைக் கொண்டு தடம் அமைத்து என்னிடம் வருவாயா, அஞ்சு?

உன்னை மட்டுமே நாடும்
ரகசிய சிநேகிதன்.'

கடிதத்தை முடித்தவன் அத்துடன் தான் ஏற்கனவே லண்டனிலிருந்து அவளுக்காக வாங்கி வந்திருந்த ஒரு 'ராயல் லண்டன்' கைக்கடிகாரம் ஒன்றையும் சேர்த்து அடுத்த நாளே அவளுக்கு அனுப்பி வைத்தான்.



அன்றே கீதாஞ்சலியிடமிருந்து ஃபேஸ்புக்கில் அவளது நண்பர்கள் பட்டியலில் இணையச் சொல்லி அவனுக்கு கோரிக்கையும் வந்தது.

'அவளுடைய முகநூல் நண்பர்கள் பட்டியலில் கூட அவனைச் சேர்க்க விரும்பாமல் தவிர்த்தவள்' என்ற நிலை மாற்றம் கண்டு, இன்று அவளாகவே முன் வந்து அந்தக் கோரிக்கையை வைக்கிறாள் எனும் போது அதில் அவனால் பூரண மகிழ்ச்சி அடைய முடியவில்லை.

அவளது கோரிக்கையை உதய் ஏற்றுக் கொண்டாலும், இன்றைய நிலையில் அவனுடைய எதிர்பார்ப்பும் அதையும் தாண்டிய ஒன்றாக இருந்தது.

அவளுடைய தனிப்பட்ட விஷயங்களையும் பகிர்ந்து கொள்ளும் நம்பகத்தன்மை வாய்ந்த ஒரு நெருங்கிய நண்பனாக கீதாஞ்சலி தன்னை ஏற்றிருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு தான் அவனுக்கு.

'ரகசிய சிநேகிதன்' பற்றி அவளாக அவனிடம் சொல்லவில்லையென்றால் அதற்கு இரண்டே இரண்டு காரணங்கள் தான் இருக்க முடியும்.

முதலாவது காரணம் - அவளுக்கு உற்ற தோழனாக அவனிருந்திருந்தால் கட்டாயம் ரகசிய சிநேகிதன் அனுப்பிய கடிதங்களைப் பற்றி அவளாகவே அவனிடம் பகிர்ந்திருப்பாள்.

இரண்டாவது காரணம் - ரகிசய சிநேகிதன் அனுப்பிய கடிதங்களை அவள் கண்டும் காணாமல் இருப்பது. அப்படி. கீதாஞ்சலி அக்கடிதங்களைக் கருத்தில் கொண் டிருக்காவிட்டால் தேர்வுகளுக்காகத் தயார் செய்யும் பொழுது, அவளுக்கு ஊக்கமூட்டும் விதமாக செய்தித் தாள் பிரசுரங்களைச் சுவற்றில் ஒட்டி வைத்திருக்க மாட்டாள்.

ஆக, கருத்தில் கொண்ட கடிதத்தைப் பற்றி அவனிடம் பகிரும் அளவிற்கு அவள் அவனை நினைக்கவில்லை என்று தானே அர்த்தமாகிறது?

அதுவும் அவனாக முன் வந்து விசாரித்தும் கூட அவளுக்கு சொல்ல மனம் வரவில்லையே!

கல்லூரியில் மதிய உணவு இடைவேளையில் தனக்குள்ளேயே சுய அலசல் நடத்திக் கொண்டிருந்த சமயத்தில், அவனுடைய எண்ணங்களின் நாயகியே அவனுடைய அலைபேசிக்கு அழைப்பு விடுக்கவும், அதை எடுத்து, ''சொல்லு கீதா! டாக்டர் என்ன சொன்னார்?'' என அக்கறையுடன் கேட்டான்.

''இந்த மூணு வாரத்தில் நல்ல முன்னேற்றம் தெரியுது. கொஞ்சம் கொஞ்சமா பிஸியோ பயிற்சி செய்ய ஆரம்பிங்கன்னு சொல்லியிருக்கார். அதனாலே சாயந்திரத்தில் உன் க்ளினிக் தான் வரணும். நான் இப்போ இங்கேயிருந்து விருகம்பாக்கம் கிளம்பறேன், உதய். அதைச் சொல்ல தான் கூப்பிட்டேன்.''

முடிந்தவரையில் அதிர்ச்சியை மறைத்துக் கொண்டு, ''எக்ஸ்-ரே எடுக்கத் தானே போனே? ஏன் அதற்குள்ளே விருகம்பாக்கத்துக்கு?'' என வினவினான்.

''அதற்குள்ளா? இன்னமும் ஒரு வாரம் போனால் நான் இங்கே வந்து கிட்டத்தட்ட ஒரு மாசம் ஆகப் போகுது, உதய்! பரீட்சை முடிச்சுட்டு விருகம்பாக்கம் கிளம்பிக்கலாம்னு அத்தை சொன்னதாலே தான் இத்தனை நாள் அண்ணனும், மதினியும் இங்கே என்னை விட்டு வைச்சாங்க.''

''இருந்தாலும்.. இங்கே நம்ம வீட்டிலேயே இருந்தால் நல்லாயிருக்கும்னு நினைச்சேன்...''

அவன் 'நம்ம வீடு' என்று சொன்னதில் கவனம் செலுத்தாதவள், ''எதுக்கு இத்தனை ஃபீலிங்க்ஸ், உதய்!



விருகம்பாக்கம் தானே? நினைச்சால் வந்துடலாம்'' என்று சமாதானம் கூற, மாலையில் அவனுடைய க்ளினிக்கில் பார்க்கலாம் என்று மனமேயின்றி அழைப்பைத் துண்டித்தான்.

தொடர்ந்து வந்த வாரத்தில் ஊன்றுகோல் இன்றியும், யார் உதவி இன்றியும் சிறு தொலைவை கீதாஞ்சலியால் கடக்க முடிந்தது.

அடிப்பட்ட இடது கால் பாரமாய் இருப்பது போன்று உணர்பவள், தன் வலது காலுக்குப் பெருமளவு அழுத்தம் கொடுத்து நடைப் பழகலானாள். ஆனால் உதய் ஆனந்தோ பயிற்சியின் போது, வலது காலுக்கு மிகுந்த அழுத்தம் கொடுக்கக் கூடாது என்று கண்டிப்பு காட்டினான்.

அத்துடன் நில்லாது, இடது காலின் பலத்தை மீட்கும் பயிற்சிகளையும் அவளுக்குப் பயிற்றுவித்தான்.

இத்தகைய பயிற்சிகளினால் உடல் நலம் நல்லதொரு முன்னேற்றமடைந்தாலும், கீதாஞ்சலி மிகவும் சோர்வாக உணர்ந்தாள். அவள் சோர்வடையும் நேரங்களில் கனிவைக் காட்டவும் தவறவில்லை அவன்.

ஒரு தடவை பயிற்சியின் போது, ''இன்றைக்கு மறுபடியும் வெயிட்ஸ் போட்டு பயிற்சியா? வேண்டாம், உதய். ப்ளீஸ். ரொம்ப கஷ்டமா இருக்கும். இன்றைக்கு வேண்டாமே?'' எனக் கெஞ்சலாக வேண்டினாள்.

ஆனால் மறுப்பாகத் தலையசைத்தவனோ, ''கட்டாயம் இதைச் செய்து தான் ஆகணும், கீதா! அப்போ தான் தசைகளுக்கு வலு சேர்க்க முடியும். நான் சொன்னபடி கேட்டால் இன்னமும் ஒரு வாரத்தில் சரி செய்துடலாம். இல்லைன்னா கால் சரியாகாமல் வைச்சிருக்க வேண்டியது தான்'' என்றான் கறாராக.

அடுத்து வந்து இரண்டு நாட்களில் அடுத்தக்கட்ட கடினமானப் பயிற்சிகளைக் கற்றுத் தந்தவன், அவள் தடுமாறிய வேளைகளில் உதவியும் செய்தான்.

அப்படி உதவி செய்யும் போது கீதா ஒரு முறை அவளது காலை அனிச்சையாக அவனது கைகளிலிருந்து உருவிக் கொள்ள, அவளது சிவந்த முகத்தில் துணுக்குற்ற உதய் ஆனந்த், "உனக்கு அசௌகரியமா இருந்தால் இங்கே இன்னொரு லேடி இருக்காங்க, கீதா" என்று உணர்ச்சியற்ற குரலில் கூற, அவளுக்கு என்னவோ போல ஆகிவிட்டது.

புருவங்களை உயர்த்தியவள், "இருந்தால்...?" என்று இலகுவாக கேள்வி தொடுக்க,

"ப்ச்...!" என்று சலிப்பை மட்டுமே விடையாய்த் தந்தான் உதய்.

"ஏன் இவ்வளவு அலுத்துக்கறே, உதய்?" என விடாபிடியாய்க் கேட்க,

"ஒரு விஷயம் மனசில் நிறுத்திக்கோ - இங்கே நான் ஒரு பிஸியோதெரபிஸ்ட். நீ ஒரு பேஷண்ட். நான் உன் காலுக்கு பயிற்சி கொடுக்கிறது உனக்கு தோது படலை என்றால் தாராளமா சொல்லு. கோபத்தில் காலை வெடுக்குன்னு இழுத்துக்கிட்டால் எனக்கு.. அது.. கஷ்டமா இருக்கு. இந்த மாதிரியொரு விளக்கம் தர்றதே எனக்கே வெட்கமா இருக்கு" முகத்தைத் திருப்பிக் கொண்டு சங்கடமானக் குரலில் பதில் தந்தவனைக் கண்ணுற்றவளுக்கு என்னவோ போல் ஆகிவிட்டது.

அவன் பேசிய முதல் வாக்கியத்திலேயே அவள் மனதில் சின்ன வெற்றிடம் உருவாவதை அவளால் தடுக்க முடியவில்லை.

வெறும் பயிற்சியாளர்-நோயாளி உறவு மட்டும் தானா தங்களது உறவு என்ற ஆராய்ச்சியை அவள் மனம் தொடங்க தயாரான போது அவன் தந்த விளக்கம் அவளை மிகவும் வருந்தச் செய்தது.



அவனது சங்கடத்தைப் போக்குவதற்கு முக்கியத்துவம் அளித்தவள், அவன் தோளைப் பற்றி தன் புறமாக மென்மையாக திருப்பி, "எனக்கு கால் வலியா இருந்ததுன்னு தான் எடுத்தேனே தவிர, வேறெதுவும் காரணம் இல்லை. அதுவும் உன்னை.. நான்.. எப்படித் தப்பா எடுப்பேன்? உன்னைப் பற்றி எனக்குத் தெரியாதா?" எனக் கேள்விகள் எழுப்பி அவனைப் பற்றி தான் உயர்வாக எண்ணும் எண்ணத்தை வெளிப்படுத்தினாள்.

அவனது மௌனம் தொடரவும், "உன்னிடம் தேவையில்லாத விஷயங்களுக்காக நான் முன்னாடி சண்டைப் போட்டு உன்னைக் காயப்படுத்தியிருக்கேன் தான். அதற்காக ரொம்பவே வருத்தப்படறேன்" என்று தன்னிலை விளக்கம் தர, சற்று முன் இருந்த சுணக்கம் நீங்கியவனாக தன் பயிற்சிகளைத் தொடர்ந்தான் உதய்.

இத்தகைய பயிற்சிகள் கீதாஞ்சலியின் அடிப்பட்ட காலை வலுவாக்கி அவளது பழைய இயல்பு வாழ்க்கை மீள உதவி புரிந்தன.

* * *

அவள் விருகம்பாக்கம் வந்தப் பத்து நாட்களுக்குள், 'ரகசிய சிநேகிதன்' என்ற பெயரில் இரண்டு பரிசுப் பொருட்களுடன் கடிதங்களும் அவளுக்கு வந்து சேர்ந்தது.

குமரன்-ரம்யா விவகாரத்திற்கு உதவி செய்ய வேண்டும் என்ற கோரிக்கை வைத்த பொழுதே, 'எனக்கு ஏதோ தவறாகப்படுகிறது' என எச்சரிக்கை விடுத்தவள் நிர்மலவேணி. அதனாலேயே இந்த ரகசிய சிநேகிதன் பற்றி அவளிடம் எதுவும் சொல்லாமல் விடுத்தாள் கீதாஞ்சலி.

ஆனால் சொல்லாமலிருப்பதும் வேறு ரூபத்தில் பிரச்சனைக்கு வழி வகுக்குமோ என்ற எண்ணம் அவளைப்

பயமுறுத்தியது. கூடவே தன்னை நம்பும் மதினியை ஏமாற்றுகிறோமோ என்ற உறுத்தல் வேறு!

கடிதங்களைக் கையில் வாங்காமலே விட்டு விடலாம் என்றால் அந்த முடிவினால் ரம்யாவும் பாதிக்கப்படுவாளே என்று இருந்தது.

தபால் தலை முத்திரையை வைத்து இது பூனாவிலிருந்து வந்திருக்கிறதா இல்லை உள்ளூரா என்று தெரிந்து கொள்ள முடிய, சரி.. அதை மட்டும் வாங்காமல் விட்டு விடலாமா என்று யோசித்தாலும்.. வீட்டிலுள்ளவர்களுக்கு ரகசிய சிநேகிதன் பற்றி தெரிய வந்து மொத்தமாக எல்லாமே தடை படும்; அப்பொழுதும் ரம்யா பாதிக்கப்படுவாள்!

ஒவ்வொரு முறை அவன் கடிதம் வாசிக்கும் போதும், வாழ்த்து மடலைப் பார்க்கும் போதும், 'அவன் யார்?' என்ற கேள்வியே அவள் மனதில் விஸ்வரூபமெடுத்தது.

உண்மையைச் சொல்லப் போனால், ரகசிய சிநேகிதனின் கடிதத்தில் அச்சிடப்பட்டிருந்த ஒவ்வொரு வரியும் அவளை வியக்க வைத்தது.

எந்தவொரு இடத்திலும், நீ என்னைக் காதலித்தே ஆக வேண்டும் என்று அவன் கட்டாயப்படுத்துவது போல் அவளுக்குத் தோன்றவில்லை.

உயர்ந்திருக்கும் மலை...
நம்மைத் தாங்கும் பூமி...
பரந்து விரிந்த பெருங்கடல்...
மேற்கூரையான ஆகாயம்...
இவற்றையெல்லாம்
என் காதலுக்கு அளவுகோலாய்
எப்படிச் சொல்வது?
நேற்று உன் மேல்



வைத்திருந்த காதலை விட
இன்று உன் மேல் கொண்டிருக்கும்
காதல் பன்மடங்கு பெரிது...
ஆனால் மலை, பூமி, கடல், வானம்
இவையெல்லாம் நேற்றை விட
இன்று பெரிதாகவில்லையே?
ஆதலால் தான் கேட்கிறேன்...
என் காதலுக்கு அளவுகோலாய்
எதைச் சொல்வது?

இம்மாதிரி கவிதைகள், கடிதங்கள் மூலம் தன்னுடைய காதலைப் புரிய வைப்பதற்காக முயற்சி எடுக்கும் ஒரு ஜீவன்.

'தான் விரும்பும் பெண்ணிற்குத் தன்னைப் பிடிக்கவில்லை' என்று தெரிந்தாலும் விடாமல் துரத்தி துரத்தி காதலைச் சொல்லும் நபர்களுக்கு மத்தியில், 'நீ என் காதலை ஏற்கும் மனநிலைக்கு வந்த பிறகு என் காதலை உன்னிடம் பகிர்ந்துக் கொள்கிறேன்' என்று சொல்லும் ஒருவன் அவளுக்கு வித்தியாசமாகத் தெரிந்தான்.

முதல் பார்சலில் ஒரு கைக்கடிகாரம் ஒன்றை அனுப்பி வைத்திருந்தான் என்றால் இரண்டாவது பார்சலில் இவள் வாங்குவதற்காக எண்ணியிருந்த ஒரு அழகிய வேலைப் பாடு கொண்ட சுடிதார் செட்

அதுவும் இரண்டு நாட்களுக்கு முன்பு தான் முகநூல் வழியாக ஒரு புகழ்பெற்ற டிசைனர் கடையில் இதைப் பற்றிய விவரங்களைக் கேட்டு வைத்திருந்தாள்.

அந்த சுடிதார் டிசைனர் பக்கத்தை யார் வேண்டுமானாலும் பார்வையிடலாம் என்கிற உண்மையும், அந்தப் பரிசைப் பார்த்தப் பொழுது தான் அவளுக்கு

உறைத்தது. ஒருவேளை, ரகசிய சிநேகிதனும் அந்தப் பக்கத்தைப் பார்வையிட்டானோ?!

அப்படியென்றால் இவளுடைய முகநூல் நண்பர்களில் ஒருவனா இந்த ரகசிய சிநேகிதன்?

ஏதோ குறிப்பு என்றானே...?

வேக வேகமாக தன்னுடைய நண்பர்கள் பட்டியலைப் பார்வையிட்டவளுக்கு அதிலிருந்த முன்னூறு பேரில் ரகசிய சிநேகிதன் யாராய் இருக்க முடியும் என்பது விளங்கவில்லை!



## 14

'ரகசிய சிநேகிதன்' பற்றி எதுவும் துப்பு கிடைக்கிறதா என, தன் முகநூல் நண்பர்களின் பட்டியலைப் பார்த்த கீதாஞ்சலிக்குத் தலைச் சுற்றியது.

இத்தனை நபர்களில் யாரையென்று அவள் சந்தேகிப்பது? இவனா? இல்லை.. இவனா? ஒரு வேளை அவனாக இருக்குமோ?

அத்துடன், அந்த சுடிதார் டிஸைனர் முகநூல் பக்கத்தை யார் வேண்டுமானாலும் பார்வையிடலாம் எனும் போது, 'ரகசிய சிநேகிதன்' இவளுடைய நண்பர்கள் வட்டத்தில் தான் இருக்க வேண்டுமென்று ஒன்றும் கட்டாயமில்லையே?

குறிப்பு என்றானே.. எதில் குறிப்பு கொடுத்திருப்பான்? இந்தக் கடிதத்திலா?

பூதக் கண்ணாடி வைத்து பார்க்காதது ஒன்று தான் குறை என்பது போன்று, உற்று உற்று மேலிருந்து கீழாக நூறு முறை கடிதத்தைத் திரும்ப, திரும்ப படித்து பார்த்தாலும், அவளுக்கு அதில் ஒன்றும் புலப்பட்ட பாடில்லை.



ஒவ்வொரு கடிதமும், ஒவ்வொரு இடத்திலிருந்து தபால் செய்யப்பட்டிருக்கும் போல! வேறு வேறு தபால் முத்திரைகள்! இதில், ஒரு இடத்தில் கூட அவளுக்குத் தெரிந்தவர்கள் இல்லையே?

ஒரு வேளை கை கடிகாரத்தில் எதுவும் ஒட்டியிருப்பானோ என்று அதை அப்படியும் இப்படியுமாக திருப்பி, திருப்பிப் பார்த்தாள். கடிகாரத்தின் பின் புறம், அதன் பெயரும் அது செய்யப்பட்ட இடமும் தான் போட்டிருந்தது. இதில் எங்கேயிருக்கிறது குறிப்பு?!

'இப்படி பைத்தியம் மாதிரி அவளைச் சுற்ற விட்டு விட்டானே?' என்று வந்த எரிச்சலில் அவன் யாராக இருந்தால் தனக்கு என்னவென்று கோபம் கனன்றது!

இவன் யாரென்று தெரிந்துக் கொண்டு அவள் என்ன செய்யப் போகிறாள்? அவன் நினைப்பது மாதிரி அவளுக்கு ஒன்றுமில்லை என்று சொல்லப் போகிறேனா?

சிவப்பு கொடியைக் காட்டுவதற்கு அவன் யாரென்று தெரிந்தால் என்ன? தெரியாவிட்டால் தான் என்ன? எதற்கு, இப்படி நிம்மதியைத் தொலைத்து விட்டு துப்பு கண்டுபிடிக்கிறேன் பேர் வழியென்று அலைய வேண்டும் என்று எரிச்சல் மண்ட சலித்துக் கொண்டாள்.

ஆனால்... அவன் யாரென்று தெரிந்தால் தானே அவனிடம் போய், இது மாதிரி செய்யாதே என்று சொல்ல முடியும்? யாரென்றே தெரியாவிட்டால் அதை எப்படிச் சொல்வது?

இப்பொழுது போன்றே அவன் தொடர்ந்து கடிதங்களும், பரிசுகளும் அனுப்பிக் கொண்டேயிருந்தால் என்ன செய்வது?

எத்தனை நாட்களுக்கு அண்ணனிடமிருந்தும், மதினியிடமிருந்தும் அதை மறைக்க முடியும்? பின்னர்

தெரிய வந்தால், அவர்கள் நம்பிக்கையை அவள் கெடுத்து விட்டாள் என்று நினைக்க மாட்டார்களா? எத்தனை பெரிய அவச்சொல் அது?

அவர்களுக்குத் திருமணமானப் புதிதிலிருந்து, எந்த மறுப்பும் சொல்லாமல், சிறு சுணக்கத்தைக் கூட முகத்தில் காட்டாமல், தன்னை அவர்களுடனேயே தங்க வைத்துக் கொண்டவர்கள் முன், எப்படி அவள் தலை நிமிர்ந்து நிற்பாள்?

அண்ணனாவது தன் ரத்தம். மதினி...? அவர்கள் தன் மீது வைத்த நம்பிக்கை பொய்த்து போய் விட்டதென்று நினைக்கும் மாதிரி தான் நடந்து கொண்டால் எப்படி?

ஒன்று, இவள் மசிய மாட்டாள் என அவனாகவே உணர்ந்து, தன் எண்ணத்தை அவன் மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லை, அவனைக் கண்டுபிடித்து, அவன் எண்ணத்தை இவள் மாற்ற வைக்க வேண்டும்.

எது முதலில் நடந்தாலும் சரி தான்!

ஆனால், அவன் கடிதத்தைப் பார்த்தால் அவனாக இப்போதைக்கு நிறுத்துவது போன்றும் தோன்றவில்லையே?

இவன் யார் அவளுக்கு துணிமணியும் மற்றதும் வாங்கிக் கொடுக்க? எந்தத் தைரியத்தில் வாங்கினான்? தூக்கிக் குப்பையில் போடவும் மனமில்லை. அவன் யாரென்று தெரிந்த பின்பு - 'இந்தாப்பா! நீ வாங்கி கொடுத்தது' என்று கொடுத்து விட வேண்டும்.

ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம்! அவன் என்னை, என் நடவடிக்கைகளை நித்தம் நித்தம் கவனிப்பவன் என்று மட்டும் நன்றாகத் தெரிகிறது. யாராக இருக்கக் கூடும்?



கண்ணைத் திறந்துக் கொண்டு பார்த்திருந்தால், கண் முன்னே இருப்பது அவளுக்குத் தெரிந்திருக்கும்!

'இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி... எங்கெங்கோ அலைகின்றார் ஞானத் தங்கமே... அவர் ஏதும் அறியாரடி ஞானத் தங்கமே!' என்ற கதை தான் ஆனது அவளுக்கும்!

இதே யோசனையில் மூழ்கி எரிச்சலுற்றவள், நிர்மல வேணி முரளி நந்தனுடன் கடைக்குப் போயிருந்த வேளையில் உதயை அழைத்து, "எனக்கு வீட்டில் ரொம்ப போர் அடிக்குது, உதய். உனக்கு இன்றைக்கு காலேஜ் லீவுன்னு சொல்லியிருந்தே, இல்ல? அதான் உன் கூட மொக்கை போடலாம்னு உன்னைக் கூப்பிட்டேன். வெளியே இருக்கியா?" என்றாள்.

"நான் இப்போ கோடம்பாக்கம் ப்ரிட்ஜ் கிட்டே இருக்கேன், கீதா." என்ற உதய் ஆனந்த், சிறு இடை வெளி விட்டு, "ரொம்ப போர் அடிச்சால் என்னோட ஒரு இடத்துக்கு வர்றியா?" என்று வினவ,

கேள்வியேதுமின்றி, ஆர்வத்துடன் கீதாஞ்சலியும், "ஓ! வரேன்! இன்னமும் பத்து நிமிஷத்தில் தயாரா இருக்கேன்" என்று பேசியை வைத்துவிட்டு, ஐந்தே நிமிடங்களில் தயாராகி நின்றாள்.

விருகம்பாக்கத்திற்கு வந்து, கீதாஞ்சலியையும் தன்னோடு அழைத்துக் கொண்டு போகும் வழியில், "உன்னை எங்கே கூட்டிகிட்டு போறேன்? என்ன, ஏதுன்னு ஒன்றும் கேட்க மாட்டியா? வர்றியான்னு கேட்டவுடனே தலையாட்டிட்டு கிளம்பிட்டே! உன்னை, உங்க வீட்டில் நல்லாவே வளர்க்கலை! எந்த நம்பிக்கையில் என்னோட வந்தே?" என்ற உதய் ஆனந்த்,

அவளை வம்புக்கு இழுக்கும் நோக்கத்துடன் பேச்சைத் தொடங்கினான்.

காற்றில் பறந்த முடிக் கற்றைகளை ஒதுக்கி விட்டவள், ''ஆனால் உன்னை உங்க வீட்டில் ரொம்ப ஒழுங்கா வளர்த்து இருக்காங்க, இல்ல? அந்த நம்பிக்கையில் தான் கிளம்பி வந்தேன்'' என்று நகைக்க, அவளின் சிரித்த முகத்தைக் கண்ணாடியில் பார்த்த உதய் ஆனந்தும்,

''பரவாயில்லை! பிழைச்சுக்குவே! என்னைப் புகழ்ந்த மாதிரியும் ஆச்சு! ஒழுங்கா இருந்துக்கோடா மகனேன்னு மிரட்டின மாதிரியும் ஆச்சு!'' என மெச்சிக் கொண்டான்.

சிரிப்பும் பேச்சுமாகவே இருவரும் ஆவடியில் இருக்கும் அன்பகத்திற்கு வந்து சேர்ந்தனர்.

நுழைவு வாசலில் இருந்த பெயர் பலகையில் பார்வையை ஓட்டியவள், உதயைக் கேள்வியுடன் நோக்க,

''அன்பகத்திற்கு உன்னை அன்போடு அழைக்கிறேன், கீதா. உன் வரவு நல்வரவு ஆகட்டும்'' என அவளைப் புன்னகையோடு வாழ்த்தி வரவேற்றவன்,

''மாற்றுத் திறனாளி குழந்தைகள், அவங்களால முடிந்த அளவிற்கு வெளி உலகத்தில் சுதந்திரமா வாழ வகை செய்யும் இடம் தான் இந்த அன்பகம். இதை ஒரு ஓய்வு பெற்ற கல்லூரி முதல்வர் தொடங்கி, நடத்திட்டு இருக்கார். வா, உனக்கு அவரை அறிமுகப்படுத்துறேன்'' என அன்பகத்தைப் பற்றிய அடிப்படை விவரங்களை அளித்தபடியே, வண்டியை நிறுத்திவிட்டு கீதாஞ்சலியை உள்ளே அழைத்துச் சென்றான்.

நடந்து போகும் போதே, ''இந்த இடத்தோட பெயர் மட்டும் அன்பகம் இல்லை, கீதா. இங்கே வேலைச் செய்றவங்க அகமும் அன்பால் தான் நிறைஞ்சு இருக்கு



நீயே பாரு!'' என வழியில் விளையாடிக் கொண்டிருக்கும் பிள்ளைகளையும் அவர்களுக்கு உதவியாக இருந்தவர்களையும் அவன் சுட்டிக் காட்டவும், அதில் ஒரு குழந்தை இவனுக்கு மகிழ்ச்சியுடன் கையசைத்ததைப் பார்த்தவளுக்கு, உதய் இங்கே வழக்கமாக வருபவன் என்று புரிந்தாலும் அதையே அவனிடம் கேட்கவும் செய்தாள்.

''ம்ம். வருவேன். கண்டிப்பா வாரத்தில் ஒரு நாள். விசேஷ நாட்களில். அப்புறம் எப்போ முடியுதோ அப்போவெல்லாம். என்னோட நண்பர்கள் சில பேர் மற்ற நாளில் வருவாங்க.''

சுற்றிலும் பார்த்துக் கொண்டே நடந்த கீதாஞ்சலிக்கு, என்ன வகை உணர்ச்சிகள் அவளைத் தாக்கின என்று வரையறுத்து சொல்ல முடியாது.

அது அப்படியொன்றும் பெரிய இடமாக தோன்றவில்லை. மொத்தம் பத்து ஏக்கர் பரப்பளவில் கட்டிடங்கள் பெரிதும் சிறிதுமாக நான்கைந்து இருந்தது.

பெரிய வேப்ப மரங்களும், அரச மரங்களும் நிழல் தர, சில குழந்தைகள், அவர்களின் காப்பாளர்களுடன் ஆங்காங்கே விளையாடிக் கொண்டிருந்தனர்.

ஒரு முகத்தில் கூட சலிப்போ, சின்ன சோகமோ இல்லை! மகிழ்ச்சியும் நிறைவுமே நிறைந்திருந்தது!

முதலாவதாக இருந்த கட்டிடத்தில் நுழையும் போதே முதன்மையாக கீதாஞ்சலியின் பார்வையில் பட்டது, மாற்று திறனாளிகள் சக்கர நாற்காலியில் எந்தச் சிரமுமின்றி போகவும் வரவும் இருந்த வசதி தான். படிகளுடன் சேர்த்து, எல்லா இடங்களிலும் சக்கர நாற்காலி போய் வர வசதி செய்யப்பட்டிருந்தது. கூடவே, அனைத்துச் சுவற்றின் பக்கவாட்டிலும் கைப்பிடியும் இருந்தது.

கீதாஞ்சலியின் பார்வை பதிந்த இடத்தைக் கண்டவன், ''இது மாதிரி வசதி - வங்கிகள், கடை, ஸ்கூல் இப்படி எல்லா இடங்களிலும் இருக்கணும். வீல்-சேரில் இருக்கிறவங்களுக்கு இது மாதிரி வசதியில்லைன்னா எவ்வளவு கஷ்டம்? நாம அதை நினைக்கிறதே இல்லை. அவங்களையும் கண்டுக்கிறது இல்லை'' என்று ஆதங்கத்துடன் சொல்ல, கவலையுடன் ஆமோதிப்பாக தலையசைத்தாள் அவள்.

குழந்தைகளைப் பயிற்றுவிக்கும் அறைக்குள் அவளுடன் நுழைந்தவனை, ''உதயண்ணா!'' என்று ஆறு வயது மதிக்கத் தக்க குழந்தை ஒன்று நடக்க முடியாமல் பரபரப்புடன் எதிர் கொண்டு,

''நீங்க சொல்லிக் கொடுத்த எக்சர்சைஸ்-ஐ நான் விடாமல் செய்துட்டு இருக்கேனே. சார்கிட்டே வேணும்னாலும் கேட்டுப் பாருங்க'' என்று ஆர்வத்துடன் சொன்னது.

அந்தச் சிறுவனின் உயரத்துக்குக் குனிந்து ஒரு முட்டியை மடக்கி அமர்ந்தவன், ''நீ சொன்னாலே போதும், பாலு. எனக்குத் தான் தெரியுமே நீ சமத்து பையன்னு!'' என்று அவனின் முடியைக் கலைத்து விளையாட, பாலுவின் முகம் பிரகாசமானது.

சிறுவனுடன் நடந்தபடியே, ''இப்போ, நீ போய் விளையாடு, பாலு! எக்சர்சைஸ் செய்ற நேரத்தில் உன்னை நான் பார்க்கிறேன்'' என அவனை அனுப்பி வைத்தவன், அங்கிருந்த அறுபது வயது மதிக்கத் தக்கவரை நோக்கி நடந்தான்.

தலை முழுதும் நரைத்திருக்க, நெற்றியில் மிக லேசான சுருக்கத்துடன் இருந்தவரின் முகத்தில் மாறாத புன்னகை. கண்களில் அறிவொளியும், காருண்யமும் ஒளிர்ந்தது.



மென் புன்னகையுடனே உதய் ஆனந்தை வரவேற்றவரிடம் முகமன் கூறிய உதய், ''கீதா, அய்யா தான் மதியழகன். அன்பகத்தோட உயிர் நாடி. இவங்க கீதாஞ்சலி, அய்யா! எனக்கு வேண்டியவங்க. நம்ம அன்பகத்தைக் காண்பிக்கலாம்னு கூப்பிட்டுட்டு வந்தேன்'' என்றவன்,

அவர் ஒரு சிறுவனின் காலைத் தடவிக் கொண்டிருப்பதைப் பார்த்து, ''ஒன்றும் பிரச்சனையில்லையே?'' என அக்கறையுடன் விசாரித்தான்.

''வாம்மா!'' எனக் கீதாஞ்சலியை வரவேற்றவர், ''அதெல்லாம் ஒன்றுமில்லை, உதய். சரவணன், நீ சொல்லிக் கொடுத்த பயிற்சியை அதிகமா செய்திருப்பான்னு நினைக்கிறேன். கலா வந்து, அவனுக்கு வலிக்குதுன்னு சொன்னாங்க'' எனவும்,

குனிந்து சரவணனைப் பரிசோதித்த உதய் ஆனந்த், ''ரத்தம் கட்டியிருக்கும் போல.. ஒரு நாளைக்கு கொஞ்சம் நேரம் தானே நான் உன்னை எக்சர்சைஸ் செய்ய சொன்னேன், சரவணா?'' என மென்மையாகக் கேட்க,

''நீங்க தானே இந்த எக்சர்சைஸ் செய்தால் சீக்கிரம் சரியா ஆகிடும்னு சொன்னீங்க, அண்ணா. அதான், நிறைய நேரம் செய்தால் இன்னமும் சீக்கிரம் குணமாகும்னு நினைச்சேன்!'' எனப் பரிதாபமாகக் கூற, கேட்டுக் கொண்டிருந்த கீதாஞ்சலிக்கு கண்கள் கலங்கியது.

ஆனால உதய் ஆனந்தோ, ''ம்ம்.. சரியா தான் யோசிச்சு இருக்கே'' என்று இலகுவாகவே ஒப்புக் கொண்டு, ''ஆனால் பாரு சரவணா.. தினமும் பால் குடிச்சால் நல்லா வளருவோம். அதற்காக மொத்த அண்டா பாலையும் ஒரே நாளில் குடிக்க முடியாது, இல்லையா? அப்படிக் குடித்தால் வயிறு வலி தானே வரும்?'' என குழந்தைக்குப் புரியும்படி விளக்கவும்,

சிறுவனும், ''ஆமாம் இல்ல? இனி மேல் செய்யலை அண்ணா!'' என்று விட்டு போனான்.

''அதுக்குத் தான் நீ வரணும்னு சொல்றது, உதய்'' என்று மதியழகன் பெருமையுடன் கூற, தன்னையே பெருமைப்படுத்தியது போன்று உணர்ந்தாள் கீதாஞ்சலி.

அவரைப் பார்த்து புன்னகைத்தவன், ''நான் வந்த வேலைய்யப் போய் பார்க்கிறேன், அய்யா'' என்று கூறி, ''கீதா...!'' என்று தயக்கத்துடன் இழுக்க,

''உனக்கு வேண்டியவங்களை நான் பத்திரமா பார்த்துக்கிறேன். என்னை நம்பி அனுப்பி வை.'' என்று சிரிப்புடனே கீதாஞ்சலியுடன் விடைபெற்றார் மதியழகன்.

அவருடன் நடந்தபடியே, ''நீங்க ரொம்ப பெரிய சேவை செய்றீங்க, அய்யா!'' எனக் கீதாஞ்சலி உணர்ந்து கூற,

மதியழகன், ''என்ன பெரிய சேவைம்மா? ஏதோ என்னால முடிஞ்சுது. உதய் மாதிரி இன்னமும் நிறைய பேரு காசு வாங்காமல் அவங்களோட நேரத்தையும், உடல் உழைப்பையும் போடறதுனால தான், எட்டு குழந்தைகளோட ஆரம்பிச்சது, இப்போ நூற்றைம்பது குழந்தைகளுக்கு மேலே வளர்ந்து நிற்குது'' என்றார்.

''இங்கேயிருக்க முக்கால்வாசி குழந்தைகள் பெருமூளை வாதத்தினால் (cerebral palsy) பாதிக்கப்பட்டவங்க. சின்னச் சின்ன வேலைகளைக் கூட அவங்களால் செய்ய முடியாது. அவங்களுக்கு அதைச் செய்ய பயிற்சி கொடுத்து, கொஞ்சமாவது அவங்க வேலைகளை அவங்களாகவே செய்ய வைக்க முயற்சி எடுக்கிறோம். சின்ன முன்னேற்றத்திலேயே அவங்க தன்னம்பிக்கை வளர்வதைப் பார்க்க எத்தனை சந்தோஷமா இருக்கும்.



தெரியுமாம்மா?'' அங்கிருந்த குழந்தைகளைப் பார்த்து சந்தோஷித்தபடியே அவர் கூற, தொண்டையில் அடைத்ததை விழுங்கினாள் கீதாஞ்சலி.

தனக்கு ஒரு மாதம் ஒரு காலில் அடிப்பட்டதற்கே வலியில் அவள் அப்படித் துடித்தாளே? இங்கே பார்த்தால்.... இரண்டு காலிருந்தும் நடக்க முடியாமல், கையிருந்தும் அதனால் பயனற்று, தன் கழுத்தின் எடையைக் கூட தாங்க முடியாமல்...! கடவுளே!

நல்ல ஆரோக்கியத்தோடு என்னைப் படைத்ததற்கு உனக்கு நன்றி, இறைவா! இனி அது வலிக்கிறது, இது வலிக்கிறது என்று குறை சொல்ல மாட்டேன் என்று உறுதி பூண்டாள்.

அன்பகத்தைச் சுற்றிக் காண்பித்தவர், ''இப்போ இங்கே சின்னதா பள்ளியும் ஆரம்பிச்சு இருக்கோம். இங்கேயிருந்து சில குழந்தைகள், எல்லோரும் படிக்கும் ரெகுலர் பள்ளியில் போய் சேர்ந்து இருக்காங்க என்பது எங்களுக்கு ரொம்ப பெரிய சந்தோஷம். வெளிநாட்டிலிருந்தும், அரசாங்கத்திடமிருந்தும் எங்களுக்கு உதவி கிடைக்குது. இன்னமும் நிறைய செய்யணும்னு ஆசையிருக்கு. பார்ப்போம்'' என்ற விவரங்கள் தந்த படியே திரும்ப அவளைப் பயிற்சி அறையிலிருந்த உதய் ஆனந்திடம் கொண்டு வந்து சேர்த்துவிட்டு, வேலையிருப்பதாகச் சென்று விட்டார்.

சில பயிற்சி சாதனங்கள் கைகளுக்கு, சிலது கால்களுக்கு என வித விதமான சாதனங்கள் அங்கு இருந்தன.

பயிற்சி செய்வதற்கு தோதாக, கருப்பு நிறத்தில் கையில்லாத டி-ஷர்ட்டும், பேண்ட்டும் அணிந்தபடி உதய் செய்வதை, அவனைத் தொந்தரவு செய்யாமல்,

அறையின் மூலையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த வளுக்கு நெஞ்சு கொள்ளாத பெருமை இருந்தது.

குழந்தைகளோடு அவனும் ஒரு குழந்தையாக மாறி, அவர்களை ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்தி பயிற்சி யையே ஒரு விளையாட்டு மாதிரி அவர்களைச் செய்ய வைத்துக் கொண்டிருந்தான்.

'பிஸியோதெரபிஸ்ட் இங்கே இருக்க குழந்தைகளுக்கு ரொம்ப முக்கிய தேவைம்மா. அதை விட முக்கிய தேவை நம்மளோட நேரம். பணம் கொடுக்கக் கூட ஆட்கள் இருக்காங்க. ஆனால், தங்களோட நேரத்தைக் கொடுக்க தான் இங்கே யாராலும் முடியலை. அப்படிப் பார்த்தால், உதய் செய்றது எத்தனை பெரிய உதவி?' என அவனைப் பற்றி பெருமிதமாக அவளிடம் உயர்த்திப் பேசியதை நினைவு கூர்ந்தவளுக்கு, அப்பொழுது போன்றே இப் பொழுதும் உதயை நினைத்து கர்வம் தோன்றியது!

அது அவன் அவளின் நண்பன் என்பதினால் மட்டுமா இல்லை அதற்கும் நெருங்கிய இடத்தில் அவனை அவள் வைத்திருப்பதினாலா என்பது அவளே அறியாத ஒன்று!

உதய் பயிற்சி முடிந்து வரும் வரையில், அங்கிருந்த மற்ற பிள்ளைகளோடு விளையாடிக் கொண்டிருந்தவள், இவளை நோக்கி அழுத்தமான நடையுடன் வருபவனையே கண்களில் பிரமிப்பும் பெருமையுமாக பார்த்திருந்தாள்.

அவளுடைய பார்வை அவனுள் ரசாயன மாற்றங் களை உருவாக்குவதை உணர்ந்தவன், என்னவென்பது அவளை நோக்கி கேள்வியாக புருவத்தை உயர்த்தினான்.

ஒன்றுமில்லை என்று தலையாட்டியவள் முகத்தைச் சற்றே திருப்பிக் கொள்ள, பக்கவாட்டில் தெரிந்த அவளது

மிருதுவான [illegible] பார்த்தவன் தொண்டையைச் செருமிக் கொண்டு, ''நல்லா பொழுது போச்சா?'' என முயன்று சாதாரணமாக வினவியபடியே வண்டியை நோக்கி நடக்கலானான்.

அதற்கு பதில் கூறாமல், தலையைச் சாய்த்து, ''நீ இங்கே வர்றதா ஏன் என்னிடம் சொல்லவேயில்லை, உதய்? நான் உங்க வீட்டில் இருந்தப்போ கூட, திடீர்னு ஒவ்வொரு நாள் காணாமல் போனது இதுக்காக தானா? ஏன் சொல்லலை?'' என மென்மையாகக் கேட்க,

''ஏன் சொல்லணும்?'' என்று அவளிடம் திருப்பிக் கேட்டு கீதாஞ்சலியைத் திகைக்க வைத்தான்.

'ஆமாம்... அவன் ஏன் சொல்லணும்?' என்ற கேள் விக்கு அவளிடத்தில் விடையில்லை.

அவளது மௌனம் நீடிக்கவும், ''இன்றைக்கும் உனக்கு இது தெரிஞ்சு இருக்காது, கீதா. உனக்கு போர் அடிச்ச துன்னு சொன்னதால கூட்டிகிட்டு வந்தேன். நான் செய் றதைச் சொல்லித்தான் உனக்கு என்னைப் பற்றித் தெரி யணும்னா.. தெரியும் போது தெரியட்டுமே!'' என்றான் இலகுவாகவே.

''சரியான கல்லுளி மங்கன்...'' என்று செல்லமாக அவள் கடிந்து கொள்ள,

''என்னைப் பற்றி நானே எப்படி சொல்றது? நல்லவன்; வல்லவன்; நாலும் தெரிந்தவன் என்றால் சரியான ஸெல்ஃப் டப்பா என்று என்னைக் கிண்டல் செய்ய நானே ஒரு வாய்ப்பு கொடுக்கிற மாதிரி ஆகிடாது?!'' என்று கேலியாக புருவம் உயர்த்தினான்.

''நீ இப்படி சொல்லிட்டே... ஆனால் உன்னைப் பற்றி...'' மேலும் கீதாஞ்சலி ஏதோ சொல்லத் தயங்கு வது போன்று தோன்றவும்,

என்னவென்று கேட்ட உதயிடம், "இல்லை.. நம்ம நாட்டிலேயே இந்த மாதிரி உதவி செய்ய ஆயிரம் பேர் தேவைப்படும் போது... நீயேன் உன் பிரண்டை வெளி நாட்டுக்குப் போக அறிவுரை சொன்னே?" என்று மிகுந்த தயக்கத்துடன் வினவினாள்.

அவளைக் குறுகுறுப்போடு பார்த்தவன், "இது.." என்று இழுத்து விட்டு, "இதுவும் கல்யாண வீட்டில் வைச்சு கேட்டது தானா?" என்று கேள்வி தொடுத்து அவளை அசடு வழிய வைத்தான்.

சமாளிக்கும் விதமாக, "இல்லை... உன்னிடம் விளக்கமெல்லாம் கேட்கலை, உதய்! நீ விளக்கம் சொல்லணும்னு நான் எதிர்பார்க்கவுமில்லை. நாம கேலியா, கிண்டலா பேசற எல்லாத்துக்கும் விளக்கம் சொல்லவும் முடியாதுதான். இருந்தாலும்.. ஒரே மண்டை குடைச்சலா இருக்கு. நீ ஏதாவது அர்த்தத்தோட தான் சொல்லியிருப்பே..." என அவளே கேள்வியும் கேட்டு, அவளே பதிலும் கூறிக் கொள்ள, வாய் விட்டு நகைத்தான் அவன்.

"பார்த்து... ரொம்ப குடைஞ்சு, கொஞ்ச நஞ்சம் உள்ளே இருக்கிறது கூட காது வழியா வெளியே வந்துடப் போகுது!" என அவளைக் கேலி செய்தவன், "ஆக.. நான் ஏதோ அர்த்தத்தோடு தான் சொல்லியிருப்பேன் என்று நம்பறே?" என்றவாறே அவளைக் கூர்மையாகப் பார்த்தான்.

"நம்பிக்கை தான் வாழ்க்கை! நம்பு உதய்! நம்பு!" என்று குறும்புடன் கண்சிமிட்டி சிரித்தவள்,

பின்னர் தீவிரமான முகபாவத்தோடு, "பின்னே? நம்பாமல் எப்படி, உதய்? அது கூடவா இத்தனை



நாளில் தெரியாமல் இருக்கும்? அப்படியே அனர்த்தமா இருந்தாலும் எதுக்கும் நான் இனி உன்னோட சண்டைப் போட மாட்டேன். முதலில் உன்னிடம் வந்து கேட்பேன்" என்று உறுதியும் அழுத்தமுமாகக் கூற, அவளை மகிழ்ச்சியோடு ஏறிட்டான் உதய்.

"எப்படியோ அனர்த்தமாகவும் இருக்கலாம்னு சொல்லிட்டே!" என நகைத்தவன் கேலியை விடுத்து, அவள் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லும் விதமாக,

"நாட்டுக்கு சேவை செய்யறேன் என்று சொல்லிட்டு, வீட்டுக்கு ஒன்றும் செய்யாமல் இருக்க முடியாதில்ல, கீதா? தனி மனிதன் நல்லாயிருந்தால் தானே அவனால் மற்றவங்களுக்கும் உபயோகம்? இல்லைன்னா அவனுக்கே இல்ல மற்றவங்க உதவி தேவைப்படும்?" என்று ஆரம்பித்தான்.

"அதுக்காக எல்லோரும் வெளிநாடு போகணுமா? இங்கேயிருந்து உதவ முடியாதா? இப்போ நீ செய்யலையா?"

"நான் செய்றேன் என்பதற்காக எல்லோரும் அதையே செய்யணுமா? நீயேன் டீச்சிங் எடுக்காமல் ஆடிட்டிங் எடுத்தே?"

"அது.. இது தான் என்னோட விருப்பம்..."

"அதே மாதிரி தான் அதுவும். எல்லாமே அவங்கவங்க விருப்பம் தான். ஒருத்தங்க இங்கே தான் இருக்கணும்னு யாரும், யாரையும் கட்டாயப்படுத்த முடியாது. வெளி நாட்டுக்குப் போய் சம்பாதிக்கிறது என்ன அவ்வளவு பெரிய குற்றமா? திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு. இல்லையா?" என்று அவளையே கேள்வி கேட்டவன் தொடர்ந்து.

''கௌதமுக்கு ரெண்டு தங்கை. பொருளாதார ரீதியில் தன்னிறைவு அடையாத நிலையிலிருந்த குடும்பம். அப்பா இல்லை. இவன் நல்லா சம்பாதித்தால் தான் குடும்பம் முன்னேற முடியும். நான் வெளிநாட்டுக்கு போறேன் என்று தெரிந்ததும், கௌதம் அம்மாவிற்கு, அவங்க மகனும் அதே மாதிரி வெளிநாட்டில் போய் படிச்சு, நல்லா சம்பாதிக்கணும்னு ஆசை. என்னை வழிக் காட்டவும், அறிவுரை சொல்லவும் சொன்னாங்க'' என்றான்.

''..........''

''அறிவுரை என்றால் யார் காது கொடுத்து கேட்பாங்க? அதனால் தான் அவனோட ஆசையை நான் கொஞ்சம் பயன்படுத்தி, கௌதமுக்கு மேலும் ஆசை காட்டினேன். அங்கே போனால் அவனே புரிஞ்சுக்க போறான். இல்லை, பட்டு தெரிஞ்சுக்க போறான்.''

''ஓ! அப்படியா?''

அவளது வியப்பை பொருட்படுத்தாது, ''யாரும் ஒருத்தங்க சொல்றதுனால வெளிநாட்டுக்கு போறதோ, இல்லை அதனால் போகாமல் இருப்பதோ இல்லை. தன் முயற்சி தான். இப்பவும் நான் சொன்னது தப்பு என்று நினைக்கலை, கீதா'' என்று அவனால் முடிந்த வரை விளக்கம் கொடுத்தான்.

யோசனையில் ஆழ்ந்திருந்தவளிடம், ''இப்போ மதியழகன் சார் சொன்னாரே... வெளிநாட்டிலிருந்தும் உதவி கிடைக்கிறதா.. அது யார் செய்றாங்கன்னு நினைக்கிறே? உதவி செய்றவங்களில் கௌதமும் அடக்கம். அங்கேயிருந்து பயிற்சிக்கு தேவையான இயந்திரங்களோ இல்லை பண உதவியோ அவனால முடிஞ்சதைச் செய்துட்டு இருக்கான்'' என்றான்.



உதயின் வண்டியை நோக்கி நடந்தவாறே, ''ஓ! ரொம்ப நல்ல விஷயம்!'' என்று மகிழ்ந்தவள், ''எதையும் வெளியிலிருந்து பார்த்துட்டு மட்டும், எதையும் யாரையும் ஜட்ஜ் செய்ய கூடாதில்ல, உதய்?'' என்றாள் சின்னக் குரலில்.

''ரொம்ப சரி!'' என அவளை ஒத்துப் பேசியவன், ''எல்லாத்தையும் பார்த்து, புரிஞ்சுக்கணும். ஆனால் பார்ப்பதை மட்டுமே வைச்சு எந்த முடிவுக்கும் வந்திடக் கூடாது'' என்றபடியே வண்டியைக் கிளப்பினான்.



15

ஒருவரின் செயல்களையும், பேச்சையும் கொண்டு, 'அவர் இப்படித் தான்' என்று முடிவு கட்டுவது என்பது மேம்போக்கான ஒன்று மட்டுமல்ல... முட்டாள்தனமானதும் கூட என்று அன்று அனுபவப்பூர்வமாக உணர்ந்தாள் கீதாஞ்சலி.

அது, சில பார்வையற்றவர்கள் யானையை அவரவருக்குத் தகுந்த படி ஆராய்ந்து, அறிந்த கதை ஆகிவிடாதா?

ஒருவர் மீது நன்மதிப்பு ஏற்பட வேண்டுமானால், அவர் செய்யும் நான்கு நல்ல காரியங்களைக் கண்ணால் கண்டால் மட்டும் போதுமா? அப்படிப் பார்த்தால் ஒரு பெண்ணைக் கவர வேண்டும் என்று ஒருவன் நினைத்தால், அவன் நல்லவன் மாதிரி நாடகமாடினால் போதுமானதாகிவிடுமே?

ஒருவேளை இத்தகைய மேலோட்டமான பார்வையால் தான், சமுதாயத்தில் பல பெண்கள் நட்பு அல்லது காதல் என்ற பெயரில் தவறானவர்களைத் தேர்ந்தெடுக்கிறார்களோ?

உண்மைத் தன்மையை அறியாமல் ஒருவரைப் பற்றி தீர்மானம் செய்வது பலவீனமான உள்ளத்தின் அறிகுறி அல்லவா?

உதயுடன் ஒரு தோழியாக பழகும் போது தான் அவனைப் பற்றி முழுவதுமாகப் புரிந்து கொள்ள முடிகிறது.

''பார்ப்பதை மட்டுமே வைத்துக் கொண்டு எந்த முடிவுக்கும் வரக் கூடாது'' என்று உதய் சொன்னது எத்தனை உண்மையான வார்த்தைகள்?

வீட்டிற்கு வந்ததிலிருந்து சோபாவில் அமர்ந்து இதே ரீதியில் சிந்தித்துக் கொண்டிருந்தவளை, வீட்டினுள்ளே நுழைந்த நிர்மலவேணியின் குரல் நிகழ்காலத்திற்கு அழைத்து வந்தது.

''அன்பகத்திற்கு உன்னை அழைச்சுட்டு போறதா சொன்னானே, உதய்? அதற்குள் வந்துட்டியா, கீதா? அவன் எங்கே?''

''நான் வந்து ஒரு பத்து நிமிஷம் தான் இருக்கும், மதினி. வீட்டில் யாருமில்லை என்றதும் அவன் அப்படியே கிளம்பிட்டான்.''

''ஓ! அன்பகம் எப்படியிருந்தது? பிடிச்சிருந்ததா?''

''ரொம்ப...'' என்று விழி மலர்த்தியவள், ''உதய் இந்த மாதிரி சர்வீஸ் செய்றது எனக்கு இதுவரையில் தெரியவே தெரியாது, மதினி. அங்கே மதியழகன் அய்யா நம்ம உதயை எத்தனை உயர்த்திப் பேசினார் தெரியுமா? கேட்கவே ரொம்ப சந்தோஷமா இருந்தது'' என்றதைத் தொடர்ந்து தன் அனுபவத்தைப் பகிர்ந்தவளின் குரலில் உற்சாகம் துள்ளி குதிக்க, அவளின் முக மலர்ச்சி நிர்மலவேணியையும் தொற்றிக் கொண்டது.



''சொல்லப் போனால், உதய்க்கு பிஸியோதெரபியில் ஆர்வம் வந்ததே அன்பகத்தினால் தான், கீதா. ஸ்கூல் படிக்கும் போதிலிருந்தே எங்க வீட்டுக்குப் பக்கத்திலிருந்தவர் மூலமா வந்த ஆர்வம்'' என்றவள், ''என் கல்யாணத்தன்றைக்கு கூட ஆவடி போகணும்னு குதிச்சுட்டு இருந்தான். நல்ல நாளும் பொழுதும்னா அங்கே மதிய சாப்பாடு நம்ம பொறுப்பு'' என உபரித் தகவலையும் அவள் இலவசமாக வழங்க, உதயைப் பற்றி அவள் போட்டிருந்த இன்னுமொரு கண் கட்டும் அவிழ்ந்தது கீதாஞ்சலிக்கு.

இதற்காக தான் அன்று அப்படி அவன் அவசரப்படுத்தியதா? இது தெரியாமல் அவனை என்னவெல்லாம் அன்றைக்கு கரித்து கொட்டியிருப்பாள்?

உள்ளம் குறுகுறுக்க, ''அங்கேயிருக்கும் பசங்களும் எவ்வளவு அன்பு தெரியுமா, மதினி? உதய் போனதும் அண்ணா - அண்ணான்னு சுற்றி சுற்றி வந்தாங்க'' என்றாள் மெல்ல.

''ம். கல்யாண நாள், பிறந்த நாள் என்றால் மதியழகன் சார் பசங்க... பொண்ணுங்க பேர் எல்லாம் போட்டு உதய்க்கு வாழ்த்து தகவல் அனுப்பிடுவாங்க.''

'வரிசையாகப் பெண் பிள்ளைகளின் பெயரை வாசிக்க வேண்டுமாக்கும்?' என அன்று எரிச்சல்பட்டதை நினைக்கும் போது இன்று மிகவும் சங்கடமாக உணர்ந்தாள்.

தனது குற்ற உணர்ச்சியில் கீதாஞ்சலி தவித்துக் கொண்டிருக்க, நிர்மலவேணி, ''நீங்க அன்பகம் போயிட்டு வர்றதுக்குள் வந்துடலாம்னு நினைச்சேன். ஆனால் முரளி இந்தப் பொம்மை.. அந்தப் பொம்மை என்று எல்லாத்தையும் வாங்கித் தரச் சொல்லிப் பாடாய்ப்படுத்தி எடுத்துட்டான். தேர்தல் நேரத்துல அரசியல்வாதிகள்

ஜனங்களுக்கு வாக்குறுதி தர்ற மாதிரி நானும் அப்புறம் வாங்கித் தரேன்னு வாக்குறுதி கொடுத்து, சிலதை மட்டும் இப்போ வாங்கிட்டு வந்தேன்'' என்று வாங்கி வந்த விளையாட்டுப் பொருட்களைத் தன் நாத்தனாரிடம் காண்பிக்க கடைப் பரப்பினாள்.

முரளி நந்தனை மடியில் அமர்த்திக் கொண்ட கீதாஞ்சலி, ''இந்தப் பொம்மை செம க்யூட்டா இருக்கு, மதினி. இதுவும் சூப்பர்'' என்று வாட்டத்தை மறைத்து ஒவ்வொன்றாகப் பார்வையிட்டுக் கொண்டிருக்கையில்,

நிர்மலவேணி, ''ஆங்! சொல்ல மறந்துட்டேன் பாரு, கீதா. நாம இன்றைக்கு வீட்டில் இல்லை என்பதால் அபார்ட்மென்ட் ஆபீசில், நம்ம வீட்டுக்கு வந்த பார்சலைக் கொடுத்திட்டு போய் இருக்கார் போஸ்ட் மேன். ரம்யாவுக்கு வந்த பார்சல்ன்னு நினைக்கிறேன்'' என்று கைப்பையிலிருந்த உறையை எடுத்து டீபாய் மீது வைத்தாள்.

'தன் மீது இத்தனை நம்பிக்கை வைத்திருக்கும் ஒரு ஜீவனிடம் ரகசிய சிநேகிதன் பற்றி எதுவும் சொல்லாமல் மறைக்கிறோமே?' என்ற குற்ற குறுகுறுப்பே கீதாஞ்சலியை அதற்கு மேல் நிர்மலவேணியின் முன்னால் உட்கார விடவில்லை.

குட்டிப் பையனை அருகில் அமர்த்திவிட்டு, ''நமக்கு சூடா காபி போட்டு எடுத்துட்டு வரேன், மதினி. அப்படியே முரளிக்கு பால் ஆற வைக்கவா அல்லது சாப்பிடுவானா?'' வாங்கி வந்தப் பொருட்களை எடுத்து வைக்க உதவியபடியே வினவினாள்.

''அவனுக்கு பழம் அல்லது காரட் கொடுக்கணும், கீதா. நான் அதைப் பார்த்துக்கிறேன். நீ காபி போடு''



என்று பதில் தந்தவள், ''இதை அப்படியே உன் ரூமில் வைச்சுடறேன்!'' என்று பார்சலை அவளது அறை அலமாரியில் கொண்டு வைத்தாள்.

அதன் பிறகு வீட்டு வேலைகளிலும், மற்ற வேலைகளிலும் மூழ்கிய கீதாஞ்சலிக்கு அந்த பார்சலைப் பற்றிய நினைப்பே அவள் உறங்கச் செல்லும் போது தான் வந்தது.

அதுவும் உதய் ஆனந்த் சொன்னதைப் பற்றி அவள் எண்ணிக் கொண்டிருக்கையில்...!

பார்ப்பதை மட்டும் கொண்டு எந்த முடிவுக்கும் வரக் கூடாது என்று அறிவுரைச் சொல்லும் நண்பன்... பார்க்காமலே காதலைப் பற்றிய எண்ணத்தைத் தூண்ட போராடும் ரகசிய சிநேகிதன்!

அடடா... இன்றைக்கு வேற ஒரு பார்சல் வந்தது என்று மதினி சொன்னார்களே? எப்படி அதை மறந்தாள்?

ரம்யாவிற்கா அவளுக்கா?

தபால் முத்திரையைப் பார்த்து அது அவளுக்கு வந்தது தான் என்று தெரிந்ததும், இன்றாவது அவனைப் பற்றிய ஏதாவது குறிப்பு வைத்திருக்கிறானா? என்ற ஆர்வம் உந்த, புதிருக்கான விடைக் கண்டுபிடிக்கும் மனநிலையில் அந்த பார்சலைப் பிரித்தாள்.

''India After Gandhi: The History of the World's Largest Democracy'' என்ற இந்திய அரசியல் பின்னணியைப் பற்றிய புத்தகம்.

நமது தேசத்தின் குடிமையியலைப் பற்றிய நுணுக்கங்களைத் தெரிந்து கொள்வதில் எப்பொழுதுமே லயிப்பு உடையவள் கீதாஞ்சலி.

படபடக்கும் நெஞ்சோடு முதல் பக்கத்தைப் பிரித்தவள், "என்னவளின் எண்ணங்களுக்கு விருந்தாக..." என்று வரிக்கு கீழே 'ரகசிய சிநேகிதன்' எனும் வழக்கமானக் குறிப்புடன் 83424 என்ற ஐந்திலக்க எண்ணும் பதிக்கப்பட்டிருந்ததைக் கண்டாள்.

83424 - இது தொலைபேசி எண்ணாக இருக்க முடியாது!

வண்டி எண்..? அலைபேசி எண்..? கதவு எண்..? பின் கோடு..? ஏதாவது தேதி..?

ஒவ்வொரு கேள்விக்கும், 'இருக்காது' மற்றும் 'இல்லை' என்ற பதில்களே மாறி மாறி கிடைத்தது.

ஒருவேளை ஆங்கில எழுத்துக்களின் வரிசை எண்ணா? அப்படிப் பார்த்தாலும் H-C-D-B-D என்று தானே வரும்? இப்படியொரு விளங்காத பெயரா?!

வேறு ஏதாவது குறிப்புகள் கிடைக்கிறதா என்று பார்ப்போம் என்று துளாவியவளுக்கு அந்தப் புத்தகத்தில் மூன்று இடைச்செருகல்கள் கிடைத்தன.

கை வேலைப்பாட்டினால் உருவாக்கப்பட்டிருந்த நட்சத்திர வடிவ புக்மார்க் ஒன்று, இரண்டாவதாக ஒரு கடிதம், மூன்றாவதாக போஸ்ட்கார்ட் அளவிலான இயற்கை அழகு கொஞ்சும் சூர்ய உதய காட்சி நிழற்படமும் அதன் பின்புறம் அச்சிடப்பட்ட ஒரு கவிதையும்.

மேற்புறமாக 83-ம் பக்கத்தில் செருகியிருந்த புக்மார்க்கில் முதலாவது குறிப்பு என்று சுட்டிக் காட்டுவதைப் போல ஒன்று என்ற எண் வட்டமிடப்பட்டிருந்தது.

அதில், "Good friends are like stars, You don't always see them, but you know they are always there." என்ற வாசகம் பதித்திருந்தது.



அதே பக்கத்தில், "H,N,N,D,A,A" என்ற ஆறு ஆங்கில எழுத்துக்கள் ஹை-லைட்டரால் அடையாளமிடப்பட்டிருந்தன.

42-ம் பக்கத்தில் பக்கவாட்டில் செருகியிருந்த கடிதத்தில் இரண்டு என்ற எண் குறியிடப்பட்டிருந்தது. அந்தக் கடிதத்தைப் பிறகு வாசித்துக் கொள்ளலாம் என்று அசட்டையுடன் வைக்க எண்ணியவள், ஒருவேளை அதில் முக்கியமான விஷயம் சொல்லியிருப்பானோ என்று உடனே அதை வாசிக்கத் தொடங்கினாள்.

அன்பே அஞ்சு!

காதலின் வரையறையைக்

கற்றுக் கொடுத்ததற்குத் தட்சணையாகவா

என்னிடமிருந்த இதயத்தை

எடுத்துக் கொண்டாய்?

உன்னிடம் தோன்றிய ஈர்ப்பை, காதல் என நான் ஏற்றுக் கொண்ட பிறகு, கண்டங்கள் பல தாண்டிச் சென்றாலும், காலங்கள் உருண்டோடினாலும் உன்னைச் சுற்றியே எந்தன் மனம் சுழன்று வரும் விந்தையை உனக்கு நான் சொல்லி புரிய வைப்பதை விட, நீயே அதைக் காதலின் மூலம் அனுபவித்துப் புரிந்து கொள்ளும் போது ஏற்படும் ஆனந்தம் கண்டிப்பாக அலாதியாக இருக்கும், அஞ்சு.

காதல் என்றால் புரிதல், காதல் என்றால் மகிழ்ச்சி, காதல் என்றால் சாதனை, காதல் என்றால் வெற்றி, காதல் என்றால் சுகமானக் காத்திருப்பு என்று கொண்டாடிக் கொண்டிருக்கும் என்னை... என் காதலை ஏற்றுக் கொள்ள சீக்கிரமே மனமிரங்கி வா, அஞ்சு!

நாம் ஆடும் இந்தக் கண்ணாமூச்சி ஆட்டத்தில் தான் எத்தனை விநோதம்? உன் மீது கண் மூடித்தனமாகக் காதல் கொண்டிருக்கும் என்னை யாரென்று கண்களைத் திறந்து வைத்துக் கொண்டு கண்டறிய முயல்கிறாய் நீ!

இந்தப் புத்தகத்தில் வைத்திருக்கும் தடங்களைக் கொண்டு வழியமைத்தாலே என்னைக் கண்டு கொள் வாய் என்று நினைக்கிறேன்.

காதலை விட சுகமானது காதலிக்கப்படுவதாம்!

அந்த சுகத்தை நீ எனக்குத் தருவாய் என்ற நம்பிக்கை யுடன்,

ரகசிய சிநேகிதன்.

அதே ஆறு ஆங்கில எழுத்துக்கள் அந்த 42-ம் பக்கத்திலும் 'ஷேட்' செய்யப்பட்டிருந்தன.

4-ம் பக்கத்தில் அடிப்புறத்திலிருந்து வெளியே நீட்டிக் கொண்டிருந்த பகலவன் உதயமாகும் புகைப்படத்தில் மூன்று என்ற எண் குறிப்பிடப்பட்டிருந்தது.

அன்பே!
உன் மெல்லிய புன்னகை
ஒன்றே போதுமென்று
திளைத்திருந்தேன்...
நீ வெட்கப்படுவதைக்
கண்களால் காணும் வரை!!

அந்த நிழற்படத்தின் பின்புறமிருந்த அக்கவிதையை வாசிக்கும் போது, "வெட்கமா? ஒருவேளை அவனுக்குப் பார்வைக் கோளாறோ?" என்ற எண்ணத்தில் சிரிப்பு தான் வந்தது அவளுக்கு.

இந்த 4-ம் பக்கத்திலும் அதே ஆறு ஆங்கில எழுத் துக்கள் சுட்டிக் காட்டப்பட்டிருந்தன.



இந்த எழுத்துக்கள் ரகசிய சிநேகிதனின் பெயருக்கானக் குறிப்போ?

H,N,N,D,A,A என்ற ஆறு எழுத்துக்களுக்கு விதம் விதமாக மாற்றி பெர்முடேஷன், காம்பினேஷன் போட் டாலும் கூட 720 மாறுபட்ட வார்த்தைகள் வருமே?

சில நிமிடங்கள் இப்படியும், அப்படியுமாக வெவ் வேறு வகையில் எழுத்துக்களை இணைத்துப் பார்த்தவள் இறுதியில் "NANDHA" என்ற பெயரை இறுதி செய் தாள்.

அந்த ஆங்கில எழுத்துக்களையே இன்னமும் சிறிது திருப்பிப் போட்டு முயற்சித்திருந்தால், அதுவே 'ANANDH' என்று மாறி வந்திருக்கும்! நந்தா என்ற பெயரையும், ஆனந்த் என்ற பெயரையும் ஆங்கிலத்தில் எழுதினால், அவை இரண்டும் ஒன்றுக்கொன்று anagram என்று அந்தக் கணத்தில் அவளுக்குத் தோன்றாமல் போனது!

அப்படியே ஆனந்த் என்ற வார்த்தையைக் கண்டறிந் திருந்தாலும் உடனே 'பல்ப்' எரிந்திருக்குமா என்பது சந்தேகமே!

பெயரையே கண்டறிய முடியாதவளுக்கு ரகசிய சிநேகிதன் அனுப்பியிருந்த கதிரவனின் 'உதய' காட்சி யில் இருந்த குறிப்பைக் கண்டறிவது மிகவும் சவாலான ஒன்று தான்!

நந்தா, நந்தகுமார், நந்த கோபால், முரளி நந்தன் என்று தனக்குத் தெரிந்த பொருத்தமானப் பெயர்களைப் பட்டியலிட்டவளுக்கு மீண்டும் குழப்பமே எஞ்சியது.

அண்ணன் மகன், திருமணமான நபர், வெளிநாட்டில் வசிப்பவர் மற்றும் சகோதர முறையில் இருப்பவர் என்று

ஒவ்வொருவராக பட்டியலிலிருந்து விடுவிக்கப்பட, மீண்டும் பழைய கேள்வியான, 'யாராக இருக்கும்?' என்பதிலேயே வந்து நின்றாள்.

வெகு நேரம் தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்தவள், அதை அப்படியே எடுத்து வைத்துவிட்டு உறங்கச் சென்றாள். காலையில் எழுந்திருக்கும் போதே தலை பாரமாய் இருப்பது போன்றிருக்க, வெளி வேலைகள் எதையும் கவனிக்காமல் வீட்டிலேயே இருந்தவளுக்கு, உதயுடன் ரகசிய சிநேகிதன் பற்றி பேசலாமா என்று யோசனை மெல்ல எழவும் அவனது எண்ணை அழைத்தாள்.

"ஹாய், கீதா! என்ன விஷயம்?"

"உனக்கு இப்போ க்ளாஸ் இருக்கா, உதய்? நான் உன்னோட கொஞ்சம் பேசணும்."

"இன்னமும் பத்து நிமிஷத்தில் க்ளாஸ்-க்கு போகணும். சொல்லு! என்ன விஷயம்?"

ஆரம்பத்திலிருந்து விவரங்களைச் சொல்ல வேண்டுமென்றால் பத்து நிமிட அவகாசம் போதாது என்றெண்ணியவள், "உனக்கு யாராவது நந்தா-ன்னு தெரியுமா, உதய்?" என்று எடுத்த எடுப்பிலேயே வினவினாள்.

"நந்தா... வா? ஏன்?"

"அது ஒரு பெரிய கதை. அப்புறம் டைம் கிடைக்கும் போது சொல்றேன். உனக்கு நந்தான்னு யாரையாவது தெரியுமா?" என்று அவசரப்படுத்தினாள்.

"ம்... தெரியுமே! எங்க காலேஜில் கூட மூணு-நாலு நந்தா தெரியும். ஆனால் யாருடைய பெயரும் வெறு



மனே நந்தா கிடையாதே? ஏன் கேட்கிறே?" என இரண்டாவது முறையாக ஆர்வமுடன் வினவினான்.

"உன் காலேஜில் படிக்கிறவங்க வயசு இருக்க சான்ஸ் இல்லை..." என்று இழுக்கவும்,

"அந்த மூணு-நாலு நந்தாவில் ஒரு ப்ரொஃபஸர் கூட இருக்கார். அவருக்கு எப்படியும் ஒரு அம்பது வயசு இருக்கும்.." என விவரம் தந்தான்.

"அம்பது வயசா...? அப்படி இருக்கவும்.. ம்ஹூம்..."

"என்னம்மா? காலையில் வேற வேலையில்லாமல் என்னைக் கூப்பிட்டு, 'ஹூ இஸ் ஹூ' விளையாடிட்டு இருக்கியா? நான் கிளம்பறேன். வை போனை..." என்றவன் எரிச்சலுடன் தொடர்பைத் துண்டித்தான்.

"கோபத்தைப் பாரு! இங்கே ஒருத்தி மண்டை குழம்பி உட்கார்ந்திருக்கேனே...? ஏதாவது உதவி செய்யணும்னு அக்கறையே இல்லை மேன் உனக்கு!" என அழைப்பு முடிந்த பிறகும் அலைபேசியில் அவனது எண்ணைப் பார்த்தபடி புலம்பினாள்.

அவனையே திட்டுவது போன்ற எண்ணம் அவளுக்கு!

ஆனால் அந்த எரிச்சலுக்கு சில கணங்கள் கூட ஆயுள் இருக்கவில்லை.

வேலை நேரத்தில் அழைத்து தலையும் புரியாமல், காலும் புரியாமல் கேள்வி எழுப்பினால் யாருக்குத் தான் கோபம் வராது? அவன் வேலை முடித்து வந்ததும், மறுபடியும் அவனை அழைத்துப் பேச வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள்.

ஆனால் உதய் ஆனந்தோ முடிந்தவரையில் கீதாஞ்சலியிடம் பேசாமலிருப்பதே நல்லது என்ற எண்ணத்திலிருந்தான்.

அப்படிப் பேச நேரிடும் போது எங்கே அவனையும் மீறி அவளிடம் வெடித்து விடுவானோ என்ற பயத்தில் தான் பேச்சைத் தவிர்க்க எண்ணியது.

காலையில் கீதாஞ்சலியின் அழைப்பைப் பார்த்தவுடன் உண்மையிலேயே அவனது எதிர்பார்ப்பு எக்குத்தப்பாக எகிறியது.

தான் அனுப்பிய குறிப்பை எல்லாம் பார்த்த பின், "நீ தானே ரகசிய சிநேகிதன்?" என்று தன்னிடம் ஆர்வத்துடன் கேள்வியெழுப்புவாள் என்ற கணிப்பு, இத்தனை நாள் காத்திருப்புக்கு முடிவு காலம் வரப் போகிறது என்ற எதிர்பார்ப்பு, தன்னுடைய காதலை அவள் ஏற்றுக் கொள்வாள் என்ற அவா!

எல்லாவற்றையும் பொய்யாக்கி அவள் தொடுத்ததோ, "உனக்கு நந்தா தெரியுமா?" என்ற கேள்வியை!

ஏமாற்றத்தை மறைத்துக் கொண்டு, 'ஏன் இந்தக் கேள்வி?' என்று விதம் விதமாக அவளிடத்தில் கேட்டாலும் எந்தப் பதிலும் அவனுக்கு கிடைக்கவில்லை எனும் போது அவனால் மனச் சோர்வடையாமல் இருக்க முடியவில்லை.

ஒருவேளை ரகசிய சிநேகிதன் மூலம் வந்த காதல் விண்ணப்பத்தை ஏற்க அவளுக்கு மனமில்லையோ?

இரு வீட்டவர்களும் சேர்ந்து ஆரம்பித்த தன்னுடனான திருமணப் பேச்சை முன்பு அவள் நிராகரித்ததைப் போன்றே இதையும் கிடப்பில் போட்டு விட்டாளா?

அதற்குக் காரணம் காட்ட யாரோ ஒரு நந்தாவை நடுவில் இழுக்கிறாளோ?

"இதற்கு மேலும் உன்னுடைய காதலுக்கான வெற்றி வாய்ப்பு அதிகம் என்று எண்ணுவது



உதய்! ஆக வேண்டிய வேலையைப் பார்!" என்று தன்னைத் தானே கடிந்து கொண்டு காதலை மறந்து மற்ற வேலைகளில் மூழ்க கடும் முயற்சி செய்து, அதில் படுதோல்வியும் கண்டான்.

உற்சாகமின்றி நான்கு நாட்களாக தாக்குப் பிடித்துக் கொண்டு அவனிருந்த வேளையில், தன்னுடைய எந்த அழைப்பையும் உதய் எடுக்கவில்லை என்று அவனை நேரிலேயே சந்தித்துப் பேச விரும்பி மருத்துவமனைக்கே வந்து நின்றாள் கீதாஞ்சலி.

வந்தவளிடம் முகத்தைத் திருப்பிக் கொள்ள விரும்பாமல், "ஹேய் கீதா! என்னாச்சு? காலில் எதுவும் பிரச்சனையா?" என அக்கறையுடன் விசாரித்து இருக்கையில் அமரும்படி சைகை செய்தான்.

"ஏன்? காலில் பிரச்சனை என்றால் தான் உன்னை வந்து பார்க்கணுமா?" இடுப்பில் கையை வைத்துக் கொண்டு கீதாஞ்சலி தோரணையாகக் கேட்க,

"வரும்போதே நல்ல மூடில் தான் வந்திருக்கே போல?" என்று சொல்லும்போது வேண்டுமென்றே 'நல்ல' என்பதில் அழுத்தம் கொடுத்தான் உதய் ஆனந்த்.

"உன் மேல் எனக்கு ரொம்ப கோபம், உதய். எத்தனை தடவை உனக்கு போன் செய்தேன்? மெஸேஜ் அனுப்பினேன்? எதுக்காவது ஒழுங்கா ரெஸ்பாண்ட் செய்தியா, நீ?" கோபமும், ஏமாற்றமும் நிறைந்த குரலில் அவள் முறையிட,

"நான் பிஸியா இருந்தேன், கீதா!" என்றபோது அவளது கண்களை நேருக்கு நேர் ஏறிட முடியாமல் தவிர்த்தவன், தன் மேஜை மேல் இருந்த பேனாவின் மூடியை மீண்டும் திறந்து மூடினான்.

"பேனாவைத் திறந்து மூடறதில் பிஸியா?" என்று கேலியாகக் கேட்டவளின் குரலில் எரிச்சல் கொஞ்சம் கூட குறைந்தபாடில்லை.

"ஜோக்கா? ஹையோ... முடியலை..." என்றவன் எதிரில் நின்றவளின் பார்வையில் பஸ்பம் ஆக விரும்பாமல், "ஓகே... ஓகே... கொஞ்சம் காத்திரு. ரெண்டு, மூணு பேஷண்ட்ஸ்-ஐ மட்டும் பார்த்துட்டு வந்துடறேன். சேர்ந்தே வீட்டுக்குப் போகலாம்" என்றான் சமாதானமாக.

அவனுக்காகக் காத்திருந்த நேரத்தில், ஒரே இடத்திலேயே உட்கார முடியாத கீதாஞ்சலி இங்கும் அங்குமாய் மருத்துவமனை வராண்டாவில் அடுத்த ஒரு மணி நேரத்திற்கு நடைப் பழகலானாள்.

அப்படி நடந்து கொண்டிருந்த வேளையில், அங்கு கண்ணில் படும் விதமாய் மிகப் பெரிய அளவில் வைக்கப்பட்டிருந்த மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர்களின் பெயர் விவரப் பலகையில் அவளது பார்வை பதிந்தது.

அதில் உதய் பெயரைத் தேடும் பொழுது யதேச்சையாக 'நந்தா' என்ற மருத்துவரின் பெயர் அவள் கண்ணில் பட்டது... நான்கு நாட்களாக 'நந்தா'வைப் பற்றிய அவளின் மண்டைக் குடைச்சலின் விளைவு!

நந்தா என்பவர் காது, மூக்கு, தொண்டை சிறப்பு மருத்துவர் என்று பொறிக்கப்பட்டிருந்ததோடு, அவரது பட்டங்களில் FRCS என்று போட்டு அடைப்புக் குறியில் லண்டன் என்று வேறு குறிப்பிடப்பட்டிருந்தது.



"Fellowship of the Royal College of Surgeons என்றாலே அது லண்டனில் வாங்கிய பட்டம் தான் என்று தெரியாதாக்கும்?! இதை ஸ்பெஷலா வேற போடணுமா?" என்று மானசீகமாக நொடித்துக் கொண்டவள், ஏதோ ஒரு உந்துதலில் வரவேற்பாளரிடமிருந்து நந்தாவின் விசிட்டிங் கார்டைக் கேட்டுப் பெற்றாள்.

அந்த அட்டையில் நந்தாவின் பத்திலக்க அலைபேசி எண்ணின் முதல் ஐந்து எண்கள் அனைவருக்கும் பொதுவான சர்வீஸ் ப்ரொவைடர் எண்ணாக இருக்க, அடுத்த ஐந்து இலக்கங்களும் 83424 என்றிருந்ததைப் பார்த்தவளுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

'தான் காண்பது சரிதானா?' என்று மீண்டுமொரு முறை அதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டவளுக்குத் தலை சுற்றிக் கொண்டு வந்தது.



## 16

இவன் தான் அந்த ரகசிய சிநேகிதனா?

தன் கையில் வைத்திருந்த அந்த நந்தாவின் விசிட்டிங் கார்டையே விழிக் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த கீதாஞ்சலிக்கு ஒன்றுமே புரியாது போன்றும் இருந்தது. அதே சமயத்தில் எல்லாமே புரிவது போன்றுமிருந்தது.

இவனுடைய அலைபேசி எண்ணை தான் அவன் தனக்கு குறிப்பாக உணர்த்தியிருந்தானா?

அவளுடைய முகவரி எப்படி இவனுக்குத் தெரிந்தது என்று யோசித்தவளுக்கு, தான் இங்கே தானே கால் சிகிச்சைக்காக வந்தோம்... அப்பொழுது எப்படியாவது தெரிந்திருக்குமோ என்று குழம்பினாள்.

ஆனால், கடிதங்கள் அதற்கு முன்பிருந்தே வ ஆரம்பித்திருந்தே?! எப்படி?

அய்யோ! கடவுளே! எதற்கு இப்படி என் மண் டையைப் போட்டு நான் பிய்த்துக் கொள்ள வேண்டும்? இன்று இரண்டில் ஒன்று பார்த்துவிட வேண்டியது தான்.

விடுவிடுவென்று நேராக உதயின் அறை நோக்கிச் சென்றவள், அப்பொழுது தான் நோயாளிகளைப் பார்த்து விட்டு வந்திருந்தவனை நோக்கி, ''உதய்! நான் காலை யில் கேட்கும் பொழுது, இந்த நந்தாவைப் பற்றி ஏன் ஒன்றுமே சொல்லலை? யாரு இது?'' என்றாள் எந்த முஸ்தீபும் இல்லாமல்.

''மறுபடியும் ஆரம்பிச்சுட்டியா?'' என்று சலித்துக் கொண்டவன், அவன் முகத்துக்கு நேரே அவள் நீட்டிக் கொண்டிருந்த விசிட்டிங் கார்டை வாங்கிப் பார்த்தான்.

''ஓ! இவரா? இவர் மனைவிக்கு பிரசவ் நேரம் நெருங் கிடுச்சுன்னு மெடிக்கல் லீவில் கோயம்புத்தூர் போயிருக் கார். போய் ரெண்டு வாரத்துக்கும் மேலேயிருக்கும்'' என்று சொல்லிவிட்டு,

''ஆனால் அவரைப் பற்றி நீ ஏன் கேட்கிறே?'' என்றவாறே அவளைக் கேள்வியாகப் பார்த்தான்.

''மனைவிக்குப் பிரசவத்திற்குப் போயிருக்கிறாரா...?'' என்றவாறே திகைத்து விழித்தவளுக்கு, தலையை நிஜமாகவே பிய்த்துக் கொள்ளலாம் போன்றிருந்தது.

ராயல் லண்டன் கைக்கடிகாரம் முதற்கொண்டு அத் தனை குறிப்புகளும் ஒத்து வருவது போல தோன்றிய தும் சிறிதே சிறிது தெளிவடைந்தது போன்றிருந்த வளுக்கு உதயின் பதில் மேலும் குழப்பியது.



அவள் வைத்திருந்த தடயங்களின் பேரில், இந்த நந்தா தான் ரகசிய சிநேகிதன் என்ற முடிவிற்கு, ஓரிரு நிமிடங்களுக்குள்ளேயே வந்திருந்தவள், எப்படியும் இதற்கு முடிவை இங்கேயே, இப்பொழுதே கட்டி விடுவ தென்ற உறுதியோடு இருந்தாள்.

ஹப்பாடியா என்ற ஒரு நிம்மதியும் கூடவே எழுந் திருந்தது. இன்றோடு இதற்கு மூடு விழாவென்று.

இப்பொழுது என்னவென்றால் நந்தா ஊருக்குப் போயிருப்பதாகவும், அவனுக்கு ஒரு கருவுற்ற மனைவி வேறு இருப்பதாகவும் கூறுகிறானே இவன்?

ஒரு வேளை... இந்த நந்தா தான் ரகசிய சிநேகிதனோ என்றெண்ணியவளுக்கு பதறியது!

ஆனால் கடைசியாக வந்த கடிதத்தில், சென்னை தபால் முத்திரை தானே இருந்தது? இரண்டு வாரத்துக்கு முன்பே கோயம்புத்தூர் சென்றவர் எப்படி சென்னையி லிருந்து தபால் செய்திருக்க முடியுமென்ற கேள்வியெழ, மெல்ல தன்னைத் தானே நிதானப்படுத்திக் கொண் டாள்.

அப்படியெனில், இவன்... சாரி... இவர் அவனில் லையா?

முன்பைவிட இப்பொழுது அவளது மண்டை இடி மேலும் அதிகமாக, தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.

அந்த ரகசிய சிநேகிதன் யார், எங்கிருக்கிறான் என்று தேடும் படலத்தை முதலிலிருந்து அவள் திரும்பவும் ஆரம்பிக்க வேண்டுமா?

ஹ்ம்ம்... அவன் மட்டும் அவள் கையில் கிடைத்தான்!

கீதாஞ்சலி பதில் சொல்லாமல் அமைதியாக இருக்கவும், மூண்ட கோபத்தைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்ட உதய், தன் முன்னே அமர்ந்திருந்தவளின் முகத்துக்கு எதிரே சொடுக்குப் போட்டபடியே, ''ஹலோ! கீதா? என்ன, நான் கேட்டுகிட்டே இருக்கேன், நீ பாட்டுக்குத் தலையில் கை வைச்சுட்டு உட்கார்ந்திருக்கே?'' என்றான்.

திடீரென்று தொடர்பேயில்லாமல் யாரோ ஒருவனைப் பற்றி கேட்டால், அவனிருக்கும் நிலையில் அவனால் கீதாஞ்சலி மீது கோபப்படாமல் கொஞ்சவா முடியும்?

பதிலெதுவும் பேசாமல் குழப்பமானப் பார்வையை மட்டும் செலுத்தியவள் மீது தாட்சண்யம் காட்டாமல், ''நீயும் மாற்றி, மாற்றி நந்தா யாரு, நந்தா யாருன்னு கேட்டுட்டே இருக்கே. ஆனால் காரணத்தைச் சொல்ல மாட்டேங்கறே? என்ன விஷயம்னு சொன்னால் தானே தெரியும், கீதா?'' என எரிந்து விழுபவன் மேல் என்ன குறை சொல்ல முடியும்?

இவனிடம் என்னவென்று சொல்வது?

உதயிடம் கூறினால், அது அவனுடைய அக்கா வரைக்கும் போகுமோ என்று அஞ்சியதைப் புறம் தள்ளியவள், ஒரு நீண்ட பெருமூச்சை வெளியிட்டு, ஆதியோடு அந்தமாக அவனிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட ஆரம்பித்த வேளையில், உதயின் அலைபேசி குரலெழுப்பியது.

பேசியை எடுத்த உதய், ''மாமா! உங்க அண்ணன் தான்!'' என்றபடியே, ''சொல்லுங்க மாமா!'' என்றான்.

மறுமுனையில் ஷ்யாம் பேசியதைக் கேட்டவன், ''சரி மாமா! ம்ம். சரி. நானே கூட்டிட்டு வந்துடறேன்'' என்று முடித்து, தொடர்பைத் துண்டித்தான்.



''உங்க அம்மா வந்திருக்காங்களாம், கீதா. அதைச் சொல்றதுக்கு உனக்கு போன் செய்திருப்பாங்க போல, உன் போனை ம்யூட்டில் போட்டு இருந்தியா? நானே உன்னை அழைச்சுக்கிட்டு வரேன்னு சொன்னேன், கிளம்பு. எனக்கும் இங்கே வேலை முடிஞ்சது'' என்று தகவல் தந்தபடியே கிளம்பலானான்.

சொல்லாமல் கொள்ளாமல் இப்படி திடுதிப்பென்று அவர் வருவதென்றால்... ஏதாவது விசேஷமா?

ஏனோ அடி நெஞ்சில் லேசாக பயம் மூள, ''எங்க அம்மாவா? இப்போ எங்கே, இங்கே திடீர்னு? சொல்லவேயில்லையே?'' என அவள் மனதிலிருந்த பயம் வார்த்தைகளாக வெளி வந்தது அவளுக்கு.

''எல்லாத்தையும் என்னிடமே வந்து கேளு! ஒரு பதிலை மட்டும் மறந்தும் சொல்லிடாதே! அவங்க உன்னோட அம்மாவா... என்னோட அம்மாவா? என்னைக் கேட்டால்?'' எத்தனை முறை கேட்டும் அவள் ஒன்றும் சொல்லாத கோபத்தில், அவள் மீது உதய் பாயவும்,

''சரி! சரி! இப்போ எதுக்கு இப்படிக் கோபப்படறே? கிளம்பு!'' என்றவாறே விருகம்பாக்கத்திற்கு அவனோடு கிளம்பியவளுக்கு, ருக்மணி சென்னை வந்திருக்கிறார் என்பதில் அவள் சொல்ல வந்த விஷயம் முற்றிலும் மறந்தது.

இரவு உணவு வேளையைத் தாண்டி ஷ்யாமின் மச்சினனுடன் வீட்டிற்குள் நுழைந்த மகளைப் பார்த்த ருக்மணி, இருவரையும் வரவேற்கும் முகமாக தலையசைத்ததோடு அப்போதைக்கு வேறொன்றும் வாளாதிருந்தார்.

காலையில் திருநெல்வேலியிலிருந்து கிளம்பி, பொழுது சாயும் போதே விருகம்பாக்கத்திற்கு வந்திருந்தவர், உதய் ஆனந்த் வேலை செய்யும் மருத்துவமனை வரை மகள் சென்றிருக்கிறாள் என மருமகள் தந்த விவரத்தின்படி, அவளுக்காக இந்நேரம் வரை காத்திருந்தார்.

வீட்டுக்கு அவர் வந்தே, இப்பொழுது மூன்று மணி நேரத்திற்கும் மேலாகியிருந்தது.

உதய், "வாங்க அத்தை! நல்லாயிருக்கீங்களா?" என்று முரளி நந்தனுடன் விளையாடிக் கொண்டிருந்தவரை நலம் விசாரிக்க,

கைப்பையை மேஜையில் வைத்த கீதாஞ்சலி, ருக்மணியின் அருகே விரைந்து, "ஹாய் மா! எப்போ வந்தீங்க? என்ன நீங்க இங்கே, சென்னைக்கு திடுதிப்புன்னு சொல்லாமல் கொள்ளாமல் கிளம்பி வந்துட்டீங்க? தனியாகவா வந்தீங்க? அப்பா வரலையா?" என தாயை முந்திக் கொண்டு அவரைக் கேள்விகளால் குடைய ஆரம்பித்தாள்.

உதய் கேட்ட கேள்விகளுக்கு முன்னுரிமை வழங்கிய ருக்மணி, "நல்லாயிருக்கேன்பா. நீ நல்லா இருக்கியா? அம்மா - அப்பா எல்லோரும் நல்லா இருக்காங்களா?" எனக் குசலம் விசாரித்து விட்டு,

மகளை ஒரு பார்வை பார்த்து, "வர வேண்டிய வேலையிலிருந்து. கிளம்பிட்டேன். நாகர்கோயில் - மும்பை எக்ஸ்பிரஸில் காலையில் கிளம்பினேன். சாயந்திரமே வீட்டுக்கு வந்துட்டேன்" என்றார் சுருக்கமாக.

"ஓ! ஏன்மா இந்த நேரத்தில் வந்தீங்க?" இரவு ரயிலில் கிளம்பி வந்திருக்கலாமே என்ற அர்த்தத்தில்



கீதாஞ்சலி கேட்க, மூன்றாம் நபர் முன் மகளை எதுவும் கேட்க வேண்டாமென அதுவரை அடக்கி வைத்திருந்த கேள்வியைக் கேட்காமல் அவரால் இருக்க முடியவில்லை.

தீர்க்கமாக அவளைப் பார்த்தவாறே, "நான் கேட்க வேண்டிய கேள்வியை நீ கேட்கிறே? இது தான் நீ தினமும் வீட்டுக்கு வரும் நேரமா?" என்றார் குரலை உயர்த்தாமலே.

தன் அம்மாவின் கட்டுப்பாட்டைப் பற்றி தெரிந்திருந்த கீதாஞ்சலி, "அது... இன்றைக்கு நான் உதயோட கிளினிக் தான்மா போயிருந்தேன். அண்ணியிடம்..." என்று தயங்கியபடியே நிர்மலவேணியைப் பார்த்தாள்.

அவளது மதினியோ கையைப் பிசைந்து கொண்டு நின்றிருக்க, அவளருகில் ஷ்யாம் அமைதியாக இருந்தான். தாய் பேசும் பொழுது குறுக்கே பேசினால் என்னவாகும் என்று அவனுக்குத் தெரியும்.

மதினியிடம் சொல்லிவிட்டுத் தான் போனேன் என்றாலும் வசவு விழும்... ஏன் போக விட்டாய் என! அவள் போகும் இடம் நிர்மலவேணிக்குத் தெரியாது என்றாலும் வசவு விழும். அவளிடம் சொல்லாமல் போனேன் என்றும் சொல்ல முடியாது. மதினி ஏற்கனவே தான் எங்கே போயிருந்தேன் என்று விவரம் தந்திருப்பார்.

"எங்கே போயிருந்தாலும் வீட்டுக்கு வர்றதுக்கு நேரங்காலமில்லையா, கீதா? மணியென்ன தெரியுமா இப்போ? இப்போ எதுக்கு அங்கே போனே? உங்க அண்ணன் எத்தனை முறை உன்னைக் கூப்பிட்டுட்டான். போனும் எடுக்கலை. என்னன்னு நினைக்கிறது நாங்க?"

நேருக்கு நேராகப் பார்த்து, நியாயமாக கேள்வி கேட்பவரிடம் என்னவென்று பதில் சொல்வது?

''ஹாஸ்பிட்டலில் போனை சைலென்ட் மோடில் போட்டிருந்தேன்மா. அதான் அண்ணன் கூப்பிட்டது கேட்கலை'' எனத் தவறு செய்து விட்ட குழந்தையாய் முணுமுணுத்த கீதாஞ்சலியைப் பார்க்க பாவமாக இருந்தது உதய் ஆனந்திற்கு.

கீதாஞ்சலியை அவளது அன்னை துருவுவதைக் கண்டவனுக்குத் தர்மசங்கடமானது. அவன் கொண்டு வந்து விடுகிறேன் என்று சொன்னதால் தானே தாமதமாகியது?

அதுவும் அவனையும் வைத்துக் கொண்டே அவளைக் குடைவதைக் காணப் பொறுக்காதவன், மெல்ல ஷ்யாமிடம், ''நேரமாச்சு, மாமா. அம்மா காத்துக்கிட்டு இருப்பாங்க. நான் கிளம்பறேன்'' என்றான்.

ஷ்யாமும் நிர்மலவேணியும் அவனை உணவருந்தி விட்டுப் போகலாமென வற்புறுத்தவும் வேறு வழியின்றி அங்கேயே இருந்தவனுக்கு வாயை மூடிக் கொண்டு பேசாமல் இருக்கவும் முடியவில்லை.

''அவள் கால் பிஸியோக்கு வந்திருந்தாள், அத்தை'' என்று இடையில் புகுந்து கூறிய உதய் ஆனந்தையும் தனது பார்வை வளையத்தில் கொண்டு வந்த ருக்மணி,

''சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதே, உதய்! வயசு பொண்ணு. தேவையில்லாமல் இப்படி நேரம் கழிச்சு வர்றது நல்லதில்லைப்பா'' என்றுவிட்டு,

மகளிடம் திரும்பி, ''கால் முழுசா சரியாயிடுச்சுன்னு ரெண்டு மூணு வாரத்துக்கு முந்தியே சொன்னியே, கீதா? பரீட்சையும் எப்பவோ முடிஞ்சுடுச்சு. இங்கே



யிருந்து நீ வேலைக்கு முயற்சி செய்றேன்னு சொன்னதனாலே தான், இன்னமும் கொஞ்ச நாள் நீ இங்கே இருக்கட்டும்னு நினைச்சது. இங்கேயிருந்துகிட்டு, உன்னோட அண்ணனுக்கும், மதினிக்கும் கெட்ட பெயர் வாங்கிக் கொடுக்கிறதுக்கு, பேசாமல் என்னோடவே ஊருக்குக் கிளம்பி வர வழியைப் பாரு!'' என்று கறாராகச் சொல்லவும், வேறு எதையும் யோசிக்க முடியாத கீதாஞ்சலி உதயை நோக்கி திகைத்து விழித்தாள்.

'ஏதாவது செய்யேன்' என்பது போன்று அவளது பார்வை அவனை இறைஞ்சியதோ?

கீதாஞ்சலியின் தாய் சென்னைக்கு வந்திருக்கிறார் என்றவுடனேயே எங்கே அவளைத் திருநெல்வேலிக்கு அழைத்துப் போக தான் வந்திருக்கிறாரோ என உதய் பயந்ததையே, ருக்மணியின் வார்த்தைகள் வெளிப்படுத்தவும், கை முஷ்டிகளாய் இறுக, செய்வதறியாது அவனும் திக்பிரமை பிடித்தது போன்று தான் நின்றான்.

அவரிடம் அவன் எந்த உரிமையில் போய், 'கீதாஞ்சலி இங்கேயே இருக்கட்டும், அத்தை!' எனச் சொல்வான்?

அப்படிச் சொல்லும் எந்த உரிமையைத் தன் அவள் அவனுக்குக் கொடுத்தாள்?

அவனுடைய ஏக்கம், பரிதவிப்பு, ஆற்றாமை எல்லாம் இறுகிப் போய் நின்றிருந்தவனிடமிருந்து கோபமாய் மாற, மெல்ல பார்வையை விலக்கிய கீதாஞ்சலி, ''என்னம்மா நீங்க? வந்ததிலிருந்து திட்டிகிட்டே இருக்கீங்க?'' என்று தாயிடம் செல்லம் கொஞ்சிக் கொண்டே,

''என்னால் யாருக்கும் கெட்ட பெயர் வராதாக்கும். நான் அப்படி யாரோட வந்தேன்? நம்ம உதயோட தானே?'' என்றாள் இலகுவாக.

ஒற்றைப் புருவம் லேசாக மேலெழ, கீதாஞ்சலியைப் பார்த்த உதய் ஆனந்தின் விழிகள், 'இது எப்போதிலிருந்து?' என அவளைச் சீண்டியது.

'நம்ம உதய்' என்று அவள் சொல்லி முடித்த அடுத்த கணம் கீதாஞ்சலியின் பார்வையும் மீண்டும் உதயிடமே தஞ்சம் புகுந்திருக்க, மெல்லிய புன்னகையுடன் முரளி நந்தனைக் குளியலறைக்கு அழைத்துச் சென்றவனின் கேலியை அவளாலும் உணர முடிந்தது.

''புரிஞ்சு தான் பேசறியா, கீதா?'' சுள்ளென்று மகள் மேல் விழுந்தவர், ''இன்னமும் ஓரிரு மாதத்தில் கல்யாணமாகப் போகிற பெண்... இப்படி... ஷ்யாமோட மச்சினன் என்றாலும்...'' என்று இழுத்து, உதய் ஆனந்த் அங்கே இல்லையென்றாலும் குரலைத் தணித்துக் கொண்டவர், ''.... வேற்று மனிதன் தான்'' என்று கோபமாக முடித்தார்.

''என்னம்மா சொல்றீங்க?''

கீச்சு குரலில் கேள்வி எழுப்பியவளை அழுத்தமாகப் பார்த்தவர், ''படிப்பு, பரீட்சை, வேலை என்று ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லித் தட்டிக் கழிச்சுட்டே இருக்காதே. கீதா. வர நல்ல, நல்ல மாப்பிள்ளை எல்லாம் தட்டிப் போகுது. விருப்பம் இருக்கா... இல்லையான்னு இதுக்கு மேலே உன்னிடம் நாங்க கேட்கப் போவதில்லை. வர ஞாயிற்றுக் கிழமை உன்னைப் பெண் பார்க்க மாப்பிள்ளை வீட்டுக்காரங்க இங்கே வர்றாங்க. ஆனால் அது சும்மா சம்பிரதாயத்துக்குத் தான். உங்க அப்பாவும் அதுக்குள்ளே வந்துடுவார். தயாரா இருந்துக்கோ!'' என்று எச்சரித்தார்.



கீதாஞ்சலியை ஊருக்கு அழைத்துச் செல்ல தான் ருக்மணி வந்திருக்கிறார் என்பதிலேயே அதிர்ச்சி அடைந்த உதய் ஆனந்த், மின்னாமல் முழங்காமல் வந்த இடியில் முற்றிலும் செயலிழந்துப் போனான்.

முரளி நந்தனைத் தோள்களில் சுமந்தவாறு அறைக்குள் நுழைந்தவன், உடல் இறுக, குற்றம் சாட்டும் பாவனையில் கீதாஞ்சலியை உறுத்து விழித்தான்.

அவனது இறுகலில் முரளி நந்தன் சிணுங்கவும், கஷ்டப்பட்டுத் தன்னைத் தளர்த்திக் கொண்டவன், உணர்ச்சிகள் துடைக்கப்பட்ட முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

முகத்தை மட்டும் தான் திருப்பினானே ஒழிய அவனுடைய முழு கவனமும் கீதாஞ்சலி என்ன சொல்லப் போகிறாள் என்பதிலேயே பதிந்து இருந்தது.

உதய் முகத்தைத் திருப்பும் வரை அவனையே பார்த்தபடி, பேச்சிழந்து நின்றிருந்த கீதாஞ்சலி, ''என்னம்மா இது அநியாயமா இருக்கு? என்னிடம் சொல்லாமல் நீங்களா எப்படி மாப்பிள்ளையை முடிவு செய்யலாம்? நான் யாரையும் கல்யாணம் செய்துக்க மாட்டேன்'' என்றாள் பிடிவாதமாக.

''உன்னைக் கேட்டால், நீ தான் ஆயிரத்தெட்டு காரணம் சொல்றியே? சரி... நாங்க முடிவு செய்ற மாப்பிள்ளை வேண்டாம் என்றால்... நீ யாரையாவது விரும்புறியா? அதையாவது சொல்லு! அப்படியில்லையென்றால் நாங்க சொல்ற மாப்பிள்ளையைக் கட்டிக்கோ!''

''ஆமாம்! நான் உதயை விரும்பறேன்! அவனைத் தான் நான் கல்யாணம் செய்துக்குவேன்!''

பட்டென்று யோசிக்காமல் கீதாஞ்சலி சொல்ல, அங்கே அறையிலிருந்த ஐவரில் அதிகம் அதிர்ச்சிக்குள்ளானது யாரென்று கணிக்கவே முடியாது.

ருக்மணியின் கேள்விக்கு வேக வேகமாக வந்து விழுந்த பதிலில், சட்டென்று தலையை உயர்த்தி, கீதாஞ்சலியைத் திகைப்புடன் கூர்ந்த உதய் ஆனந்திற்கு அதிர்ச்சியென்றால்... அவளுக்கே தெரியாமல், இந்தக் கேள்வி கேட்டால் இப்படிப் பதில் சொல்ல வேண்டுமென்ற யோசனை எதுவும் இல்லாமல், 'நான் உதயை விரும்பறேன். அவனைத் தான் நான் கல்யாணம் செய்துக்குவேன்!'' என்று தன் வாயிலிருந்து ஆணித்தரமாக உதிர்ந்த பதிலில் கீதாஞ்சலிக்கு, அவனை விடவும் அதிர்ச்சி அதிகம்!

அழுத்தமாகவும் அந்த இரவு வேளையில் கணீரென்று ஒலித்த கீதாஞ்சலியின் குரலில், அதன் பிறகு அங்கு சில நிமிடங்களுக்கு அங்கிருந்த அனைவரின் மனதில் ஓடும் எண்ணங்களின் ஓசை கூட கேட்கும் அளவிற்கு நிசப்தம் நிலவியது.

விழிகள் தெறித்துவிடும் அளவிற்கு கீதாஞ்சலியையும், தன் தம்பியையும் மலங்க மலங்கப் பார்த்த நிர்மலவேணி, தன் கணவனின் சட்டையைப் பற்றி, அவனைத் தன் புறமாக இழுத்து, ''என்ன ஷ்யாம் இது? க்ளைமாக்ஸ் ஃபைட் முடிஞ்சு வரும் போலீஸ் மாதிரி... கடைசி கட்டத்தில் வந்து கீதா இப்படி காதல்ன்னு சொல்றா?'' என ரகசியம் பேசி அவன் காதைக் கடித்தாள்.

தங்கை மற்றும் மைத்துனனின் பார்வை பரிமாற்றத்தையும் அவர்கள் முகத்தில் மாறி மாறி உலா வந்த உணர்ச்சிகளையும் இத்தனை நேரமாகப் பார்த்துக்



கொண்டிருந்த ஷ்யாம், ''படமே இப்ப தான் ஆரம்பிக்குதுன்னு நினைக்கிறேன், நிம்மி. உன் தம்பி முகத்தைக் கவனிச்சியா? 'சொல்லிட்டாளே... அவ காதல...' என்று சிச்சுவேஷன் சாங் பாடற மாதிரியே இல்லை? பேசாமல் நடக்கிறதை வேடிக்கை மட்டும் பாரு!'' என்று குனிந்து அவள் காதோரம் சொல்லி விட்டு, மனைவிக்குச் சொல்லியதையே தானும் செய்யத் தயாரானான்.

அதுவரை மகளை உருட்டியும் மிரட்டியும் கொண்டிருந்த ருக்மணியோ வாயடைத்துப் போயிருந்தார்.

ஓரிரு கணத்திலேயே தன்னைச் சமன் செய்து கொண்டவர், ''என்ன கீதா சொல்றே? அப்போ, உதய்க்கு உன்னைப் பெண் கேட்கும் போதே சொல்றதுக்கு என்ன? நினைச்சு நினைச்சு பேசுவியா? வேண்டாம்னு சொல்லிட்டு... இப்போ எப்படி சம்பந்திகிட்ட...?'' என்று கடுகடுத்தார்.

அவருக்கு இன்னமும் மகள் உண்மையைத் தான் சொல்கிறாளா இல்லை விளையாடுகிறாளா எனப் பிரித்தறிய முடியவில்லை.

இவளை நம்பி ஒன்று செய்யவும் முடியவில்லை! செய்யாமலும் இருக்க முடியவில்லை!

உதயின் நிலையோ பாவம்... அதை விடவும் மோசமாக இருந்தது!

சில நிமிடங்கள் யோசிக்கக் கூட முடியாமல், கீதாஞ்சலி கூறிய வார்த்தைகளே அவன் காதுகளில் ரீங்காரித்துக் கொண்டிருந்தது.

சுயநினைவு வந்த பிறகோ மனம் ஒரு நிலையில்லை. என்ன திடீரென்? இதன் அறிகுறியே எங்குமில்லையே? விளையாடுகிறாளா?

இல்லை... இந்த இக்கட்டிலிருந்து இப்போதைக்குத் தப்பித்துக் கொள்ள, அருகில் இருந்தவனைக் கை காட்டி விடும் சாதுர்யமா?

அகல விரிந்த கண்களோடு, தன்னிடமே பார்வையைப் பதித்திருந்தவளிடமிருந்து அவனால் ஒன்றையும் அறிந்து கொள்ள இயலவில்லை.

அவள் கண்களில் தெரிவது குழப்பமா, சந்தோஷமா இல்லை புரியாத பாவமா? எதுவானாலும் அவளே சொல் லட்டும் என அமைதியோடு காத்திருக்கலானான்.

ஆனால் கீதாஞ்சலி மௌனியாகவே இருக்கவும், எங்கே தன் வாயைத் திறந்து எதுவும் கேட்டு வைத்து, இருக்கும் நிலையை மேலும் மோசமாக்கி விடுவானோ என்ற பதட்டம் வேறு அவனுக்கு!

அவனின் மனம் என்னென்னவோ நினைத்தாலும், அடி நெஞ்சில் லேசாகத் தளிர் விடத் தொடங்கிய மகிழ்ச் சியை அவனால் தடுக்க முடியவில்லை. அந்த மகிழ்ச்சி யுடனே, அக்காவிடம் போய் வருகிறேன் எனத் தலை யசைத்துக் கிளம்பினான்.

அவனைத் தடுக்கவோ, பிறகு போ என்று சொல்லவோ சந்தர்ப்பம் சரியாக அமையாததால் யாரும் அவனை நிறுத்தவும் இல்லை.

கதவை மூடிவிட்டுப் போன உதயின் பின்னாலேயே சென்ற கண்கள் மின்ன, "ஆமாம்மா! அப்போ தோணலை, சொல்லலை! இப்போ உதயை விரும்பறேன், சொல் றேன்!" தன் அம்மாவிற்கு பதில் கூறியவளின் குரல் குழைந்து வெளி வந்தது.

முதன்முறை போன்று இப்பொழுது அதில் அழுத்தம் இல்லை; யோசிக்காமல் சொல்லவில்லை; குரல் கனத்து ஒலிக்கவில்லை!



மாறாக, இதில் நானா என்ற கேள்வியும், அந்தக் கேள்விக்குக் கிடைத்த பதிலில் விளைந்த ஆச்சரியமும், ஆனந்தமும் தொக்கி நின்றது. இப்பொழுது கீதாஞ்சலி யின் குரலிலிருந்த குழைவும், கொஞ்சலும் முன்னதில் இல்லை.

இந்தப் பதிலை மட்டும் உதய் ஆனந்த் கேட்டிருந் தால் பல குழப்பங்கள் நேராமல் தவிர்த்திருக்கலாம்!



17

கீதாஞ்சலி, உதயை விரும்புவதாக எல்லோருக்கும் அறிவித்த பிறகு, யார் கேட்ட கேள்விக்கு அவள் என்ன பதில் சொன்னாளென்று அவளை யாராவது பிறகு கேட்டிருந்தால் அவளுக்கு அது சத்தியமாக நினைவிருக்காது.

ஆனால், அவள் சொன்ன பதிலில் அங்கிருந்த வர்கள்... முக்கியமாக ருக்மணி சமாதானமாக, அந்த விவாதம் அப்போதைக்கு அங்கே நின்றது.

தூக்கத்தில் நடப்பவள் போன்று இரவு படுக்கும் வரை, உண்ண, பல் துலக்க, முகம் கழுவ என எல்லா வற்றையும் ஒருவித மோன நிலையிலேயே செய்தவள், படுக்கையில் விழுந்து கண்ணிமைகளை மூடவும், அவளது எண்ணங்கள் முழுவதும் விழித்துக் கொண்டது.

திருமணத்தைப் பற்றிய பேச்சு தொடங்கியதிலிருந்தே தடதடக்க ஆரம்பித்திருந்த அவளது இதயம், அதன் பந்தய குதிரையின் ஓட்டத்தை இன்னமும் நிறுத்தின பாடில்லை.

உதயை விரும்புகிறாள் என அவள் எல்லோருக்கும் அறிவித்த கணத்தைச் சுற்றியே மீண்டும் மீண்டும் அவளது மனம் சுற்றி வந்தது.

எப்படிச் சொன்னாள் அதை? திடீரென, எந்த முன்னறிவிப்புமின்றி எப்படி அது அவளது நாவிலிருந்து வெளி வந்தது? மனதில் எண்ணாதது எப்படி அனிச்சையாக வெளிவர முடியும்?

ஆழ் மனதில் அவன் மீது தனக்கு காதல் இல்லையென்றால், ''உதயை விரும்புகிறேன்'' என்ற வார்த்தையை அவளால் எப்படிச் சொல்லியிருக்க முடியும்?

அப்பொழுது அவனை... அவள் விரும்புகிறாளா? ஆமாம் என அவள் மனம் அடித்துச் சொல்ல, தன் இரு கரங்களையும் கொண்டு தன்னையே இறுக கட்டிக் கொண்டவளுக்கு முகம் முழுதும் மலர்ந்து விகசித்தது.

திருநெல்வேலிக்குக் கிளம்ப வேண்டுமென்றதும் அவனைப் பரிதாபமாக அவள் பார்த்ததின் அர்த்தம் இதுதானா?

இன்னமும் இரண்டு மாதத்தில் திருமணம் என்று ருக்மணி சொன்னதும் அவள் பதறியது எங்கே அவனை இழந்து விடுவாளோ என்ற பயத்தினால் தானா?

காதல் என்றால் அவளுக்குப் பெரிதாக அபிப்ராயம் இல்லையென்றுகூட சொல்ல முடியாது. அதெல்லாம் சுத்த நேர விரயம் என்று நினைப்பவள்... பின் எப்படி??

தனக்கும் காதலுக்கும் காத அடி தூரம் என்ற இறுமாப்பில் திளைத்திருந்ததால் தான், அவளுள் ஏற்பட்ட மாற்றத்தை அவள் இதுவரை உணரவில்லையா?

காதலைப் பற்றி அவளுக்கு அதிகம் தெரியாது; தெரிந்து கொள்ளும் ஆர்வமும் இதுவரை அவளுக்கு வந்ததில்லை. ஆனால், தூங்க முடியாமல், மருந்துக்குக் கூட கண்களில் தூக்கமின்றி, இருட்டில் கூட வண்ண



வண்ண கனவுகளில் ஆழ்ந்து போவது - இதற்கு பெயர் தான் காதலா?

உதய் என்று சத்தம் வராமல், இதழ்களுக்கு வலிக்குமோ, இல்லை... உச்சரிக்கும் அக்ஷரத்திற்கு தான் வலிக்குமோ என்பது போன்று மெல்ல உச்சரித்துப் பார்த்துக் கொண்டாள். விழித்துக் கொண்டே உறும் தன்னை நினைத்தே அவளுக்குச் சிரிப்பு வந்தது.

எப்படி? ஏன்? எதற்கு? என்று படையெடுத்த ஆயிரம் கேள்விகளுக்கும் அவளிடம் பதிலில்லை. ஏன்... இந்த உணர்வு எப்போது அவளுள் புகுந்திட்டது என்று கூட அவள் அறியாள்.

இப்பொழுது, இந்தக் கணத்தில் அவள் மனம் முழுக்க வியாபித்திருந்தது என்னவோ உதய் தான்! உதய் மட்டுமே தான்! அவனுடைய நினைவுகள் மட்டுமே தான்!

கூடவே, அவனுக்கும் தன்னைப் பற்றிய இந்த உணர்வு இருக்க வேண்டுமே என்ற ஆசை, ஏக்கம் மற்றும் வேண்டுதலும் நிறையவே இருந்தது.

உதயிடம் உடனே பேச வேண்டும்... தன் மனதை உடனே அவனிடம் வெளிப்படுத்த வேண்டும் என்ற ஆவல் எழும்ப, அவளுடைய அலைபேசியைத் தேடினாள்.

அவளுடைய கைப்பையில் வைத்தது நினைவில் வர, ஹாலிலிருந்து அதை எடுத்து வருவதற்காக விளக்கைப் போடாமல், விடி விளக்கின் உதவியோடு, பூனை நடையுடன் கிளம்பினாள்.

அப்படியே அவளது வறண்ட தொண்டையின் தாகம் தணிக்க அடுப்படிக்குச் சென்று தண்ணீர் குடித்து விட்டு மேஜையை நோக்கி நடந்தவளின் செவிகளில், ஹாலில்

அமர்ந்திருந்த நிர்மலவேணியின் மெல்லிய புலம்பல் சத்தம் விழ, அடுப்படி வாயிலேயே சத்தம் செய்யாமல் நின்றாள்.

அவர்கள் வீட்டின் அமைப்பு படி, ஹாலில் உட்கார்ந்து பார்த்தால், அடுப்படி வாயிலில் நிற்பவர்கள் தெரிய மாட்டார்கள். அடுப்படியில் இருந்தே ஒரு நடைபாதை வழியாக கீதாஞ்சலியின் படுக்கையறைக்குப் போக முடியும்.

''என்ன, நிம்மி? படுக்க வராமல் இந்த நேரத்தில் இங்கே உட்கார்ந்திருக்கே?'' என்ற ஷ்யாமின் அக்கறையான குரல் கீதாஞ்சலியை ஹாலுக்குள் வராமல் தடுக்க, ஓசை எழுப்பாமல் அங்கேயே நின்றாள்.

''தூக்கமே வரலை, ஷ்யாம். எத்தனை முறை நான் உதயிடம் கேட்டிருப்பேன்? அப்போவெல்லாம் ஒன்றுமில்லை ஒன்றுமில்லைன்னே சொல்லிட்டு இருந்தான். அது தான் போகுதுன்னு பார்த்தால், மணி பதினொன்று தானே ஆகுது... தூங்கியிருக்க மாட்டான்னு அவன்கிட்டேயே கேட்கலாம்னு போன் செய்தால், இப்பவும் அதையே தான் சொல்றான், ஷ்யாம்! அதுவும் எவ்வளவு கோபம் தெரியுமா அவன் குரலில்? நான் தான் இங்கே கோபப்படணும். அத்தை என்னிடம் ஏதாவது கேட்டால்... நான் எங்கே போய் என் முகத்தை வைச்சுக்க?''

இரவின் நிசப்தத்தில் நிர்மலவேணியின் குரல் துல்லியமாக கீதாஞ்சலியின் காதுகளில் விழ, திகைப்புடன் விழித்தவள் அதற்கு மேல் அங்கு தாமதிக்காமல், அலைபேசியை எடுக்காமலே அரவமின்றி அறைக்கு வந்து சேர்ந்தாள்.



அவளின் மனமோ கடிவாளமின்றி ஓடும் குதிரையைப் போன்று எட்டுத் திக்கிலும் தறிக்கெட்டு ஓடியது.

இது நேரம் வரை இவளது விருப்பம், ஆசை, ஏக்கம் என்று மட்டும் எண்ணிக் கொண்டிருந்தாளே தவிர, உதயின் நிலையையோ, தனக்குக் கடந்த நான்கு வருடங்களாக அடைக்கலம் கொடுத்து சிரத்தையாக கவனித்துக் கொண்டவர்களின் மன நிலையையோ துளியும் நினைத்துப் பார்க்கவில்லை.

தன்னைப் பற்றிய சிந்தனையை மட்டும் தூண்டுவது தான் இந்தக் காதலின் சிறப்பு குணமோ?

அம்மாவிடம் இப்படிப் பட்டவர்த்தனமாகச் சொன்னதின் மூலம் உதயைக் காயப்படுத்தி விட்டேனோ? அவனை நான் விரும்புகிறேன் என்று சொன்னால்... அதுவும் அவனையும் வைத்துக் கொண்டு சொல்லும் போது பெரியவர்கள் என்ன நினைத்திருப்பார்கள்?

இருவரும் ஒருவரையொருவர் விரும்புவதாகத் தானே எண்ணத் தோன்றும்?!

அதனால் தான் அவனுக்கு என் மேல் கோபமா? இன்றிரவு இங்கிருந்து புறப்பட்டது ஒரு வேளை என் மேலிருந்த கோபத்தினால் தானா?

குறுக்கிடவும் முடியாமல், தான் சொல்வதை ஏற்றுக் கொள்ளவும் முடியாமல் தான் அவன் அந்த இடத்தை விட்டுக் கிளம்பியிருப்பானோ?

அந்த நேரத்தில் உதய் மட்டும் குறுக்கிட்டு ஆட்சேபித்திருந்தால் தனக்கு அது எத்தனை பெரிய அவமானமாக இருந்திருக்கும்?

ஒன்றுமேயில்லை என்று மதினியிடம் சொன்னானாமே? உண்மையிலேயே ஒன்றுமில்லையா? என்னைப் போன்று அவனுக்கு எந்தவித உணர்வுமே இல்லையா?

அதுவும், தன்னை அவன் காதலிப்பதாக நினைத்துக் கொண்டு, இவள் அடித்த கூத்திற்குப் பிறகு உதய்க்கும் இவள் மீது விருப்பம் இருந்தால் தான் ஆச்சரியம்!

அவனுடன் நட்பாக இருந்த நாட்களில் எங்கே அவன் தன்னைக் காதலிக்கிறானோ என்று சந்தேகம் கொண்டாள்; இன்று அவன் மீது காதல் மலர்ந்த பிறகோ... வெறும் நட்பு மட்டும் தான் என்று விலகி விடுவானோ எனப் பதட்டம் கொண்டாள்.

உதயிடம் உடனே பேசுவது தான் நல்லது என்ற முடிவுடன் மீண்டும் படுக்கையிலிருந்து அவள் எழ, "நைட் நேரத்தில் என்னம்மா இது சும்மா சும்மா எழுந்துட்டு? பேசாமல் படுத்துத் தூங்கு!" என்று அவளருகில் படுத்திருந்த ருக்மணியின் குரல் ஒலித்தது.

"அம்மா... போன்..."

"எதுவாயிருந்தாலும் நாளைக்குப் பேசிக்கலாம். தூங்கு!"

அன்னையின் பேச்சிற்கு மதிப்பளித்து, துயில் கொள்ள முயன்றவளின் மனம் உதயை மட்டுமே சுற்றி வந்தது.

அவன் முகத்தில் நாளை எப்படி விழிப்பது? தான் சொன்னதற்கு என்ன விளக்கம் சொல்வது?

'நான் உன்னை மனதார காதலிக்கிறேன், உதய்!' என்றால் கட்டாயம் அதை உளறல் என்று முடிவு செய்வதற்கு நூறு சதவீதம் வாய்ப்பிருக்கிறது.



அதுவும், இது வரையில் எந்தச் சலனமும் இல்லாமல், திடீரென்று காதல் என்றால் வேறென்ன எதிரொலி கிடைக்கும்?

'சமாளிப்பாகச் சொன்னேன்' என்று பொய்யுரைக்க அவளுக்கே மனமில்லை. அப்படிச் சொன்னால் உதயுடனான காதலுக்கு அந்தக் கணமே மூடு விழா தான்!

இவளது காதலை வெற்றியடையச் செய்வது எத்தனை முக்கியமோ, அவன் கோபத்தைத் தணித்து அவனுடைய மனதை வெல்வதும் அத்தனை முக்கியம் என்ற குறிக்கோளுடன் சிந்தித்தவள், முடிவில் ஒரு அருமையான திட்டத்தையும் வகுத்து, அதன் சாதக - பாதகங்களையும் ஆராய்ந்தாள்.

அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தும் போது சின்னச் சின்ன பொய்கள் சொல்ல நேரிடுமே என்று துணுக்குற்றவளின் உள்ளம் காதல் என்ற பெயரால் சமாதானம் ஆனது.

கீதாஞ்சலி இங்கே விதம் விதமான சிந்தனைகளால் உறக்கம் வராமல் விழித்துக் கொண்டிருக்க, அங்கே உதய் ஆனந்த் தவிப்பிலும், கோபத்திலும் தூக்கம் வராமல் திணறிக் கொண்டிருந்தான்.

கீதாஞ்சலியின் வாய் வார்த்தையாக தன்னை திருமணம் செய்து கொள்ள விருப்பமிருப்பதாகச் சொன்னதைக் கேட்டு அவனது மனம் அடைந்த ஆனந்தம், நேரம் செல்லச் செல்ல துணி கொண்டு துடைத்தது போன்று காணாமல் போயிற்று.

அவன் சந்தேகப்பட்டது போன்று, பேச்சு வேகத்தில் வெளி வந்த சொல் தானோ அது? அர்த்தமில்லாத ஒன்று தானோ?

முதலில் சிறிது நேரம் கீதாஞ்சலியே தன்னை அழைக்கட்டும் என்று காத்திருந்தவனுக்கு சில நிமிடங்களிலேயே பொறுமை கைவிட, அவளது செல்லிட பேசிக்கு அழைப்பு விடுத்தான்.

அவனது அழைப்பு மறுமுனையில் எடுக்கப்படாமலே இருக்க, அவன் மனதில் ஒட்டிக் கொண்டிருந்த துளி நம்பிக்கையும் தொலைந்தது.

எப்படி ஒருத்தியால் எல்லோர் முன்னிலையிலும் அப்படி ஒரு வார்த்தையைச் சொல்லி விட்டு, அதன் பிறகு அதைப் பற்றி ஒன்றுமே சொல்லாமல் இருக்க முடியும்?

அதன் பாதிப்பு அவனிடத்தில் எப்படியிருக்குமென்று சிறிதாவது யோசித்திருப்பாளா? அக்கறையாவது கொண்டிருப்பாளா?

இப்படி ஒரு காரியத்தை அவன் செய்திருந்தால் வானத்துக்கும், பூமிக்குமாய் குதித்திருப்பாள். இதேயிது அவள் செய்ததால்... அம்மையார் அழைக்கும் வரையில் இவன் தேவுடு காக்க வேண்டியதுதான்!

தன்னுடைய உணர்வுகளுக்கு எப்பொழுதுமே அவள் மதிப்பு கொடுக்க மாட்டாளா என்று எரிச்சல் மூண்ட நேரத்தில் நிர்மலவேணி அவனை அழைக்க, நெல்லுக்கு இறைத்த நீர், புல்லுக்கும் சிறிது பாய்வது போல கீதாஞ்சலியினிடத்தில் காட்ட வேண்டிய கோபத்தில் சிறிதை சகோதரியிடம் கொட்டியாகி விட்டது.

என்ன நினைத்து கீதாஞ்சலி அப்படிக் கூறினாள் என்று அவனுக்கே உறுதியாகத் தெரியாத பொழுது, நிர்மலவேணியிடம் அவன் என்னவென்று சொல்ல முடியும்?



நேரம் நள்ளிரவை நெருங்க நெருங்க அவனுக்கிருந்த அத்தனை கோபமும், 'தன்னை இளக்காரமாக எண்ணுகிறாளோ?' என வருத்தமாகப் பரிமாற்றம் அடைய, அன்றிரவு தூக்கம் வராமல், புரண்டு புரண்டு படுத்தவனுக்கு காலையில் கீதாஞ்சலியின் அழைப்பு தான் சுப்ரபாதமாய் அமைந்தது.

முதல் நாள் இரவு அடைந்த வருத்தத்தால் அவளுடைய அழைப்பை அவன் எடுக்காமலே விட, சற்று நேரத்தில் அவளிடமிருந்து குறுந்தகவல் எட்டிப் பார்த்தது.

எகிறிய இதயத் துடிப்பை சமன் செய்துவிட்டு குறுந்தகவலை வாசித்தான்.

"உன்னிடம் பேசணும், உதய். சாயந்திரம் சைலண்டில் வைத்த போனை இப்போ தான் மாற்றி வைக்கிறேன். அதனால் தான் நேற்று இரவு நீ பேச முயன்ற போது எனக்குத் தெரியலை. ஐ அம் சாரி! ப்ளீஸ், உதய். உன்னிடம் பேசணும். தனியா பேசணும். இன்றைக்கு அரசாங்க விடுமுறை என்பதால் காலேஜ் லீவுதானே? நான் அங்கே வீட்டுக்கு வரவா? இல்லை வெளியே போகலாமா? நேரம், இடம் இரண்டையும் முடிவு செய்து எனக்குச் சொல்லு. சீக்கிரம் உன்னிடம் பேசணும்."

மீண்டும் மீண்டும் அந்தக் குறுந்தகவலை வாசித்துப் பார்த்தவனுக்கு வருத்தம் சற்றே குறைய மெல்லிய புன்னகை மலர்ந்தது.

கூடவே கொஞ்சம் பரபரப்பும்!

என்ன பேச போகிறாள் என்று மனதில் உதித்த கேள்விக்கு விடையறியாமல், வேண்டுமென்றே முதல் நாள் இரவுக்கு அவளைப் பழி வாங்கும் விதமாக,

இப்போதாவது பேசணும்னு மனசு வந்ததே!? ஆச்சரியம் தான். நீ பேசுவேன்னு நேற்று நைட் ரொம்ப எதிர்பார்த்தேன்'' எனப் பதில் அனுப்பினான்.

''ப்ளீஸ்!'' என்று பெரிய கொட்டை எழுத்துக்களில் அவளனுப்பிய குறுந்தகவலைப் படிக்கும் போதே அவளிடமிருந்து அடுத்த தகவலும் அணி வகுத்தது.

''அம்மா கூட இருந்தாங்க. அதனால் நைட்டே பேச முடியலை. உடனே, உன்னைப் பார்த்து பேசணும், உதய்.''

''இதேயிது என் கூட சண்டைப் போடணும் என்றால் மட்டும் எந்த வெயிட்டிங் பீரியடும் இருக்கிறது இல்லை. எல்லாமே உடனுக்குடன்... சுடச் சுட சண்டை தான். ஏதாவது விளக்கம் தரணும் என்றாலோ... சாரி கேட்கணும் என்றாலோ இவன் தானே... காத்திருக்கட்டும் என்ற அலட்சியம் உனக்கு.''

''நான் என்றைக்குமே உன்னை அலட்சியமா நினைச்சதில்லை, உதய்! இனி மேலும் அப்படி நினைக்க மாட்டேன். எத்தனை தடவை சாரி கேட்கணும்னு எதிர்பார்க்கிறே? இம்போசிஷன் எழுதவா? ப்ளீஸ்...!''

அதற்கு மேல் அவளைத் தவிக்க விடாமல் காலை பத்து மணிக்கு செம்மொழி பூங்காவிற்கு வரச் சொல்லி தகவலனுப்பிவிட்டு இவனும் அதற்கேற்றபடி தயாராகிச் சென்றான்.

இவனுக்கு முன்பே அங்கு வந்து காத்திருந்தவளிடம், ''ம். சொல்லு! என்ன விஷயம்?'' என்று சுரத்தேயில்லாமல் வினவுவது போல் அவன் காட்டிக் கொள்ள, அவனது குரலிலிருந்த வெறுமை கீதாஞ்சலியை என்னவோ செய்தது.



தன் மனதை உணர்ந்த பிறகு முதன் முதலில் நிகழும் சந்திப்பு என்பதால், தன் மனம் கவர்ந்தவனின் கண்களுக்கு விருந்தளிக்க வேண்டுமென்ற ஆசையில், என்றுமில்லா திருநாளாக மிகுந்த சிரத்தை எடுத்து, ஆரஞ்சும் பிங்கும் கலந்த ஜார்ஜட் புடவையில் தன்னை அலங்கரித்துக் கொண்டு வந்திருந்தாள்.

தளர்ந்திருந்த கூந்தலில் மல்லிகை சரமும், கழுத்தில் மெல்லிய தங்கச் சங்கிலியும் எளிமையான அலங்காரம் தான். ஆனால், யாவும் அவனை மனதில் இருத்தி ஒவ்வொன்றாகப் பார்த்துப் பார்த்து செய்தது.

அது எதுவுமே அவன் கருத்தில் மட்டுமில்லாமல் கண்ணில் கூட பதியாததும், அவன் கண்களில் தெரிந்த வேற்றுமைத் தனமும் சேர்ந்து அவள் முகத்தை வாடச் செய்தது.

அந்த வருத்தத்துடன், ''உனக்கு என் மேல் இன்னமும் கோபமா?'' என்றாள் பாவமாக முகத்தை வைத்துக் கொண்டு.

அவனுடைய ஜீன்ஸ் பாக்கெட்டில் கையை நுழைத்துக் கொண்டவன், ''உன்னிடம் ஒரு கேள்வி கேட்டால் பதிலுக்கு எதிர்கேள்வி கேட்காமல் உன்னால் இருக்கவே முடியாதில்ல...?'' எனப் பெருமூச்செறிந்து கடுப்படித்தான்.

இவனிருக்கும் மனநிலையில் தன் விருப்பத்தைச் சொன்னால் அதை அவன் ஏற்றுக் கொள்வது கடினம் என்றே அவள் மனதிற்குட்பட்டது.

தன்னுடைய திட்டத்தைச் செயல்படுத்துவது தான் புத்திசாலித்தனம் என்ற எண்ணம் வலுக்க, தொண்டைக்

குழியிலிருந்து வர மறுத்த வார்த்தைகளை வெளிக்கொணர முயன்றாள் கீதாஞ்சலி.

அவள் தயங்குவதைப் பார்த்தால், 'நேற்று சொன்னதெல்லாம் பொய்!' என்று தான் சொல்லப் போகிறாள் என யூகம் கிளம்ப, உதய் ஆனந்தின் இதயத் துடிப்பு ஏகத்துக்கு எகிறியது.

ஏமாற்றமும் கோபமுமாக உணர்ந்தாலும், வாயைத் திறந்தால் எங்கே பொங்கி விடுவோமோ என அஞ்சியவன் மௌனமாகவே அவளுடன் அந்தப் பூங்காவில் நடக்கலானான். அங்கேயிருந்த குழுமையோ பசுமையோ இல்லை அங்கு விளையாடிக் கொண்டிருந்த சிறார்களின் உற்சாகமோ எதுவுமே அவன் மனதின் வெற்றிடத்தை நிரப்பவில்லை.

''நான் சொல்ல வர்றதைக் கொஞ்சம் பொறுமையா கேளு, உதய்!''

''.........''

''நான் உன்னைத் தான் கல்யாணம் செய்துக்கப் போறேன்னு அம்மாக்கிட்ட சொன்னதைக் கேட்டு நீ ரொம்ப அப்-செட் ஆகியிருப்பன்னு நினைக்கிறேன்'' என்றவாறே மௌனமாக உடன் வந்தவனின் முகத்தை ஆராய்ந்தவளுக்கு அதிலிருந்த உணர்ச்சிகள் எதையும் சரியாகப் படிக்க முடியவில்லை.

தொடர்ந்து, ''வேற யாரையும் கல்யாணம் செய்தால் பிரச்சனை வருமோன்னு எனக்கு பயமா இருக்கு, உதய். நீ எனக்கு எப்போதுமே நல்லதொரு கம்பேனியன். அந்தத் தோழமையால் உனக்கும், எனக்குமிடையில் நல்ல புரிதல் இருக்கு. அதனாலே நமக்குள் நம்பிக்கையும் அதிகமிருக்கு'' என அவள் பொறுமையாக



அவனுக்கு விளக்க, 'இதெல்லாம் எதற்காக இப்பொழுது சொல்லிக் கொண்டிருக்கிறாள்?' என்று புரியாமல் குழப்பத்துடன் அவளை ஏறிட்டான் உதய் ஆனந்த்.

தெரியாத தேவதையை விட தெரிந்த சாத்தான் மேல் என்று சொல்ல வருகிறாளா? இவள் என்னை இதை விடக் காயப்படுத்த முடியுமா?

அவனது பார்வையில் வெளிப்பட்ட கேள்விக்கு, ''ம்.. சொல்றேன், உதய்!'' என்றவள்,

தயக்கத்துடன், ''இப்போ எனக்கு கொஞ்ச நாளா... இல்லையில்லை... ரெண்டு மாசமா நந்தா என்று ஒருத்தனிடமிருந்து சில லெட்டர்ஸ், கிஃப்ட்ஸ் எல்லாம் வந்துட்டு இருக்கு. அந்த நந்தா யாருன்னு கண்டு பிடிக்க தான் உன்னிடம் கூட அடிக்கடி நச்சரிச்சேன்'' என்று ஒரு வழியாக சொல்ல வந்த விஷயத்திற்கு முன்னுரை வாசித்தாள்.

'என்னது? நம்மைப் போல் இன்னொருவனா?' என்று வியப்பில் புருவத்தை உயர்த்தியவன், ''சரி... அவனுக்கும், நீ என்னைக் கல்யாணம் செய்துக்கிறேன்னு அத்தைகிட்டே சொன்னதுக்கும் என்ன சம்பந்தம்?'' என்றான் குழப்பமாக.

''எனக்கு அந்த நந்தா யாருன்னே இதுவரைக்கும் தெரியலை, உதய். நான் வேற யாரையோ கல்யாணம் செய்த பிறகு, அப்போ கூட இதே மாதிரி ஏதாவது லெட்டர் வந்துட்டு இருந்தால்... அப்போ, என் மேல் சந்தேகம் வர வாய்ப்பிருக்கு இல்ல?''

''ஓ! அதுக்குத் தான் நமக்குள் நம்பிக்கை - புரிதல் - சந்தேகம் வராது என்றெல்லாம் பில்ட்-அப் செய்தியா?

என்னைக் கல்யாணம் செய்யணும்னு சொன்னது கூட...''

அவளது ஆமோதிப்பு கிடைக்கப் பெற்றதும், ''இது சுத்த அபத்தமா இருக்கு, கீதா. யாரோ ஒரு நந்தாக்கு பயந்துட்டு என்னைக் கல்யாணம் செய்துக்குவேன்னு சொல்லுவியா நீ? அதோட விளைவு என்னன்னு நினைச்சுப் பார்க்க மாட்டியா? எதுவுமே யோசிச்சு பேச மாட்டியா?'' சிடுசிடுப்பாய் கேள்விகள் அவனிடமிருந்து பிறந்தன.

''இல்லை, உதய். நான் எல்லாத்தையும் யோசிச்சு தான் பேசறேன்'' அவன் கண்ணோடு கண் கலந்து ஆழ்ந்த குரலில் சொன்னாலும் அவளது கன்னங்கள் சிவப்பேறின.

அவளது விழிகளின் மொழி அவனது ஆத்திரத்தைக் கட்டுப்படுத்த, ''சரி! முதலில் நான் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லு, கீதா. யார் அந்த நந்தா? நீ அவனைக் கண்டு பிடிக்கிற வரைக்கும் தான் அத்தைக்கிட்ட என்னைக் கல்யாணம் செய்துக்கப் போறதா சொல்லப் போறியா?'' என்று முடிந்தளவு பொறுமையாகவே கேட்டான்.

''இந்த நந்தா ரகசிய சிநேகிதன் என்ற பெயரில் தான் இந்த லெட்டர்ஸ் எல்லாம் எனக்கு அனுப்பி வைச்சான்.''

என்னது? இன்றைய வியப்பு பட்டியலுக்கு அளவே இல்லையா?

கீதாஞ்சலி, ரகசிய சிநேகிதனை தான் நந்தா என்று நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்று தெரிந்தபோது விதவிதமான உணர்ச்சிக் கலவைகள் அவன் மனதை



ஆட்கொண்டாலும், 'ஆனால்... எப்படி?' என்ற கேள்வியே அவனுக்கு பூதாகரமாக உதித்தது.

''நானா மண்டையை உடைச்சுக்கிட்டு நந்தான்னு அவன் பெயரைக் கண்டுபிடிச்சேனாக்கும்'' என்று அவள் பெருமை பேசி அருகில் நடந்து வந்தவனை அதிர்ச்சியில் உறைய வைத்தாள்.

''ஹே! என்னாச்சு? ஏன் இப்படி சிலையாகிட்டே?'' என்று பதறியவளிடம், ''ம்... சொல்லு! நீ மண்டையை உடைச்சுக்கிட்டதில் எந்தத் தையலும் போடலையா?'' என்றான் நக்கலாக.

''ஓய்! கிண்டலா?'' என்று அவள் திருப்பிக் கேட்க, ''உன்னையா... நானா? ச்சே... ச்சே...'' என்று தன்னையே நொந்து கொண்டான் அவன்.

இவள் மண்டை உடைத்ததும் இல்லாமல்... என் மண்டையையும் சேர்த்து உடைத்து...!

''ம். எனக்கு இப்போ என்ன ப்ளான் என்றால் அந்த நந்தாவை...'' என்று பேச ஆரம்பித்தவளைக் குறுக்கிட்டு, ''என்ன நந்தா நந்தானுட்டு... ரகசிய சிநேகிதனை...'' என எரிச்சலுடன் திருத்தம் செய்தான்.

''ரெண்டு பேரும் ஒன்று தானே?'' என்றவள், அவனது முகத்தில் வெளிப்பட்ட அதிருப்தியில், ''சரி... சரி... விடு. இடைஞ்சல் செய்யாமல் கேளு. அந்த ரகசிய சிநேகிதனைக் கண்டு பிடிக்கவும் இது ஒரு வழியா இருக்கும்'' என்ற தன் அரிய பெரிய திட்டத்தைச் சொல்லி பெருமிதமானப் பார்வை ஒன்றையும் அவன் புறம் வீசினாள்.

'ரகசிய சிநேகிதனைக் கண்டு பிடிக்க... இந்த உதய் ஆனந்தோடு திருமணம்?'

பொங்கிய சிரிப்பை அடக்கிக் கொண்டவன், ''எப்படின்னு கேட்டால் இடைஞ்சல் செய்றதா சொல்லுவியா, கீதா?'' எனத் துருவினான்.

''அந்த ரகசிய சிநேகிதன் என்னுடைய நடவடிக்கையெல்லாம் கண்காணிக்கிற மாதிரி இருக்கு, உதய். எனக்குக் கல்யாணம் நிச்சயமாயிடுச்சு என்றால் கட்டாயம் அவன் திரைமறைவிலிருந்து வெளியே வந்து தானே ஆகணும்?''

அவளது குரலில் இருந்த உற்சாகமே, 'எப்படி என் ப்ளான்?' என்று அவனிடம் சொல்லாமல் சொல்லியது.

''அப்படி அவன் வந்தால் அவனிடம் என்ன சொல்லப் போறே? வீட்டில் என்ன சொல்லப் போறே?''

கீதாஞ்சலி மனதில் திட்டமிட்டது என்னவென்றால் ரகசிய சிநேகிதனைக் கண்டறிய இந்தக் கல்யாண ஏற்பாடு நடக்கட்டும் என்று உதயிடத்தில் சொல்லி, அவனைச் சம்மதிக்க வைப்பது.

அந்த ஏற்பாடு நடக்கும் வேளையில் இவளுடன் உதய் பழக சந்தர்ப்பங்கள் வாய்க்கும்; அப்பொழுது இவளுடைய மனதில் பூத்தக் காதலை, இவளின் நடவடிக்கைகளின் மூலமோ, வார்த்தைகளின் மூலமோ வெளிப்படுத்தி உதய்க்குப் புரிய வைப்பது.

அப்படி ஒருவேளை அவனுக்குப் புரிய வைக்க முடியாமல் போனாலும் ரகசிய சிநேகிதனைக் கண்டுபிடிக்க முடியாத பட்சத்தில் - அதற்கான முயற்சி எடுக்கவில்லையென்றால் எங்கிருந்து கண்டு பிடிக்க முடியும்? - குடும்பத்தினருக்காக திருமணத்தைத் தடுத்து நிறுத்தவும் முடியாது என்ற நிலைக்கு இருவரும் தள்ளப்படுவார்கள்.



அவளுடைய திட்டப்படி எப்படிப் பார்த்தாலும் அவளுக்கு 'வின்-வின்' சூழல் தான்!

ரகசிய சிநேகிதன் வர மாட்டான் என்று நினைத்துப் பார்த்தாளே ஒழிய, ஒருவேளை வந்துவிட்டால் என்றொரு நிலைமையை அவள் நினைத்துப் பார்க்கவேயில்லை.

இப்பொழுது உதய் அவளிடத்தில் அதையே கேட்கவும் 'ஞே' என்று விழித்துவிட்டு, ''ரகசிய சிநேகிதன் வந்தால்... வந்தால்...'' என்று திக்கினாள்.

அவளை நெருங்கி நின்று கொண்டு, ''ம்... வந்தாச்சு. அப்புறம் சொல்லு...'' என்று இதழோரம் பூத்த மெல்லிய புன்னகையை அடக்கியபடியே வினவ, அதற்கு அவளிடத்தில் எந்தப் பதிலும் இல்லை.

அவளது தயக்கத்தைத் தவறாகப் புரிந்து கொண்டவன், ''உனக்கு ரகசிய சிநேகிதனைப் பிடிச்சிருக்கா?'' என்று மெல்ல விசாரித்தான்.

''ஏன் அப்படிக் கேட்கிறே?'' என்று பதில் கேள்வி எழுப்பியவள்,

உதயின் குற்றம் சாட்டும் பார்வையைக் கண்டதும், ''சரி... சரி... பதில் கேள்வி கேட்கலை... எனக்கு அது யார்னு தெரிஞ்சுக்க ஆர்வமிருக்கு, உதய். ஏதோ அந்த எழுத்தில் உண்மை இருக்கிற மாதிரி தோணுது. என்னுடைய நிலையை எடுத்துச் சொன்னால் புரிஞ்சுக்குவான்னு நினைக்கிறேன்'' என உண்மையான அர்த்தத்தை வேறொரு பொருள் பட பேசினாள்.

அவள் சொன்னதின் உண்மையான அர்த்தம் - ரகசிய சிநேகிதனிடம் உதயை இவள் மனமார விரும்புவதாகச் சொல்லி அவனை விலகிக் கொள்ள கோருவது.

ஆனால் அது புரியாத உதய், ''உன்னுடைய நிலை என்றால்... காதலைப் பற்றியா?'' என விளக்கம் கேட்ட போது அவனது எதிர்பார்ப்பு பன்மடங்கு எகிறியது. நூற்றில் ஒரு சதவிகிதமாக தன்னை விரும்புவதாகச் சொல்வாளோ என்று!

அவள் தான் காதலைப் பற்றி என்ன நினைப்பில் இருந்தாள் என்பது அவனுக்கு அத்துப்படியாயிற்றே! ஆனால் பாவம்... அவளுடைய இன்றைய மனமாற்றத்தை அவன் அறிந்திருக்கவில்லை.

''ஆமாம்!'' என்று அவனது உற்சாகத்தை வடிய வைத்தவளை எரிச்சலுடன் பார்த்தபடியே, ''ம். நீ சொல்ற மாதிரி அவனும் புரிஞ்சுகிட்டு போயிடறான் என்றால்...?'' என அடுத்த வினாவைத் தொடுத்தான்.

''மறுபடியும் உன்கிட்டே தான் வந்து நிற்பேன்.''

''எதுக்கு? கல்யாணத்தை நிறுத்துன்னு சொல்றதுக்கா?''

அவனுடைய கேள்விக்கு 'ஆமாம்' என்று பதில் சொல்ல அவளுக்கு மனம் வரவில்லை; இல்லையென்று சொன்னால் கட்டாயம் தன் குட்டு வெளிப்பட்டு விடும் என்பதால் மௌனமாகவே நடந்தாள்.

ஆனால் அவளது மௌனத்தை 'ஆமாம்' என்று அர்த்தம் கொண்டான் உதய் ஆனந்த்.

ரகசிய சிநேகிதன் என்ற பெயரில் வரும் குறிப்புகளைக் கொண்டு தன்னைக் காதலுடன் நாடுவாள் என்ற அவனது எதிர்பார்ப்பு பூர்த்தி அடையவில்லை என்பதில் அவனுக்கு பலத்த ஏமாற்றம்.

ஆனாலும் கீதாஞ்சலி சொல்வதை முழுமையாகக் கேட்டால் இன்னமும் ஏதோ ஒரு சாத்தியக் கூறு



இருப்பதாக அவன் முழுமையாக நம்பியதால் தான் இத்தனை பொறுமையாக அவன் இதுவரை செவி மடுத்தது.

ஆனால் அவளுடைய மௌனம் அவனை மிகவும் நோகடித்தது. தன்னைத் தனக்காகவே அவள் விரும்பி திருமணம் செய்து கொள்ள வேண்டும் என இவன் நினைப்பது என்ன பேராசையா?

இதைக் கூட... ப்ச்!

தனது ஆசை நிராசையாகிப் போனதில் மனம் சலித்தாலும், மற்றொரு கோணத்தில் இந்த விஷயத்தைப் பார்க்கும் போது அவனுக்குச் சிறிதளவு நம்பிக்கை பிறந்தது.

அவளுடைய அடி மனதில் தன் மீது விருப்பம் இருப்பதால் தான் அனைவர் முன்னிலையிலும் பட்டவர்த்தனமாக திருமண விருப்பத்தைச் சொல்லும் துணிவு அவளுக்கு வந்திருக்க வேண்டும்.

இல்லையென்றால், அவளாவது அப்படிச் சொல்வதாவது? வேறு காரணம் சொல்லி, அவள் அம்மாவின் ஏற்பாட்டை தடை செய்திருக்க முடியாதவளா அவள்?

இனி வரும் நாட்களில், அவளுடன் பழகும் சந்தர்ப்பங்களில் அவள் மனதில் உள்ளதை அவளே புரிந்து கொள்ள வைக்க தன்னால் முடியும் என்று நம்பிக்கை வைத்தான்.

அப்படியே முடியாமல் போனாலும் திருமண ஏற்பாடுகளைத் தடுக்க இருவராலுமே முடியாது.

'காதல் புரிவதால் திருமணம்' என விரும்புபவனுக்கு, கீதாஞ்சலியின் திட்டப்படி 'திருமணம் மூலம் காதல்'

என்ற நிலையாவது அமையும். அத்தோடு திருமண ஏற்பாடுகள் நடக்கும் போதே தன் காதலை அவ ளிடத்தில் வெளிப்படுத்தவும் நல்லதொரு வாய்ப்பு கிடைக்கப் பெறலாம்.

ம்க்ஹும்! இத்தனை நாள் வாய்க்காத வாய்ப்பு இனி தான்டா உனக்கு வாய்க்கப் போகுது என அவனை நினைத்து அவனே கேலி செய்து கொள்ள... 'என் மானத்தை வாங்க, வேற யாரும் வர வேண்டாம்! நானே எனக்குப் போதும்' என பரிகாசமாக நினைத்துக் கொண் டான்.

தன்னுடைய காதலை மற்றவர் உணர வேண்டும் அல்லது உணர்த்த வேண்டும் என்று இருவருமே ஒரே மாதிரியான எண்ணத்தில் தான் திளைத்தார்கள். ஆனால்... ஊரைச் சுற்றி மூக்கைத் தொடும் விதமாக!

கண்களைத் திறந்தபடி கண்ணாமூச்சி ஆட்டம் ஆட வைப்பது தான் காதலின் மகிமையோ?

இருவருக்கும் இடையில் நிலவிய அசௌகரியமான அமைதியைக் கலைக்க விரும்பியவனாக, ''கல்யாணத்தை நிறுத்த முடியாமலும் போகலாம், கீதா...'' என மென்மை யாக அவளை எச்சரித்தான்.

'அதானே எனக்கு வேண்டும்!' என்று அவள் உள்ளம் துள்ளியதை வெளிக்காட்டாதவளாக நின்றிருந்த கீதாஞ்சலியை, தான் மட்டுமிங்கே கலங்கிப் போயிருக்க, எதற்கும் அசையாமல் அவள் இருப்பதா எனக் கண்கள் இடுங்க பார்த்தான் உதய்.

எதற்கும் கலங்காத அவளின் உறுதியை சோதிக்க எண்ணி, ''நீ எப்படி என்னைக் கேட்காமல் இந்தப் பிரச்சனையில் என்னை இழுத்தே? நான் லவ் பண்ற



பொண்ணுகிட்டே இப்போ என்ன சொல்றது?'' என்று தீவிரமாக யோசிக்கும் பாவனையில் கேட்டு, அவளை அதிர்ச்சியில் உறைய வைத்தான்.



18

'நான் காதலிக்கும் பெண்ணிடம் என்ன சொல்வது?' என்று அவன் கேட்டதும், பேந்தப் பேந்த விழித்தபடி கண்களில் கலக்கத்துடன் நின்றவளை நமுட்டுச் சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான் உதய் ஆனந்த்.

இவனுக்கு ஒரு காதலி இருப்பாள் என்று அவள் நினைக்கவேயில்லையே? இப்பொழுது என்ன செய்வது?

திணறலுடன், ''படியலைன்னு... மதினிக்கிட்டே சொல்லிட்டு இருந்தே...?'' என கீதாஞ்சலி கம்மிய குரலில் வினவி, அவனை இம்முறை வாய்விட்டே சிரிக்க வைத்தாள்.

''ம்ம்... படியலை என்பதற்காக அப்படியே விட முடியாதில்ல, கீதா? அப்புறம் அதற்குப் பெயர் காதல் இல்லையே?'' என்று கேட்டவாறே கேள்வியும் கேலியு மாக அவனை நோட்டம் விட்டவனிடம்,

''அப்போ இன்னமும் ஒன்றும் உறுதியில்லை... அப்படித் தானே, உதய்?'' கண்களில் ஒளிர்விட்ட நம் பிக்கையுடன் கீதாஞ்சலி கேட்க, அவன் ஆமோதிப்ப தாகத் தலையசைத்தான்.

ஓ! ஹப்பாடியா!

ஓசையின்றி ஆசுவாச பெருமூச்சு வெளியிட்ட வளுக்கு அதற்குள் அவன் தன்னைக் கலக்கி விட்டானே

என்று சின்ன எரிச்சல் மூள, ''உன் காதலை ஏற்காதவள் உனக்கு வேண்டாம், உதய். ஆசைப்படறது கிடைக்கலைன்னா... நமக்கு விதிக்கிறதை சந்தோஷமா ஏற்றுக்கணும்'' என்றாள் தத்துவார்த்தமாக.

அவளின் முக பாவனைகளைக் கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த உதய் ஆனந்திற்கு அவளைச் சீண்டி வம்பிழுக்க வேண்டும் என்ற உத்வேகம் பிறக்க, ''எப்போ நீங்க கீதாம்பிகே ஆனீங்க? ஒரே தத்துவமா பொழிறீங்க?'' என அவளைக் கேலி செய்துவிட்டு,

''ஆனால் தத்துவமெல்லாம் மற்றவங்களுக்கு மட்டும் தான் போல? நீ என் மேல் ஆசைப்படவுமில்லை; சந்தோஷமா ஏத்துக்கற மாதிரியும் இல்லையே?'' என்றான் புருவம் உயர்த்தி.

''நான்... நான்...'' என்று திக்கியவாறு, ''எதை வைச்சு சொல்றே?'' என அவனிடமே திருப்பிக் கேட்டவளுக்கு, அவன் காதலிப்பதாகச் சொன்னவளைப் பற்றிய பேச்சு வேண்டுமென்றே அப்போதைக்கு மறந்து போனது!

''அப்படி ஆசையிருந்திருந்தால் தான், கல்யாணப் பேச்சை முதலில் எடுக்கும் போதே சரின்னு சொல்லியிருப்பியே?'' என்று அவன் வினவ, மானசீகமாக தன்னையே, 'மட்டி! மடச்சி!' என்று குட்டிக் கொண்டாள் கீதாஞ்சலி.

''சரி... சரி... கீதா! பழைய விஷயத்தைக் கிளப்பலை; உடனே இப்படி வாடிட வேண்டாம்'' என்று அவளைச் சமாதானம் செய்தவன், ''சரி சொல்லு! ரகசிய சிநேகிதன் தான் நந்தான்னு எப்படிக் கண்டுபிடிச்சே?'' என்று வெகு நேரமாக அவன் கேட்க நினைத்த கேள்வியைத் தொடுத்தான்.



எப்படித் தான் அவள் இப்படியொரு முடிவிற்கு வந்தாள் எனத் தெரிந்து கொள்ள மிக்க ஆர்வமுடன் இருந்தான்.

''அவன் எனக்கு கொஞ்சம் க்ளூஸ் கொடுத்திருந்தான், உதய். N-N-H-A-A-D என்ற எழுத்துக்களை வைச்சு எவ்வளவு கஷ்டப்பட்டு அந்தப் புதிருக்கான விடையைக் கண்டுபிடிச்சேன் தெரியுமா?''

முகத்தில் பெருமிதம் மின்ன கூறியவளைப் பார்த்து, ''ம்ஹ்ம்ம்... கஷ்...ட...ப்ப...ட்டு கண்டுபிடிச்சியா?'' என்று பெருமூச்செறிந்தவன், ''ரொம்ப கஷ்டம் தான்!'' என்று பல்லைக் கடித்தான்.

''இன்னமும்... ஒரு விஷயம் கூட அதிலிருக்கு. அன்னைக்கு ஹாஸ்பிடலில் உன்னிடம் ஒரு விசிட்டிங் கார்ட் காண்பிச்சேன் தெரியுமா? அதிலிருந்த போன் நம்பரும், எனக்கு அனுப்பின 83424 என்ற நம்பரும் பொருந்தி வந்தது'' ஆச்சரியத்துடன் அவள் கூற, தலையில் அடித்துக் கொள்ளலாம் போன்றிருந்தது அவனுக்கு.

''நீ எல்லாம் சி.ஏ. படிக்க வேண்டிய ஆளே இல்லை, கீதா! போலீஸ் டிபார்ட்மென்டில் இருந்திருக்க வேண்டியது. ஒரு கேஸ்... ஒரு கேஸ்... நின்றிருக்காது...!'' என்று வஞ்சப் புகழ்ச்சி அணியை அவன் உபயோகிக்க,

அவனது கேலி புரிந்தவளாக, ''ப்ச்! இந்தக் கிண்டலுக்கு ஒன்றும் குறைச்சலில்லை'' என முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டாள்.

''சரி... அந்த நந்தா தான் யார்னு கண்டுபிடிச்சுட்டியே? அப்புறம் என்ன? அடுத்த வாரம் நந்தா

ட்யூட்டிக்கு வந்துடுவார். நீயே வந்து அவரிடம் லெட்டர்ஸ் எல்லாம் காண்பிச்சு, 'நீ தானா அந்தக் குயில்?' என்று பாடிட... சாரி... கேட்டுட வேண்டியது தானே?''

''ஒரு திருத்தம்... நந்தா தான் ரகசிய சிநேகிதன் என்று கண்டு பிடிச்சிருக்கேன். ஆனால், என்ன தான் போன் நம்பர் பொருந்தி வந்தாலும், உங்க ஹாஸ்பிடலில் இருக்க நந்தா தானா இது என்று சந்தேகம் இன்னமும் இருக்கு. அதோட, அவனைத் தேடி நான் எதுக்குப் போகணும்? எனக்கு கல்யாணமென்றால் அவனே வெளியே வர மாட்டானா?'' என்று அந்தப் பேச்சை அத்தோடு விட்டவள்,

''நீ முதலில் என்னிடம் கேட்டதையே நான் உன்கிட்டே கேட்கிறேன், உதய். என் மேல் எப்போதும் நம்பிக்கை வைக்கணும் வைப்பியா? ப்ளீஸ்!'' என்றவாறே ஒருவித எதிர்பார்ப்போடு அவனிடம் தன் வலது கரத்தை நீட்ட,

தன் கரத்தோடு அவளது இணைத்தவன், ''நிச்சயமாய்!'' என்று உறுதியளித்தான்.

அந்தக் கரத்தை விடுவிக்காமல் கோர்த்தபடியே, ''இன்றைக்கு எங்க அம்மாவிற்கு, உங்க அம்மா மூலமோ... அக்கா வழியாகவோ விஷயம் வந்துடும், கீதா. கல்யாண ஏற்பாடு ஆரம்பிச்சிடுவாங்க'' என்று காதலுடன் மென்மையாகச் சொன்னான்.

''தெரியும், உதய்!'' என்று வாய் வார்த்தையாகச் சொன்னவளும் தன்னுடைய கரத்தை அவனிடமிருந்து விலக்கிக் கொள்ளவில்லை.



பேசிக் கொண்டே சிறிது தூரம் பூங்காவில் நடந்தவர்கள், ஒரு கல் மேடையில் இளைப்பாற அமர்ந்தனர்.

பெருத்த யோசனைக்குப் பின், எப்போதும் போலவே இப்பொழுதும் அவளுடைய வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்க முடியாமல், உதய் சொன்னதிலிருந்து அவளை உறுத்திக் கொண்டேயிருந்ததை அவனிடம் வாயை விட்டுக் கேட்டாள்.

''உதய்! என்னோட எக்ஸாம் முடிஞ்சதும் உனக்கு நான் ட்ரீட் கொடுத்த பொழுது, கல்யாணம் பற்றி பேச்சு வந்ததும், 'உன்னிடம் சொல்லாமலா, கீதா? சீக்கிரமே சொல்லிடறேன்' என்று நீ சொன்னே இல்ல? ஏன் என்னிடம் அப்படிச் சொன்னே? அன்றைக்கு எதுவும் அது மாதிரியில்லையா? இல்லை... இதுவும், முதலில் மதினியிடம் சொன்ன பெண்ணும் ஒன்றே தானா?'' என்று மிகுந்த தயக்கத்துடனே வினவினாள்.

ஒருவேளை, அன்றே உதய் வேறு யாரையோ காதலிப்பது தெரிந்திருந்தால்... இப்பொழுது அவனிடம் அவள் மனதைத் தொலைக்காமல் இருந்திருப்பாளே என்ற நினைப்பு அவளுக்கு.

நிர்மலவேணியிடம் அவன் முன்பு சொன்னதை கீதாஞ்சலி ஒரு பொருட்டாகவே எடுத்துக் கொள்ளவில்லை. வாலிப வயதில் செய்யும் கேலி என்றே அவள் அதை நினைத்திருந்தாள்.

''அப்போ அதை உன்னிடம் சொல்லும் அளவிற்கு உனக்கு என் மேல் பெரிய அபிப்ராயம் இல்லைன்னு நினைச்சேன். அபிப்ராயத்துக்கு காத்துக்கிட்டு இருக்க

முடியாதுன்னு இப்போ தெரிஞ்சு போச்சு! அதான் சொல்லிட்டேன்'' என்று கண் சிமிட்டி குறும்பாகச் சொல்லி சிரித்தவனுக்கு மறுமொழி கூறாமல் தனக்குள்ளேயே மூழ்கியவள்,

சில நிமிடங்களுக்குப் பின், ''வந்து... வந்து...'' அவன் வாயால் வேறு யாரையோ உதய் காதலிக்கும் பெண் என்று குறிப்பிட மனமின்றி தவித்தவள், ''... அந்தப் பெண்ணைப் பற்றி என்ன செய்யப் போறே? படியலை... ஒத்து வரலைன்னு விட்டுட்டியா?'' என அவளின் ஆர்வம் வெளியே தெரியாதபடி சாதாரணமாகவே கேட்க முயன்றாள்.

என்னதான் இன்னமும் எதுவும் உறுதியில்லை என்ற எண்ணத்துடன் சற்றே நிம்மதியடைந்தாலும், 'அந்தப் பெண்' உதயைக் காதலிக்காவிட்டால் என்ன? உதய் அவள் மீது விருப்பத்தோடு இருக்கிறானே?

ஒருவர் மட்டுமே விருப்பம் கொண்டாலும், விருப்பம்... விருப்பம் தானே? அதை அனுபவிக்கும் அவனே. உதயின் நிலையைப் பற்றி நினைக்காவிட்டால் எப்படி?

ஒரு தலையாய் அவன் யாரையோ விரும்புகிறானே என்று அவனுக்காகப் பரிதாபப்பட்டவளுக்கு தன் மீதே கழிவிரக்கம் தோன்றியது.

முதன் முறை கேட்டபோது அவன் சரியான பதில் சொல்லாமல் மழுப்பின மாதிரி இல்லாமல் இப்பொழுதே நேரடியாகவே தனக்குச் சாதகமான பதில் சொல்வான் என எதிர்பார்த்தாள்.

'அவளை விட்டுவிட்டேன்' என அவன் கூறுவதைக் கேட்க மிகுந்த ஆவலோடு காத்திருந்த அதே நேரம்,



எங்கே எதிர்மறை பதில் வந்து விடுமோ என ஒரு பக்கம் அச்சமாகவும் இருந்தது.

''ஒத்து வராமல் எங்கே போவாள்? அங்கே சுற்றி, இங்கே சுற்றி என்னிடம் தானே வரணும்'' என்றவனுக்கு சிரிப்பை அடக்குவது பெரும் பாடாகவே இருந்தது.

''சுற்றி சுற்றி வர்றாள் என்றால்... யோசிக்கவே தெரியாது போல அவளுக்கு!''

''அப்படி இளக்காரமா எடை போட்டுடாதே, கீதா. அவள் எப்படியெல்லாம் யோசிக்கிறாள் என்று தெரிந்தால்... நீ அப்படியே ஷாக் ஆகிடுவே! இப்ப தானே கொஞ்சம் கொஞ்சமா நேரா யோசிக்க ஆரம்பிச்சு இருக்காள். கொஞ்சம் காத்திரு. கூடிய சீக்கிரமே உனக்கு வடை பாயசத்தோடு விருந்து போடறேன்!'' உல்லாசமாகக் கூறியவனின் தலையிலேயே ஒன்று போடலாமா என்று இருந்தது கீதாஞ்சலிக்கு.

இவனோட வடை பாயாச விருந்துக்குத் தான் இங்கே எல்லோரும் காத்துகிட்டு இருக்காங்களாமா? இருக்கிறவர்களின் வலியும் ஏக்கமும் புரியாமல்!

தன் புண்ணை கீறி விட்டுக் கொள்கிறோம் என்று புரிந்தும், ''அவளை நான் பார்த்திருக்கேனா?'' என்றாள் உதட்டைக் கடித்தபடி.

அவள் புறமாக நன்றாகத் திரும்பி உட்கார்ந்தபடி, ''நீ பார்க்காமலா? நல்லாவே பார்த்து இருக்கே, கீதா. ஆனால், என் பார்வைக்குத் தெரியற மாதிரி உன்னோட பார்வைக்குத் தெரிய மாட்டாள்'' என்றான் நன்றாக விரிந்த சிரிப்புடன்.

நான் பார்த்து இருக்கேனா? யார்? அதுவும் இவர் பார்வைக்குத் தெரியற மாதிரி எங்க பார்வைக்குத் தெரிய மாட்டாங்களாமா? எல்லாம் நேரம் தான்டா!

அப்படி யார்?

தனக்குத் தெரிந்தவர்களை எல்லாம் கண் மூடித் திறப்பதற்குள் அவள் மனக்கண் முன் கொண்டு வந்தவள், கண் முன் வந்த ஒவ்வொருத்திக்கும் - அவள் காது கொஞ்சம் பெரியது. இவளோட கண் ஒரு மாதிரி பார்க்குமே. அவளுக்கு பல் சரியே இருக்காது என இல்லாத குறைகளையெல்லாம் தேடித் தேடி ஒவ் வொருவரையாக இருக்காது. இல்லை எனத் தட்டிக் கழித் தாள்.

யாரென்று தெரியாவிட்டால் மண்டை வெடித்து விடும் போலவும் இருந்தது; ஆனால், தெரிந்தால் இதயம் வெடித்து விடுவதென்னவோ நிச்சயம்!

கேட்டே விடுவோமோ என்றவாறே உதயைப் பார்த்த வளிடம், ''ம்ஹூம்! நேரம் வரும்போது சொல்றேன். அது வரைக்கும் சஸ்பென்ஸ். மேலே எதுவும் கேட்காதே சொல்ல மாட்டேன்!'' என்றபடியே அவள் கழுத்தை உரசி விளையாடும் அவளுடைய காது தொங்கட்டானை சுண்டி விட்டான்.

என்னமோ அவனுடைய மனம் உல்லாசமாக இருந்தது. தனக்குத்தானே போட்டுக் கொண்டிருந்த விலங்குகள் அகற்றப்பட்டது போன்று உற்சாகம் குமிழி யிட்டது.

எப்படியும் கீதாஞ்சலியைக் கரம் பிடிக்க போவது உறுதி என்று தெரிந்ததாலோ என்னவோ, மனம் சிறகின்றிப் பறந்தது.

இதே ரீதியில் அவளுடைய புலனாய்வு(?) வேலை களை அவள் தொடர்ந்தால் எப்படியும் கீதாஞ்சலி ரகசிய



சிநேகிதன் யாரென்று கண்டுபிடிக்கப் போவதேயில்லை. இவள் தேடிக் கண்டுபிடிப்பதற்கு முன் திருமண நாளும் வந்துவிடும்.

அவள் வாயாலேயே தன்னைத் தான் திருமணம் செய்து கொள்ளப் போகிறாள் என்று சொன்ன பிறகு அவளது வீட்டினர் சும்மாவா இருப்பார்கள்? இல்லை... கீதாஞ்சலியின் வீட்டில் சும்மா இருந்தாலும், இவ்வளவு தூரத்திற்கு வந்த பிறகு அவன் வீட்டினர் தான் கையைக் கட்டிக் கொண்டிருப்பார்களா?

நிர்மலவேணியை அவர்கள் வீட்டில் திருமணம் செய்து கொடுத்ததற்கு. அண்ணி என்ற கோதாவில் இந்த வேலையையாவது அவள் செய்யட்டுமே!

கீதாஞ்சலியாகத் திருமணத்தை நிறுத்தப் போவ தில்லை; இவனோ, சீக்கிரமே திருமணம் வைத்தால் நல்லது என்று இருப்பவன்! ஆக, கூடிய சீக்கிரத்தில் டும் டும் டும் தான் என்ற சந்தோஷத்தில் இருந்தான் உதய் ஆனந்த்!

அதற்கு எதிர்மாறாக கீதாஞ்சலியின் மனமோ சஞ் சலத்துடன் இருந்தது. அவன் சஸ்பென்ஸில் இடி விழ என்று கொதித்தாள்.

உதயை ஓரக் கண்ணால் பார்த்துக் கொண்டே, ''உதய்! வந்து...'' என்று அவள் இழுக்க, ''நிறைய தடவை இன்றைக்கு நீ வந்துட்டே! வந்த பிறகு சொல்லு!'' என்று அவளை மேலும் கடுப்பேற்றினான் அவன்.

''குறுக்க குறுக்கப் பேசாமல் கேளு!'' என்று அவனை மிரட்டியவள், ''நாம போட்ட இந்தத் திட்டத்தில் இருந்து

நீ பாதியிலே பின் வாங்கக் கூடாது. ஓகே?'' 'அவனுடைய காதலியை' மனதில் வைத்துக் கொண்டு அவள் உறுதிப்படுத்திக் கொள்ள கேட்க,

புருவத்தை உயர்த்திய உதய் ஆனந்த், ''கீதா! முதலில் ஒன்று நீ நல்லா புரிஞ்சுக்கணும். இந்தத் திட்டத்தைப் போட்டது நீ! ஏதோ பாவம்... உனக்கு உதவி செய்யலாமேன்னு சரின்னு சொல்லியிருக்கேன். அதுவும் இப்போதைக்குத்தான்'' என்று முகத்தைச் சிரமப்பட்டு இயல்பாக வைத்துக் கொண்டு கூறினான்.

''ஹே! என்ன நீ இப்படிச் சொல்றே?'' என்று பதறியவளிடம்,

''ஆமா, கீதா! உன்னோட ரகசிய சிநேகிதன் எப்போ வர்றது? எப்போ நான் என்னோட மீதி கதையைப் பார்க்கிறது? அதனால, என்னோட 'அவள்' எப்போ முழுசா சரின்னு சொல்றாளோ... அப்போ இந்த உன்னோட திட்டத்தை மாற்ற வேண்டியிருக்கும். இப்பவே சொல்லிட்டேன்! அப்புறம் சொல்லலை என்று எனக்குக் குறை சொல்லக் கூடாதாக்கும்'' என்று விளையாட்டாகவே எச்சரிக்கை செய்தான்.

கீதாஞ்சலி அவனை விரும்புகிறாள் என்று சொல்லிவிட்டால் இந்தத் திட்டத்திற்கு அவசியமினறி போய் விடுமே! அப்பொழுது இந்தத் திட்டத்தை மாற்றி தானே ஆக வேண்டும் என்பது உதய் ஆனந்தின் எண்ணம்!

தன்னருகில் இருந்தவனையே கீதாஞ்சலி விழியெடுக்காமல் பார்க்க, அவள் கூந்தலிலிருந்து வந்த நறுமணமும், அவளுக்கே உரிய வாசமும் அவனை என்னவோ செய்ய, ''என்ன? அப்படிப் பார்க்கிறே?'' என்று தொண்டையைச் செருமிக் கொண்டு கேட்டான்.



''உன்னை விரும்புகிறவளையே நீயும் விரும்ப... ஆல் தி பெஸ்ட்!''

''நான் விரும்புகிறவள் என்னை விரும்பணும்னு வாழ்த்து, கீதா!'' சிரிப்புடனேயே அவன் திருத்த,

''அதே தானே நானும் சொன்னேன்? உன்னை விரும்புகிறவளையே நீயும் விரும்ப... ஆல் தி பெஸ்ட்!'' என்று அமைதியாக மீண்டும் தனக்குச் சாதகமாகவே சொன்னதோடு வாளாதிருந்தவள், வீட்டிற்குத் திரும்பியும் யோசனையுடனே இருந்தாள்.

உதய் ஆனந்த் காதலிக்கும் பெண்ணைப் பற்றிய எண்ணமே அவளுக்குப் பிரதானமாக இருந்தது.

யாராக இருக்கும்? இதற்கு முன் அவன் ஒரு முறை கூட அவளைப் பற்றி தன்னிடம் சொன்னதில்லையே?

அவள் யாராக இருந்தால் எனக்கென்ன? ஆனால், அவன் கடைசியில் என்ன சொல்லி விட்டுப் போனான்? இந்த ஏற்பாட்டை நிறுத்தினாலும் நிறுத்தி விடுவானாமா?

எங்கே நிறுத்தட்டும்.:. பார்க்கலாம் என்று நினைத்தவள் ஹாலில் இருந்த அவளது அன்னையைத் தேடிப் போனாள்.

நேற்று இரவு மகள் எல்லோர் முன்னிலையிலும் பட்டுத் தெறித்தது போன்று அப்படி ஒரு வார்த்தையைக் கூறியதில் இருந்து சிறு மனத்தாங்கலுடன் இருந்த ருக்மணி, மகள் தயங்கித் தயங்கி தெளிவதைக் கண்டு, ''இப்போ என்ன சொல்லப் போறே?'' என்றார் லேசான ஆற்றாமையுடன்.

''சாரிம்மா! என் மேலே ரொம்ப கோபமா?'' சலுகையாக தாயின் தோள் மீது சாய்ந்து கொண்டவள்,

''நீங்க அப்படி எதிர்பார்க்காமல் கேட்டதும் எனக்கு என்ன செய்யறதுன்னு தெரியலைம்மா! சாரி! ப்ளீஸ்!'' எனச் செல்லம் கொஞ்ச, அதற்கு மேல் ருக்மணியின் கோபம் நிலைக்கவில்லை.

''ஹ்ம்ம்... சரி போ! உதய்க்குத் தான் நீ என்று இருக்கு! எப்போதிலிருந்து வந்த சம்பந்தம் இது? தட்டித் தட்டிப் போய், கடைசியில் இப்படி வந்து முடியணும்ன்னு இருக்கு. அவனுக்குத் தான் நீ என்று முடிச்சு போட்டிருந்தால் அதைத் தடுக்க நாங்க யாரு?''

''.........''

''சம்பந்தியம்மா கூட பேசினேன். மார்கழி மாசமெல்லாம் பார்க்க வேண்டாம். இன்றைக்கே வீட்டுக்கு வரேன் என்று சொன்னாங்க. நான் தான் உங்க அப்பா இங்கே இல்லைன்னு சொல்லி நிறுத்தி வைச்சேன். அப்பா கூடவும் காலையில் பேசினேன். அவருக்கும் ரொம்ப சந்தோஷம். நைட்டே கிளம்பி வரேன்னு சொல்லியிருக்கார். நாளைக்கே போய் பேசிட்டு வந்துடலாம் என்றார்'' என்று மகிழ்ச்சியாகவே தகவல் தந்தார்.

''ஓ!'' என்று ஆச்சரியப்பட்ட கீதாஞ்சலி.

தன்னுடைய நகக் கண்களை ஆராய்ந்து கொண்டே மெல்ல, ''எனக்கு ரிசல்ட் இந்த ஜனவரி மாச கடைசிக்குள்ளே வந்துடும்மா. சீக்கிரமே ஒரு நல்ல கம்பெனியில் வேலையும் கிடைச்சிடும். எப்படியும் குறைந்தபட்சம் அஞ்சாறு மாசத்துக்குள்ளேவாவது. வேலை கிடைத்த பிறகு கல்யாணம் என்று பேசறீங்களாம்மா?'' என்று



அவ்வளவு தான்! ருக்மணியின் காணாமல் போயிருந்த கோபம், மீண்டும் வந்து அவரது மூக்கின் மீது உட்கார்ந்து கொண்டது.

''என்ன நினைச்சுட்டு இருக்கே கீதா நீ? முதலில் பிடிக்கலைன்னு சொல்லுவே! அப்புறம் திடுதிடுப்புன்னு அப்படியே குப்புற விழுந்து, 'இவனைத் தான் விரும்புறேன்; இவனைத் தான் கல்யாணம் செய்துக்குவேன்' என்று எல்லார் முன்னாடியும் சொல்லுவே. இப்போ என்னடா என்றால்... ரிசல்ட் வரட்டும், அப்புறம் அஞ்சாறு மாசத்தில் வேலை கிடைக்கட்டும், அப்புறம் கல்யாணம் வைச்சுக்கலாம் என்று சொல்றே! எல்லாத்தையும் கேட்டுட்டு, பசங்க இஷ்டப்படியே நாங்க விட்டு விடணும்! அப்படித்தானே?'' கடும் சினம் பொங்க கேட்டவர்,

பேரனுக்குச் சட்டையை அணிவித்தபடி அருகிலிருந்த மகனைக் கோபமாகப் பார்த்து, ''கேட்டியா ஷ்யாம் உன் தங்கை சொன்னதை?'' என்று அவனையும் அவருடைய கோபத்தில் பங்குதாரர் ஆக்கினார்.

அவர் கோபமாகக் கேட்ட எந்தக் கேள்விக்கும் பதிலளிக்காமல் தரையைப் பார்த்து கொண்டு, மௌனமாகவே இருந்த கீதாஞ்சலியைப் பார்த்த ஷ்யாமிற்கு, அவள் ஏன் திருமணத்தைத் தள்ளி போடலாமென்று சொல்கிறாள் என்று புரியவில்லை.

ஆனால், அப்படிச் சொன்ன கீதாஞ்சலிக்கு அவள் ஏன் அப்படிச் சொன்னாள் என்று நன்றாகவே தெரியும்!

தெரிந்ததினால் தான் திருமணத்தைத் தள்ளி வைக்கச் சொன்னது. அது தன் தாயை எந்தளவிற்கு கோபம்

கொள்ளச் செய்யுமென்றும் அறியாதவளில்லை அவள்.

தாயைப் பார்த்தால் பாவமாக தான் இருக்கிறது. ஆனால், எல்லோருக்கும் பாவம் பார்த்தால்... அவள் நினைத்ததை நடத்திக் கொள்வது எப்படி?

''இவள் இப்படித் தான்டா பேசிட்டு இருப்பாள்! வேலையே கிடைக்கலைன்னா கல்யாணமே செய்துக்க மாட்டாளாமா?'' என்று ஷ்யாமிடம் பாய்ந்தவர்,

மகளிடம் திரும்பி, ''நீயா தான் வந்து உதயைக் கல்யாணம் செய்துக்கிறேன் என்று என்னிடம் சொன்னே, அதோட உன் வேலை முடிஞ்சது. இனி மற்றதெல்லாம் எங்க வேலை. எப்போ கல்யாணத்தை வைக்கிறதுன்னு எங்களுக்குத் தெரியும். அப்பா நாளைக்கு வந்ததும், சம்பந்தி வீட்டுக்குப் போறோம். இது மார்கழி கடைசி. கண் மூடித் திறக்கிறதுக்குள்ளே தை மாசம் பிறந்திடும். மாசி அல்லது பங்குனியில் எது நல்ல முகூர்த்தமோ அதில் உங்க கல்யாணம், நகை, புடவை எடுக்க கூப்பிட்டால் வர்றது மட்டும் தான் இனி உன் வேலை. நீ சொல்றதுக்கெல்லாம் எங்களால தலையாட்டிட்டே இருக்க முடியாது. போ! போய், மதினிக்கு கூடமாட உதவி செய்!'' எனச் சுள்ளென்று விழ,

எல்லாவற்றுக்கும் தலையை மட்டும் ஆட்டிக் கொண்டிருந்த கீதாஞ்சலி, ''சாரிம்மா!'' என்று மட்டும் சமத்தாக கூறிவிட்டு, உள்ளறைக்குத் திரும்பினாள்.

அமைதியாகப் போகும் மகளின் முதுகைப் புரியாமல் வெறித்தவர், ''என்னடா இவள்? நான் சொன்னதுக்கு தாம் தூம்ன்னு குதிப்பாள் என்று



தலையை ஆட்டிக்கிட்டு போயிட்டாள்!'' என்று குழம்பினார்.

அவரின் மகளோ குதித்துக் கொண்டு தான் இருந்தாள், அவளது மனதிற்குள்ளாகவே!

தானாகச் சென்று திருமணத்தை சீக்கிரம் வைக்கச் சொல்வதற்கு பதில், என்ன சொன்னால் ஏற்பாடுகள் வேகமாக நடக்குமென்று கணக்கிட்டு அவள் செய்தது, தகுந்த பலனைத் தந்து விட்டிருக்க சந்தோஷத்தில் தத்தளித்தாள் கீதாஞ்சலி.

ருக்மணியைப் பற்றி அவளுக்குத் தெரியும். இதற்கு மேல் பங்குனி வரைக்கும் எல்லாம் காத்திருக்கமாட்டார். எது முதல் முகூர்த்தமோ, அதுவே நிச்சயக்கப்படும்!

உதய்! எங்கே... இந்த ஒரு மாசத்திற்குள்ளேயோ இல்லை இரண்டு மாதத்திற்குள்ளேயோ முடிந்தால் 'அவளை' சரி செய்து கொள்! பார்ப்போம்! நானா அவளா என்று சிரித்துக் கொண்டாள்.

அவள் மிகவும் சுயநலவாதியாக இருக்கிறாளோ என்ற எண்ணம் வரும் போதே... அவன் தான் எப்பொழுது வேண்டுமென்றாலும் இதை நிறுத்துவேன் என்று சொன்னானே?

வேண்டாமென்றால் நிறுத்திக் கொள்ளட்டும். அவளா அவன் கையைப் பிடித்துத் தடுக்கிறாள்?

அப்படியே உண்மையாகக் காதலிப்பவன் இதற்கு எப்படிச் சம்மதிப்பான்? எப்பொழுதும் போன்று இப்பொழுதும் அய்யா சைட் தான் அடிக்கிறாரோ என்னவோ எனத் தன்னையே சமாதானமும் செய்து கொண்டாள்.

"பலமா சிபாரிசு செய்றேன்." "நீ கிடைக்க அந்தப் பொண்ணு உண்மையிலேயே கொடுத்து வைச்சிருக்கனும்னு சொல்லுவேன்." என்றெல்லாம் அவளே முன்பொரு முறை உதயிடம் சொல்லியிருக்கின்றாள்.

அப்பொழுது இவள் மனதில் என்ன இருந்தது, ஏதாவது இருந்ததா என்று கூட அவளுக்குத் தெரியாது! ஆனால், இன்றைய நிலையில் அப்படி ஒரு சந்தர்ப்பம் அமைந்தால், இவள் என்ன சொல்வாள்?

உதய் கிடைக்க நீ உண்மையிலேயே கொடுத்து வைத்திருக்க வேண்டுமென்று சொல்வாளா? இல்லை... எதிராளியின் கண்ணை நோண்டி விடுவாளா?

கடவுளே! அந்த அசந்தர்ப்பமான சூழல் அவளுக்கு நேராமலே போகட்டும்!

காதல் கொண்டவளால், மற்றவரின் காதல் எப்படியும் போகட்டுமென்று நினைக்கவும் முடியவில்லை. அதே சமயம், அது எப்படியோ போனால் தான் தன்னுடைய காதலும் கை கூடுமென்ற நிலையில் வேறு எப்படி நினைப்பது என்றும் புரியவில்லை!

இதெல்லாம் பாவம் இல்லையோ என்று மனம் வாடும் பொழுதே, பாவ புண்ணியம் பார்த்தால் இவளுக்கு யார் பாவம் பார்ப்பது என்றும் தோன்றியது.

மற்றவர் காதலை ஊட்டி வளர்த்தால் எல்லாம், தன் காதல் ஊட்டிக்கோ கொடைக்கானலுக்கோ போகாது! சஹாரா பாலைவனத்திற்குத் தான் போகும்!

அவரவருக்கு வேண்டியதை அவரவர் தான் பார்த்துக் கொள்ள வேண்டும். என் காதலை நான் பார்த்துக் கொள்கிறேன்! அவனுக்கு முடிந்தால், அவன் பார்த்துக்



கொள்ளட்டும் என்று நினைத்து தன்னையே சமாதானமும் செய்து கொண்டாள்.

இருவரது காதலும் ஒன்று தான் என்று தெரிய வரும் பொழுது என்ன செய்வான்?



## 19

கீதாஞ்சலியைச் சந்தித்து விட்டு வீட்டிற்குள் விசிலடித்தபடியே நுழைந்த உதய் ஆனந்த், பூஞ்சாடியில் மலர்களை மாற்றி வைத்துக் கொண்டிருந்த தன் தாயாரின் பரிகாசமானப் பார்வையிலேயே அவருக்கு விஷயம் தெரிந்துவிட்டது எனப் புரிந்து கொண்டான்.

இந்த மாதிரியான வேளைகளில் தந்தையிடமிருந்து தனக்கு உதவிக்கரம் கிட்டும் என்ற எண்ணத்தில் அவனது கண்கள் மகாதேவனை தேட, அவரோ கையிலிருந்த வாரப் பத்திரிகை ஒன்றில் கவனத்தைச் செலுத்துவது போன்று பாசாங்கு செய்து கொண்டிருந்தார்.

"அப்பா! புத்தகத்தைக் தலைக்கீழா வைச்சிருக்கீங்க பாருங்க!" என்று புன்னகையுடன் சொல்லியபடியே அவரருகில் நல்லப் பிள்ளை மாதிரி வந்து அமர்ந்து கொண்டான்.

"அது கூட தெரியாமலா திருப்பி வைச்சிருக்கேன்னு நினைச்சே? இந்தப் புதிருக்கான விடையைக் கண்டு பிடிச்சுட்டேன். அதைத் தான் இந்தப் புத்தகத்தில் தலைக் கீழா கொடுத்திருக்கிற விடையுடன் சரி பார்த்துட்டு இருக்கேன்." என்று பதில் தந்தவர்,

''இந்த மார்கழி சீசன் கச்சேரி இன்றைக்குத் தான் சூடு பிடிக்க போகுதாமே? உனக்குத் தெரியுமா, உதய்?'' என மனைவியைப் பார்த்து ஜாடைக் காட்டியபடி மகனிடம் வினவினார்.

வாடிய மலர்களை அகற்றுவதற்காக தேன்மொழி அந்தப் பக்கம் நகர, ''இருக்கிற நிலைமையைப் பார்த்தால் அம்மா கூட ஒரு கச்சேரிக்குத் தான் காத்திட்டு இருக்காங்க போல? பக்க வாத்தியம் நிம்மி அக்கா வந்த பிறகு தான் கச்சேரியா?'' என தந்தையிடம் உதய் ரகசியம் பேச, அவர் பதில் பேசமுன் பல்லவியைத் துவக்கினார் தேன்மொழி.

''ஏங்க! கச்சேரி சூடு பிடிக்கிறதெல்லாம் இருக்கட்டும். உங்களுக்கு சுடச்சுட நான் ஒரு செய்தி சொல்லட்டுமா? இன்றைக்கு நிம்மியோட மாமியார் போன் பேசினாங்க. பொங்கல் லீவு அடுத்த வாரம் வருதில்ல? அப்போ நம்ம வீட்டிற்கு வந்து, கீதா-உதய் சம்பந்தம் பேசலாமான்னு கேட்டாங்க.'' சுவாரஸ்யமற்ற குரலில் தகவல் சொல்லியபடியே ஷோ கேஸில் இருந்த பொருட்களைத் தூசு தட்டியவர்,

சோபாவில் அமர்ந்திருந்த இருவரின் முகத்தைக் கூட ஏறிடாமல் தொடர்ந்து, ''இப்போதைக்கு எங்க மகனுக்கு கல்யாணம் செய்ய ஐடியாவே எங்களுக்கு இல்லை. அவனுக்கும் அதிலெல்லாம் ஈடுபாடு இல்லை. உங்க பொண்ணுக்கு நல்ல வரம் அமையட்டும்ன்னு' சொல்லி வைச்சுட்டேன்.'' என சர்வ சாதாரணமாக மகனுக்கு அதிர்ச்சி வேட்டு ஒன்றை வைத்து விட்டு, சேர்ந்திருந்த இரண்டு ஜோடி புறா பொம்மைகளை வலப்பக்க



ஓரத்தில் ஒன்றும், இடப்பக்க ஓரத்தில் ஒன்றுமாக மாற்றி வைத்தார்.

''அ...ம்ம்ம்ம்...மா...!'' என்று அலறியபடியே தன் இருக்கையிலிருந்து உதய் எழுந்து கொள்ள,

மகனைச் சட்டை செய்யாமல், ''நீ பதட்டப்படாதே, உதய்! அதான் நானே சொல்லிட்டேன் இல்ல?'' எனப் புகைப்பட சட்டத்தை தூசு தட்டி ஒழுங்குப்படுத்துவதிலேயே மும்முரமாக இருந்தார்.

''என்னைக் கேட்காமல் ஏன்மா செய்தீங்க?'' என்று அவன் குரலை உயர்த்த,

மகாதேவன், ''படவா ரெண்டு போட்டேன் என்றால் தெரியும் சேதி! நாலு மாசத்துக்கு முன்னாடி, ஏன் எனக்கு தெரியாமல் கல்யாணம் பேசுனீங்கன்னு சண்டை போட வேண்டியது! இன்றைக்கு வந்து, கல்யாணம் பேசலை என்றாலும் ஏன்மான்னு கதற வேண்டியது. உங்க அம்மாவே இப்போ தான் புலம்பலை நிறுத்தியிருக்காங்க. இதில் ஆரம்பிச்சு வைக்கிறியா நீ?'' என தாய் - மகன் இருவருக்குமான பேச்சில் இடைப் புகுந்தார்.

''அதிசயம்ங்க! என்றைக்கும் இல்லாத திருநாளா இன்றைக்குத் தான் எனக்கு ஆதரவா பேசியிருக்கீங்க. சென்னையில் மழை ஜோரா பெய்ய போகுதுன்னு நினைக்கிறேன். வெளியே கொடியில் காயும் துணியெல்லாம் எடுத்து வைச்சுடணும்.'' எனக் கணவருக்குப் பாராட்டை எகத்தாளமாகவே பதிவு செய்தார் தேன்மொழி.

சில நொடிகள் இருவரையும் முறைத்துப் பார்த்தவன், புன்னகையுடனே தாயின் அருகில் வந்து, ''மை ஸ்வீட்

மம்மி! ரொம்ப கோபமா இருக்கீங்க போல?'' என்று அவரது கையைப் பற்றிக் கொண்டு, ''கீதாவுடனான கல்யாணப் பேச்சு சரியா வரலை என்றதும் நீங்க ரொம்ப வருத்தப்பட்டீங்கன்னு அப்பா தான்மா என்னிடம் சொன்னார். அந்தச் சம்பந்தம் மட்டும் சரி வந்திருந்தால் நிம்மி அக்காக்கும் வசதியா இருந்திருக்கும்னு ஆதங்கப் பட்டீங்களாமே? அம்மா மனசை நோகடிச்சுட்டோமேன்னு தான் கீதாவிடம் பிரியத்தை வளர்த்துக்கிட் டேன். ஆனால்... இப்போ...ம்ஹ்ம்ம்...'' என சமயோசிதமாக தந்தையையும் இந்த விவகாரத்தில் நுழைத்தான்.

எதிர்கட்சி கூட்டணியை உடைத்தால் தான், தன் பக்கம் பலம் சேரும் என்ற எண்ணம் அவனுக்கு!

''அப்படியா ராஜா?'' என்று மகனிடம் கொஞ்சலாக வினவிய தேன்மொழி,

உதய் சற்றும் எதிர்பாராத தருணத்தில் அவனது காதைப் பிடித்துச் செல்லமாக முறுக்கி, ''வாயில் விரலை வைத்தால் கடிக்கத் தெரியாத பச்சைப்பிள்ளைங்க இவன்... என்ன வேலைப் பார்க்கிறான் பார்த்தீங்களா?'' என கணவனிடம் நியாயம் கேட்டார்.

மகனின் இன்னொரு காதைப் பிடித்து முறுக்கிய மகாதேவன், ''காலையில் நிம்மி, விஷயம் சொன்னதும், உனக்காக சிபாரிசு செய்து அம்மாவை சரிக்கட்டி வைச்சிருந்தால்... நீ என்னையே போட்டு கொடுக்க முயற்சி பண்றியா?'' எனச் செல்லமாகக் கடிந்தார்.

''அம்மா! காது வலிக்குது! அப்பா! ப்ளீஸ்...! சாரி... சாரி!'' என்று இருவரிடமும் கெஞ்சி சேதாரமில்லாமல் தன்னை மீட்டுக் கொண்டவன்,



சகஜ நிலைக்கு மீண்டு, ''சாரிம்மா! உங்களை ரொம்ப கஷ்டப்படுத்திட்டேன். எல்லாத்தையும் என்னால் விளக்கமா சொல்ல முடியலை; ஆனால்... ஆனால் இனிமேல் என்னால் எந்த பிரச்சனையும் வராதுன்னு மட்டும் உத்திரவாதம் தர்றேன்மா. நீங்களும் என்னை மன்னிச்சுடுங்கப்பா!'' என்று பெற்றவர்களிடம் மன்னிப்பு கோரினான்.

''டேய்! பழசெல்லாம் விடு! நல்லாயிருங்க ரெண்டு பேரும். பெற்றவர்களுக்கு அந்தச் சந்தோஷத்தைத் தவிர வேறென்ன வேணும்?'' என்று அவர்கள் மனமார வாழ்த்திய போது, உள்ளம் நெகிழ்ந்தான் உதய் ஆனந்த்.

கண்ணை மூடி கண்ணைத் திறப்பதற்குள் அந்த வாரம் பறந்து செல்ல, மார்கழியில் சுப விஷயம் பேச வேண்டாமென நினைத்ததால், தை பிறந்ததும் நல்ல தொரு நாள் பார்த்து கீதாஞ்சலியை முறையாகப் பெண் கேட்டு ஷ்யாமின் வீட்டிற்கு சென்றனர் உதயின் பெற்றோர்கள்.

வந்தவர்களை வரவேற்று உபசரித்து சடங்கு - சம்பிரதாயங்கள் முடிந்ததும், ''பசங்க வசதியைக் கேட்டுட்டு கல்யாணம் நடத்த நல்லதொரு முகூர்த்த நாள் முடிவு செய்துடலாமா?'' எனப் பேச்சைத் தொடங்கினார் கீதாஞ்சலியின் தந்தை கோபிநாத்.

மகாதேவன் மகனையும், மருமகளையும் பார்த்து விட்டு, ''இன்னமும் ஒரு வருஷம் சென்றால் கூட பசங்களுக்கு வசதியா தான் இருக்கும். ஆனால் நாம அத்தனை நாள் எதுக்கு தள்ளி போடணும்? நாலஞ்சு முகூர்த்த தேதி குறிச்சுட்டு பசங்களுடைய வசதியைக்

கேட்கலாம். மண்டபம் வேற கிடைக்கணும். இங்கே சென்னையில் ஆறு மாசத்துக்கு முன்னாடியே மண்டபம் பார்த்து முடிக்க வேண்டியதா இருக்கு நிலைமை.'' என மணமகன் வீட்டு சார்பில் பொறுப்பேற்று பேசினார்.

இந்த வாய்ப்பை நழுவ விட விரும்பாத ருக்மணி, ''உதய்- கீதா கல்யாணத்தை திருநெல்வேலியில் வைச்சுக்கலாமே? ரெண்டு மாசத்தில் மண்டபமும் கிடைச்சுடும். நல்ல காரியத்தை எதுக்கு தள்ளி போடணும்?'' என்று சொல்லும் போது தன் மகளின் திருமணத்திற்கு அவசரப்படுவது தெரியாத வண்ணம் கவனத்துடன் நடந்து கொண்டார்.

தன் மகள் படிப்பு, வேலை என்று எதுவும் சொல்லி மீண்டும் குழப்பத்திற்கு வித்திட கூடாதே என்ற கவலை அவருக்கு.

அனைவரும் கலந்து பேசி மாசியில் நிச்சயம் செய்து கொள்வது எனவும், பங்குனியில் திருமணத்திற்கு முகூர்த்த நாள் பார்ப்பது எனவும் முடிவு செய்ய, கீதாஞ்சலி மற்றும் உதய் ஆனந்த் இருவருக்கும் ஜிவ்வென்று வானத்தில் பறப்பது போன்ற உணர்வு இருந்ததென்னவோ முற்றிலும் உண்மை.

அவர்கள் குடும்பத்தவர்கள் அனைவரும் சுற்றி இருந்தாலும் அவ்வப்பொழுது இருவரின் பார்வையும் ஒன்றோடொன்று கலந்து, 'நீ இங்கு சுகமே.. நான் அங்கு சுகமா?' என விசாரித்துக் கொண்டதில் ஏற்பட்ட சுகம் இருவருக்குமே புதுமையானதாகவும், பிடித்தமானதாகவும் இருந்தது.

நிர்மலவேணியும், ஷ்யாமும் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம், அதைத் தவறவிடாமல் கீதாவையும், உதயையும் உரிமையுடன் கேலி பேசி சிரித்தனர்.

''ஷ்யாம்! 'எங்கிருந்தாலும் உன்னை நான் அறிவேன்... உன்னை என்னை அல்லால் வேறு யார் அறிவார்?' - உங்களுக்கு இந்த வரி எந்தப் பாட்டுன்னு தெரியுமா?'' எனக் கணவனின் தோள் பட்டையை இடித்து உதய்-கீதா இருவரையும் ஜாடைக் காட்டினாள்.

பொங்கிய சிரிப்பை அடக்கிய ஷ்யாமும் அப்பாவியாக, ''நீ வேற நிம்மி! மறைந்திருந்து பார்க்கும் ஸ்டேஜ் எல்லாம் தாண்டியாச்சு. யார் இருந்தாலும், இல்லையென்றாலும் கண்ணும் கண்ணும் நோக்கியா தான். இல்ல, உதய்?'' என மச்சினனை வார,

''நான் வைத்திருக்கும் மொபைல் நோக்கியா இல்லை, மாமா. சாம்சங்!'' எனப் பதில் தந்த உதய் ஆனந்த், 'அடப்பாவி!' என்று எதிராளியை வாய்ப் பிளக்க வைத்தான்.

''என் தம்பிக்கு உதய் ஆனந்த்-ன்னு பேர் வைக்கிறதுக்கு பதிலா, ஜகஜ்ஜால கில்லாடின்னு பேர் வைத்திருக்கணும். உதயுடன் கல்யாணத்துக்கு விருப்பம்-னு எல்லோர் முன்னாடியும் கீதாஞ்சலி க்ரீன் சிக்னல் காண்பித்த பிறகும் கூட, 'ஒன்றுமில்லை... ஒன்றுமேயில்லை... உனக்கு தான் பச்சை காமாலை'ன்னு சொன்னவனாச்சே இவன்?'' எனச் சலிப்பான குரலில் அலுத்துக் கொண்ட நிர்மலவேணி,

தொடர்ந்து, ''கீதா மட்டும் அவனுக்கு கொஞ்சமும் சளைச்சவளில்லை, ஷ்யாம்! காதலா... எனக்கா? அதுக்கும் எனக்கும் காத தூரம்னு சொன்னவள் காதும், காதும் வைத்த மாதிரி காதலில் விழுந்துட்டாள்.'' என நாத்தனாரையும் வம்பிழுத்தாள்.

ஆனால் நிர்மலவேணி பேசிய பிற்பாதியில் கவனம் செலுத்தாத கீதாஞ்சலி, "உதயுடைய பேர் என்னன்னு சொன்னீங்க, மதினி?" என்று ஆர்வமாக இடையிட, "ஜகஜ்ஜால கில்லாடின்னு..." எனப் பதில் தந்தான் ஷ்யாம்.

"அச்சோ... இல்லைண்ணா! முழுப் பேர் என்னன்னு சொன்னீங்க, மதினி?" என மீண்டும் அதே கேள்வியை தொடுக்க, உரையாடலில் ஈடுபட்டிருந்த மற்ற மூவருக்கும் மூக்கின் மேல் விரல் வைக்காத குறை தான்.

"ஆடி ஆத்தி!" என்று நாடகபாணியில் வியப்பை வெளிப்படுத்திய நிர்மலவேணி, "ஒரு பானை சோற்றில் பூசணிக்காய் மறைக்கிறவங்க இருக்காங்க. ஆனால் இப்படி ஒரேயொரு பருக்கையை வைத்து பூசணி பந்தலையே மறைக்கிற ஜீவன்களை இப்போ தாங்க நான் பார்க்கிறேன்!" எனத் தன் அங்கலாய்ப்பை வெளிப்படுத்தினாள்.

'இவளுக்கு என்னுடைய முழு பெயரே தெரியாதா? சுத்தம்...!' என விழிகள் வெளியே தெறித்துவிடும் அளவிற்கு கீதாஞ்சலியைப் பார்த்தவன் தனிமை கிடைத்த போது அதை வாய்விட்டு கேட்டே விட்டான்.

"அக்கா-மாமா கல்யாணப் பத்திரிகையில் இருந்த பேரைக் கூட பார்க்கலையா நீ? கல்யாணம் முடிஞ்ச பிறகு வந்து கேட்க வேண்டியது தானே... முழுப்பெயர் என்னன்னு?!" என்றவனின் குரலில் அதிருப்தி தொக்கி நின்றது.

"கோவிச்சுக்காதீங்க சார்! கல்யாணப் பத்திரிகையில் பார்த்த பெயரையெல்லாம் ரிஜிஸ்டர் செய்துக்க



முடியுமா? நீங்க தான் நண்டு சிண்டுலை கூட விட்டு வைக்கலை! எல்லோரோட பேரும் போட்டு இருந்தீங்க." எனச் சமாதானம் செய்ய முயன்றாள்.

அவளது பேச்சில் அவன் இன்னமும் சகஜமாகாமல் இருப்பதைக் கண்டு, "எனக்கும், உனக்கும் எப்போவாவது பரஸ்பர அறிமுகம் நடந்திருக்கா, உதய்? திருநெல்வேலியிலிருந்து அண்ணனுக்கு மதினியைப் பெண் பேச வந்த போது கூட எனக்கு பரீட்சை இருந்துன்னு வர முடியலை. நிச்சயதார்த்த வீட்டில் தான் நாம முதன் முதலில் பார்த்தது. அப்போ பரஸ்பரம் அறிமுகம் கூட ஒருவருக்கொருவர் செய்துக்கலை. எல்லோரும் உதய்ன்னு சொல்லவும் அதுவே மனசில் நிலைச்சுடுச்சு." என்ற விளக்கம் தந்து மீண்டும் சமாதானம் செய்ய முயன்றாள்.

"ஏன்? ஆஸ்பத்திரி பெயர் பலகையில் நந்தா பெயரைக் கண்டுபிடிக்க தெரிந்த உனக்கு... உதய் ஆனந்த் என்ற பேர் மட்டும் கண்ணில் படலையோ?" இன்னமும் மனம் ஆறவேயில்லை அவனுக்கு.

"உன்னுடைய பெயரைத் தேடும் போது தான், இந்த நந்தா பெயரே கண்ணில் பட்டுச்சு. அப்படி பார்க்காதே. உதய்! நான் எதுவும் சமாளிப்பா சொல்லலை. என் மேல் தப்பு தான். நான் ஒத்துக்கிறேன். ப்ளீஸ்!" என மன்னிப்பு வேண்டி சரணடைந்தாள்.

அவள் சொல்லும் விளக்கம் அறிவுக்குப் புரிந்தாலும் அவனது காதல் கொண்ட மனமோ சஞ்சலத்தில் தவித்தது.

அந்தத் தவிப்புடனே, "பல சந்தர்ப்பங்களில் நீ

என்றாலும் கூட ஒவ்வொரு தடவை அதை அனுபவிக்கும் போதும் ரண வேதனையா இருக்கு, கீதா!'' என உணர்ச்சிப் பூர்வமாக தன் வேதனையைக் காதலியின் இடத்தில் பகிர்ந்தான்.

அவன் குரலிலிருந்த ஏமாற்றமும், பரிதவிப்பும் அவளையும் உணர்ச்சி வயப்படுத்த, ''இதுவரை நடந்த விஷயங்களுக்கு சாரின்னு மட்டும் சொல்லி உன்னைச் சமாதானம் செய்ய விரும்பலை, உதய். ஆனால்... இனிமேல் உன்னை எந்த விதத்திலும் நோகடிக்காமல் நடந்துக்குவேன்னு உத்திரவாதம் கொடுக்கிறேன். நம்ம கல்யாணம் பேசற நாளில், நீ மூட் அவுட்டா இருக்கிறதைப் பார்த்தால் கஷ்டமாயிருக்கு.'' எனத் தன் மனதிற்கினியவனுக்கு ஆறுதல் சொல்லித் தேற்ற முயன்றாள்.

கீதாஞ்சலியின் குரலில் வெளிப்பட்ட உண்மை உதய் ஆனந்தின் உள்ளத்திற்கு உவகையளிக்க, ''நீ இப்படியெல்லாம் உத்திரவாதம் கொடுத்தால், அய்யா உன்னிடம் நிறைய சலுகை எடுத்தாலும் எடுத்துப்பேன். அப்புறம் என்னைக் குறை சொல்லக் கூடாது. சொல்லிட்டேன்!'' என்று கள்ளச் சிரிப்புடனே எச்சரிக்கை விடுத்தான்.

அவனின் கேலியில் அவள் முகம் குங்குமமாய் சிவக்க, ''ச்சே..ச்சே.. குறை பட்டுக்கிற மாதிரியா உன் செய்கை இருக்க போகுது?'' என மெல்லியக் குரலில் உரைத்தவள்,

நமுட்டு சிரிப்புடன், ''அப்படிக் குறை சொல்லலாமா, வேண்டாமான்னு குழப்பம் வர்ற சமயத்தில் நிம்மி



மதினிகிட்டே கலந்து பேசி முடிவுக்கு வர்றேன்.'' என்று கண் சிமிட்டினாள்.

அவளது குறும்பில் வாய் விட்டு நகைத்தவனும், ''சுத்தம்!'' என அலுத்துக் கொள்வது போல காட்டிக் கொண்டான்.

பெண் பேசி முடித்த அன்றைய தினத்திற்குப் பிறகு கீதாஞ்சலி-உதய் ஆனந்த் இருவரது சந்திப்பும் வாரத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறையாவது நடந்தேறியது. அது தவிர அலைபேசியில் மனம்விட்டு பேசுவதும் அன்றாட வழக்கமானது.

நட்பில் திளைத்த போது தினமும் காலை முதல் இரவு வரையில் விட்டுவிட்டு என்றாலும் கூட, மணிக்கணக்கில் பேசி இருக்கிறார்கள் தான்; ஆயினும் இப்பொழுது மணிக்கணக்கில் தொடர்ந்து பேசும் போது கூட இருவருக்கும் அலுக்கவில்லை.

படிப்பு, நாட்டு நடப்பு, அரசியல், சமூகம், ஊடகம் போன்ற பொதுவான விஷயங்களைப் பகிர்ந்து கொண்டிருந்த தோழமை நிலை, பரிணாமம் அடைந்து இன்று இருவரின் பேச்சும், 'நான்-நீ-நாம்' என்ற வட்டத்தையே சலிக்காமல் சுற்றி வந்து, அதுவும் ஒருவித சந்தோஷத்தையே அவர்களுக்குத் தந்தது.

அதை இருவருமே ஆவலாக எதிர்பார்த்திருந்தவர்கள் எனும் போது மகிழ்ச்சிக்கு கேட்கவா வேண்டும்?

இருவருக்குமிடையே வலுவானப் புரிதல் ஏற்பட்டதில் தர்க்கத்திற்கு சந்தர்ப்பமே அமையாமல் போனது.

அந்த வாரயிறுதியில் ஒருநாள் இருவரும் கடற்கரையில் சூர்ய உதயத்தைக் கண்டு ரசித்தபடி நேரத்தை ஒன்றாகச் செலவிட்டனர்.

கடற்கரையில் சிலுசிலுவென்று வீசிய காற்றை இருவரும் இதமாய் உணர, அலைகள் அதி சுறுசுறுப்பாக கடற்கரை மணலைத் தொட்டுவிட்டும், அதையொட்டி நடைப்பயின்ற இருவரின் கால்களை உரசியும் விளையாடிக் கொண்டும், விளையாட்டு காட்டிக் கொண்டும் போக்கு காட்டின.

இயற்கையின் எழிலைத் தன் புகைப்படக் கருவியில் பதிவு செய்து கொண்டிருந்தவனிடம் ஆதவன் எழும் காட்சியை கண்ணுற்று வியந்தவாறே, "ரொம்ப அற்புதமா இருக்கு, உதய்! சென்னைக்கு வந்து முதல் தடவை இப்படி சூரிய உதயத்தைப் பார்க்கிறேன். அதுவும் எனக்கே எனக்குன்னு இருக்கிற உதய் கூட இருந்து பார்க்கிறது கூடுதல் போனஸ்!" என ரசனையுடன் சொல்லி புன்னகைத்தாள்.

கீதாஞ்சலியின் பேச்சில் இது போன்று அவ்வப்பொழுது, 'எனக்கே எனக்கு' 'உனக்காக நான்' என்ற வார்த்தை பிரயோகங்கள் எட்டிப் பார்க்கும் பொழுதெல்லாம் உதய் ஆனந்தின் உள்ளத் தவிப்பு அதிகமாகும்.

இருப்பினும், அவள் அப்படி பேசும் சமயங்களில் அதை உணர்ந்து சொல்கிறாளா, இல்லை தன் உணர்ச்சிகளோடு மட்டும் விளையாடுகிறாளா என்ற தவிப்பையெல்லாம் ஒதுக்கி வைத்து, அந்த நொடி சந்தோஷத்தில் நிலைத்திருக்க விரும்பினான்.

தன்னுடைய மன விருப்பத்தை அவனிடம் சொன்ன பிறகே இந்த மாதிரி பிரயோகங்களுக்கான உண்மையான அர்த்தம் அவனுக்கு வெளிப்படும்; அதுவரையில் அவ்வார்த்தைகளுக்கான மதிப்பை, உதய் புரிந்து



கொள்வது கடினம் என்பதை கீதாஞ்சலியும் அறியாமலில்லை.

அவனுடைய காதலி பற்றிய நினைப்பை உதய் தூர விரட்டாமல், அவனிடத்தில் தன் காதலை எப்படிச் சொல்வது என்பதும் அவளுக்குப் புரியவில்லை.

இவளாக அவனது காதலி பற்றிய பேச்சை எடுக்கவும் பயம்... எங்கே மீண்டும் அவளை நாடிச் சென்று விட தானே தூண்டிவிடுவோமோ என்று. அதனால் மிகுந்த சிரத்தையெடுத்து தன் பேச்சில், 'அவளைப்' பற்றிய பேச்சையும் தவிர்த்தாள்.

அவரவர் சிந்தனைகளைக் கலைத்து, அலைகளில் கால்களை நனைத்து நடந்தபடியே, "நிச்சயத்துக்கு இன்னமும் மூணு வாரம் தான் இருக்கு, கீதா! ரகசிய சிநேகிதனைக் கண்டுபிடிச்சியா?" என மெல்லத் துருவினான்.

'இப்போ எதுக்கு அவனை இழுக்கறே?' என்று கேட்க விரும்பியவள் அது முடியாமல், "அவனிடமிருந்து எந்த லெட்டரும் அதன் பிறகு வரவேயில்லை, உதய்." எனப் பட்டும் படாமல் பதில் தந்து கடற்கரை மணலில், சின்னச் சின்ன சங்குகளைச் சேகரித்துக் கொண்டிருந்தாள்.

அவளுக்கு சங்கு சேர்ப்பதில் உதவி செய்தவன், "வரலைன்னு ரொம்ப மிஸ் பண்றியோ?" என முழங்காலை மடித்து அமர்ந்து, தன் ஆள்காட்டி விரலைக் கொண்டு கடற்கரை மணலில் 'உதய்-கீதா' என்று பெரிதாக எழுதலானான்.

"நல்ல மூடில் இருக்கும் போது அவனைப் பற்றி எதுக்கு பேசிட்டு?" என அத்துடன் அந்தப் பேச்சை

தவிர்க்க எண்ணியவளாக, "ஏன் உதய் இப்படி அலைகள் வந்து அடிக்கிற இடத்தில் நம்ம பேரை எழுதறே? அலை வந்து இதை அழிச்சுடுமே!" பதைபதைப்போடு வினவி னாள் அவள்.

"நாம ஒரு பரீட்சை வைச்சுப்போமா? மூணு தடவை இந்த அலைகளுக்கு வாய்ப்பு. அதற்குள் நம்ம பேரை அது கலைச்சுடுச்சு என்றால், நம்ம கல்யாணம் நடக்கும்; கலைக்கலை என்றால் நம்ம கல்யாணம் நடக்கும்!" எனப் போட்டியின் விதிமுறைகளை வேகவேகமாக அவன் அறிவித்து முடிப்பதற்குள் அவனின் டி-ஷர்டை கொத்தாகப் பிடித்திருந்தாள் கீதா.

எங்கிருந்து தான் அவளுக்கு அந்த வேகம் வந்ததோ?

கண்களில் தீப்பொறி பறக்க, "நம்ம கல்யாணம் நடக்கணும்! இந்த மாதிரியான ஸில்லி டெஸ்ட் வைச்சு விளையாடி என்னுடைய நம்பிக்கையை..." என ஆவேசமாகப் பேசிக் கொண்டு சென்றவளுக்கு சிறு தாமதத்திற்குப் பின் தான் அவனது போட்டி விதிமுறை கள் அவளது மூளையை எட்டியது.

தவறிழைத்த குழந்தைகயாக வெட்கப்பட்டவள் திருதிருவென விழித்தபடி அவனது சட்டையை மெல்ல விடுவித்தாள்.

கீதாஞ்சலியின் வெளிப்பாட்டையும், திருமணம் நின்றுவிடலாம் என அவன் சொன்னதாகத் தோன்றி யதும் அவளது ஆவேசத்தையும் பதைபதைப்பையும் கண்ணுற்றவனுக்கு, அவன் காண்பது கனவா... நிஜமா என்றே புரியவில்லை. இதற்கு என்ன அர்த்தம்? இந்தத் திருமணம் நடந்தே ஆகவேண்டுமென்று அவள் விரும்புகிறாள் என்று தானே?



கண்களில் ஆர்வம் மின்ன, "ஹப்பா...! என்னவொரு கோபம்...? என்னவொரு கோபம்?" என்று மென்மை யாகக் கூறி அவளது கோபத்தை ரசித்து நகைத்தவன்,

அவளது கரத்தைப் பற்றி, அவன் சுட்டு விரலால் இருவரின் பெயரையும், உதய்-கீதா என்று அவள் உள்ளங்கையில் எழுதிவிட்டு, "சந்தோஷமா?" என உதட்டசைப்பின் மூலம் உறுதிப்படுத்திக் கொண்டான்.

அவனது தொடுகை ஏற்படுத்திய மெய் சிலிர்ப்பும், குறுகுறுப்பும் அவளுக்கு அடங்க மறுக்க, 'சந்தோஷமா?' என்ற அவனது உதட்டசைப்பு கீதாஞ்சலிக்கு அள வில்லா ஆனந்தத்தைத் தந்தாலும், சற்று முன்னர் நடந்து கொண்ட செய்கைக்காக உதயின் முகத்தை ஏறிட முடி யாமல் அவளை வெட்கம் பிடுங்கித் தின்றது.

சில கணங்கள் இருவருக்குமான மௌனம் நீள, "என்ன யோசனை?" என உதய் கேள்வி தொடுக்க,

கனவிலிருந்து மீண்டவளாக, "ஆங்... என்ன கேட்டே?" என்று பதில் கேள்வி தொடுத்தாள் கீதாஞ்சலி.

தன் கேள்வியை மற்றுமொரு முறை அவன் நினை வூட்ட, "ஒன்றுமில்லை..." என்று இடமும், வலமுமாக தலையசைத்தவள், "நாளை மறுநாள் அண்ணன் - மதினிக்கு ஐந்தாவது கல்யாண நாள் வருதில்ல? ஏதாவது பரிசு வாங்கணும், உதய். இன்றைக்கு ரெண்டு பேரும் கடைக்குப் போகலாமா?" என அடுத்த சந்திப்பைப் பற்றிய பேச்செடுத்தாள்.

"இன்றைக்கு முடியாது. லண்டனில் என் கூட படிச்ச பிரண்ட் ஒருத்தனை மதியம் சந்திக்கப் போறேன்.

இன்றைக்கு முழுக்க அவன் கூட தான் இருக்கணும்னு சொல்லியிருக்கான். அதனாலே கடைக்கு நாளைக்குப் போகலாமா?''

ஆமோதிப்பாக கீதா தலையசைக்கவும், ''கிளம்பலாமா?'' என சைகைக் காட்டி வினவினான்.

யோசனையோடு இருந்த உதய் ஆனந்த் விடை பெறுவதற்கு முன், ''ஸில்லி டெஸ்ட் வைச்சு கல்யாணத்தை நிறுத்தறது தப்பு என்றால்... வேற மாதிரி ஸில்லி டெஸ்ட்டுக்காக கல்யாணம் நடந்தறதும் தப்பு தானே, கீதா?'' என்று கேள்வியெழுப்பி அவளை ஸ்தம்பிக்க வைத்தான்.

இயந்திரமயமாய் மற்ற பணிகளில் அன்று அவள் ஈடுபட்ட பொழுது கூட, உதய் ஆனந்தின் கேள்வியும், அவனது ஏக்கம் நிறைந்த முகமுமே நினைவலைகளில் வந்து அவளுக்கு குற்ற உணர்வை ஏற்படுத்தியது.

'நான் ஏன் உதயிடம் நேரடியாக என் விருப்பத்தைத் தெரிவிக்காமல் மற்ற காரணங்களைக் காட்டி திருமணத்திற்கு சம்மதிக்க வைத்தேன்?'

'ஆத்திரத்தை மட்டும் உடனுக்குடன் கொட்ட தெரிந்த எனக்கு, நேசத்தை வெளியிட மட்டும் ஏன் தயக்கம் எழுகிறது?'

'வேறு காரணிகளுக்காகத் தன்னை ஒருவன் மணக்கிறான் என்றால் என்னுடைய சுயம் பாதிக்காதா? அதே மாதிரி தானே உதய்க்கும்?'

'காதல் என்பது வெறும் உணர்ச்சி... அதற்கு பெரிதாக முக்கியத்துவம் தர தேவையில்லை என்று மதனியிடம் வாதாடிய தனக்கே காதல் என்ற ஒன்று மலர்ந்த பிறகு



சின்னச் சின்ன விஷயங்களிலும் எத்தனை எதிர்பார்ப்பு எழுகிறது?'

'இத்தனைக்கும் உதய், அவனுக்கு காதல் திருமணம் என்ற கனவோடு வளைய வந்தவன் வேறு! இத்தகைய திருமண ஏற்பாட்டினால் எவ்வளவு ஏமாற்றமிருக்கும்?'

'தன்னுடைய காதல் வெற்றியடைய வேண்டும் என்பதற்காக தந்திரமாக காய் நகர்த்தி திருமண ஏற்பாட்டை துரிதப்படுத்தியது; உதயின் காதலைப் பற்றியோ... காதலியைப் பற்றியோ தன் பேச்சில் இழுக்காமல் தவிர்ப்பது போன்ற விஷயங்களில் கவனம் செலுத்துபவள் ஏன் காதலை நேரடியாகச் சொல்ல ஒரு முயற்சி கூட எடுக்கவில்லை?'

காதலைச் சொல்லாமல் பேச்சில் மட்டும் அந்நியோன்யத்தை வெளிப்படுத்தினால் என்ன பிரதிபலிப்பு கிட்டும்? வெறும் வாய் வார்த்தைக்காகச் சொல்கிறாள் என்று எண்ண தோன்றாதா?

அதுவும், 'ஜஸ்ட் லைக் தட்' காரணங்களால் கல்யாணம் செய்து கொள்ள கேட்டவள் எனும் போது அந்த எண்ணத்தை தவறென்று கூட சொல்ல முடியாதே!

இத்தனை யோசித்தவள் ஏன் ஒருமுறை கூட தன் காதலை அவனிடத்தில் வெளியிட முயற்சிக்கவில்லை?

நடந்தது நடந்ததாகவே இருக்கட்டும்; இனிமேலாவது நேரடியாக உதயிடத்தில் சொல்லலாமே? ஏதேதோ காரணங்களுக்காக திருமணத்திற்கு சம்மதித்தவன் இவளுடைய உண்மையான நேசத்திற்காக மணம் புரிய சம்மதிக்க மாட்டானா என்ன?

ஆயிரம் பொய்களால் சாதிக்க முடியாத விஷயத்தை ஒரேயொரு சத்தியம் சாதித்துவிடும் என்று தெரிந்தும் கூட இவள் ஏன் தயங்க வேண்டும்?

நேரில் சொல்வதில் தான் அவளுக்கு தயக்கம் என்றால் தொலைபேசியில்... இல்லை மின்னஞ்சல் மூலம் சொல்லலாமா என வாதம் செய்து மடி கணினியையும், அலைபேசியையும் தன்னருகில் வைத்துக் கொண்டு, 'ஒற்றையா... இரண்டையா' போட்டுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

உதய் ஆனந்திடமிருந்து புதிதாக வந்த மின்னஞ்சலில் காலையில் கடற்கரையில் எடுத்த புகைப்படங்கள் இருக்க, இதழில் பூத்த மெல்லிய புன்னகையோடு அதைப் பார்வையிட்டாள்.

இருவரின் பெயரையும் கடற்கரை மணலில் எழுதி வைத்திருந்த புகைப்படத்தைப் பார்க்கும் போது, அவனது சோதனையும்... அதன் விதிமுறைகளும், அதற்காக அவள் நடந்து கொண்ட விதமும், உதய் தன் கரத்தைப் பற்றி இருவரின் பெயரையும் எழுதியதும் நினைவில் ஆடியது.

நிலைத்திருந்த புன்னகையுடன் கடற்கரை மணலில் பெயரெழுதியிருந்த புகைப்படத்தோடு, ஒரு சின்னக் கவிதையையும் சேர்த்து வாழ்த்து மடல் ஒன்றை கணினியின் உதவியோடு தயாரித்தாள்.

கரம் பிடித்து
கடற்கரை மணலில்
நம் பெயரைக் கோலமாய்
வரைய விரும்பினாய் நீ!



அலைகள் வந்து அடித்து
கலைத்து விடுமே என
அஞ்சினேன் நான்!

காலத்தால் அழியா கோலமிட
கல்வெட்டில் பொறிக்கவா என
கண்ணோடு கண் கலந்து
குறும்பாய் நீ வினவி
என் உள்ளங்கையில்
உன் விரல் வைத்து

நம் பெயர் வரைந்து
குறுகுறுப்புக் கோலமிட்டது மட்டும்
எப்படி நிரந்தரமென்று அப்பொழுது
விளங்கவில்லை எனக்கு!!

ஆனால்...
உன் விரல்கள் கோலமிட்ட கரத்தை
ஒவ்வொரு முறையும்
காண்கையில் தான் விளங்கியது
நிரந்தரமானது நீ வரைந்த கோலமல்ல...
நீ மூட்டிய கறுகுறுப்பென்று!!!

கவிதையை முடித்து வாழ்த்துமடலை பிரதி எடுத்தவளுக்கு உதய் ஆனந்திடம் நேசத்தை சொல்வதிலிருந்த

தயக்கம் உடைய, அவனது வீட்டிலேயே அவனைச் சந்தித்து பேச எண்ணி தயாரானாள்.

## 20

உதயை, அவனது வீட்டிலேயே சந்தித்து, தன் மனதிலுள்ளதை எல்லாம் அவனிடம் கொட்ட துடித்த கீதாஞ்சலிக்கு, அந்த எண்ணம் வந்த பிறகு வீட்டில் இருப்பே கொள்ளவில்லை.

இது வரை, அவனுடன் சண்டை போடுவதற்காகவே உடனுக்குடன் அவனைச் சந்திக்க விழைந்தவள், இப்பொழுது தன் காதலை அவனிடம் பகிர விருப்பம் கொண்டாள்.

அதற்கு எதிரொலி அவனிடத்தில் எப்படியிருக்கும் என்றெல்லாம் அவள் கவலை கொள்ளவில்லை.

போறேன்; சொல்றேன்; அவனைக் கடத்திட்டு வரேன் எனக் கேலியாக சபதம் பூண்டாள்! ஆனால், அந்தச் சபதத்தைச் செயல்படுத்த தான் அவளால் முடியவில்லை.

உடனேயே கிளம்ப முடியாமல் முரளி நந்தனை இவளது பொறுப்பில் விட்டு விட்டு நிர்மலவேணி வெளி வேலையாகப் போயிருக்க, வீட்டில் இருக்கவும் முடியாமல் போகவும் முடியாமல் தத்தளித்தாள் கீதாஞ்சலி.

முரளிக்குச் செய்ய வேண்டியனவற்றைச் செய்து முடித்தவள், அவனை உறங்க வைத்து விட்டு மீண்டும் கணினி முன் வந்தமர்ந்தாள்.

திரும்ப திரும்ப அவளது கண்கள், உதய்-கீதா என்று எழுதியிருந்ததையே பரவசத்துடன் பார்த்துக்



கொண்டிருந்தது. திரையிலிருந்த எழுத்தை மெல்ல தொட்டுப் பார்த்தவளுக்கு அவனையே தீண்டியது போன்று உள்ளுக்குள் ஒரு சிலிர்ப்பு!

மேஜையிலிருந்த பேப்பர் பேனாவை எடுத்து, ஸ்ரீராம ஜெயம் எழுதுவது போன்று, உதய் கீதா, கீதா உதய், உதய் ஆனந்த் கீதாஞ்சலி எனப் பலவாறாக எழுதிப் பார்த்தவளுக்கு, காதல் ஒருவரைக் கிறுக்காகவும் மாற்றும்; அதே சமயம் கிறுக்கவும் வைக்கும் என்று தோன்ற அடக்க முடியாமல் சிரிப்பு வந்தது.

அட! காதல் வந்தால் கவிதை மட்டுமல்ல, தத்துவம் கூட அருவி மாதிரி கொட்டும் போலேயே?

சிரிப்புடனேயே ஒரு கை முட்டியை மடக்கி மேஜையில் வைத்து அதன் மீதே அவளது கன்னத்தையும் வைத்து சாய்ந்தபடி, உதய் ஆனந்த் என்ற பெயரை அக்ஷரம் அக்ஷரமாக அப்பொழுது தான் எழுதிப் படிக்க ஆரம்பித்த குழந்தை போன்று திரும்ப திரும்ப எழுதலானாள்.

முகம் முழுதும் சந்தோஷ ரேகைகள் படர, அவனுக்கு என்ன செல்லப் பெயர் வைக்கலாம் என்று மூளையைக் கசக்கி யோசித்து- உதய், ஆனந்த், தயா, நந்தா என அவன் பெயரில் உள்ள ஆங்கில எழுத்துக்களை மாற்றி மாற்றி ஆசையாக எழுதிக் கொண்டிருந்தவள் ஒரு இடத்தில் மின்சாரம் தாக்கியது போன்று ஸ்தம்பித்தாள்.

விழிகள் அகலமாக விரிய, அவள் கை நின்ற இடத்திலேயே அவளது பார்வையும் நிலைத்தது.

NANDHA!

நெஞ்சு படபடவென அடித்துக் கொள்ள, எழுத்துக்களைத் திருப்பிப் போட்டவளின் கண் முன்னே

ANANDH என்ற அவனின் பின் பாதி பெயர் தெரிய, ஒரு சில நொடிகள் அதிர்ச்சியில் உறைந்தாள்.

அவள் கண் முன்னேயிருப்பதை அவளால் நம்பவும் முடியவில்லை... அது சொல்லும் சேதியை நம்பாமலும் இருக்க முடியவில்லை. ஒரேயொரு எழுத்து முன்னும் பின்னும் மாறி வந்து... பெயரே மாறிவிட்டதே?!

வேகமாக எழுந்து சென்று, 'ரகசிய சிநேகிதன்' அனுப்பிய கடிதங்கள், கவிதைகள் என்று எல்லாவற்றையும் எடுத்து தரையில் கடை பரப்பியவள், அது ஒவ்வொன்றையும் புதிய கண்ணோட்டத்தோடு பார்க்கலானாள்.

முதல் கவிதையில், 'இத்தனை வருடங்களாய் உன்னை சுமந்து கொண்டிருக்கும்...' என்றது; 'கண்டங்கள் பல தாண்டி சென்றாலும்... காலங்கள் உருண்டோடினாலும்' என்று கடிதத்தில் குறிப்பிட்டிருந்தது என எல்லாவற்றையும் பார்த்து, அதன் அர்த்தத்தை உள்வாங்கியவள் மலைத்து போய் உட்கார்ந்தாள். அப்படியும் இருக்குமோ?!

ஏதோ தோன்ற எம்பி மேஜையிலிருந்த அவளது கைப்பேசியை எடுத்து, 83424 என்ற எண்ணைச் சரிப் பார்த்தவள் திகைத்து விழித்தாள்.

அவள் காலொடிந்து அடையார் வீட்டில் இருந்த பொழுது, தேன்மொழி அத்தைக்கு அவளுடைய பெயரையும் உதயின் பெயரையும் அலைபேசியில் அழுத்துவதற்கு சொல்லிக் கொடுத்தது நினைவு வந்தது.

எப்படி இது வரை அதை மறந்திருந்தாள்?

உதய் என்று உச்சரித்தவளுக்கு திகைப்பு, அதிர்ச்சி, ஆச்சரியம் எல்லாம் மெல்ல மெல்ல கடந்து, முகமும்



அகமும் சந்தோஷத்தாலும் பூரிப்பாலும் நிறைந்தது. எல்லா கடிதங்களையும் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டவளுக்கு உலகமே அவளது கைகளில் வந்தது போலிருந்தது.

என்னை எப்படியெல்லாம் அவன் அலைகழிப்பு செய்திருக்கிறான்?

ஊரெல்லாம், 'ரகசிய சிநேகிதன்' யாரென்று தேடி, என்னைச் சுற்ற வைத்து... வீட்டினரிடம் மறைத்த குற்ற குறுகுறுப்பில் என்னைத் தவிக்க விட்டு... உன்னை... படவா ராஸ்கல்!

அவள் நினைப்பது மட்டும் உண்மையாக இருந்தால்... உதய், வேறு யாரோ ஒருத்தியைக் காதலிப்பதாக நினைத்து இவள் வேதனைப்படுவது தேவையற்றதாகி விடுமே!

இருடா உன்னை... என்று கொஞ்சி கொண்டவளுக்கு திடுமென எங்கே இதெல்லாமே அவளது கற்பனையோ என்ற அச்சம் எழ, இதை உடனே உதயிடம் போய் விசாரித்து அறிந்து கொள்ளவில்லை என்றால் அவளால் சரி வர மூச்சு கூட விட முடியாது போல் தோன்றியது.

உடனேயே நிர்மலவேணியை அழைத்து விவரம் சொல்லி விட்டு, உறங்கிக் கொண்டிருந்த முரளி நந்தனையும் தூக்கிக் கொண்டு, உதய் ஆனந்தின் வீட்டிற்கு புறப்பட்டாள்.

கால் டாக்ஸியில் இவள் அங்கு போன வேளை, உதய் எங்கோ வெளியே போயிருக்கிறான் எனத் தகவல் தந்தார் தேன்மொழி.

''குட்டிப் பையனும்கூட வந்து இருக்காங்களா?'' என்று பேரனைக் கொஞ்சிய தேன்மொழி, ''இப்போ

தான்மா அவன் கிளம்பி போறான். நீ வர்றேன்னு அவனிடம் சொல்லலையா?'' என்று கேட்க, லண்டனில் இருந்து வந்திருக்கும் நண்பனைப் பார்க்க மதியம் போவதாக உதய் சொன்னது அப்பொழுது தான் அவளுக்கு நினைவு வந்தது.

உண்மையைத் தெரிந்து கொள்ளும் பரபரப்பில், அவனை அழைக்கவோ விவரம் சொல்லவோ தோன்றாமல் வீட்டுக்கே வந்தாகி விட்டது. இப்பொழுது என்ன செய்வது என்று விழித்துக் கொண்டிருந்தவளிடம் நிச்சயம் குறித்து பேச்சுக் கொடுத்தபடி தன் வேலைகளைச் செய்து கொண்டிருந்தார் தேன்மொழி.

துவைத்து உலர்ந்த துணிகளை மடித்தவர், ''இதை உதய் ரூமில் வைச்சுட்டு வந்துடறியா, கீதா?'' என்று கேட்க, அவளும் துணிகளுடன் மாடி ஏறி அவனது அறைக்குச் சென்றாள்.

துணிகளைக் கட்டிலின் ஓரத்தில் வைத்தவள், நின்று நிதானமாக அவனது அறையை நோட்டம் விட்டாள்.

இரு முறை தான் அவள் இங்கே வந்திருக்கின்றாள். ஒரு முறை அவனுடன் வாதிட, மறு தடவை அவனிடம் மன்னிப்பு கேட்க. இப்பொழுது அவளது காதலைச் சொல்லி, அவனது காதலைப் பெற! வந்திருந்த அந்த முதல் இரு முறையுமே அறையை அவள் ஒழுங்காகப் பார்த்தாளில்லை.

இப்பொழுது, இது தான் அவள் வருங்காலத்தில் குடிப்புகப் போகும் இடமென்பதால், ஒவ்வொன்றாக ஆர்வத்தோடு பார்க்கலானாள்.

ம்ம்... நாட் பாட்! அறையைச் சுத்தமாகவே வைத்திருக்கிறான். எல்லாம் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தது. மேஜையைத் தவிர.



இதெல்லாம் சரி படாது, சார்! மேஜை கூட சுத்தமா இருக்கணும் எனக்கு என்று தனக்குள் பேசியபடியே அதை ஒழுங்குப்படுத்தியவளின் கரத்தில் இவள் பெயர் எழுதிய, இளஞ்சிவப்பு நிற கடித உறை சிக்க, குறுகுறுப்புடன் என்னவென்று பார்த்தாள்.

அது காதலைச் சொல்லும் ஒரு எளிமையான வாழ்த்து அட்டை என்பதைப் பிரித்துப் பார்த்தவளின் கால்கள் பலமிழந்து தொய்ய, நாற்காலியின் நுனியில் சரிந்து அமர்ந்தாள்.

'அன்பே அஞ்சு' என்று ஆரம்பித்திருந்த மடலின் ஓரத்தில் இன்றைய தேதி குறிப்பிடப்பட்டிருந்தது.

*உன்னை முதன் முதலில் சந்தித்த பொழுது, எனக்குத் தெரிந்திருக்கவில்லை நீ எனக்கு... என் வாழ்விற்கு இவ்வளவு இன்றியமையா தேவையாகி போவாய் என!*

*நாளை தான், ஐந்து வருடங்களுக்கு முன், நான் உன்னை முதன் முதலில் பார்த்த நாள். என் அன்பை நாளை தான் உன்னிடம் வெளிப்படையாக, வெளிப்படுத்த வேண்டுமென விடியலுக்காகக் காத்திருக்கிறேன்.*

*கடிகார முட்களை இப்பொழுதே திருப்ப முடியாதா, கண்ணம்மா?*

*ஐ லவ் யூ, அஞ்சு!*

*காதலுடன்,*

*உதய்.*

*இதை விட ஒருவனால் அவனுடைய காதலை அழ[illegible] சொல்ல முடியுமா?*

ஐ டு லவ் யூ டா, பட்டுக் குட்டி!

விழிகள் நீரில் பளபளக்க, உதய் என்று கையெழுத்து இட்டிருந்த இடத்தில் அவளது பட்டு இதழால் முத்தமிட்டவள், அதை அவள் நெஞ்சோடு சேர்த்தணைத்துக் கொண்டாள்.

வேறு எதுவும் கிடைக்கிறதா என ஆர்வத்துடன் மேஜையைத் தேடித் துளாவியவளுக்கு அங்கு புதையலே கிடைக்கப் பெற்றது.

இது வரை, உதய் ஆனந்த், 'ரகசிய சிநேகிதனாக' அவளுக்கு அனுப்பிய கடிதங்கள், கவிதைகள் ஆகியவற்றின் கையெழுத்துப் பிரதிகள் பத்திரப்படுத்தப்பட்டிருந்தன.

அத்துடன் ஷ்யாமின் திருமணத்தில் இவள் இருக்கும் சில புகைப்படங்கள், இசை நிகழ்ச்சியில் எடுத்தவை சிலது, இவளைப் பெண் பார்க்க வந்திருந்த பொழுது எடுத்ததில் இவர்கள் இருவர் மட்டும் இருப்பது என எல்லாமே அங்கிருந்தன.

இத்தனை அன்பை மனதில் வைத்துக் கொண்டு... ஐந்து வருடங்களாக பொத்தி பொத்தி வைத்து... எப்படி முடிந்தது உன்னால்? உனக்கு இருந்தாலும் ரொம்ப நெஞ்சழுத்தம் டா, திருட்டு ராஸ்கல்!

என்னவெல்லாம் சொன்னாய்? நீ வேற யாரையோ காதலிக்கிறதா என்னை நினைக்க வைத்து என்னைக் காய விட்டே தானே?

'அவள் எப்படியெல்லாம் யோசிக்கிறாள் என்று தெரிந்தால்... நீ அப்படியே ஷாக் ஆகிடுவே!' என்று என்னைப் பற்றி என்னிடமே சொன்



அதிர்ச்சி என்றால் என்ன என்று இனி தான் தெரிந்து கொள்ளப் போகிறாய், பார்!

எல்லாவற்றையும் எடுத்த இடத்திலேயே வைத்தவளுக்கு, அவற்றை அங்கேயே விட்டுவிட்டு வர மனமேயில்லை.

எங்கே உதய் அதற்குள் திரும்பி வந்துவிடுவானோ என்று அஞ்சியவள், தேன்மொழியிடம் ஒருவாறு சமாதானம் சொல்லிவிட்டு, முரளி நந்தனையும் அழைத்துக் கொண்டு கிளம்பிவிட்டாள்.

வீட்டிற்கு வந்ததும் முதல் வேலையாக, பீரோவின் மேல் தட்டில், யார் கண்களுக்கும் தெரியாமல் ஏனோ தானோவென உள்ளே திணித்திருந்த சுடிதார் செட்டையும், கைக்கடிகாரத்தையும் தேடி எடுத்தாள்.

பரிசாக வந்த பொருளை எந்தளவிற்கு அசட்டையாக விட்டெறிந்து இருந்தாளோ, இப்பொழுது அதை விட நூறு மடங்கு சிரத்தையுடனும், பொக்கிஷத்தைப் பாதுகாக்கும் பெரிய பொறுப்பையே அவளிடம் ஒப்படைத்திருந்தது போன்ற கவனத்துடனும் அதைக் கையாண்டவள், மிகுந்த ஆசையுடன் அதைப் பிரித்துப் பார்த்தாள்.

கடிகாரத்தின் பெயரைப் பார்த்ததுமே அவளுக்கு மணியடித்து இருக்க வேண்டுமோ? பாவம்... அவள் இதைப் பார்த்த பின்பும் அசராமல் இருந்ததைக் கண்டு உதய் நிஜமாகவே ஷாக் தான் ஆகியிருப்பான் எனப் புன்னகைபூத்தவள், கைக்கடிகாரத்தை அவள் கைகளில் கட்டி அழகு பார்த்தாள்.

நல்ல ரசனை டா, உனக்கு!

சுடிதாரை எடுத்து தன் மீது வைத்து கண்ணாடியின் முன் நின்று இப்படியும் அப்படியுமாக திரும்பி தன்னைத் தானே ரசித்துக் கொண்டவளுக்கு, தன்னை அவன் சுற்ற வைத்தது போன்றே எப்படி உதயையும் சுற்ற விட வேண்டுமென்றும் புரிந்தது.

''ச்சே... பாவம் உதய்!'' என்று கண்ணாடியில் பிரதிபலித்த அவளது பிம்பமே அவளது காதலனுக்கு ஆதரவாய் குரல் கொடுக்க,

''ஐந்து வருஷமா அவனுடைய காதலைச் சொல்லாமல் மறைத்து வைத்திருந்தானே? வெறும் ஐந்து நாட்கள் தானே என்னுடைய காதலை மறைத்து வைக்கப் போகிறேன்?'' என இவளது காதல் கொண்டு மனது இவள் சார்பில் எதிர்வாதம் செய்தது.

''நீ அவனைக் கண்டாலே கரிச்சு கொட்டாத குறை தான். இதில் பாவம் எங்கிருந்து அவன் வந்து காதலைச் சொல்ல...?''

''ரகசிய சிநேகிதன் வழியா காதலை சொல்லத் தெரிந்தவனுக்கு அதை நேரடியா வந்து சொல்ல முடியலையா? அவனுக்கு ஒரு நியாயம் என்றால் எனக்கும் அதே நியாயம் தான்!'' என்று தன் திட்டத்தை செயல்படுத்த தீர்ப்பு வழங்கிவிட்டு தனக்குள் சிரித்தபடியே எல்லாவற்றையும் திரும்ப பத்திரமாக எடுத்து வைத்தவள், நாளைய பொழுதை மிகவும் எதிர்நோக்கி காத்திருந்தாள்.

அன்று மாலை முழுதும் எப்படியோ உதயுடன் பேசாமல் மணித்துளி, மணித்துளியாக கடத்தியவளின் செவிகளில் அமுதமாக, அன்றிரவு உறங்குவதற்கு முன் உதய் ஆனந்தின் அழைப்பு ஒலி ஒலிக்க, ஓடிச் சென்று எடுத்தாள்.

அவன் குரலைக் கேட்டதும் அவள் நினைத்து வைத்த திட்டம் அத்தனையும் மறந்து போக, ''உதய்!'' என்று குரல் குழைந்து ஒலித்த பிறகு தான், ''ஸ்ஸ்!'' என்று நாக்கைக் கடித்துப் பேச்சை நிறுத்தினாள்.

அவனை, இவள் விரும்புகிறாள் எனத் தெரிந்ததிலிருந்தே பாதி நேரம் யோசித்து யோசித்து பேசுவது தான், தனக்காக தான் திருமணத்திற்கு அவன் சம்மதித்தான் என்ற நினைப்பில் இருந்தவள் அவள் மனதிற்கே கடிவாளம் போட வேண்டிய நிலையில் தான் இருந்தாள்.

இப்பொழுது அந்தத் தளைகள் எல்லாம் ஒன்றுமில்லாமல் போக, எந்தத் தடையுமில்லாமல் பேசத் தவித்தாள்.

ஆனால், எங்கே வாயைத் திறந்தால் அவளது குரலே அவளைக் காட்டிக் கொடுத்து விடுவோமென அஞ்சி, அவனிடம் எல்லாவற்றையும் சொல்ல துடித்த மனதை, உதட்டைக் கடித்து சமாளித்தாள்.

ஆனால் மறுமுனையில் அதைப் பற்றி அறியாதவனோ அவளை மேலும் சோதிக்கவென்றே, ''ஹாய்!'' என்று குழைவாக கூறி, அவளை மேலும் உருகச் செய்தான்.

கீதாஞ்சலியிடம் சிறு மாற்றம் தெரிந்தாலும் தன் மனதைச் சொல்லி விடாலாமென இருந்தவனுக்கு இன்று காலை அவள் கடற்கரையில் நடந்துக் கொண்ட விதமும் பேச்சும் அவள் மனதைப் பறையின்றி அவ[illegible]றிவித்திருந்தது.

தன் சட்டையைக் கொத்தாகப் பிடித்தவளின் இடையை வளைத்து, கன்னத்தோடு கன்னம் இழைய துடித்த அவனது கரங்களை அடக்க அவன் பட்டப்பாடு!

இத்தனை வருடங்களாகப் பொறுத்தவனுக்கு அதற்கு மேல் பொறுமை இல்லை. ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்காத கதை தான்!

அதனால் தான் அதன் பின் தாமதிக்காமல் அங்கிருந்து உடனேயே கிளம்பியது. கிளம்பும் முன், அவளுக்கே அவள் மனதை உணர்த்திவிடும் கடைசி முயற்சி தான் மற்ற காரணங்களுக்காக திருமணம் செய்வதைப் பற்றி அவன் குறிப்பிட்டது!

அடுத்த நாள், ஐந்து வருடத்திற்கு முன் கீதாஞ்சலியை நிர்மலவேணியின் நிச்சயத்தில் அவன் முதன் முதலாகப் பார்த்த நாள். அன்றே அவனது மனதையும் அவளிடம் வெளிப்படுத்துவது என்று முடிவு செய்தான்.

அதே எண்ணத்துடனே நாள் முழுவதையும் நண்பனுடன் கழித்துவிட்டு இரவு தாமதமாக வீடு திரும்பியதும் தான் அன்னையின் மூலம் கீதாஞ்சலியின் வருகைப் பற்றி தெரிய வர, காரணத்தை அறிந்து கொள்ள அழைத்தவனின் குரல் எடுத்த எடுப்பிலேயே குழைந்து விட கீதாஞ்சலியும், ''ஹாய்!'' என்றாள் உல்லாச சிரிப்புடன்.

''இன்றைக்கு இங்கே நம்ம வீட்டுக்கு வந்திருந்தியா? இப்போ தான் வந்தேன். என்ன விஷயம்?'' கையில் பிடித்திருந்த அலைபேசியை கெட்டியாகப் பற்றிக் கொண்டபடி அவனது எகிறிய இதயத்துடிப்பை அடக்கிக் கொண்டான் உதய்.



அவனது குரலிலிருந்த ஆர்வத்தை உணர்ந்தவளுக்கோ அவளது திட்டத்தை செயல்படுத்த தான் வேண்டுமா என்ற தயக்கம் எழுந்தது. ஆனால் அடுத்த வினாடியே, 'நீ சொல்ல வேண்டிய விஷயத்தை உன் வாயிலிருந்தே வர வைக்கிறேன் பார்!'' என்று கங்கணம் கட்டிக்கொண்டு பேச்சைத் தொடர்ந்தாள்.

''ஆமாம், உதய்! முக்கியமான விஷயமா தான் பேச வந்தேன். விஷயத்தைக் கேட்டால் உன்னால் நம்பவே முடியாது!'' என்று பலத்த பீடிகையுடன் தொடங்கியவள், ''ரகசிய சிநேகிதன் யார்னு நான் கண்டுபிடிச்சுட்டேனே?!'' எனக் குதூகல குரலில் மொழிய,

அவள் மேலுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையில், ''இந்தத் தடவை என்ன சந்தாவா? கோவித்தாவா?'' எனக் கிண்டலாக வினவினான் அவன்.

''ஓய்! உண்மையைத் தான் சொல்றேன், உதய்!'' என்று பரபரப்போடு மீண்டுமொரு முறை அழுத்தம் திருத்தமாகக் கூற,

அவள் குரலில் தென்பட்ட பரபரப்பில் அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்தவன், ''கண்டுபிடிச்சிட்டியா? நிஜமாகவா?'' என்று மீண்டும் உறுதிப்படுத்திக் கொள்ள வினவினான்.

தன் கண் முன்னிருந்த வாழ்த்து அட்டையையும், கவிதையையும் பார்த்துக் கொண்டே, ''இன்றைக்கு முழுக்க அவன் கூட தான் நான் நேரத்தைப் போக்கினேன்.'' என்று ரசனையுடன் சொல்லி உதயைச் சீண்டினாள்.

'காலையில் தன்னுடன் இருந்ததைச் சொல்கிறாளா?' என்ற உதயின் எண்ண ஓட்டத்தை கீதாஞ்சலியின் பேச்சு தடை செய்தது.

"காதல் மேலே எந்த அபிப்ராயமும் இல்லைன்னு சொல்லிட்டு இருந்த என்னோட சிந்தனையே இப்போ முழுக்க மாறிடுச்சு, உதய். எவ்வளவு காதல் தெரியுமா அவனுக்கு என் மேலே? ஹி இஸ் சோ ஸ்வீட்! அவன் கிடைக்க உண்மையிலேயே நான் கொடுத்து வைத்திருக்கணும். காதலை உணரும் போது தான் அதோட வலிமையை என்னால் புரிஞ்சுக்க முடியுது. உனக்கும் உன் காதல் கை கூடணும்னு நான் விஷ் பண்றேன்," என்றவளின் பேச்சைக் கேட்டு,

மறுமுனையில் உதய் ஆனந்த், "வ்வாட்ட்ட்ட்....?" என்று கிட்டத்தட்ட அதிர்ச்சியில் அலறவே செய்தான்.

அவனது குரலிலிருந்த பதட்டத்தை உணர்ந்து, 'பாவம் உதய்' என்று அவள் மனமிரங்கினாலும், 'அவனது விருப்பத்தை இன்று சொல்ல வைத்தே ஆக வேண்டும்' என்ற முடிவோடு, "ஹே! ஏன் இவ்வளவு டென்ஷன் ஆகறே?" என ஒன்றுமே தெரியாத அப்பாவியாக தன் நாடகத்தைத் தொடர்ந்தாள் கீதாஞ்சலி.

இன்னமும் அவள் சொல்வதை நம்பாமல், "நீ ரகசிய சிநேகிதனைக் கண்டுபிடிச்சுட்டியா? யாருன்னு தெரியுமா? எப்படித் தெரியும்?" எனக் கேள்விகளை ஒன்றன் பின் ஒன்றாக அடுக்கினான்.

"எங்க அபார்ட்மென்ட் காம்ப்ளெக்ஸ் செக்ரட்டரி இருக்கார் இல்ல, உதய்?"

"யாருக்குத் தெரியும்? அப்படி ஒருத்தர் இருக்காரா?" இப்பொழுது அதுவா முக்கியம் என்ற ஆத்திரத்தில் விட்டேற்றியாகப் பதில் தந்தான்.



"உனக்கு அவரைத் தெரிஞ்சிருக்க வாய்ப்பு இல்லை. ஆனால் அவருடைய மகனை உனக்கு நல்லா தெரியும். நீ கூட எங்கள் வளாக லைட் ம்யூசிக் கச்சேரிக்கு வந்திருந்தியே? அப்போ அவருடைய பையன் நந்தகுமார் தான் கச்சேரியைத் தொகுத்து வழங்கினது. அந்த நந்தா தான் எனக்கு ரகசிய சிநேகிதன் பெயரில் லெட்டர், கிஃப்ட் எல்லாம் அனுப்பி வைக்கிறது. இன்றைக்கு அவனா வந்து, அவன் தான் ரகசிய சிநேகிதன்னு சொல்லி ப்ரபோஸ் செய்தான்." என்று தங்கு தடையின்றி கோர்வையாகச் சொல்லி தன்னுடைய கற்பனை வளத்தை தானே மானசீகமாக மெச்சிக் கொண்டு, "சபாஷ்!" போட்டாள் கீதாஞ்சலி.

மறுமுனையில் தவியாய் தவித்தவனுக்கு இதெல்லாம் அவளுடைய இட்டுக் கதை என்பது விளங்கவேயில்லை.

கடவுளே! நான் இங்கு இருக்க... கீதாஞ்சலி, யார் அவளுக்குக் கடிதங்கள் அனுப்பியதாக நினைத்துக் கொண்டிருக்கிறாள்?

யாருக்கு விஷயம் தெரிந்து இப்படி ஆள் மாறாட்டம் செய்கிறார்கள்? யாரோ ஒருவனை, அவன் யாரென்றே தெரியாமல் தாங்கி பேசுகிறாளே... இவளை!

எந்த மாதிரி ஆபத்தில் இருக்கிறாள் என்று தெரிந்து தான் பேசுகிறாளா?

"கண்டவன் வந்து, அவன் தான் ரகசிய சிநேகிதன்னு சொன்னால் உடனே நம்பிடறதா, கீதா? கொஞ்சம் கூட அறிவே வேலை செய்யாதா உனக்கு?" கண்மண் தெரியாத கோபத்தில் இருந்தவனின் வார்த்தைகள் உஷ்ணமாய் வெளிப்பட்டன.

அவனின் கோபம் கூட அவளுக்கு இனிக்க, பொங்கிய சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''இத்தனை மாசம் லெட்டர்ஸ், பார்சல், கிஃப்ட் எல்லாம் அனுப்பி இருக்கான். தெரியாமல் எப்படியிருக்கும், உதய்?'' என்று அவனுக்கு வக்காலத்து வாங்கியவள்,

''83424 நம்பர் போட்டு இருந்தியே... அதுக்கு என்ன அர்த்தம்னு நான் கூட கேட்டேன். அதுக்கு அவன் என்ன சொன்னான் தெரியுமா? நான் அன்றைக்கு, 'கண்ணா மூச்சி ஏனடா' பாடினது எட்டு மணி, முப்பத்து நாலு நிமிஷம், இருபத்தி நாலு நொடி... என்று கண்ணை மூடிட்டு சொல்றான்!''

''ரேடியோ ஸ்டேஷனில் வேலைப் பார்க்கிறான் போல...?'' பல்லைத் கடித்தபடி அவன் சொல்ல,

''இப்போதைக்கு வி.ஓ வேலையில் இருக்கான், உதய். சீக்கிரமே வேற வேலை கிடைச்சுடும்.'' என்றவள் வாயை விரல்களால் மூடிக் கொண்டு சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

ஆனால் அங்கே வாயடைத்துப் போய் உட்கார்ந்திருந்த உதய் ஆனந்தின் மனதிலோ ஆயிரம் கேள்விகள்!

''வி.ஓ-ன்னா என்ன? வெட்டி ஆஃபிசரா?''

''ச்சே... ச்சே.. விசா ஆபீசர். யூகே கவுன்ஸலேட்டில் வேலை பார்க்கிறானாம். ராயல் லண்டன் வாட்ச் கூட அவன் எனக்காக வாங்கி அனுப்பினது தானாம்! எல்லாம் கேட்டுட்டேன், உதய்!'' என்று அவள் சொல்வதைக் கேட்டவனுக்கு வெந்த புண்ணில் வேலைப் பாய்ச்சியது போன்று வலித்தது.

தான் எடுத்த ரகசிய சிநேகிதன் அவதாரம் இருமுனை கத்தியாய் தன்னையே பதம் பார்க்கும் என்ற



நிலையை அவன் இதுவரை நினைத்துப் பார்த்ததேயில்லையே?



## 21

உதய் புரிந்து வைத்திருக்கும் கீதாஞ்சலிக்கும், இப்பொழுது அவனுடன் பேசிக் கொண்டிருக்கும் கீதாஞ்சலிக்கும் உள்ள வேறுபாடு மலைக்கும், மடுவுக்குமானது என்பதை உணரவே அவனுக்கு வெகு நேரம் பிடித்தது.

அவளது பேச்சிலிருந்த பூரிப்பையும், பரபரப்பையும் தொலைபேசி வாயிலாக உணர்ந்தவனின் மனம் தவியாய்த் தவித்தது.

அவன் நினைத்தால் ஐந்தே நொடிகளில், 'நான் தான் ரகசிய சினேகிதன்' என்று ஆதாரங்களுடன் வெளிப்படையாய்ப் பறைசாற்றியிருக்க முடியும்.

'ஏன் அதை முன்பே அவனிடம் சொல்லவில்லை? வேண்டுமென்றே திட்டம் தீட்டி திருமண ஏற்பாட்டை நடத்த வைத்தாயா?' என்று இவனது சட்டையைப் பிடித்து அவள் எத்தனை கேள்வி கேட்டாலும்,அதை எதிர்கொள்ள அவன் தயாராக தான் இருக்கிறான்!

ஆனால் அவனது உள்ளத் தவிப்பிற்கான காரணம் முற்றிலும் வேறு!

வேறொருவன் வந்து அவன் தான் ரகசிய சிநேகிதன் என்று சொன்னாலும் கூட அவளது மனம் தன்னைத் தானே நாட வேண்டும்?

இன்னொருவனைப் பற்றி தன்னிடமே வந்து, 'அவன் கிடைக்க உண்மையிலேயே நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்!' என்று அவள் எப்படிச் சொல்லப் போச்சு?

'ஹி இஸ் சோ ஸ்வீட்டாமாம்!' மை ஃபூட்! அவன் மட்டும் என் கையில் கிடைத்தான்!

தன்னை ஒப்புக்கு சப்பாணியாய் கீதாஞ்சலி நினைத்திருக்கிறாளா என்ற எரிச்சல் அவனுக்கு ஒரு புறமிருந்தாலும், கூடவே அவள் எதுவும் ஆபத்தை இழுத்து வைத்துக் கொள்ளக் கூடாதே என்ற கரிசனம் எழுவதை வேறு அவனால் தடுக்க முடியவில்லை.

இந்த இடியாப்ப சிக்கலுக்கு தீர்வு காண எங்கிருந்து தொடங்குவது? என்ன சொல்லி புரிய வைப்பது? அவனிருக்கும் மனநிலையில் நிறுத்தி நிதானமாய் உரையாட தான் முடியுமா?

"நம்ம ரெண்டு பேருக்கும் இன்னமும் ரெண்டு மாசத்தில் கல்யாணம் என்பது உனக்கு இன்றைக்கு கொஞ்சமாவது நினைவில் வந்ததா இல்லையா?" உயர்த்திய குரலில் வினவியவன், மேஜை மேல் கீதாஞ்சலிக்காக எழுதி வைத்திருந்த கடிதத்தை வெறுப்புடன் கசக்கி தூர வீசினான்.

அவனுடைய உக்கிர முகத்தை நேரில் கண்டிருந்தால் கீதாஞ்சலி தொடர்ந்து அவனைச் சீண்டாமல் இருந்திருப்பாளோ என்னவோ?

அவள் இருந்த குஷியில், "உன்னுடைய காதலி ஓகே சொல்லிட்டால் ப்ளான் மாறலாம்னு நீ தானே சொன்னே?" என்ற பதில் சொல்லி அவனை மடக்கினாள்.

"எரிச்சலைக் கிளப்பாதே, கீதா! பதினொரு மணிக்கு மேலே ஆகிடுச்சேன்னு பார்க்கிறேன். இல்லாட்டி நேரில் வந்து ரெண்டில் ஒன்று முடிவு கட்டியிருப்பேன்." என்று





கடுகடுத்தவன், "என்னைக் கண்டால் உனக்கு இளக்காரமா இருக்கா? நான் என்ன நினைச்சு சொன்னேன்... நீ என்ன நினைச்சு பேசறே? என வேதனையுடனான் முடித்தான்.

அவன் வேதனையுடன் பேசியதைத் தன் வேதனையாய் உணர்ந்தவள், "நீ என்ன நினைச்சு சொன்னியோ... அதையே தான் நானும் நினைச்சு பேசறேன், உதய்." என்றாள்.

சற்று முன் அரங்கேறிய நாடகத்தின் பலனாக, "ஏற்கனவே உன்னிடம் சொன்னதையே தான் மறுபடியும் சொல்றேன். பல சந்தர்ப்பங்களில் நீ என்னை நம்பிக்கை இழக்க வைக்கிறது பழகிடுச்சு என்றாலும் கூட ஒவ்வொரு தடவை அதை அனுபவிக்கும் போதும் ரண வேதனையா இருக்கு." என ஆழ்ந்த குரலில் சொல்லி விட்டு,

தொண்டையைச் செருமிக் கொண்டவன், "நான் இப்போ இருக்கும் மனநிலையில் தொடர்ந்து பேச கூட என்னால் முடியலை. நாளைக்கு உன்னை நேரில் பார்த்து பேசணும். அதற்குப் பிறகு ரகசிய சிநேகிதன் பற்றி எந்த முடிவு வேணாலும் எடு!" என்று கூறி, தொடர்ந்து அவள் பேசுவதற்கு சந்தர்ப்பம் கொடுக்காமல் அழைப்பைத் துண்டித்தான்.

அவனது வெறுமை குரலை கேட்ட கீதாஞ்சலிக்கு அதுவரையில் உதய் ஆனந்தை சீண்டிய உற்சாகமனைத்தும் இருந்த சுவடே தெரியாமல் மாயமானது.

உதய் ஆனந்த் முன்பு 'ரண வேதனை' என்று குறிப்பிட்ட போது அவனது நோத்தைப் பற்றி முற்றிலும் அறியாதவளாய் இருந்தாள் கீதாஞ்சலி.

அதற்காகவாவது அவளை நேரில் சந்தித்தே ஆக வேண்டும்.

அது குறித்து வினவுவதற்காக தனது அலைபேசியை எடுத்து கீதாஞ்சலியின் எண்ணை அழுத்தும் போது திரையில் ஒளிர்ந்த அவளது புகைப்படத்தைக் கண்டதும் மீண்டும் கோபம் பொங்க, அவளை அழைத்துவுடனேயே, "நேற்று அவ்வளவு பேசினேனே? காலையில் போன் செய்து எதுவும் கேட்கணும்னு உனக்கு தோணவே தோணாதா?!" என்றான் கடுப்புடன்.

"ஸ்ஸ்ஸ்...ஸ்ஸ்ஸ் எவ்வளவு கோபம் உனக்கு, உதய்? காலையில் உன்னைப் பார்க்கலாம்னு கிளம்பிட்டே இருக்கும் போது தான் இன்ஸ்டிட்யூட்டில் இருந்து தகவல் வந்தது. எனக்கு இன்றைக்கு ரிசல்ட் வர்ற மாதிரி இருக்கு. அங்கிருந்து நேரா உன்னைப் பார்க்க வந்துடறேன். விஷ் மீ குட் லக்!" பரபரப்போடும், மகிழ்ச்சியோடும் விவரம் சொன்னாள்.

"அதைச் சொல்றது இல்லையா?" என்று திரும்ப கடித்தவன், "நெட்டில் தானே ரிலீஸ் பண்ணுவாங்க? நம்ம வீட்டிலிருந்தே பார்த்துக்கலாமே? கல்ச்சுரல்ஸ் மீட் நடக்குதுன்னு எனக்கும் இன்றைக்கு காலேஜ் லீவு தான்." என்றான்.

"சில சமயம் இன்ஸ்டிட்யூட்டுக்கு முதலில் முடிவு வந்துடும், உதய். நெட்டில் தான் தெரிஞ்சுக்கணும் என்றாலும் அங்கே இன்ஸ்டிட்யூட்டில் இருந்தே கூட செக் செய்துக்கலாம். ப்ரண்ட்ஸ் கூட அங்கே தான் வர்றதா சொல்லியிருக்காங்க." என்ற விளக்கத்தோடு,

"என்னைக் கொஞ்சம் வாழ்த்தி தான் அனுப்பேன்!" என்று கொஞ்சலுடன் கோரிக்கை விடுக்க, தன்



கோபத்தையெல்லாம் தற்காலிகமாக ஒதுக்கி வைத்து மனதார வாழ்த்தினான்.

கீதாஞ்சலிக்கு முதல் இரண்டு கட்டத் தேர்வு முடிவுகள் வெளிவந்த போதும், தானே தேர்வானது போன்றொரு மகிழ்ச்சியில் நண்பர்கள் அனைவரையும் அழைத்து விருந்து வழங்கியிருக்கிறான்.

இன்று, தன்னவள் என்ற உரிமையோடு அவளையும் அழைத்துச் செல்லும் வாய்ப்பு கிட்டாதா என அவனது மனம் ஏங்கியது.

அவனது காதலை இன்று கீதாஞ்சலியிடம் வெளிப்படுத்துவதற்காக பூங்கொத்து, வாழ்த்து அட்டை மற்றும் எளிமையான மோதிரம் என முதல் நாளே பார்த்து பார்த்து வாங்கி வைத்திருந்த அனைத்தும் மேஜை மேல் வீற்றிருக்க, அவைகளை மிருதுவாய் வருடிக் கொடுத்தான்.

அவளின் வரவிற்காகக் காத்திருந்த ஒவ்வொரு நிமிடமும் அவனுக்கு யுகங்களாய் கழிந்தது.

ஏதோ ஆய்வுக் கட்டுரையை சிறிது நேரம் வாசித்தான்; தொலைக்காட்சியில் பாடல்களை ரசித்தான்; அம்மாவிற்கு உதவியாக இரண்டொரு வேலைகள் செய்தான்; இத்தனைக்கு நடுவிலும் அவ்வப்பொழுது இணைய தளத்தில் ஆடிட்டர் தேர்வு முடிவுகள் வந்துவிட்டதா என்று ஆர்வமுடன் கவனித்தான்.

இரண்டு மணி நேரங்கள் கடந்த நிலையில், "உதய்ய்ய்ய்ய்ய்ய்ய்ய்! பாஸ்... பாஸ்... நான் இப்போ பாஸ்... பாஸ்! கீதாஞ்சலி சி.ஏ." என்று குறுந்தகவல் எட்டிப் பார்க்க, அதைப் படித்து சந்தோஷத்தில் துள்ளிக் குதித்த மகனை

ஒரு சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த தேன்மொழி அடுப்படிக்குச் சென்று இனிப்பு எடுத்து வந்து கொடுத்து, ''என்னடா? என் மருமகள் சி.ஏ ஆகிட்டாளா?'' என அகமும், முகமும் மலர வினவினார்.

''நம்ம வீட்டுக்குத் தான் வந்துட்டு இருப்பாள்னு நினைக்கிறேன்மா. இருங்க... அக்காக்கு போன் செய்து விஷயத்தைச் சொல்லிடறேன்.'' என்று சகோதரிக்கு போன் அடித்து தன் சார்பிலும் விஷயத்தைப் பகிர்ந் தான்.

உற்சாகத்துடன் வளைய வந்தவன், கீதாஞ்சலி வீட்டிற்கு வந்ததுமே அவளைத் தூக்கி தட்டாமாலை சுற்ற வேண்டும் என்று துடித்த கரங்களைக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டு, வரவேற்கும் விதமாகத் தலையை மட்டும் அசைத்தான்.

ரகசிய சிநேகிதனாக அவன் பரிசளித்திருந்த சுடி தாரையும் கைக்கடிகாரத்தையும் அணிந்திருந்தவளின் நெற்றிக் கேசம் லேசாகக் காற்றில் கலைந்திருக்க, வெற்றி வாகை சூடிய பூரிப்பில் கூடுதலாக மிளிர்ந்த வளையே இமைக் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந் தான்.

அவனது பார்வையில் இயல்பாய் நாணம் வந்து ஒட்டிக் கொள்ள, ''சி.ஏ டிகிரியுடன் வந்திருக்கேன். வரவேற்பெல்லாம் இல்லையா, உதய்?'' என்று வாய்விட்டே மெல்லியக் குரலில் கேட்டுவிட்டாள் அவள்.

கீதாஞ்சலியின் விழிகளில் தெரிந்த நேசம் அவளை பலமாய் ஈர்க்க, அவளது வலது கரத்தைத் தனது இரு



கரங்களிலும் சிறை எடுத்து, ''மனம் நிறைந்த வாழ்த் துக்கள், கீதா! ரொம்ப சந்தோஷமாகவும், ரொம்ப பெருமையாகவும் இருக்கு!'' என்று கூறி அவளது விழி களோடு அவன் விழிகளை சில நொடிகள் கலந்து நின்ற வன், தாய் தேன்மொழி வரும் அரவம் கேட்டு புன்னகை யுடனே விலகிக் கொண்டான்.

உதய் ஆனந்த் தான் ரகசிய சிநேகிதன் என்று தெரிந்த பின்பு இப்பொழுது தான் அவனை நேரில் காண்கிறாள்.

அந்த நொடியை மிகவும் உணர்ச்சிப் பூர்வமாக உணர்ந்த கீதாஞ்சலியால், ''தேங்க்ஸ்!'' என்று மட்டுமே முணுமுணுக்க முடிந்தது.

அவளிடமிருந்து விலகிய கணத்தில் தான், யாரோ ஒருவன் கொடுத்த பரிசு என்று நினைத்தல்லவா இந்த உடையையும் கைக்கடிகாரத்தையும் இவள் அணிந்து வந்திருக்கிறாள்?! என உதயின் மனம் துணுக்குற்றது.

அதுவே அவனை வருந்தச் செய்ய, கீதாஞ்சலியைப் பார்வையாலேயே முறைத்து விட்டு, ''நீங்க பேசுங் கம்மா!'' என்று தன்னறைக்குச் சென்றான்.

''ரொம்ப சந்தோஷம், கீதா!'' என்ற தேன்மொழி அவளது கன்னத்தைக் கிள்ளி முத்தம் ஒன்றை வைக்க, அவரைப் பார்த்து அனிச்சையாய் சிரித்தாலும் அவளது மனம் மட்டும் ஆட்டுக் குட்டியாய் உதய் ஆனந்தின் பின்னேயே சென்றது.

மூத்தவரிடம், 'நான் உதயைப் பார்த்து பேசணும், அத்தை.' என்று பேச்சைப் பாதியிலேயே கத்தரித்து விட்டு மேலே சென்றால் நாகரீகமாகவும் இருக்காது.

செய்வதறியாமல் அவரோடு கழித்த பத்து நிமிடங் களும், அவளது பார்வை அனிச்சையாக அவ்வப்

பொழுது மாடி அறையை நோட்டம் விடுவதைக் கண்ட தேன்மொழி, ''உதயைப் பார்த்து பேசணும் என்றால் சொல்ல வேண்டியது தானே, கீதா? ஏன் இப்படி ஆற்றில் ஒரு கால்... சேற்றில் ஒரு கால்-ன்னு தவிச்சுட்டு இருக்கே? உன் மனசு தெரியாமல் நான் வேற அறுத்துக்கிட்டு இருக்கேன்.'' என்றார் மலர்ந்த புன்னகையுடன்.

கையும், களவுமாய் மாட்டிக் கொண்ட மாதிரி உணர்ந்த கீதாஞ்சலி தவிப்புடனே, ''இல்லை அத்தை... அதெல்லாம் இல்லை...'' என்று சம்பிரதாயத்துக்காகச் சொல்லி நெளிந்தாள்.

நமுட்டுச் சிரிப்புடன், ''அப்போ சரி! சமையல் வேலையைப் பார்க்கலாம்... வா! இந்த வெங்காயத்தை பொடியா நறுக்கி கொடுக்கிறியா?'' என்று வினவி அவளை பேந்த பேந்த விழிக்க வைத்தார்.

'வெங்காயமா?' என அரண்டு போய் கண்களை உருட்டியவளிடம், ''உன் கால் தான் பரபரன்னு, 'விடு ஜூட்' என்ற மாதிரியே இருக்குதே? போய் பேசு!'' என்று அவர் அனுமதி வழங்க, அவருடன் இணைந்து வாய்விட்டு நகைத்தவள் உதயை நாடினாள்.

கீதாஞ்சலியின் கொலுசு எழுப்பும் மெல்லிய ஓசை உதய் ஆனந்தை நெருங்கி வர வர... அவனது இதயத்தின் தடதடக்கும் ஓசையும் அதிகரித்தது.

அவள் முகத்தைப் பார்த்துப் பேசப் பிடிக்காமல் வெளிப்புறமிருந்த தோட்டத்தை ரசிப்பது போன்று தன் அறையிலிருந்த ஃபிரெஞ்ச் விண்டோவைப் பார்க்கும் விதமாக நின்று கொண்டான்.



அவனது முதுகை மென் புன்னகையுடன் பார்த்துக் கொண்டு சில நொடிகள் நின்றவள், ''உதய்...!'' என்று குழைவான குரலில் விளித்தாள்.

அவனிடம் எந்தவிதமானப் பிரதிபலிப்புமில்லை என்றதும், ''என் மேலே அய்யாக்கு ரொம்ப கோபம் போல? முகத்தைக் கூட பார்க்கப் பிடிக்காமல் அந்தப் பக்கம் திரும்பி நிற்கிறே?'' மென்மையாகக் கூறிய படியே தன் காதலனை நெருங்கி வந்தாள்.

''ச்சே.. ச்சே... உன் மேலே எனக்கு கோபமா?'' என அலட்சியமாகத் தோள்களைக் குலுக்கிக் கொண்டவனின் இடது கரத்தைப் பற்றி, ''நான் சொல்றதைக் கேளு, உதய்! இங்கே வா... உட்கார்ந்து பேசலாம்.'' எனப் பிடிவாதமாக இழுத்தாள்.

''ப்ச்! விடு!'' என அவனிடமிருந்து தன் கரத்தை மீட்டுக் கொண்டவன், ''நீ அங்கே உட்கார்ந்து பேசினாலே எனக்கு காதில் விழும். அதே மாதிரி உனக்கும் நான் பேசறது கேட்கும்.'' என்று பிடி கொடுக்காமலேயே நழுவினான்.

*''ஆனந்தனே ஆனந்தனே என் ரகசிய சிநேகிதனே...*

*சின்ன சின்னதாய் கோரிக்கைகள் செவிகொடு ஆனந்தனே...''*

தன் வசீகர குரலில், 'சிநேகிதனே' பாடலை சற்றே மாற்றியமைத்து முணுமுணுத்தபடியே, அவனுக்குக் கொடுக்க கொண்டு வந்த வாழ்த்தட்டையை தன் கைப்பையில் தேடித் துளாவினாள்.

உதய் ஆனந்திற்கு அவன் பாடலைக் கேட்டதும், '... தேன் வந்து பாயுது காதினிலே!' நிலை தான்!

அதுவரையிலிருந்த கோபம் முழுவதும் பொங்கிய பால் நீர் தெளிந்ததும் அடங்கி விடுவது மாதிரி அடங்கி விட, சந்தோஷ அதிர்ச்சியில் ஒன்றும் புரியாமல் கீதாஞ்சலியையே குழப்பத்துடன் வைத்தக் கண் வாங்காமல் சில நொடிகள் பார்த்திருந்தான்.

கண்ணும் கண்ணும் கலக்கையில்

இரத்தமின்றி, சத்தமின்றி,

இதயங்களை இடம் பெயர வைக்கும்

இலகு வழிக்கு பெயர் தான் காதலோ?!

அவளது பார்வையும் அவனை விட்டு இந்தப் பக்கம், அந்தப் பக்கம் நகராமல் அவனிடமே நிலைத்திருக்க, ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்த பார்வையில் காதல் நிரம்பி வழிந்தது. தொடர்ந்து சில கணங்கள் வார்த்தைகளற்ற மௌனம் அங்கே ஆட்கொண்டாலும், அவர்களிருவரின் விழிகள் மட்டும் காதல் மொழியில் ஆயிரம் கதைகள் பேசின.

அளவில்லாத நேசத்துடன் அவளையே இமைக்காமல் பார்த்திருந்தவன், கைகளை விரித்து... லேசான தலையசைப்புடன், ''வா அஞ்சு!'' என்று உதட்டை மட்டும் மெல்ல அசைத்து அழைத்து விடுக்க, அதற்கு மேல் ஒரு க்ஷணம் கூட தாமதிக்காது ஓடி வந்து தன் நாயகனை இறுக அணைத்துக் கொண்டாள் அவனின் அஞ்சு!

இருவருக்குமே தங்கள் இணையோடு ஒன்று சேர்ந்ததில் மட்டற்ற சந்தோஷம்!

திக்கு முக்காடிய மகிழ்ச்சியில் தன் கண்கள் பனிக்க, ''ஏன் என்கிட்டே சொல்லவேயில்லை...



அவனது மார்பிலிருந்து முகத்தை விலக்கி அவனை அண்ணாந்து பார்த்து வினவினாள் கீதாஞ்சலி.

அவளது கண்களை ஆதுரமாகத் துடைத்து விட்டவன், ''இன்று தான் அஞ்சு வருஷத்துக்கு முன்னாடி நான் உன்னை முதன் முதலா பார்த்த தினம்; என் மனசை உன்னிடம் பறிகொடுத்த நாள். அதனாலே இன்றைக்கு சொல்லலாம்னு நினைச்சிருந்தேன்.'' என்றான் விரிந்தப் புன்னகையுடன்.

அவனுடைய சட்டை பட்டனைத் திருகியபடியே, ''இந்தக் காரணம் தான் எனக்கு நேற்றே தெரியுமே? ஆனால் நான் கேட்டது முதலேயே ஏன் என்கிட்டே சொல்லவேயில்லைன்னு தான்...'' என்று சிணுங்கலாய் வினவினாள்.

''என்னது நே...ற்...றேவா?'' என இழுத்து விட்டு பின்பு பொறி தட்டியவனாக, ''நேற்று... என் ரூமுக்கு வந்திருந்தியா?'' என வியப்புடன் புருவத்தை உயர்த்தினான்.

''உன் ரூமுக்கு வரணும்னு தானே நேற்றைக்கு ஏதோ சாக்கு சொல்லிட்டு இங்கே வந்ததே? சரியான திருடா!'' என்று சிரித்தபடியே அவனது காதைப் பிடித்து திருகினாள்.

''நான் இல்லாத போது என் ரூமுக்கு வந்துட்டு போயிருக்கிற நீ தான் திருடி!'' என்று பதிலுக்கு அவனும் அவளைச் சீண்டி சிரித்தான்.

''நேற்றைக்கு இங்கே வந்துட்டு மறுபடியும் திரும்பி விருகம்பாக்கம் போகவே எனக்கு மனசு வரலை தெரி[illegible]? அந்த மேஜை மேல் இருந்த லெட்டரைப் பார்த்து

ஒரே ஃபீலிங்க்ஸ் ஆஃப் அடையாரா போயிடுச்சு!'' என்று கொஞ்சியவளின் கரம் அவனது கேசத்தைக் குறும்பாய் கலைத்துவிட்டது.

''ஓ! அப்படியா? நான் கூட நேற்று நீங்க போனில் பேசியதைக் கேட்டு ஃபீலிங்க்ஸ் ஆஃப் அடையார்- சென்னை- இந்தியா- ஆசியான்னு ஒரே ஃபீலிங்க்ஸில் தான் இருந்தேனாக்கும்.'' என்று சற்றே மனத் தாங்கலுடன் சொல்லி, அவளது முகத்தைத் தன் இரு கரங்களால் ஏந்தி அவளது விற்புருவத்தை தன் கட்டை விரல்களால் வருடி நீவினான்.

அவளது கண்கள் அவனது பார்வையுடன் கலக்க, ''என்னை மன்னிச்சுடு, உதய். நீ தான் ரகசிய சிநேகிதன்னு இங்கே வந்து உறுதி செய்துக்கிட்டேன். அதற்கு அப்புறம் தான் நீ என்னிடம் காதலி அது இதுன்னு சீண்டினது ஞாபகம் வந்ததா...? அதான் உன்னை மாதிரியே நானும் விளையாடலாமேன்னு நினைச்சு... அப்படிச் செய்துட்டேன். நீ போன் பேசி வைக்கும் போது தான் என்னுடைய விளையாட்டு எவ்வளவு தூரம் உன்னைக் கஷ்டப்படுத்திச்சுன்னு புரிஞ்சது. ஐ அம் சாரி உதய்!'' என்று ஆத்மார்த்தமாக உணர்ந்து சொன்னாள்.

''ஆல் இஸ் வெல். ரெண்டு பேர் உடைய விளையாட்டும் நல்லபடியா ஒரு முடிவுக்கு வந்ததே அதுவே சந்தோஷம்.'' என்று அவளுக்கு ஆறுதல் கூறியவன்,

தொடர்ந்து, ''என்னை மாதிரியே விளையாடினேன் என்று சொன்னியே? நான் என்ன இன்னொருத்தியையா என் காதலின்னு சொன்னேன்? நினைச்சுப் பார்! என் காதலி ஓகே சொல்லிவிட்டால் இந்தத் திட்டத்தைத்



தொடர மாட்டேன்னு சொன்னேன், என் காதலி நீ தானேடா? அப்புறம் எதுக்கு ஏதேதோ காரணத்துக்காக ஒப்பந்தம் போட்டு கல்யாணம் நடத்தணும்?'' என்று அவளது உச்சந்தலையில் வலிக்காமல் குட்டு ஒன்றை வைத்தான்.

''ச்சே! இப்படி யோசிக்கவேயில்லை பாரேன்!'' என முகம் வாடியவள்,

''நேற்று நான் சொன்னதெல்லாம் என்னுடைய கற்பனை தான்! அந்த மாதிரி யாரும் எங்க வளாகத்தில் இல்லை. சும்மாச்சுக்கும் தான் சொன்னேன்.'' என்று சிறுகுழந்தையாய் விளக்கமாளித்தாள்.

''ஒருத்தனைத் தவிக்க விடறதில் அப்படி என்ன தான் ஆனந்தமோ?'' என அண்ணாந்து பார்த்து வினவுவது போல ஜாடை பேசினான்.

அவனது கரத்துடன் தன் கரத்தை இணைத்துக் கொண்டு, ''நான் டாக்டர் நந்தாவைப் பற்றி விசாரிக்கும் போதே உண்மையை என்னிடம் சொல்லியிருக்கலா மில்லையா?'' என்றாள் ஆதங்கத்துடன்.

''நீ டாக்டர் நந்தாவைத் தேடி உன் காதலைச் சொல்லப் போறதா இருந்திருந்தால்... நான் தான் ரகசிய சிநேகிதன்னு உண்மையை ஒத்துகிட்டு இருந்திருப்பேன். நீயோ ரகசிய சிநேகிதனைக் கண்டுபிடிச்சு உதைக்கிற மாதிரியில்ல தேடினே?'' என உதட்டோரச் சிரிப்போடு சொல்லி அவளது முகத்தை ஆள்காட்டி விரல் கொண்டு அளந்தான்.

''எல்லாத்துக்கும் ஏதாவது காரணம் சொல்லு!'' என்று அழகு காட்டியவளிடம், ''எப்போ உனக்கு நான் தான்

ரகசிய சிநேகிதன்னு பல்ப் எரிஞ்சது?'' என்றான் வசீகர சிரிப்புடன்.

''நேற்று காலையில் பீச்சிலிருந்து வந்ததிலிருந்து உன் நினைப்பு தான். விதம் விதமா நம்ம ரெண்டு பேரோட பேரையும் எழுதிப் பார்த்துட்டு இருந்தேன். அப்போ தான் கண்டுபிடிச்சேன்.''

''அதிசயம்... ஆனால் உண்மை! இட் இஸ் எ மெடிக்கல் மிராக்கில் ஐ ஸே!'' எனப் பரிகாசம் செய்து அவளிடமிருந்து சன்மானமாக முதுகில் இரண்டு அடிகளைப் பெற்றுக் கொண்டான்.

''நீ எனக்கு லெட்டர்ஸ், கிஃப்ட் எல்லாம் அனுப்பும் போது எனக்கு அதனால எதுவும் பிரச்சனை வரும்னு உனக்குத் தோன்றலையா? ரொம்ப தான் தைரியம் உனக்கு!''

''நீ தான் ஊருக்கு உதவுகிற உபகாரி ஆச்சே? ரம்யாக்கு வர கடிதங்களோட சேரும் போது அது தனியா தெரியாதுன்னு ஒரு தைரியம் தான். அதையெல்லாம் யோசிக்காமலா அனுப்பியிருப்பேன்?'' என்றவாறே அவள் மூக்கோடு மூக்கு உரசியவனை, ''அறிவு தான்!'' என்று கொஞ்சி,

''ரகசிய சிநேகிதனா எனக்கு அனுப்பின குறிப்பு களையும், நாம சார்ந்த விஷயங்களையும் சேர்த்து யோசிச் சால்... எல்லாமே உன்னை நோக்கி தான் எனக்கு வழி காட்டுச்சு. சரி எதுக்கும் உன்கிட்டேயே கேட்டு உறுதிப் படுத்திக்கலாம்னு தான் இங்கே வந்தேன்.'' என்றபடியே அவனிடம் கொடுக்க இருந்த வாழ்த்து அட்டையை மலர்ச்சியோடு தந்தாள்.



அதை வாங்கி வாசித்தவனின் கண்கள் ஆனந்தத்தில் மலர, ''ஐ லவ் யு, செல்லக்குட்டி!'' என்று அவளது கைகளில் இருவரின் பெயரையும் சேர்த்து எழுதி மீண்டுமொருமுறை குறுகுறுப்பு கோலம் வரைந்தான்.

''ஐ லவ் யூ டூ பட்டுக்குட்டி!'' என்று ரசனையுடன் அவள் சொல்லி முடிக்கும் போதே அவனது இறுகலான அணைப்பில் இருந்தாள் கீதாஞ்சலி.



22

ஒருவரில் ஒருவர் அணைப்பில் கட்டுண்டிருந்த இருவரில் முதலில் நிமிர்ந்த உதய் ஆனந்த், ''அவனவன் பத்து பதினைஞ்சு கேர்ள் பிரண்ட், காதலி என்று ஜாலியா இருக்கானுங்க. நான் ஒண்ணே ஒண்ணு, கண்ணு கண்ணுன்னு உன்னை வைச்சுகிட்டு... ஹப்பா இதை உன்னிடம் வாய்விட்டு சொல்றதுக்குள்ள... நான் பட்ட பாடு!'' என்று சிரிக்காழல் சொல்ல, அவன் இடுப்பில் பலமாகக் கிள்ளினாள் கீதாஞ்சலி.

வாய்விட்டு நகைத்தவன், அவளைக் கைகளில் பூ மாலையாக ஏந்திக் கொள்ள, ''ஹே! என்ன செய்யறே, உதய்?'' என அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு குழைந்தாள் அவள்.

''ம்ம்? இது என்னோட ரொம்ப நாள் ஆசை. என் லிஸ்ட்டில் இருக்க ஒவ்வொரு ஆசைக்கும் டிக் போட்டுட்டே வரேன்.'' குறும்பாகச் சொல்லி கண் சிமிட்டி,

''கால் ஒடிஞ்சு நீ இங்கே வந்திருக்கும் போதே, ...னை இப்படித் தூக்கிட்டு போகணும்னு தான் ஆசை.

அப்படிச் செய்தால் எங்கே நீ என் மாறு கால், மாறு கையை வாங்கிடுவியோன்னு பயந்து தான் செய்யலை.'' என்று சொல்லி வாய்விட்டு நகைத்தவன், அங்கிருந்த இருக்கையில் சென்று அமர்ந்து அவளையும் தன் மடியிலேயே அமர்த்திக் கொண்டான்.

உதய் ஆனந்தின் கழுத்தைக் கட்டிக் கொண்டிருந்த கையை விலக்காமலே, ''வேறே என்னென்ன ஆசையெல்லாம் இருக்கு?'' எனக் கேட்டவளின் குரல் ரகசியமாக வெளி வந்தது.

அவள் உதட்டை பெரு விரலால் மெல்ல வருடிக் கொண்டே, ''என்னென்னவோ ஆசையிருக்கு. சொன்னால் மட்டும் போதுமா... இல்லை செயல் விளக்கமும் வேணுமா?'' என அவன் அதை விட ரகசியமாகக் கேட்க, கீதாஞ்சலியின் கன்னங்கள் சிவந்தது.

''ஹ்ம்ம்... இப்படி ஆளை அசத்தற மாதிரி ட்ரெஸ் செய்துட்டு வந்து, என் மடியிலேயே உட்கார்ந்து கன்னம் சிவந்து, 'என்னென்ன ஆசை?' என்ற ஒரு மனுஷனைக் கேட்டால்... பாவம் அவனும் தான் என்ன செய்வான்?''

சோகமாகச் சொல்ல முயன்றவனின் கன்னத்தைப் பிடித்துச் செல்லமாக ஆட்டி, ''ரொம்பத் தான்!'' என்றவள், ''ரசிக்கிற ஆளைப் பாரு! அன்றைக்கு நாம செம்மொழி பூங்காவில் சந்திக்கும் போது உனக்காகவே பார்த்து பார்த்து அலங்காரம் செய்துட்டு வந்தால்.. அய்யா என்னைக் கண்டுக்கவே இல்லை! இன்றைக்கு வந்து ரொம்பத் தான் ஃபீலிங்க்ஸ்!'' என்று செல்லமாய் சிணுங்கினாள்.

''ஹா... ஹா... ஆரஞ்ச் அண்ட் பிங்க் கலர் ஜார்ஜெட் புடவை; நெற்றியில் பொருத்தமான



முடியை லூஸா விட்டு, க்ளிப் போட்டு, மல்லிகைப் பூ; காதில் மெல்லிசா நீளமான சும்மல். நீ அசையும் போதெல்லாம் உன் கழுத்தை உரசி எனக்கு டென்ஷன் ஏற்றிவிட்டு இருந்தது. கழுத்திலும் மெல்லிய செயின். சரியா?'' என்று அவள் கேட்க,

கண்களை அகல விரித்த கீதாஞ்சலி, ''இத்தனையும் பார்த்து ரசிச்சுட்டு, அன்றைக்கு ஒரு பார்வையிலாவது ஏதாவது சொன்னியா மேன்? நீ ஏதாவது சொல்லுவேன்னு எவ்வளவு ஏங்கிட்டு இருந்தேன் தெரியுமா?'' என்றாள் ஏக்கத்துடன்.

''எப்படிச் சொல்ல? முதல் நாள் நைட் சொன்னதெல்லாம் சும்மான்னு எங்கேநீ சொல்லிடுவியோன்னு நான் தான் பயந்துட்டு இருந்தேனே?''

''நான் உன்னை ரொம்ப படுத்திட்டேன் இல்ல, உதய்?'' அவன் கன்னத்தை வருடியபடியே கேட்டவளின் கரங்களை எடுத்து அவள் உள்ளங்கையில் முத்தமிட்டவன், ''ம்ம்... ரொம்ப!'' என்றாள் கண்களில் மயக்கத்துடன்.

அப்பொழுது தான் அவள் உட்கார்ந்திருந்த நிலை புரிய, அவசரமாக அவன் மடியிலிருந்து எழ முயற்சித்தவளைச் சுலபமாக அடக்கியபடி, ''ஷ்ூ! அமைதியா உட்கார்! ஐந்து வருஷமா காத்திருந்து இப்போ தான் கையில் மாட்டியிருக்கே! அத்தனை சீக்கிரத்தில் விடறதாயில்லை!'' என்று கூறியவனின் குரலிலிருந்த போலி மிரட்டல் கூட அவன் செய்கையில் இல்லை.

அவள் பட்டுக் கன்னத்தில் அவன் மூக்கை வைத்து உரச, அந்த மெல்லிய ஸ்பரிசத்தில் சிலிர்த்தவள்,

''அத்தை காத்திட்டு இருப்பாங்க, நந்து!'' என்றாள் குரலே எழுப்பாத குரலில்.

''சரி! போ!'' என்றவன் அவன் கைகளை அகற்றிக் கொள்ள, ஒரு கணம் விழித்தவள், அவன் தோள் வளைவிலேயே தன் சிவந்த முகத்தைப் புதைத்துக் கொண்டாள்.

உல்லாசமாகச் சிரித்தவனின் கைகள் கீதாஞ்சலியின் இடுப்பைச் சுற்றி வளைத்து, அவனோடு சேர்த்து இறுக்கியது.

காதலுடன் அவள் நெற்றி கேசத்தை ஒதுக்கி விட்டவன், ''எப்போ உனக்கு என் மேல் காதல் வந்தது? எப்போ உனக்கு அது தெரிஞ்சது, பட்டு?'' என்று ஆர்வமாக வினவினான்.

''எப்போ, எப்படின்னு சரியா சொல்லத் தெரியலை, உதய். அன்பகத்தில் மதியழகன் சார் உன்னைப் பற்றி பெருமையா பேசும் போது எனக்குச் சொல்ல முடியாத பெருமை; பிஸியோ செய்யும் போது, நீ நமக்குள்ள 'டாக்டர்-பேஷண்ட்' உறவு மட்டும் தான்னு சொன்னியா? அது மட்டும் தானான்னு அப்போ ரொம்ப ஏக்கமா இருந்தது.''

''அப்பவேவா? என்னிடம் சொல்லாமல் இருந்துட்டியே... கள்ளி... உன்னை...'' ஆசையோடு கூறியவன் அவள் ஆப்பிள் கன்னத்தை வலிக்காமல் கடித்தான்.

''ஹே! இதுவும் உன் லிஸ்டில் இருக்கா?'' என்று அவன் கடித்த கன்னத்தை புறங்கையால் துடைத்து விட்டுக் கொள்ள, மற்றொரு கன்னத்தையும் கடித்தான் உதய் ஆனந்த்.



இந்த முறை புன்னகையுடன் அவனது செய்கையை அங்கீகரித்தவள், ''எனக்கே அப்போ தெரியாதே, உதய். அம்மாவிடம் உன்னைத் தான் கல்யாணம் செய்துக்குவேன்னு சொன்ன அன்றைக்கு யோசிச்சு பார்க்கும் போது தான் அதுக்கும் முன்னாடியே கூட இருந்து இருக்கலாமோ என்று தோணுச்சு. எக்ஸ்பிரஸ் அவென்யூவில் அரவிந்த் மேலே வந்த கோபம் கூட, எங்கே நீயும் அப்படியோ என்றதினால் வந்ததோ என்னவோ?'' என்றாள்.

''....''

''எது எப்படியோ, அன்றைக்கு அம்மா திடீர்னு அப்படிக் கேட்டதும் என்னையும் அறியாமல் உன்னைத் தான் கல்யாணம் செய்துக்கிறதா சொன்னேன். ஆனால் சொன்ன அடுத்த நொடியே அது அப்பட்டமான உண்மைன்னு எனக்குப் புரிஞ்சது.''

கண்கள் காதலில் ஒளி விட, அன்றைய தினத்தில் உணர்ந்ததை இன்றும் புதியதாய் உணர்ந்த கீதாஞ்சலி குரலில் கடலளவு காதலுடன் மொழிய, அதை அனுபவித்து கேட்டுக் கொண்டிருந்தான் உதய் ஆனந்த்.

''உன் மேலே காதல் என்று புரிந்தவளுக்கு அதை உன்னிடம் வந்து சொல்ல பயம்; தயக்கம்.'' என்றவள் நிர்மலவேணி அன்று இரவு சொன்னதைக் கூற, ''அடிப்பாவி! இப்படித் தப்பும் தவறுமா கேட்டு...'' என்று அவள் தலையில் முட்டியவன் அன்றைய அவனின் மனநிலையை விளக்கினான்.

''எனக்கு அது தெரியாது இல்ல, உதய்? ஆனாலும் எப்படி, எந்த முகத்தோட வந்து உன்னிடம் சொல்றதுன்னு ரொம்ப தயக்கம். நான் தான் உன்னை துன்னு

பேசியிருந்தேனே? உன்னோட அந்தளவிற்கு மோசமா பேசாமல் இருந்த அந்த ரெண்டு சண்டைப் போட்டு வேதனை தான் தெரியுமா? ஐ மாசமும் எனக்கு ரண லாட்!'' கண்களில் லேசாகத் துளிர்த்த மிஸ் யூ எ நீரோடு சொன்னவளின் விழிகளில் இதழ் பதித்தவனின் தொண்டைக் குழியில் முகத்தைப் பதித்துக் கொண்டவள் தொடர்ந்து.

''அப்போ தான் அந்த ரகசிய சிநேகிதனை நான் உபயோகப்படுத்திக்கலாம்னு நினைச்சேன்.'' என்றவள் அவனை முறைத்து பார்த்து,

''படவா! ராஸ்கல்! அப்போ நீ எப்படி சிரிச்சு இருப்பே இல்ல? உன்னை...!'' என அவன் இரு கன்னத்தையும் பிடித்துக் கிள்ளினாள்.

''ஹா! ஹா! வலிக்குதுடி! எனக்கு அதையெல்லாம் விட என்ன சிரிப்பு தெரியுமா? நான் ஒருத்தன் உனக்கு ரூட் விடறதே பெருசு! இதில், 'நந்தா'ன்னு இன்னொருத்தனா என்று தான் எனக்கு செம அதிர்ச்சி!'' என்று குறும்பாகக் கூறி நகைத்தவன் முன்னெச்சரிக்கையாக அவளது கரங்களைப் பற்றிக் கொண்டவாறே சொல்ல,

''அதான் பார்த்தானே? நேற்றைக்கு நீ அடைந்த அதிர்ச்சியை...!'' என்று புதிலுக்குக் கேலி செய்து தன் கரங்களை விடுவித்துக் கொள்ள செல்ல சண்டையிட்டாள்.

''நீ மட்டும் ஒழுங்கா? எப்படியெப்படி? 'என்னை விரும்புறவளையே நானும் விரும்ப...' என்று என்னை வாழ்த்திட்டு, 'நான் விரும்புகிறவள் என்னை விரும்பணும்னு சொல்லு' அப்படின்னு நான் சொன்னதுக்கு... எல்லாம் ஒன்று தான் என்று அசால்டா போனவள் தானே நீ? பெரிய ஆளு தான்!''



பெருமையாகக் கூறியவனிடம், ''நான் எவ்வளவு பெரிய ஆளுன்னு தெரிந்தால் நீ அப்படியே மயக்கம் போட்டு விழுந்துடுவே!'' என்று கிளுக்கிச் சிரித்தவள் அன்று ருக்மணியிடம் தான் நடத்திய நாடகத்தைச் சிரிப்பினூடேயே கூறினாள்.

''என்னைப் போய் உங்க அண்ணன் ஜகஜ்ஜால கில்லாடின்னு சொன்னாரே?! நீ தான் கில்லாடிக்கு கில்லாடி!''

''பின்னே? உன்னை மாதிரி அஞ்சு வருஷமாவா காத்திட்டு இருப்பாங்க? என்னைப் போல வேகமாக இருக்க வேண்டாம்?''

''வேகம் தானே? இரு! இன்னமும் ஒன்றரை மாசம் பொறுத்துக்கோ! வேகம்னா என்னன்னு காட்டறேன்!'' என்றவன் காதல் பார்வை பார்த்து அவளை நோக்கி குனியவும் வெட்கத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டவளின் கன்னத்தில் இதழ் பதித்தான் உதய் ஆனந்த்.

மெல்ல அவன் இதழ்கள் முன்னேறவும், ''ப்ளீஸ் உதய்!'' என்று அவனைப் பிடித்து தள்ளிவிட்டவளின் உச்சந்தலையில் ஒரு பெருமூச்சோடு கன்னத்தை வைத்து அழுத்தியவன், ''ஹ்ம்ம்... உங்க அம்மாவிடம் நீ இன்னமும் கொஞ்சம் அழுத்தமா சொல்லி இருந்திருக்கலாம், பட்டு. கல்யாணத்தை தை மாசமே வைச்சிருந்து இருப்பாங்க!'' என்றான் ஏக்கத்துடன்.

உதட்டைக் கடித்துச் சிரிப்பை அடக்கியவளின் கன்னத்தில் கோலம் வரைந்தவன், ''ம்க்கும்! நல்லா சிரி! உனக்கு எங்கே என்னோட ஐந்து வருஷ ஏக்கம் புரியப் போகுது?'' என அலுத்துக் கொள்ள,

''உன்னை யாரு காத்துட்டு இருக்கச் சொன்னது?'' என்று கேட்டு, ''இருந்தாலும் நீ ரொம்ப்ப்ப சமத்து பையன்! என் புஜ்ஜு குட்டி! என் பட்டுக் குட்டி!'' என்று இருவரின் ஆசையும் மேலும் வளரும் அளவிற்கு கொஞ்சி, அவன் கன்னத்தைக் கிள்ளி அவள் உதட்டில் பொருத்திக் கொண்டாள்.

அவளது கொஞ்சல்களை ஆர்வமும் ஆசையுமாக பெற்றுக் கொண்டவன், ''ஆனாலும் கீதா! ஒரு முறை கூட உனக்கு நான் தான் ரகசிய சிநேகிதனா இருக்குமோன்னு தோன்றவே இல்லையா?'' என்றான் கேள்வியாக.

''எப்படிச் சந்தேகம் வரும்? உன் மேலே தான் சந்தேகமே படக் கூடாதுன்னு எனக்கு நானே உரு போட்டுட்டு இருந்தேனே? அதனாலே அது பற்றி நான் யோசிக்கவே இல்லை!''

தன் மீது வைத்த கண்ணை எடுக்காமல் இருந்தவனிடம் சிரித்துக்கொண்டே, ''அப்ப்படியே ரகசிய சிநேகிதன்னு யாராவது வந்தாலும், 'நான் உதயைத் தான் காதலிக்கிறேன்' என்று சொல்லணும் என்று திட்டம் வேற வைச்சிருந்தேனாக்கும்! எவ்வளவு புத்திசாலி இல்ல?'' எனச் சொல்லி தனக்குத் தானே திருஷ்டி கழித்துக் கொண்டாள்.

''யோசித்தால் மட்டும் உடனே கண்டுபிடிச்சு இருப்பே?'' கேலி செய்தவன்,

''எவ்வளவு சுலபமான க்ளுஸ் எல்லாம் கொடுத்தும், எப்படி கீதா உன்னால மட்டும் அப்படி அப்படித் தலையைச் சுற்றி மூக்கைத் தொட முடிந்தது?!'' என்று மேலும் அவளைப் பரிகாசம் செய்தான்.



உதட்டைப் பிதுக்கிச் சிணுங்கியவளின் இதழ்களை வருடியவாறே, ''அதுவும் நீ நந்தான்னு வேற யாரையோ சொல்லும் போதும், நம்ம முரளியை நீ, 'நந்துக்குட்டி' என்று கொஞ்சும் போதும் எனக்கு எவ்வளவு கோபம் வரும் தெரியுமா? ஆனால் இப்போ, நீ என்னை 'நந்து' என்று கூப்பிடும் போது அப்படியே ஜில்வுன்னு இருக்கு!'' என்று கண்சிமிட்டி கூறி கீதாஞ்சலியின் மூக்கைப் பிடித்து ஆட்டி விட்டு எழுந்தவன், நேற்று இரவு கோபத்தில் தூர எறிந்திருந்த கடிதத்தைக் குனிந்து எடுத்தான்.

உதய் ஆனந்தின் கைகளில் இருப்பது என்னவென்று புரிந்த கீதாஞ்சலிக்கு அது எப்படி மேஜைக்கு அடியில் போனதென்றும் விளங்கியது.

விளங்கியதாலேயே அவனைக் குற்றம் சாட்டுவது மாதிரி பார்க்காமல், விழிகளில் நீருடன் நின்றாள்.

அவளின் முகவாயைப் பற்றி அவள் கண்ணோடு அவன் கண்களை உறவாடவிட்டு, ''சாரி, கண்ணம்மா! நேற்று ஏதோ கோபத்தில் தூக்கிப் போட்டுட்டேன்.'' என்றவாறே அவளது நெற்றியில் முத்தமிட்டவன், ''ஐந்து வருஷம் தாமதமானாலும்... நானும் சரி... இந்தக் கடிதமும் சரி உன்னைச் சேர வேண்டியது. ஐ லவ் யூ, அஞ்சு!'' எனக் கைகளை அகல விரிக்க, அவன் மார்பில் தஞ்சம் புகுந்தாள் அவனுடைய கீதாஞ்சலி.

உணர்ச்சிமயமாக கடந்த சில நிமிடங்களுக்குப் பிறகு அவள் முதுகில் இருந்த உதய் ஆனந்தின் கரம் மெல்ல அவளது இடையை நோக்கி முன்னேறவும், மனமேயின்றி அவனிடமிருந்து தன்னை மீட்டுக் கொண்டவள், ''கீழே போகலாம், உதய்!'' என்று மெல்ல உதட்டசைத்தாள்.

தன்னை விட்டு விலகியவளின் ஒரு கரத்தை விடாமல் பற்றிக் கொண்டவன், ''வேறென்ன ஆசைன்னு கேட்டியேடா? ஒண்ணே ஒண்ணு! ப்ளீஸ்!'' என்று ஏக்க மாகக் கேட்க,

சின்னத் தயக்கத்திற்கு பிறகு அவனின் அருகில் நெருங்கி வந்த கீதாஞ்சலி, அவன் கன்னத்தைத் தன் கரங்களில் தாங்கி, அவன் எதிர்பாராத தருணத்தில் அவன் இரு கன்னத்திலும் மாறி மாறி முத்தங்களைப் பொழிந்து விட்டு திரும்பியும் பாராமல் ஒரே ஓட்டமாக ஓடினாள்.

ஆச்சரியத்தில் விரிந்த விழிகள் சந்தோஷத்தில் மின்ன, அவன் கன்னங்கள் ஈரத்தில் மினுமினுக்க, அதைத் தாங்கியபடி உல்லாசமாகச் சீட்டியடித்த உதய் ஆனந்திற்கு அவன் கேட்டது கிடைக்காவிட்டாலும், எல்லாவற்றையும் தாண்டிய மகிழ்ச்சியும், அவன் விரும்பியதை... விரும்பியவளிடமிருந்து எப்படியெப் படி வசூலிக்கலாம் என்ற இனிய கற்பனையிலும் கனவிலும் சஞ்சரித்தபடி கண்களை மூடி மஞ்சத்தில் சாய்ந்தான்.

* * *

சுபயோக சுபதினத்தில் கீதாஞ்சலியின் கழுத்தில் மங்கல நாண் பூட்டி, சுற்றமும் நட்பும் சூழ வந்து நின்று வாழ்த்த, அவளைத் தன்னவளாக்கி கொண்டான் உதய் ஆனந்த்.

கல்யாண வீட்டிற்கே உரிய கலாட்டா அம்சங்கள் அத்தனையும் பொருத்த, மணமக்களை அங்கிருந்த வர்கள் கேலி கிண்டல் என்று படுத்தி எடுத்தனர். அது வும் இவர்களின் வரலாறு தெரிந்தவர்கள் வாயை மூடிக் கொண்டா இருப்பார்கள்?



திருமண வீட்டில் கூட்டம் எல்லாம் கலைந்த பின்னர், மணமக்களின் குடும்பத்தினர் மட்டும் உதய் ஆனந்தின் வீட்டில் குழுமியிருக்க, மணமக்களை ஒரு வழி செய்து கொண்டிருந்தனர் நிர்மலவேணியும், ஷ்யாமும்.

''மச்சான்....!'' என்று உதயை விளித்த ஷ்யாம், ''உன்னை மச்சான் என்று கூப்பிடறதா இல்லை மாப் பிள்ளை என்று கூப்பிடறதா?'' என அவனது தலையாய சந்தேகத்தை முன் வைக்க,

''உங்க தங்கச்சியையே கட்டி கொடுத்து இருக்கீங்க நீங்க, 'வாடா, டேய்!' என்று சொன்னாலும் வருவான் இல்ல, உதய்?'' என்று எடுத்து கொடுத்தாள் நிர்மல வேணி.

''கீதா மட்டும் என்ன, நிம்மி? உன் தம்பியையே அவளுக்குக் கொடுத்து இருக்கே. நீ என்ன சொன்னாலும் அவள் செய்வாள்!''

''ச்சே... ச்சே.. நான் தான் உங்க தங்கச்சிக்கு கடமை பட்டிருக்கேன், ஷ்யாம்!'' என்று நிர்மலவேணி சொல்ல, புரியாமல் பார்த்தான் ஷ்யாம்.

''கீதா காதலில் விழுந்தால்... நான் அந்த உண்மை கதையை வைச்சே, ஒரு படம் எடுத்து பெரிய டைரக்டர் ஆயிடுவேன் என்று சொல்லியிருந்தேன். 'காதலா? எனக்கா? நெவர்!' என்று ராகம் பாடிகிட்டு இருந்தவள் இப்போ எனக்காக தான் காதலில் தொபுக்கடீர்னு விழுந்து இருக்கா. எனக்காகவே அவள் காதல் பலப் பிரகாசமா எரியுது பாருங்க. வேணும்னாலும் கேளுங்க!'' என்று தம்பி மனைவியை நிர்மலவேணி பரிகாசம் செய்ய,

''ஹா... ஹா... அக்கா! உன் நாத்தனாரை நீ தான் மெச்சிக்கணும். அவளுக்கு நான், லவ் பல்ப் எரிய வைச்சு எரிய வைச்சே தமிழ்நாட்டில் மின்சார பற்றாக்

குறை வந்துடுச்சுன்னா பார்த்துக்கோயேன்! நல்ல வேளை கடைசியில் என் ஃப்யூஸை பிடுங்காமல் இருந்தாள்!'' என தன் மனைவியைப் பார்த்து கண் சிமிட்டிச் சிரித்தான் உதய் ஆனந்த்.

''அச்சோ! உதய்! ஏன் இப்படி என் மானத்தை வாங்கறே?'' செல்லமாக அவன் தோளில் இடித்தவள் அங்கேயே அவள் முகத்தை மறைத்துக் கொள்ள, எல்லோரின் நகைப்பொலியும் இணைந்து ஒலித்தது.

''உதய்! நான் உன்னைக் கேட்க வந்த விஷயமே வேற. எங்க கல்யாணத்தில் கல்யாணப் பொண்ணு வந்ததும் நல்ல நேரம் முடிய போகுதுன்னு கிண்டல் செய்தவன் தானே நீ? இப்போ எப்படி ராஜா? உன்னோட நல்ல நேரமும் முடிஞ்சதா?'' ஷ்யாம் சாதுவாக கேட்க, அவன் வலது கரத்தில் ஹாய்-ஃபைவ் கொடுத்தாள் நிர்மலவேணி.

''மாமா! உங்க தங்கச்சி பற்றி உங்க வாயாலேயே நீங்க அப்படிச் சொல்லக்கூடாது! தப்பு தப்பு!''

''என் வாயாலேயே என் தங்கச்சியைக் கழுதைன்னு சொல்ல வைச்சவன் தானே நீ? அதுக்கு இது தேவலாம்!''

''மாமா! என் வாழ்வில் விளக்கேற்றி வைக்க வேண்டியவங்க நீங்க. கீதா பிடுங்கின ஃப்யூஸ் போக மீதி இருக்கிறதை நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து பிடுங்காதீங்க! ப்ளீஸ்!'' பாவம் போல முகத்தை வைத்துக் கொண்டு உதய் ஆனந்த் கெஞ்சவும்,

''அது! அந்தப் பயம் இருக்கணும்!'' என்று கீதாஞ்சலி மிரட்ட அங்கே மேலும் ஒரு சிரிப்பலைப் பரவியது.

சிரிப்பும் கேலியுமாக மீதி பொழுதைக் கழித்தவர்கள், இரவின் தனிமையில் அவர்களை விட்டுவிட்டு ஷ்யாமின் வீட்டிற்கு விடை பெற்றுச் சென்றனர்.



கதவை மூடித் தாளிட்டு வந்த உதய் ஆனந்த், பூர்ண நிலவாக ஒளிவிட்ட கீதாஞ்சலியை விழியெடுக்காமல் பார்க்க, வெண்ணிலவாக இருந்தவள் கணவனின் பார்வையில் செந்தாமரையாக மாற, விழிகளைத் தழைத்துக் கொண்டாள்.

அவளருகில் மெல்ல நடந்து வந்தவன், அவனது முதலாம் ஆசையை மீண்டும் செயல்படுத்தி, மனைவியை அவன் கைகளில் ஏந்திக் கொண்டு தனது அறையை நோக்கி படியேறலானான்.

அவன் கழுத்தில் தன் கரங்களை மாலையாய்க் கோர்த்தவள், அவன் கன்னத்தில் அழுந்த இதழ் பதித்து, ''ஐ லவ் யூ, கண்ணா!'' என்று அவன் காதுக்குள் கிசுகிசுத்தாள்.

கண்களை மூடி ஆழ்ந்த மூச்செடுத்தவன், ''ஹே! ரூம்க்கு போற வரைக்கும் அமைதியா வா! அப்புறம் பாதி படியிலேயே உன்னைப் போட்டாலும் போட்டுடுவேன்!'' என்று தாபத்துடன் கூற, கிளுக்கிச் சிரித்தவளின் முகம் வாகாக அவன் கழுத்து வளைவில் சொகுசாக சாய்ந்தது.

மெல்ல... மெதுவாக மனைவியை கீழே இறக்கி விட்டவனின் கரங்கள் அவளிடமிருந்து விலகாமல், அவளது இடையைச் சுற்றித் தன்னோடு சேர்த்து வளைக்க, படியேறி வரும் வரையில் அவனிடம் சின்னச் சின்ன சில்மிஷங்கள் செய்து சொண்டு வந்தவளுக்கு அவர்களது அறைக்கு வந்ததும் எங்கிருந்து தான் நாணம் வந்து ஒட்டிக் கொண்டதோ?

கணவனை நோக்காமல், மங்கிய ஒளியில் ஊதுபத்தி களின் நறுமணமும் மல்லிகையின் சுகந்தமும் இதமாக

வீசிய அறையைச் சுற்றிலுமே அவளது பார்வை சுழன்றது.

புறங்கையால் கீதாஞ்சலியின் கன்னத்தை மிருதுவாக வருடியவாறே, ''என்னமோ மாடி ஏறி வரும் போது யாரோ ரொம்ப தைரியமா என்னைச் சீண்டிக்கிட்டே வந்தாங்க. யாருன்னு உனக்குத் தெரியுமா, அஞ்சு?'' என்றவனின் சூடான மூச்சுக் காற்று அவளது காதோரச் சுருள்களைச் சீண்டி விளையாடியது.

''உன்னைச் சீண்டியவங்க யாரோ? எனக்கு எப்படித் தெரியும்?'' என்றவளின் குரல் காற்றிலே கரைந்து கிசுகிசுப்பாய் வெளி வர,

பளீரென்று தெரிந்த அவள் கழுத்து வளைவில் சிறு சிறு முத்தங்களைப் பதித்தவன், ''இன்றைக்கு மட்டுமில்லை. இந்த ஒன்றரை மாசமா என்னிடம் தனியா அகப்படாமல் தினமும் என்னைச் சீண்டிக்கிட்டு இருந்த திருடி நீ தான்! உன்னை என்ன தான் செய்றது?'' அவள் கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்தவன் கொஞ்சலாகக் கிசுகிசுத்தான்.

''என்ன செய்றதுன்னு என்னைக் கேட்டால்? நான் பாவம்!'' கண்களை அகல விரித்து பதிலுக்கு கொஞ்சியவளின் கரங்கள் அவனது பிடரி கேசத்தில் அளைந்தது.

''ரொம்பத் தான் பாவம்!'' மனைவியின் செவி மடலை வலிக்காமல் கடித்தவன், ''அதுக்கு இது தான் உனக்குத் தண்டனை!'' கிசுகிசுப்பாய்ச் சொல்ல,

''இது தண்டனை மாதிரியே இல்லையே!'' ரகசிய குரலில் முணுமுணுத்தவளின் சிவந்த முகம் அவனின் கழுத்து வளைவில் புதைந்தது.

''வாவ்!'' உல்லாசமாகச் சிரித்தவன், அவளைத் தன் கால்களில் தாங்கியவாறே மஞ்சத்தை நோக்கி முன்னேறினான்.



மஞ்சத்தில் அமர்ந்து, மனைவியைத் தன் மீது சாய்த்துக் கொண்டு, ''இப்படிச் சொன்ன பிறகு எப்படி உனக்குத் தண்டனை தர்றது? ரொம்ப இக்கட்டான சூழ்நிலையில் என்னை வைக்கிறீயே?'' என யோசிப்பது போன்ற பாவனையில் கூறியவனின் இதழ்கள் அடுத்த தண்டனையாக அவளது நெற்றி, நாசி, கன்னம் என்று ஒவ்வொரு இடமாக, நின்று... நிறுத்தி... நிதானமாக அதன் தண்டனையை எந்தக் குறையுமில்லாமல் செவ்வனே வழங்கியது.

கணவனின் அருகாமையிலும் அணைப்பிலும் கிறங்கி மயங்கிய கீதாஞ்சலி, ''ஒன்றரை மாசமா என் பக்கத்திலேயே வர முடியலைன்னு சொன்னீயே...? இதுக்கு தான்! எனக்கு அது தண்டனையாக இருந்திருக்காது.'' என்று காதலுடன் கூறி முடிப்பதற்குள் அவளது இதழ்களில் அடுத்த தண்டனையும் இனிதே நிறைவேறியது.

கட்டிலில் படுத்திருந்த உதய் ஆனந்தின் மார்பில் கன்னத்தை வைத்து தேய்த்துக் கொண்டிருந்தவளிடம், ''ஒரு பாட்டு பாடு, கீதா!'' என்று அவன் கோரிக்கை வைக்க, மெல்ல எம்பி அவன் தொண்டைக் குழியில் முத்தமொன்றை வைத்தவள், அவன் காதருகில் மெல்லியக் குரலில் காதலுடனும் அளவில்லா நேசத்துடனும் பாடலானாள்.

யாரோ இவன் யாரோ இவன்
என் பூக்களின் வேரோ இவன்
என் பெண்மையை வென்றான் இவன்
அன்பானவன்

உன் காதலில் கரைகின்றவன்
உன் பார்வையில் உறைகின்றவன்
உன் பாதையில் நிழலாகவே வருகின்றவன்

என் கோடையில் மழையானவன்
என் வாடையில் வெய்யிலானவன்
கண் ஜாடையில் என் தேவையை அறிவான் இவன்

எங்கே உன்னை கூட்டிச்செல்ல
சொல்வாய் எந்தன் காதில் மெல்ல
என் பெண்மையும் இளைப்பாறவே
உன் மார்பிலே இடம் போதுமே

ஏன் இன்று இடைவெளி குறைகிறதே
மெதுவாக இதயங்கள் இணைகிறதே
உன் கைவிரல் என் கைவிரல் கேட்கின்றதே
உன் சுவாசங்கள் எனைத் தீண்டினால்

என் நாணங்கள் ஏன் தோற்குதோ
உன் வாசனை வரும் வேளையில்
என் யோசனை ஏன் மாறுதோ
எனக்காகவே பிறந்தானிவன்
எனை காக்கவே வருவானிவன்

ஒருவரின் மேல் வைக்கும் எதிர்பார்ப்பில்லாத அன்பினால் மட்டுமே காதல் கை கூட முடியுமென இன்னொரு முறை அங்கு நிரூபிக்கப்பட, உதய் ஆனந்த் மற்றும் கீதாஞ்சலியின் வாழ்வில் கண்ணாமூச்சி ஆட்டம் அவ்வப்பொழுது தொடர்ந்தாலும், இருவரும் ஒருவரின் மேல் ஒருவர் வைத்திருக்கும் காதலும் அன்பும் அவர்களை ஆட்டத்தில் தோற்றுப் போக வைக்காமல் வெற்றியையே தேடித் தரும்.

*